378

T.N.L.C. Debates
Official Report

1981

Vol: CLXXIV. No: 1—3

D
V211,32'N
N81.174..-3
143874

376/SS781 ½ (378)

[Issued : 2-7-1981

10 ஆக 1981

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 26th FEBRUARY 1981

Volume CLXXIV No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1981

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009

PRICE 2 *Rupees.*]

(S½

பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | 1—18 |
| 2 உரிமைப் பிரச்சினை— சட்டமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகளையும் கவனித்து அறிக்கை தர வேண்டுமென்று காவல் துறையைச் சேர்ந்த ஒற்றுத் துறைக் கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள ஆணை குறித்து .. .. .. .. | 19—39 |
| 3 கவன ஈர்ப்பு— | |
| (1) இராமேசுவரம் தீவு அருகில் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து .. .. — .. | 39—41 |
| (2) 1980-ல் சென்னைப் பெருநகரில் சாலை விபத்துக்கள் பெருகி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது குறித்தும் அதைத் தடுக்கும பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் .. .. .. | 41—43 |
| 4 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1979-80-ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை .. .. | 43—74 |
| 5 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 74—75 |

143874

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption and Planning.

2. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. THIRU K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THIRU P. U. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THIRU S. N. RAJENDRAN, Minister for Handlooms and Khadi, in charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, New Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administrttion.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு மற்றும் திட்டம்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்கத் திட்டம், மற்றும் ஆவணப் பதிவுத் துறை.

5. **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்** (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. **மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. **மாண்புமிகு திரு. பி. பொன்னையன்** (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு,

10. **மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. **மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

12. **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.



14. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. **மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு** (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. **மாண்புமிகு திரு. செ. நி. இராசேந்திரன்** (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. **மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி** (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. **மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
3. திரு. க. அருணாசலம்.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டது) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. ச. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. எ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலமைப்பித்தன், புலவர் (மாண்புமிகு துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம். திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 முத்தையா செட்டியார். டாக்டர் ராஜா சர், எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. அ. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திருஇராம. (செய்தி—அறநிலையத் துறைஅமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 40 வெங்கடேசன், ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ௸ | ௸ |
| 45 ௸ .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ௸ .. | ௸ |
| 47 ௸ .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத்தொகுதி. |
| 48 ௸ .. | ௸ |
| 49 ௸ .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ௸ .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ௸ .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 ௸ .. | ௸ |
| 53 ௸ .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ௸ .. | ௸ |
| 55 ௸ .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 ௸ .. | ௸ |
| 57 ௸ .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 ௸ .. | ௸ |
| 59 ௸ .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ௸ .. | ௸ |
| 61 ௸ .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ௸ | ௸ |
| 63 ௸ .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்றத்தின்
ஐம்பத்தொன்பதாவது கூட்டத் தொடர்.

வியாழக்கிழமை, 1981 பிப்ரவரி 26.

---

மாசி 15, ரௌத்திரி—2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Teachers of Schools under control of Electricity Department.*

* 79 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that teachers serving in High and Elementary Schools under the control of the Electricity Department at Parali, Coimbatore district, have not been given the facilities enjoyed by their counterparts in the Kundah Electricity Project area ;

(b) if so, the reasons therefor ; and

(c) the action proposed to be taken thereon ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளி, மின்வாரிய அலுவலர்களால் அங்கே நடத்தப்படுகிறது. எனினும் மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும் இந்தப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவே இப்பள்ளியை மின் வாரியமே தன் பொறுப்பில் ஏற்று மின் வாரிய ஊழியர்

களுக்கு வழங்கப்படும் மலைவாழ் படி, விலையேற்றப் பகுதிப் படி, வீட்டு வசதிப் படி, மின் வசதி, மருத்துவச் செலவு மீட்பு போன்ற சலுகைகளை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இப்பள்ளிகள் மின் வாரியத்தின் உதவிபெற்று நடத்தப்படும் "எய்டட் ஸ்கூல்களாகும்." எனவே இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு என்று இருக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் சலுகைகள் அளிக்கப்படும். இக்காரணத்தால்தான் மின்வாரிய ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் இப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களும் அரசுச் சலுகைகள் அனைத்தும் பெற்று வருகிறார்கள். உதாரணமாக வீட்டு வாடகைப் படி, கிராம ஈட்டுப் படி, நகர ஈட்டுப் படி போன்ற அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் அனைத்தையும் அவர்கள் பெற்று வருகிறார்கள். அதே அடிப்படையில் மின்வாரிய உதவி பெறும் இப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களையும் கருதி, மின் வாரிய ஊழியர்களுக்கான சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இத்தகைய ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கான சலுகைகளை வழங்கலாம். ஆனால் மின் வாரிய ஊழியர்களுக்கான சலுகைகளை வழங்க இயலாது.

**திரு. செ. முத்துசாமி :** கோவை மாவட்டத்தில் இதைப் போன்றே, ஆனைமலை, டாப் ஸ்லிப் பகுதிகளிலும் சோலையார் அணைப் பகுதியிலும் உள்ள மின் உற்பத்தி செய்யும் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி எதுமில்லை. அங்கெல்லாம் மின் வாரியம் கட்டியுள்ள காலனிகள் தாம் இருக்கின்றன. அங்கே போதிய இடம் இல்லாத காரணத்தால், அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குடியிருக்க வசதியில்லாத நிலை இருக்கிறது. அதைப் போலவே அவர்களுக்குச் சரியான மருத்துவ வசதியும் கிடையாது. மலைப் பகுதியிலிருந்து கீழே இறங்கி வந்தால்தான் மருத்துவ வசதி கிடைக்கிறது. மருத்துவ வசதி கோருவோருக்கு, மின் வாரிய ஊழியர்களைப் பொறுத்த வரையில், மலையிலிருந்து கீழே செல்வதற்கு வேன்களில் இட வசதி அளிக்கப்படுகிறது. அத்தகைய வசதி இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கு மறுக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளே மின்வாரிய ஊழியர்களின் குழந்தைகளுக்காகவே



திறக்கப்பட்டிருப்பதால், அங்கே பணியாற்றும் அப்பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்தகைய சலுகைகளை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எங்கெங்கே வீடுகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இத்தகைய வீடுகள் ஆசிரியர்களுக்குக் குறைந்த வாடகையில் தரப்படுகின்றன. வீடுகள் இல்லாத இடங்களில் அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் கேட்டதையேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களும் கேட்டிருக்கிறார்கள். மின் வாரிய ஊழியர்களுக்கென்று சில வசதிகள் மற்றும் வரைமுறைகள் இருக்கின்றன. அதைப்போலவே அரசு ஊழியர்களுக்கும் சில வசதிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் "எய்டட் ஸ்கூல்" ஆசிரியர்கள் என்று கருதப்படுவதால்தான், இத்தகைய பிரச்சினைகள் எழுகின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மலைப் பகுதிகளென ஒக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றுகிற காரணத்தால்தான், அத்தகைய பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்ற சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே இதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து அப்பள்ளி ஆசிரியர்களுக்கு மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை வழங்குவதற்கு முன்வருவாரா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய பள்ளியாசிரியர்களுக்கு இப்போதே சில சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக அவ்வாசிரியர்கள் குடியிருக்கும் வீட்டிற்கேற்ப சொற்ப வாடகை அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. மாதம் ஒரு ரூபாயிலிருந்து ரூபாய் 4.49 வரையில் சொற்ப வாடகையில் வீடுகள் வழங்கப்படுகின்றன. மின் வசதியைப் பொறுத்தவரையில், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு மாதம் 25 யூனிட் வரை இலவசமாகவும் அதற்கு மேல், மேற்கொண்டும் 50 யூனிட் வரை ஒரு யூனிட்டுக்கு 8 காசு விதமும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதைப்போலவே ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு முதல் 15 யூனிட் மின்சாரம் இலவசமாகவும் மேற்கொண்டு 25 யூனிட் வரை யூனிட் ஒன்றுக்கு 8 காசு விதமும் சலுகையளித்து வசூலிக்கப்படுகிறது.

[1981 பிப்ரவரி 26

**திரு. செ. முத்துசாமி :** நான் ஏற்கெனவே சொன்ன பகுதிகளில் வேறு அரசு ஊழியர்கள் யாரும் பணியாற்றவில்லை. அனைவருமே அங்கே மின் வாரிய ஊழியர்கள்தான். எனவே டாப் ஸ்லிப், சோலையார் போன்ற பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதிகூட இல்லாமல இருக்கிறார்கள். மருத்துவ வசதிக்காக வேன்களில் மின்வாரிய ஊழியர்களுககு மட்டுமே இடவசதி அளிக்கப்படுகிறது. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இந்த வசதிகூட தரப்படாமல் மறுக்கப்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைந்தபட்சம் இந்தச் சலுகையையாவது அளிக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேட்ட வினாவையேதான் உறுப்பினர் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இங்கே கேட்கப்பட்டிருக்கும் வினா குந்தா பாளி மின்திட்டம் (கேம்ப்) பற்றியதாகும். சோலையார குறித்துத் தனியாகக் கேள்வி கேட்டால், பதில் அளிப்பதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில் இத்தகைய ஆசிரியர்களுக்கு மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படமாட்டாது, மாறாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். இப்பள்ளிகளை மின் வாரியமே ஏற்று நிருவகித்து நடத்தினால், அப்போது மின் வாரிய ஊழியர்களுக்கான சலுகைகள் அனைத்தும் இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் சட்டப்படி கிடைக்கும். எனவே இப்பள்ளியை மின்வாரியமே மேற்கொள்ளும் வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படியானால் இந்த ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கான சலுகைகளை தங்களுக்கு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது. மின் வாரிய ஊழியர்களுக்கு இருக்கிற சலுகை, மற்றும் வசதிகள் தங்களுக்குப் போதுமென்று ஒப்புக்கொள்ள முன்வருவார்களானால், அப்போது இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. ம. சங்காலிங்கம்:** மின்வாரிய ஊழியர்களுக்கு உள்ள வசதிகளுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கான வசதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?



1981 பிப்ரவரி 26]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வேறுபாடுகள் என்று பார்த்தால் இது மின்வாரியம்; அது தனியார் பள்ளி. (சிரிப்பு) மின்வாரிய ஊழியர்கள் என்றால், அவர்களுக்கு போனஸ் போன்றவை கிடைக்கும். இவ்வாசிரியர்களைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளி ஆசிரியர்களைப் போல் நடத்தப்படுவதால், மின்வாரிய ஊழியர்களுக்கான சலுகைகள் இவர்களுக்குப் பொருந்தாது என்பதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

### சென்னை உயர்நீதிமன்றத்தில் தேங்கியுள்ள வழக்குகள்.

* 80 **வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

சென்னை உயர்நீதிமன்றத்தில், 1978 டிசம்பருக்கு முன் பதிவு செய்யப்பட்ட, பலவகை உரிமை இயல் மேல் முறையீடுகள் (Civil Miscellaneous Appeals) குற்ற வழக்குகள் (Criminal cases) ஆகியவைகளில், தீர்ப்பு அளிக்கப்படாதவை எத்தனை ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சென்னை உயர்நீதிமன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன் வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமல் இருக்கும் பல்வகை உரிமையியல் மேல் முறையீடுகள் மற்றும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை முறையே 208, 914 ஆகும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் தீர்ப்பளிக்கப்படாது இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை முறையே 208 மற்றும் 914 என்றிருப்பதால், அந்த வழக்குகளை மேல்முறையீடு செய்தவர்கள்—அதாவது அப்பீல் செய்தவர்கள்—பெருமளவில் பாதிப்புக்கும் சிரமத்திற்கும் ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு எண்ணிப் பார்க்குமா ? காலதாமதப்படுகிற நீதி, மறுக்கப்படுகிற நீதிக்கு ஒப்பாகும் என்பதை அரசு உணர்ந்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்ட ஓராண்டு காலத்திற்குள்ளாவது தீர்ப்பு வழங்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இது குறித்து அரசு ஏற்கெனவே தீர ஆராய்ந்து உயர் நீதிமன்றத்திற்குத் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் 25 நீதிபதிகள் வரை இருக்கலாம் என்று வரையறை இருந்தாலும், தற்போது 20 நீதிபதிகள்தாம் இருக்கிறார்கள். மீதியுள்ள காலியிடங்களை நிரப்ப வேண்டிய நிலை இருக்கிறது. இதற்கிடையில் வழக்குகளைத் தாமதமின்றி நடத்தி முடிக்க இன்னும் சற்று துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்ட காலத்திலேயே குறிப்பிட்ட வழக்குகளை முடிக்க வேண்டும் என்றும், அட்ஜோர்ன்மெண்ட் கேட்டால்கூட காரண காரியமில்லாமல் அனுமதி தரக்கூடாது என்றும் சொல்லி

அதைச் சற்று கடுமையாகவே நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதிகளின் குழு முடிவு செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது. கூடிய வரையில் இக்குறைபாட்டை நீக்க உயர்நீதிமன்றம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 10-40)

**திரு. ம. சங்கரலிங்கம்:** கூடுதலாக நீதிபதிகளை நியமிப்பதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன? உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவை என்பதாலா அல்லது நீதிபதிகள் பற்றாக்குறையா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இது குறித்து மைய அரசு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. எந்த அளவிற்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தீர்ப்புக்களை வழங்குவதில் ஏற்படக் கூடிய காலதாமதத்திற்குக் காரணம் வாய்தாக்கள் கேட்பதுதான் என்று சொல்லுகிறார்கள். * * * என்றே சிலர் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே இவ்வளவுதான் வாய்தா கொடுக்கலாம் என்ற ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

THIRU K. RAMAMOORTHY: It may be a slur on the profession * * * என்ற வார்த்தை கேள்வி நேரத்தில் இருக்க வேண்டுமா? குறிப்புகளில் இருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அப்படியானால் உறுப்பினருடைய கேள்வியில் மிச்சம் என்ன இருக்கிறது?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இவ்வளவுதான் வாய்தா கொடுக்கலாம் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** வாய்தாக்கள், பல நேரங்களில் காரணங்களின் அடிப்படையில்தான் கொடுக்கப்படுகின்றன. காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான், இன்றியமையாத, தவிர்க்க

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



முடியாத காரணங்களுக்காக வாய்தா கேட்கவில்லையென்றால், வாய்தா கொடுக்கக் கூடாது என்று தற்போது நடைமுறையில் கடைப்பிடித்து வருகிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** நீதிமன்றங்களில் காலதாமதம் ஏற்படுவதைப் போல நிர்வாகங்களிலும் காலதாமதம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருப்பதால், நிர்வாகத்தில் ஒரு முறையீடு மனு வருமானால், அதை இத்தனை காலத்திற்குள் முடித்தாக வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு சட்டத்தை சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குவாசி-ஜுடிஷியல் ஃபங்ஷனைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். எங்கெங்கு, எந்தெந்த இடங்களில் காலதாமதம் இருக்கிறதென்று தெரிவித்தால், அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

## தீர்ப்பளிக்கப்படாத—நீதிப் பேராணை மனுக்கள்.

* 81 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை உயர்நீதிமன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன் பதிவு செய்யப்பட்ட, நீதிப்பேராணை (Writ petitions) மனுக்களில் தீர்ப்பளிக்கப்படாமல் எத்தனை இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சென்னை உயர்நீதி மன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன்வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமல் இருக்கும் நீதிப்பேராணை மனுக்களின் எண்ணிக்கை 1929 ஆகும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, ஒருவருடைய தனிப்பட்ட உரிமை பாதிக்கப்பட்டிருப்பதால், தன்னுடைய உரிமைப் பிரச்சினையைப் பற்றி நீதி வேண்டி ரிட் மனுவைப் போடுகிறார். அப்படி உரிமைக்காக நீதி வேண்டி வருகிறபோது, மூன்றாண்டுகளுக்கு மேலாக சுமார் இரண்டாயிரம் வழக்குகள் தீர்ப்பு அளிக்கப்படாமல் இருந்தால், உண்மையில் அவர்களுடைய உரிமையை மறுப்பதாக ஆகாதா? ஆகவே அரசு இத்தகைய காலதாமதத்தைத் தடுக்க என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் ஏற்கெனவே பதில் சொன்னதைப் போலவே, அரசுக்கும் இதற்கும் நேரிடைத் தொடர்பு இல்லை. உயர்நீதி மன்றத்திடம் அரசு இது குறித்து கேட்கலாம். உயர்நீதி மன்றத்தினிடம் இது குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டைச் சேர்ந்த

3 வழக்குகளும்; 1976 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 49 ரிட் மனுக்களும், 1977 ஆம் ஆண்டிலே தாக்கல் செய்யப்பட்ட 577 ரிட் மனுக்களும், 1978 இறுதிவரை தாக்கல் செய்யப்பட்ட 1,554 ரிட் மனுக்களும் நிலுவையில் இருக்கின்றன. குறிப்பாக குறிப்பிட்ட சட்டப் பிரச்சினையைக் குறித்து பல ரிட் மனுக்கள் ஒரே தடவையில் தாக்கல் செய்யப்படுகிறபோது, அத்தனையையும் டிவிஷன் பெஞ்சுக்கு அனுப்பி துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினை தீரும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு பதில் சொல்லும்போது, "மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறது? எத்தனை புதிய நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** உயர்நீதி மன்றத்திற்கு இன்னும் அதிகமான நீதிபதிகள் தேவை என்ற உயர்நீதி மன்றத்தின் கோரிக்கையை மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** ரிட் மனுக்களை விரைவாகத் தீர்க்க கூடுதல் நீதிபதிகளைப் போட வேண்டுமென்று இந்த அரசின் உதவியை நாடி உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியிடமிருந்து கோரிக்கை ஏதாவது வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ரிட் மனுக்களை துரிதப்படுத்தி அவற்றை பரிசீலிக்க அதிகப்படியான நீதிபதிகள் வேண்டுமென்ற கோரிக்கை தலைமை நீதிபதியிடமிருந்து அரசுக்கு வரவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏறத்தாழ இரண்டாயிரம் ரிட் மனுக்கள், 1978 ஆம் ஆண்டுக்கு முன் பதிவு செய்யப்பட்டு, இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்றால், அதற்குக் காரணம் நீதிபதிகள் பற்றாக்குறை என்பது மட்டுமா அல்லது உயர்நீதி மன்றத்தினுடைய நிர்வாகத்தில் சீரமைப்பு தேவைப்படுகிறது என்பதா? உயர்நீதி மன்றத்தினுடைய நிர்வாகத்தில் மாநில சீரமைப்பு ஏதாவது செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது என்று அரசு உணர்ந்திருந்தால், அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறதா?





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நீதிபதிகள் தேவை மட்டுமின்றி நிர்வாகத்திலே சில மாற்றங்களை நடைமுறைப்படுத்தினால், வழக்குகளைத் தீர்ப்பதில் காலதாமதம் இருக்காது என்பதை அரசு உணர்ந்து இதுகுறித்து உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் அவற்றை ஆய்ந்து நடைமுறைப்படுத்த ஆவன செய்து வருகிறது.

## *Prisoners Reform Measures.*

* 82 *Q.*—THIRU P. R. THOMAS : (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(*a*) whether there is any co-ordination between the work of the Discharged Prisoners Aid Society and the prisoners reform measures taken by the Jail Officials and the Probation Officers ;

(*b*) if so, whether there is any proposal to appoint a Committee to suggest better co-ordination ; and

(c) the stage at which the matter now stands ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) கேள்வி எழவில்லை.

## தென்காசி முன்சீப் நீதிமன்றம்.

* 83 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலுள்ள முன்சீப் நீதிமன்றத்தில், 1980, ஜூன் முதல் 23—9—1980 வரை, முன்சீப் நியமனம் செய்யப்படாததால், அந்நீதி மன்றம் செயல்படவில்லை என்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) அந்நீதிமன்றத்தில் 23—9—1980 வரை தீர்ப்பளிக்கப்படாமலிருக்கும் வழக்குகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) இல்லை (முன்சீப் பதவி மாற்றங்களை உயர்நீதிமன்றமே செய்கிறது).

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) 23—9—1980 அன்று 2352 வழக்குகள் தீர்ப்பளிக்கப்படாமல் இருந்தன.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, தென்காசி முன்சீப் நீதி மன்றத்தில் சுமார் ஆறு மாத காலத்திற்கு நீதிபதி இல்லாமல் இருந்ததால், வழக்குகள் எல்லாம் மாற்றப்பட்டு வந்தன. அங்கேயிருந்த நீதிபதி விடுப்பு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். அவருக்குப் பதிலாக வேறு யாரையும் நியமிக்கவில்லை. இது குறித்து அந்தப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து கூட அரசுக்கு முறையீடு வந்துள்ளது. வழக்குகளைப் பதிவு செய்தவர்களிடமிருந்தும் முறையீடு வந்துள்ளது. 19—9—1980 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் இது குறித்து செய்தி வந்துள்ளது. அப்படி இருக்கும்போது, அரசுக்குச் செய்தி இல்லையென்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். ஆகவே திரும்ப பரிசீலனை செய்து பதில் அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல, ஆறு மாத காலமாக நீதிபதி அங்கு இல்லாமல் இல்லை. 11—8—1980 முதல் 4—11—1980 வரைக்கும் நீதிபதி விடுப்பில் சென்றிருந்தார். அவர் தொடர் விடுப்பில் செல்லாமல் இருந்ததாலும், மாற்று நீதிபதி ஏற்பாடு செய்ய நீதிபதிகள் இல்லாமல் இருந்த காரணத்தாலும், உயர்நீதிமன்றம் நியமிக்க வில்லை. இது குறித்து அரசே உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### *Encroachment on empty site on Halls Road, Kilpauk.*

* 84 Q.—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that hutments were put up by unauthorised persons on an empty site (Old Burial Ground of the Corporation) on Halls Road, Kilpauk, adjacent to Bala Vihar Home, in the second week of August, 1980.

(*b*) whether it is also a fact that, soon after the removal of these hutments by the Police, they were once again put up by the encroachers ; and

(*c*) if so, the authority which granted the permission for the same ?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(இ) ஆம். குடிசைகள் 14—8—1980 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய புலனாய்வுப் படையினரால் அகற்றப்பட்ட பின்னரும், ஆக்கிரமிப்பாளர்களால் குடிசைகள் போடப்பட்டன. ஆனால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் அலுவலர்கள் எச்சரிக்கை விடுத்த பின்னர், அவர்களாகவே குடிசைகளைப் பிரித்துக்கொண்டனர். இப்பொழுது எந்த ஆக்கிரமிப்பும் இப்பகுதியில் இல்லை.

(உ) மேற்படி ஆக்கிரமிப்பிற்கு எவரும் அனுமதி அளிக்கவில்லை.

THIRU A. R. DAMODARAN . Sir, in view of the frequent encroachment on road margins and Government lands, may I know whether the Government will consider having a special squad attached to the Slum Clearance Board to remove these encroachments before they become permanent hutments ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஆங்கிலத்தில் "ஸ்பெஷல் ஸ்குவாட்" என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத்தான் "புலனாய்வுப் படை" என்று நான் தமிழில் சொன்னேன். புலனாய்வுப் படை இருக்கிறது, அது இயங்குகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரசுக்குச் சொந்தமான காலியிடங்களில் இதைப்போல குடிசைகள் உருவாகாமல் இருக்க இந்த இடங்களை காலியாக வைக்காமல், பூங்காக்களையும், கார் நிறுத்தும் இடங்களையும் ஏற்படுத்தும் யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இந்தக் கேள்வியை உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டுமென்று கருதுகிறேன்.

### மண்டல மாணிக்கம் அணைக்கட்டு.

* 85 வினா:—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1980, ஆகஸ்டில், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பகுதியில் மண்டல மாணிக்கம் என்னும் ஊருக்கருகே உள்ள அணைக்கட்டு இடிந்து விட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) அவ்வணை எந்த ஆண்டு கட்டப்பட்டது ?

(எ) அணை கட்டுவதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

[1981 பிப்ரவரி 26

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) & (இ) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பகுதி மண்டலமாணிக்கம் அணைக்கட்டிற்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் மண்டலமாணிக்கம் கண்மாயின் கரையில் அமைக்கப்பட்டிருந்த 'மண் கொரம்பு" (Mud Korambu) வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. சேதமடைந்த பகுதியை சரி செய்யும் வேலை மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

(உ) & (எ) இந்த அணை 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. செலவு ரூ. 8,30,570.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த அணை உடைபடவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும், அதில் வேறு ஒரு பகுதியில் உடைப்பு ஏற்பட்டு இப்போது சீர் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். 1976-ல் கட்டப்பட்டது. இவ்வளவு விரைவில், அதாவது 1980-க்குள் உடையக்கூடிய காரணம்பற்றி ஆராயப்பட்டதா? ஏனென்றால் இதனால் அந்தப் பகுதியில் உள்ள ஏழு, எட்டு கிராமங்களில் உள்ள பாசனம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டபோது, வறண்ட பகுதி, பிற்பட்ட பகுதி என்று சொல்லப்பட்ட இராமநாதபுரம் பகுதியிலே கட்டுமான அணைகளில் உடைப்பு ஏற்பட்டதை நாம் அறிவோம். அந்தமாதிரி அணைகளுக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மண் கொரம்பு அமைக்கப்பட்டதாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் உடைப்பு ஏற்பட்டது பொறியாளர்களின் தவற்றின் அடிப்படையிலா அல்லது காண்ட்ராக்டர்களின் தவற்றின் அடிப்படையிலா என்று அரசு விசாரித்திருக்கிறது. அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வேண்டிய உதவி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பிரச்சினை இல்லை. இப்போது மண் கொரம்பு வலுவாக அமைக்கப்பட்டு வருகிறது. வேலை முடியும் தருவாயில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மண் அணை போட்டதனால்தான் உடைக்கப்பட்டது என்றும் இப்போது வலுவாக அமைக்கப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். இப்போது மண் வைத்து அமைக்காமல், சிமிண்ட்டு, கல் அல்லது சுண்ணாம்பு போன்றவைகளை வைத்து கொரம்புகள் அமைத்து நல்ல முறையில் செய்ய அரசு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 26]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** சென்ற முறை மணல் கலந்து மண் கொரம்பு அமைக்கப்பட்டு அது சரியில்லாததால், அந்த முறையை மாற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்போது அந்தப் பகுதியிலே சிமெண்ட் வைத்துக் கட்ட வேண்டும் என்றும், இப்போது வலுவான நிலையிலே உருவாக்கப்பட வேண்டும் என்றும் மண் கொரம்பு அமைக்கப்பட்டு வருகிறது.

## ரப்பர் தொழிற்சாலை.

* 86 வினா—**திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** வருங்காலங்களிலே செயற்கை ரப்பரைவிட இயற்கை ரப்பரைத்தான் உலகமே நம்பியிருக்க வேண்டுமென்ற கருத்து நிலவி வருகிறது. அதன் அடிப்படையில், கன்னியாகுமரியில் ரப்பர் உற்பத்தி இருப்பதால், அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** இப்போது அதுபோன்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை தொடங்குகின்ற குறிப்பு அரசினிடத்தில் இல்லை என்று பதில் தந்தார்கள். கூட்டுறவுத் துறையில் சிறு உற்பத்தியாளர்கள் ரப்பர் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று அரசுக்கு மனு செய்திருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும்போது, அரசே ரப்பர் தொழிற்சாலையை இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டின் கீழ் தொடங்க இருப்பதனால், அதற்கு அனுமதி தரப்படாது என்று வந்திருக்கிறது. அரசே தொடங்க இருப்பதால், சிறு உற்பத்தியாளர்கள் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இந்த நிலை தவிர்க்கப்படுமா ?

[1981 பிப்ரவரி 26

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** ஏற்கெனவே திருப்பத்தூரில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், டிட்கோ-வும் திரு. தியாகராஜன் என்பவரும் சேர்ந்து ஆரம்பிப்பதாக இருந்தது. அதற்கான நிதி ஒதுக்கீடு எல்லாம் செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலே கூட்டுறவுத் துறையில் தொடங்க இருந்ததால், இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னால் தனியாக ஆரம்பிப்பதற்கு மனுக்கள் வந்ததாகவும் அரசே ஆரம்பிக்க இருப்பதாலே நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதாகவும் சொன்னார்கள். அதுபோன்ற தகவல் எதுவும் இல்லை. அப்படி யாராவது தனியார்கள் தொடங்கினால், இந்த அரசு தேவையான உதவிகளைச் செய்யும்.

## ஆதி திராவிடர்கள் முறையீடு.

@ *48 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் இருப்புப்பாதை தலைமை நிலையம் ஏற்படும் இடத்திற்கு பக்கத்தில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் கோட்டாறு-கருப்புக்கோட்டை சாலை அடைபடுவதினால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தெரிவித்து, அரசுக்கு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, திருவனந்தபுரம்-திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில்வே இணைப்புச் சாலையுடன் கோட்டாறு-கருப்புக் கோட்டை ரோடு கரியமாணிக்கபுரம் பஞ்சாயத்துக்கள் உட்பட்ட கிராமங்களில் நாகர்கோவிலிலிருந்து கருப்புக்கோட்டைக்குப் போகிற, ஆதி திராவிடர்கள் கிராமத்திற்குப் போகின்ற பாதை அடைக்கப்பட்டுவிட்டது. இதற்காக அப்பகுதி மக்களால் மனுக்கள் தயார் செய்யப்பட்டு அரசினிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்கு மாற்று ஏற்பாடு செய்து தருவதாகச் சொன்னார்கள். அதற்காக என்று அங்கேயுள்ள மக்களும் மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று சொல்வதனால், தலைவர் அவர்களின் அனுமதியோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த வேண்டுகோளைக் கொடுக்கிறேன். இனிமேலாவது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

---

@ 29—1—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப் பட்டது.



1981 பிப்ரவரி 26]

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** வெட்டூர்ணி மடம் ஆதி திராவிடர்களும், கரியமாணிக்கபுரம் தலைவர் அவர்களும் அங்கு ரெயில்வே நிலையம் அமைக்கப்படுவதால், கோட்டாறு-கருப்புக்கோட்டை சாலை பாதிக்கப்படுகிறது என்றும் வேறு ஒரு பாதையை அமைக்க வேண்டுமென்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் மூலம் கோரியுள்ளனர் என்றும் தெரிகிறது. முதலில் ஆர்.எஸ். எண் 76, 77, 80 மற்றும் 83 மூலமாக சாலை அமைக்கும் கருத்து இருந்தது. ஆனால், அந்த சர்வே நிலங்கள் அந்த ரெயில்வே பகுதியைச் சேர்ந்திருக்கிறது. சுசீந்திரம் கால்வாய் கிழக்கே ஆர்.எஸ். 28 என்ற நிலத்தின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாதையில் இருந்து, பாலத்திலிருந்து தொடங்கி ஆர்.எஸ். சர்வே எண் 27-7, 22-6, 22-2, 23-8, 19-1 ஏ, 19-2 பி, 17-1 ஏ மற்றும் 17-1 பி என்ற நிலங்கள் ரெயில் நிலையத்தின் வடக்குப் பககம் இருப்புப் பாதையைத் தாண்டி நடைபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்காக தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிறகு, நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசுக்கு முன் அனுமதி பெறவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலங்களைக் கையகப்படுத்தியவுடன் சாலைகள் விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, ரயில்வே நிலையம் கட்டுவதற்கு முன்னே இந்த கோட்டாறு, கருப்புக்கோட்டை ஆதி திராவிட மக்கள் நாகர்கோவிலுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி மற்ற வசதிகளைப் பெறுவதற்கு இரண்டு பர்லாங் தூரம்தான் வந்துகொண்டிருந்தார்கள். இந்த ரெயில்வே நிலையம் அமைக்கப்பட்ட பிறகு, அமைச்சர் அவர்கள் சொல்கின்ற மாற்று வழிப்படி அவர்கள் வர வேண்டுமென்றால், நான்கு அல்லது ஐந்து மைல்கள் சுற்றி வருகின்ற மாதிரிதான் அமையும். ரெயில்வே நிலங்களை ஒட்டியே நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்து புது ரோடு போட்டால், நான்கு பர்லாங்கில் அவர்கள் வர முடியும். ரெயில்வே நிலத்தைக் கையகப்படுத்துவதைவிட அந்த இடத்திற்கு அப்பாற்பட்ட இடங்களை எடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும். அப்படி முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நஞ்சை நிலங்களை வீட்டு வசதி வாரியம்கூட எடுத்து, அந்த இடத்திலே வீடுகள் அமைப்பது என்பது கூடாது என்ற கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கிறது. ஆகவே அந்த வகையில், இருக்கின்ற நஞ்சை நிலங்களை எடுத்துப் பாழாக்காமல் எந்த அளவில் உதவி செய்ய முடியுமோ அதைச் செய்யும்.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில நஞ்சை நிலங்களைத் தவிர வேறு நிலங்களே கிடையாது. எல்லாப் பகுதிகளிலும் நஞ்சை நிலம்தான் இருக்கின்றது. சிறிதளவு நிலம் ரோட்டுக்காக எடுக்கப்பட்டாலும், மற்ற பகுதிகளிலேயிருந்து அந்த விளைவுகளை எடுத்து ஈடுகட்டிக்கொள்ள முடியும். எனவே மக்கள் போக்குவரத்திற்காக, மக்களின் வசதிக்காக அரசினுடைய அந்தக் கொள்கையிலிருந்து, மொத்த மாநில அளவில் வைத்திருக்கின்ற அந்தக் கொள்கையிலிருந்து விலகி, அந்தப் பகுதியிலே இந்தத் திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விதி விலக்கு அளிப்பது என்பது முறைதான். ஆனால், இதற்கு அந்த விதிவிலக்கு அளிக்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசு சிந்திக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களை பல ஆண்டுகளாக அரிஜன நலத் துறை அமைச்சர் என்றுதான் சொல்லி வந்தார்கள். இப்போது ஆதி திராவிடர் அமைச்சர் என்று ஏன் மாறுதல் பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அப்படியென்றால் திராவிடர் யார்? ஆதி திராவிடர் யார்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆதி திராவிடர்—திராவிடர் என்பதற்கு, வித்தியாசம் தெரியாமல் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். என்னை ஆதி திராவிடர் ஆக்கிக்கொள்வது என்றாலும், நான் கவலைப்படவில்லை.

### எஸ்.எம்.ஆர்.வி. அரசு நெசவு பயிலகம்.

@ * 49 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980-81 கல்வி ஆண்டில், நாகர்கோவிலிலுள்ள எஸ்.எம்.ஆர்.வி. அரசு நெசவு பயிலகத்தை, உற்பத்தி மையமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

---

@ 29—1—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப் பட்டது.



திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, நாகர்கோவிலிலே அமைந்துள்ள அரசு நெசவுப் பள்ளி தொழிற் பயிற்சி அளிக்கின்ற ஓர் பள்ளியாக நெசவுத் தொழில் பயிற்றுவிக்கின்ற ஓர் இடமாக இருக்கிறது. அதில் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கணக்கு கொடுக்கப்பட்டது. அதை ஓர் உற்பத்தி மையமாக ஆக்கி, அதிலே பயிற்சி பெற்றவர்கள் அங்கே இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் அப்பரண்டீஸ் ஆகப் பணி செய்ய வேண்டும். அந்தப் பள்ளியே உற்பத்தி செய்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி, அங்கு உற்பத்தி செய்வதன் மூலம் லாபத்தைத் தேடிக்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். அதற்கென்று அந்தப் பகுதி மக்களிடமிருந்து வேண்டுகோள் வந்திருக்கின்றது. அதை அரசு பரிசீலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தமிழகத்தைப் பொறுத்தவரையில், கைத்தறி நெசவு ஒரு முக்கியமான தொழில். ஆகவே நெசவுத் தொழில் நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் அரசுக்கு, கைத்தறித் துறைக்குத் தேவைப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, அத்தகைய கருத்தை அடிப்படையாகக் கொண்டு இப்படி மாற்றுவதற்கு வேண்டிய தேவை இப்போதுள்ளதால், இந்த நிலையத்தைக் கைத்தறி நெசவுத் தொழில் பயிற்சி நிலையமாக மாற்றலாம் என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும்.

### தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு.

@ 50 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் தாழ்த்தப்பட்டோருக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காட்டை உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது இருந்து உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) & (இ) இதுபற்றிய குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 11-00)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் 31 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தச் சலுகை 9,000 ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்குத் தான் என்று சொன்னபோது, அதை நீக்க வேண்டுமென்றுதான் எல்லோரும்

---

@ 29–1–1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

கேட்டார்கள். இருந்தாலும், அரசே 31 சதவிகிதம் என்பதை 51 சதவிகிதமாக மாற்றியது. அதே போன்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்பதை 30 சதவிகிதமாக மாற்ற வேண்டுமென்று அப்பிரிவினர் விரும்புகிறார்கள். அது எப்போது நிறைவேற்றப்படும் ? எந்த அளவிற்கு அது ஏற்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான அதிக ஒதுக்கீட்டை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் மேல் நடவடிக்கை தெரிந்த பிறகு, நிச்சயமாக அரசு இது பற்றிய முடிவை விரைவிலே மேற்கொள்ளும்.

**THIRU A. R. DAMODARAN :** Sir, is it a fact that even this 18 per cent quota is not being filled up in various jobs and Colleges because there are not sufficient number of applicants? If that be the case, why is it necessary to increase it from 18 per cent to a higher percentage ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னது போன்ற குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

**சட்டமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகளையும் கவனித்து அறிக்கை தர வேண்டுமென்று காவல் துறையைச் சேர்ந்த ஒற்றுத் துறை கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள ஆணை குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி அவர்களும், திரு. ம. சங்கரலிங்கம் அவர்களும் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எந்த வகையில் உரிமைப் பிரச்சினை குறித்த விதிகளுக்குட்பட்டது என்பதைச் சுருக்கமாகச் சொல்லக் கோருகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

The Superintendent of Police Special (Branch) C.I.D. has in his order, dated 31st January 1981 issued orders to his Department that the Deputy Inspectors, Sub-Inspectors and others of his



section should on turn duty watch the proceedings of both the Houses of the Legislature, keep vigil over the proceedings and report the same immediately to the department and that in their work there should be utmost precaution from being identified.

This action of the Superintendent of Police interferes with the functioning of the Members of this House in the discharge of their normal duties. It is a threat to the independent functioning of the Legislature itself. Hence I may be permitted to seek the permission of this House to refer the matter to the Committee of privileges.

தலைவரவர்களே, ஒற்று (C.I.D.) துறையிலேயிருந்து கொடுக்கப்பட்டுள்ள மெமோரண்டத்தில் சில குறிப்பிட்ட காரியங்களை, சில பணிகளை அந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், அதிகாரிகள் செய்ய வேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரியங்களை அவர்கள் எப்படிச் செய்ய வேண்டுமென்ற முறைகளையும்கூட அதிலே வற்புறுத்தி, அழுத்தமாக தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மெமோராண்டத்திலே,

"The staff from all sections in S.B. C.I.D. (Headquarters) will get themselves acquainted with this assignment". என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொடர் பணியாக, எப்போதும் நிரந்தரமாக நடைபெறுகிற அளவிலே, எல்லோரும் பயிற்சி பெறுகிற அளவிலே, தொடர்ந்து இது நடைபெறுமென்று துவக்கத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். அடுத்ததாக, காவல் துறையைச் சேர்ந்தவர்கள், அதாவது ஒற்றுத் துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளே வருகின்றபோது, இந்த அவையைப் பார்ப்பதற்காக வரும் வகையிலே, அதிகாரபூர்வமாக, அதாவது இந்த அவை அதிகாரிகளின் அனுமதி பெற்று உள்ளே வர வேண்டும். பொது மக்கள் பார்வையாளர்களாக அனுமதி பெற்று வருகிறார்களே, அதுபோன்று இவர்களும் அனுமதி பெற்று வர வேண்டுமென்று தெளிவாக்கியிருக்கிறார்கள். உள்ளே வந்த பிறகு என்ன செய்ய வேண்டுமென்று, அவர்கள் பணிகளை முறைப்படுத்தி, வகைப்படுத்தியிருக்கிறார்கள்.

When the Assembly and Council Sessions are held simultaneously, the Deputy Inspector and one Sub-Inspector will cover the Assembly proceedings and the other Sub-Inspector will cover the Council proceedings.

யார், யார் எந்தப் பணியை, எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையடுத்து,

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 26

"While covering the proceedings of the House, the following information should be passed on immediately to the Superintendent of Police, Special Branch C.I.D., Deputy Superintendent of Police i/c 'City' and the C.I.D. Control Room"

யாருக்கெல்லாம் தகவல்கள் கொடுக்க வேண்டுமென்பதையும் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் துறையின் அதிகாரிகளுக்குத் தகவல்கள் கொடுக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, ஒயர்லஸ் மூலமாக மாநிலம் முழுவதும் தெரிவிக்கக் கூடிய வசதிபடைத்த சி.ஐ.டி. கன்ட்ரோல் ரூமுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்தபடியாக, எந்த விவரங்களையெல்லாம் பெற வேண்டுமென்று வகைப்படுத்தியிருக்கிறார்கள்

"walk-out by Members of the House and the reasons therefor"

வெளி நடப்புகள் நடைபெறுகின்றபோது, எந்தச் சூழ்நிலையில், எப்போது நடைபெற்றது என்பதையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

"Any issue raised on the Floor of the House relating to Police"

காவல் துறை தொடர்பாக எந்தப் பிரச்சினை இந்த மன்றத்தில் எழுப்பப் பட்டாலும், அந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறார்கள்.

"Law and Order matters, conduct of Police Officers, allegations against Police Officers".

சட்டம், ஒழுங்குப் பிரச்சினை, போலீஸ் அதிகாரிகளின் நடத்தைகள், போலீஸ் அதிகாரிகள் பற்றிய குற்றச்சாட்டுகள் போன்ற விவரங்களையெல்லாம் உடனடியாகக் கன்ட்ரோல் ரூமுக்குத் தெரிவிக்க வேண்டும். அடுத்து,

"details of Adjournment motions relating to Police and Law and Order matters and details of all censure and No-confidence motions".

அவர்கள் இதைச் செய்கின்றபோது, இந்தக் கட்டளையை நிறைவேற்றுகிற போது எவ்வளவு ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டுமென்பதையும் அந்த மெமோராண்டத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

The staff deputed should pass on information over telephone with the least delay and in a most discreet manner without exposing their identity.

அவர்கள் யார் என்பது வெளியே தெரியாத அளவிற்கு நடந்துகொண்டு, இந்தத் தகவல்களை உடனடியாக அவர்கள் தெரிவிக்க வேண்டும். செய்ய வேண்டிய பணிகளை எப்படிச் செய்ய வேண்டுமென்பது மட்டுமல்ல, மறைமுகமாகச்



1981 பிப்ரவரி 26] [திரு. க. இராமமூர்த்தி]

செய்ய வேண்டுமென்பது மட்டுமல்ல, மற்றவர்கள் சந்தேகப்படாத அளவிற்குச் செய்ய வேண்டும்.

"The coverage of the proceedings of the House should also be done in a very discreet manner, as any exposure of the identity of the staff deputed for this duty is likely to lead to embarrassing situations.".

ஆகவே அவர்கள் எந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்பதை உணர்ந்து, தெரிந்து, அதனுடைய முக்கியத்துவத்தையும், பின்னணியையும் தெரிந்து, உத்தரவு இடப்பட்டிருக்கிறது. நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள் என்பது தெரிந்து விடுமானால், இந்த மாமன்றத்திற்குத் தெரிந்து விடுமானால், அதனுடைய விளைவுகள் சங்கடப்படக்கூடியவையாக, விபரீதமாக மாறிவிடலாம், அதற்கு இடம் கொடுக்காமல் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

"After the Session of the House is over for the day, the Deputy Inspector deputed will submit a report to the Superintendent of Police, S.B., C.I.D. on the same day itself containing salient features of the Proceedings of the House."

தலைவரவர்களே, இது ரொம்பவும் முக்கியமானது. இந்த அவையின் நடவடிக்கைகள், நடவடிக்கைக் குறிப்புகளில் ஏறுகின்றன. இந்த அவையில் நடைபெறும் பல்வேறு விவாதங்கள் சபைத் தலைவரின் அனுமதியோடு நடைபெறுகின்றன. விவாதம் நடைபெறுகிறபோது, 'வேண்டாம்' என்று முடிவு செய்து, 'பல விவாதங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(முற்பகல் 11-10)

அல்லது அவையினுடைய மரியாதை அல்லது அவையினுடைய கண்ணியம் அல்லது வேறு சூழ்நிலை காரணமாக இந்த அவையில் நடைபெறுகிற விவாதங்கள் அல்லது குறிப்புகள் சட்டமன்றத்தின் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது அல்லது வெளியே பத்திரிகைகள் வெளியிடக் கூடாது என்று தலைவர் அவர்கள் அறிவித்தால், அது அவைக்கு வெளியே தெரிய வாய்ப்பு இல்லை. இங்கே வருகின்ற பார்வையாளர்கள் வெளியே போய் சொல்வதற்கான வாய்ப்பு கூட மிக மிக அரிதுதான். ஆனால் காவல் துறைக்கு 'சேலியன்ட் பியூச்சர்ஸ' ( salient features ) அனைத்தையும் சொல்ல வேண்டுமாம். அதோடு மட்டுமல்லாமல் ஸ்பெஷல் ரிப்போர்ட்டும் கொடுக்க வேண்டுமாம். இங்கே நடைபெறுகின்ற விவாதங்களைப் பொறுத்தவரையில், பப்ளிகேஷன் என்கிற முறையில் அவைத் தலைவருக்கு சில உரிமைகள் இருக்கின்றன; அதையும் கடந்து நின்று அவையின் கவனத்திற்கே இல்லாமல் அவையினுடைய

தலைவருடைய கவனத்திற்கே இல்லாமல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்
பட்டவை உட்பட அத்தனை நிகழ்ச்சிகளையும் அப்படியே கொடுக்க வேண்டு
மென்று காவல் துறையிலிருந்து உத்தரவு வெளியாகியிருக்கிறது.

"The above instructions should be adhered to scrupulously." இதிலே மாற்றமே
இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வார்த்தைக்கு வார்த்தை
கண்டிப்பாக மாற்றமே இருக்கக் கூடாது என்று காவல் துறையினர் உத்தரவு
கொடுத்திருக்கிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல், இந்த உத்தரவு மிகவும்
இரகசியம் என்றும், மிக மிக அவசரம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
சீக்ரட், மோஸ்ட் இம்மீடியட் (Secret|Most immediate ) என்று உத்தரவில்
தெளிவாக இருக்கிறது. இந்த உத்தரவைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு
தலைவரவர்களுக்கு நீண்ட கால சட்டமன்ற அனுபவம் இருக்கிறது. ஆகவே,
நான் இதுபற்றி விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், என்ன நடை
பெறுகிறது, எப்படி நடைபெறுகிறது என்பதை மட்டும் நான் இங்கே சொல்ல
விரும்புகிறேன். இந்த அவை சுதந்திரமாக, சுயேச்சையாகச் செயல்பட
வேண்டும். அப்படி இந்த அவை செயல்படுவதன் மூலம்தான் ஜனநாய
கத்தைக் காப்பாற்ற முடியும். மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில்
நாங்களும் எங்களுடைய கடமைகளை நல்லமுறையில் செய்ய வாய்ப்பாகவும்
இருக்க முடியும். இந்த அவையைப் பொறுத்தவரையில், இந்த அவையும்,
இந்த அவையோடு ஒட்டியிருக்கின்ற பகுதி என்று வரையறுக்கப்பட்ட பகுதி
யும் தலைவரவர்களுடைய வாம்புக்கு உட்பட்ட பகுதிகள், தலைவருடைய
அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள், அதற்குள்ளே நடப்பவைபற்றி முடிவு செய்ய
வேண்டிய அதிகாரம் தலைவருக்குத்தான் இருக்கிறது. தலைவரவர்களுடைய
கவனத்திற்கே வராமல், யாருக்கும் தெரியாமல் காவல் துறையினர் எப்படிச்
செயல்பட வேண்டும், எப்படியெப்படி உள்ளே வர வேண்டும், எப்படியெப்படி
குறிப்புகள் எடுக்க வேண்டும், உடனடியாக அதை எப்படியெப்படி தொலை
பேசி மூலம் அல்லது மற்ற வசதிகள் மூலம் தெரிவிக்க வேண்டுமென்று தெளி
வாக இந்த உத்தரவில் விளக்கப்பட்டிருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல்
மாநிலம் முழுவதும் அதை வெளியிட கன்ட்ரோல் ரூமுக்குத் தெரிவிக்க வேண்டு
மென்று சொல்வதன் மூலம் தெளிவாகிறது. இந்த அவையைப் பொறுத்த
வரையில், சுயேச்சையாகச் செயல்பட முடியாமல், பேச்சுரிமையைப் பறிக்கிற
முறையில் திட்டமிட்டு, விடப்பட்டிருக்கிற ஆணை இது. அதோடு, இந்த
அவையினுடைய எல்லையைப் பொறுத்தவரையில் அதற்குள்ளே எப்படிச்



செயல்படுவது என்பதைப் பொறுத்தவரையில், நம்முடைய சட்டமன்றத்திற்கு
பல்வேறு அனுபவங்கள் உண்டு. "Parliamentary Privileges under the Indian Constitution". என்கின்ற
நூலில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 27-வது பக்கத்தில் தெளி
வாக இருக்கிறது. 1959 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று மெட்ராஸ்
லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலில் அதனுடைய எல்லைகள் எவையெவை என்பது
பற்றி வரையறுக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அந்தக் குழு அதுபற்றிய
தகவல்களைத் தந்திருக்கிறது.

The Committee reported that "in the case of Members of Legislative Council 'Precincts of the House' shall mean :

(i) The entire Secretariat Buildings in the Fort St. George including the Council Chamber.".

என்று மேலவையினுடைய எல்லை குறித்து தெளிவாக வரையறுத்திருக்
கிறார்கள்.

I want to apprise you as to how they intrude into your powers.

The precincts of the House have been mentioned as "........ the Council Chamber (the place where Members of the Council are required to assemble either under Article 175 or Article 176 of the Constitution), the Chambers of the Chairman and the Deputy Chairman, the rooms in which the associated offices are situated, the Ministers' rooms, the library, the Canteen and the Lounge Rooms............".

In the case of strangers, Precincts of the House shall mean the Council Chamber with Galleries, its verandah and steps and shall be applicable only to those to whom tickets have been issued by the office for admission to the galleries."

என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த அவையையொட்டி இருக்
கின்ற வராந்தா, காலரியில் ஒற்றுத் துறையினர் நடமாட வேண்டுமென்றும்,
உட்கார்ந்திருந்து கண்காணிக்க வேண்டுமென்றும் இந்த உத்தரவில் சொல்லி
யிருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற காலரி, வராந்தா எல்லாம் அவைத்
தலைவருடைய அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள். இங்கே அவர்கள் உட்கார்ந்து
கொண்டு, அதே சமயத்தில் அவர்கள் யார் என்ற உண்மையை அவைத் தலை

வருக்குத் தெரிவிக்காமல் இத்தகைய ஒற்றுச் செயல்களைச் செய்வதன் மூலம் அவைத் தலைவருடைய வரம்புக்குட்பட்ட இடத்தில் அவருடைய அங்கீகாரம் இல்லாமலேயே அவர்கள் இந்தச் செயலைச் செய்யக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவைத் தலைவருடைய அனுமதியைப் பெற வேண்டுமென்று சுற்றறிக்கையில் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** They should obtain entry passes from the concerned officers of Legislative Assembly and Council. உதாரணத்திற்குச் சொல்வதானால் இங்கே இராமமூர்த்தி என்ற பெயரில், ஒருவர் உள்ளே வந்து விட்டாம். பொதுவாக இங்கே வருபவர்கள் என்ன வேலை, என்ன அதிகாரம் என்று தெரிவித்துவிட்டு வருபவர்கள் அல்ல. ஆனால் காவல் துறையினர் வெளியிட்டுள்ள ஆணைப்படி பொது மக்களோடு இந்த சி.ஐ.டி.க்களும் இரண்டறக் கலந்து உட்கார வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. யார் என்று தங்களைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

"Exposure of the identity of the staff deputed for this duty is likely to lead to embarrassing situations" என்று சொல்லியிருப்பதன் மூலம் காவல் துறையினர் மறைமுகமாகச் செயல்பட வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். யார் என்று அடையாளம் காட்டினார்களென்றால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அளவுக்கு உத்தரவில் தெளிவாக வாசகம் இருக்கிறது. அதேசமயத்தில் நாடாளுமன்றம், சட்டமன்றம் இவையெல்லாம் எப்படிச் செயல்பட வேண்டும், அதிகாரங்கள் எவையென்பவை வரையறுக்கப்பட்டிருக்கின்றன, எல்லைகள் எப்படி ஆட்படுத்தப்பட்டிருக்கின்றன என்பவை எல்லாம் கடந்த காலத்தில் உரிமையோடு பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மேலும் நம்முடைய இந்தியத் தேர்தல் கமிஷனர் திரு. Shakdher அவர்கள் ஒரு புத்தகத்திலே இதுபற்றி மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.

In page 5 of his book "Glimpses of the Working of Parliament" என்ற புத்தகத்திலே 5-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். வித்தல் பாய் பட்டேல் அவர்கள் அன்றைக்கு சென்ட்ரல் அசெம்பிளியினுடைய தலைவராக இருந்தபோது இதுபோல் ஒரு பிரச்சினை வந்தது. அல்லது இத்தகைய ஒரு சூழ்நிலை அன்றைய மத்திய சட்டமன்றத்தில்



ஏற்பட்டது. பார்வையாளர்கள் பகுதியிலிருந்து இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அது சுதந்திரப் போராட்டக் காலம். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு காவல் துறையினர் அந்தக் கட்டடத்தைக் கண்காணிக்கிற பொறுப்பு தங்களுடையது, தங்களிடம் விட்டு விட வேண்டும், தாங்கள்தான் அதற்குரிய முழு அதிகாரம் படைத்தவர்கள் என்று சொன்னார்கள். அப்போது திரு. வித்தல் பாய் பட்டேல் அவர்கள் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும், கட்டடத்தைப் பொறுத்தவரையிலும் அதனுடைய முழுப் பொறுப்பும் தன்னுடைய அதிகார எல்லைக்குட்பட்டதுதான் என்றும், ஏதாவது நடைபெற்றாலும் அதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பும் தலைவருடையதுதான் என்றும் அரசுடைய அல்லது காவல் துறையினுடைய பொறுப்பு அல்ல என்றும் தெளிவாகச் சொன்னார்கள். அவருக்கும் காவல் துறைக்கும் இடையே அது ஒரு பெரிய விவாதமாக ஆகியது. கடைசியாக தலைவருடைய கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

"President Patel, on the other hand, asserted that the authority and control over the precincts of the Assembly should vest in the Chair and ordered on 20th January 1930 that the Galleries be closed till such time as a settlement in the matter was arrived at."

(முற்பகல் 11-20)

அவர்களுடைய கருத்தை காவல் துறை ஏற்காத நிலை வந்தபோது, பார்வையாளர் பகுதியையே மூடி வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். பார்வையாளர் பகுதியிலே காவல் துறையினர் உள்ளே வருவது கட்டாயமான ஒரு பணி என்று அரசு சொன்னதால், அந்தப் பிரச்சினையில் முடிவு வரும் வரையில், அந்தப் பகுதியை மூடி வைக்க வேண்டும் என்று விட்டல் பாய் பட்டேல் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு

"After negotiations, an agreement was reached a month later which laid the foundation of the present Watch and Ward Staff for Parliament House."

அதற்குப் பிறகுதான் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் இந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கவனிப்பது அவைத் தலைவர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு இயங்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டது.

"The present position is that all security arrangements in the precincts of the House are under the control of the Speaker who exercises his authority through the officers directly appointed by him."

இப்படி, யார் மூலம், யார் தான் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அதிகாரம் வரையறுக்கப்பட்டு ஏற்பட்டது. 1930-லேயே இந்தப் பிரச்சினைகள் எழுந்தன.

அதோடு மட்டுமல்ல, இந்த அவையும், அவையின் கண்ணியமும் மரியாதையும் எவ்வளவு உயர்ந்தது என்பதைப் பல காலகட்டங்களிலே வலியுறுத்த வேண்டிய கட்டாயம் நம்முடைய தேசிய தலைவர்களுக்கு ஏற்பட்டது. நம்முடைய மதிப்பிற்குரிய மறைந்த தலைவர் ஜனநாயகக் காவலர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1958 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலே நாடாளுமன்றத்திலே இதுபற்றி அவர்களுடைய கருத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்தவரும் பேச கொஞ்சம் நேரம் விட்டு வையுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

Page 105 of "Parliamentary Privileges under the Indian Constitution".

Speaking on March 8, 1958, on the occasion of the unveiling of the portrait of Speaker Vithalbai Patel, Prime Minister Jawahar Lal Nehru observed :

"The Speaker represents the House. He represents the dignity of the House, the freedom of the House and because the House represents the nation, in a particular way, the Speaker becomes the symbol of the Nation's freedom and liberty. Therefore, it is right that, that should be an honoured position, a free position, and should be occupied always by men of outstanding ability and impartiality."

"Political life has yet to be organized and based solely on programme and it will take a long time before conditions settle down. The independence of the Speaker and the Legislative Secretariat is, therefore, a matter very vitally essential not only for a proper discussion, freedom of speech and free expression of opinion, but for the very existence of legislatures as really democratic bodies and not merely as handmaids to the executive."
அதிகார வர்க்கத்தினுடைய கைப்பொம்மைகளாகச் சட்டமன்றங்கள் விளங்கக் கூடாது என்பதற்காகச் சில உரிமைகளை நம்முடைய அவை தனக்கென்று எடுத்துக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்த அவையினுடைய தலைவராக வருபவர்கள் எவ்வளவு உயர்ந்த நிலையிலே வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும், அந்தப்



பதவிகளுக்கு உயர்ந்த மதிப்பும் மரியாதையும் இருப்பதால், உயர்ந்த நிலையிலே இருப்பவர்கள் அந்தப் பதவிக்கு வர வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் மிகத் தெளிவாக பண்டித நேரு அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அந்த உரிமைகள் அவைகளைக் காக்கின்றவர்களுடைய அதிகாரத்திற்கு உள்ளே மிகச் சுலபமாகக் காவல் துறையினர் மற்றும் சி.ஐ.டி. துறையினர் தலையிட முடியும் என்ற நிலை உருவாகும் அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தினுடைய வளர்ச்சிபற்றி, நாடாளுமன்றத்தினுடைய வளர்ச்சிபற்றி பல்வேறு தகவல்கள் இப்போது நம்மிடம் இருக்கின்றன. "May's Parliamentary Practice" என்ற புத்தகத்திலே 146-ம் பக்கத்திலே இதை தெளிவாக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு சுற்றறிக்கை, இரகசிய சுற்றறிக்கை என்ற நிலையிலே இருந்தது வெளியாயிற்று. அந்த நிலையிலே நமக்கு உதவும் வகையிலே 'பார்லிமென்டரி ப்ரசீஜரிலே' என்ன இருக்கிறது என்று சொன்னால் நல்லது.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சுற்றறிக்கை எந்த நிலையிலே வெளியாகியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். இந்தச் சுற்றறிக்கை வெளியான விதம், இந்த Leakage may be wanton வேண்டுமென்றே இதை வெளியேவிடும் நிலைகூட இருந்திருக்குமோ என்ற சந்தேகம் இருக்கிறது. ஒன்று, இந்தச் சுற்றறிக்கையின்படி எங்களைக் கண்காணிப்பது. இன்னொன்று, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா, செயல்படுத்தப்பட்டதா, இல்லையா என்பதைப் பிரச்சினைக்கு உரியதாக மாற்றலாம் என்பது. இந்தச் சுற்றறிக்கை வெளியே மற்றவர்களுக்குக் கிடைக்கச் செய்ததே காவல் துறை திட்டமிட்டு செய்ததோ என்றுகூட நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். என்னுடைய உபயோகத்திற்காகச் சொல்கிறேன். இன்றைக்கு இருக்கிற அந்த நிலையிலே, எங்கேயாவது சட்ட மன்றத்திலே, பார்லிமென்ட்லே இதுபோன்ற நிலை வந்து அதுபற்றிய விவரங்கள் இருந்தால், கொடுங்கள். அது மிகவும் நல்லது. அவையிலே சி.ஐ.டி. வந்திருந்த நிலை, அவர்களைக் கண்டுபிடித்து அவையிலே அதுபற்றி எழுப்பிய நிலை என்று பல நிலைகள் இருக்கின்றன. இந்த நிலைகளிலே ஏதாவது இருந்தால் சொல்லுங்கள், அது எனக்கு உபயோகமாக இருக்கும் என்று சொல்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சுற்றறிக்கை 31 ஆம் தேதி அனுப்பப்பட்டது. "Most Immediate" என்று இருப்பதால், அன்றைக்கே அது செயல்படத் தொடங்கியது. இரண்டாவதாக, அவர்களே உத்தரவிட்டிருக்கிறார்கள்,

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 26

யாருக்கும் வெளியே தெரியாமல் செயல்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவை அதற்குப் பிறகு ஒரு வார காலம் நடைபெற்றிருக்கிறது. இந்த அவையிலே இருந்து அவர்கள் என்ன விஷயங்களை எடுத்தார்களோ தெரியாது. வாக்கெடுப்பு கூட வந்தது. இந்தத் தகவல்கள் எல்லாம் கூட நிமிடத்திற்கு நிமிடம் காவல் துறைக்குச் சென்று இந்த நடவடிக்கைகளை மாற்றுவதற்கு, இடையிலே சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு அந்தத் தகவல்கள் பயன்பட்டிருக்கலாம். காரணம் ....

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற ஜாடையிலே நான் அப்படித்தான் புரிந்துகொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** As the Opposition, we always try to take the Government by surprise

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது நான் விளக்கம் பெற்று விட்டேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** காவல் துறை உத்தரவு என்ன சொல்கிறது? "என்ன நடவடிக்கை நடந்தது என்பதைப்பற்றி எங்களுக்கு ரிப்போர்ட் கொடுக்க வேண்டும்" என்று சொல்கிறது. அப்படிச் சொல்லும்போது இந்த அவையினுடைய Expunge செய்யப்பட்ட பகுதிகள்—விவாதங்கள், தலைவர் அவர்களே, தாங்கள் எது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது, எது இந்த அவைக்கு வெளியே போகக்கூடாது என்று கருதுகிறீர்களோ அந்தத் தகவல்களைக் காவல் துறையினுடைய அதிகாரிகள் அதிகாரபூர்வமாக தங்களுடைய துறையினருக்குத் தெரிவித்து, அவைகள் அங்கே பதிவு செய்யப்பட்டு காலாகாலத்திற்கும், இப்படி ஒரு நிகழ்ச்சி அவையிலே நடந்தது, இப்படி ஒரு பேச்சு, விவாதம் நடைபெற்றது என்று—நாங்கள் எல்லாம் அவைகளைப்பற்றி மறந்து விட்ட சூழ்நிலையிலே—ரெக்கார்ட் பூர்வமாக வைத்துக்கொள்ள இந்த உத்தரவு வழிவகை செய்கிறது. "May's Parliamentary Practice and Procedure என்ற புத்தகத்திலே 'அவை நடவடிக்கைகளிலே நீக்கப்படுபவற்றின் நிலை என்ன' என்ற தகவல்கள் இருக்கின்றன.

Publishing a proceeling which the House of Lords had ordered to be expunged from the journal
பத்திரிகைகளிலே வரக்கூடாது என்று உத்தரவிட்ட பிறகு, அந்தத் தகவலை வேறு முறையிலே வெளிப்படுத்துவது, விளம்பரப்படுத்துவது என்பதே Privilege of the House என்று தான் Parliamentary Procedure சொல்கிறது.



[திரு. க. இராமமூர்த்தி]

மறுபடியும், அதே புத்தகத்தில் 238 ஆம் பக்கத்திலே காவல் துறையினர் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"The police on duty in the House are under this direction. He regulates (Speaker), the admission of persons to the Press Gallery and lobby and has control of the arrangements for the admission of strangers."
என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் உள்ளே இருந்தால், அவர்கள் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு, தலைவர் அவர்களுக்குத் தெரிந்துதான் இருக்க வேண்டுமே தவிர, discreet ஆக இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆகவே, பல காலத்திற்கு முன்பே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. The Law of Parliamentary Privileges in U.K. & in India என்ற திரு. பாச்சோரி (Pachauri) அவர்கள் எழுதிய புத்தகம் ஒன்று இருக்கிறது. அந்தப் புத்தகத்திலே 50-வது பக்கத்திலே இன்னும் தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.

"The freedom of members to speak and vote without restraint imposed by any outside body is one of the essential privileges of Parliament and one which has long been maintained as part of its general law. The privilege has been recognised by statute, and is indeed confirmed by the 9th Article of the Bill of Rights, 1688".

(முற்பகல் 11-30)

1688 ஆம் ஆண்டு "பில் ஆஃப் ரைட்ஸ்" என்று முதன்முறையாக ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டபோதே சட்டமன்றங்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் இப்படிப்பட்ட பாதுகாப்புக்குள் நுழைகிற வகையில் இந்த ரகசியச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இது அவை உறுப்பினர்களை மிரட்டுகிற செயலாகவும், அவர்கள் சுயேச்சையாக, எந்தவிதமான நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாகாமல் செயல்படுகிற தன்மைக்கு ஊறுவிளைவித்து சட்டமன்ற உறுப்பினர்களை மிரட்டுகிற அல்லது எச்சரிக்கிற நடவடிக்கையாகவும் இருக்கிறது என்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதே புத்தகத்தில் 60-வது பக்கத்தில் 'மிரட்டுவது' என்பதற்கான விளக்கத்தையும் கொடுத்திருக்கிறார்கள்.

"Misbehaviour within the precincts of the House while the House is sitting, even though not calculated to disturb the proceedings of the House, is punishable as for breach of privilege. The principle upon which it is so punishable can only be that the House is deemed to be prevented in every part of the building in which

it is sitting and, therefore, that is misbehaviour in the same manner as contempt may be committed constructively in the face of a Court of justice though not in its actual view."

இவ்வாறு தலைவர் அவர்களுக்குத் தெரியாமலேயே நடவடிக்கைகள் மேற்கொள்வதோ அல்லது செயல்படுவதோகூட "மிஸ்பிஹேவியர்" என்பதன்கீழ் வரும் என்பதை இதிலே விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறது. அவையின் நடவடிக்கைகளில் குறுக்கிடாமலே இத்தகைய செயல்முறைகளை மேற்கொள்ள முடியும். அதாவது அவை நடக்கிறது என்றால், அவைக்குள்தான் அது நடைபெறுகிறது என்றில்லாமல் இந்த அவையைத் தொடர்ந்திருக்கிற "பிரிசிங்க்ட்ஸ்" என்று சொல்லப்படும் எல்லை எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம்கூட அவை நடப்பதாகத்தான் பொருள் என்பது இங்கே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது போதும் என்று நினைக்கிறேன். உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்வது நலம்.

**திரு. க. இராமமூர்த்தி :** விரைவில் முடித்துக்கொள்கிறேன். அவையின் உறுப்பினராக இல்லாத ஒருவர் எப்படி மிஸ்பிஹேவ் (misbehave) செய்ய முடியும் என்பது இங்கே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் சுயேச்சையாகவும், சுயமாகவும் செயல்படுகிற தன்மைக்கு எதிராக அவரைப் பயமுறுத்துகிற அல்லது மிரட்டுகிற வகையில் எடுக்கப்படும் நடவடிக்கையே "மிஸ்பிஹேவியர்" என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. "பார்லிமெண்டரி புரொசிஜர் இன் இண்டியா" என்று திரு. முகர்ஜி அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் 271 ஆம் பக்கத்தில் இன்னொரு கருத்தும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பத் திரும்ப எல்லோரும் இந்த அவையின் பெருமையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதில் யாருக்கும் அபிப்பிராய பேதத்திற்கே இடமில்லை. ஆனால் இங்கே நம் முன் உள்ள பிரச்சினை, இந்தச் சுற்றறிக்கை எப்படி இந்த அவையைப் பாதித்திருக்கிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். அதை விளக்கினால் போதும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதைத்தான் நான் விளக்கிக் கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே பிரசுரம் அல்லது வெளிப்படுத்துதல் என்பது எப்படி அவையின் உரிமையைப் பாதிக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். தற்போது இந்தச் சுற்றறிக்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தலைவர் அவர்கள் கேட்கும் விளக்கம் "இந்தச் சுற்றறிக்கையின்மீது அந்தத் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறதா" என்பதாகும். இந்தச் சுற்றறிக்கையின் அடிப்படையில் காவல் துறையினர் இந்த அவைக்குள் வந்தார்களா இல்லையா



என்பது வேறு விஷயம். சுற்றறிக்கையின் அடிப்படையில் அவைக்குள் வந்து செயல்பட்டிருந்தால், அது குற்றம். அப்படி வராமல் இருந்திருந்தால், அந்தத் துறையின் ஆணை அல்லது அதிகாரம் எந்த அளவுக்கு செயல்படுத்தப்படுகிறது என்பதைத்தான் அது குறிக்கும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இந்தச் சுற்றறிக்கையை காவல் துறை வேண்டுமென்றே வெளியாக்கியதன் மூலமாக, சட்ட மன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், "நம்மைச் சுற்றி சி.ஐ.டி.க்கள் இருக்கிறார்கள் என்ற பயத்தோடு செயல்படுகிற கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்" என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தச் சுற்றறிக்கையைத் தயாரித்தவர்களே இதைத் தந்திரமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று உறுப்பினர் கூறுகிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அப்படியும் இருக்கலாம் அல்லது அரசாங்கத்தின் தந்திரமாகவும் இருக்கலாம் என்றுதான் நான் சொல்லுகிறேன். இந்த இரகசியச் சுற்றறிக்கை செயல்படுத்தப்பட்டுமிருக்கலாம் அல்லது செயல்படுத்தப்படாமலும் இருந்திருக்கலாம். இந்த ஆணை வெளியிடப்பட்டு, அதற்குப் பிறகு ஏழு நாட்களுக்கு ஒரு வேளை செயல்படுத்தப்படாமல் இருந்திருக்குமானால், இந்தச் சுற்றறிக்கையின் நகல் உறுப்பினர்களுக்குக் கிடைக்கிற அளவுக்கு ஏற்பாடு செய்து வேண்டுமென்றே உறுப்பினர்களை மிரட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. ஆக இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் மூலம், இந்த அவையை மிரட்டியிருக்கிறார்கள். அவைத் தலைவரின் அதிகார வரம்பிற்குள் நாங்கள் தலையிட முடியும் என்று காட்டியிருக்கிறார்கள். இப்படி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டதன் மூலம் இந்த அவையின் கண்ணியத்தையும் மரியாதையையும் குறைத்திருக்கிறார்கள். இது அவையின் உரிமையை மீறிய செயல் என்பதில் ஐயமில்லை.

அது மட்டுமல்ல, காவல் துறையைப் பொறுத்தவரையில், ஒரு வாதத்தை எடுத்து வைக்க முடியும். மாண்புமிகு தலைவர் அவர்களே அதைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், உறுப்பினர்கள் அவ்வப்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், சம்பவங்கள் குறித்தும் இங்கே பேசுகிறார்கள். பல பிரச்சினைகளை இங்கே எழுப்புகிறார்கள். அப்படிப்பட்ட முறையில் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு உடனே பதிலளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதவி செய்யவே இப்படிப்பட்ட நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்வார்களானால், நான் அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

ஒவ்வொரு துறையைப் பொறுத்தவரையிலும் இங்கே துறையின் தலைமை அதிகாரிகள் இருக்கிறார்கள். காவல் துறையைப் பொறுத்தவரையில், இங்கே "Home Department" இருக்கிறது. அந்தத் துறையின் செயலாளர் இங்கேயே இருக்கிறார். அந்தத் துறையில் இருந்து தேவைப்படும் எந்தத் தகவலாக இருந்தாலும் உடனடியாக அதைப் பெற்றுத் தரும் வாய்ப்பும் வசதியும் வழிவகைகளும் அவருக்கு இருக்கின்றன. அதையெல்லாம் தாண்டி 'ஒரு காவல் துறை அதிகாரிதான் இந்தத் தகவல்களையெல்லாம் சேகரிக்க வேண்டும், அதனால்தான் இத்தகைய சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறார்' என்று சொல்வார்களானால், நிலைமை இன்னும் மோசமாகப் போய்விடும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாளையதினம் திண்டிவனத்திலே இருக்கும் சப்-கலெக்டர் தன்னுடைய ரெவின்யூ இன்ஸ்பெக்டரைக்கூட சட்ட மன்றத்திற்கு அனுப்பி அங்கே திண்டிவனத்தைப்பற்றி ஏதாவது பேசுகிறார்களா என்று கவனி, அப்படி அங்கே திண்டிவனத்தைப்பற்றி யாராவது பேசினால், உடனே அதுபற்றி எனக்கு ஒரு லைட்னிங் கால் (lighting call) போட்டு தகவல் கொடு என்று சொன்னால், அதை யாரும் இனி தவறு என்று சொல்ல முடியாது. யாரும் அதைத் தடுக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையில் மின்வாரிய நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடைபெற இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் நிறைய பேசிவிட்டார். விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** எனவே இந்தத் துறை இந்தச் சுற்றறிக்கையின்படி செயல்பட்டிருக்கிறதா இல்லையா என்பதுகூட பிரச்சினையல்ல. இப்படி ஒரு சுற்றறிக்கை வெளியிடுவதே இந்த நாட்டின் ஜனநாயக மரபுகளையும், இந்த அவையின் உரிமைகளையும் மீறிய செயலாகும். இந்த அவையை அவமதிக்கிற செயலாகும்.

அதிகார வர்க்கத்தைப்பற்றி இங்கே இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது.

"The temptation to circumvent legal provisions or blatantly by-pass them under the cover of secrecy is strong: But in most democratic countries, the citizen can and does attempt to take the Executive to task."

அதிகார வர்க்கம் என்பது எப்போதும் இந்த உரிமைகளை வேறு வகையில் சுற்றி வளைத்து மீறுவதற்கும் மறுப்பதற்குமே முயல்கிறது. ஆனால் நாம் நம் உரிமைகளை நிலைநாட்டுவது என்பது தவிர்க்கக் கூடாத ஒரு கடமையாகும்.





"The House should be enabled to carry on its business and the members should be free to perform their allotted duties.

Preservation of the dignity of the House is also linked to the principale of " Necessity " for it is necessary to preserve its dignity, for the House to be able to function effectively.".

ஆக, இந்த அவை முறையாக, தெளிவாக, திட்டவட்டமாக தனது கடமையை ஆற்ற வேண்டும் என்றால், சில வாய்ப்புகள், சில உரிமைகள் அதற்கு இருந்தே ஆக வேண்டும். அதில் மிக முக்கியமானது உறுப்பினர்கள் பயமின்றி, சுதந்திரமாகச் செயல்படும் சூழ்நிலையை உருவாக்குவதாகும். அது மட்டுமல்ல, அவையின் தலைவருடைய அதிகார வரம்பிற்குள் யாரும் நுழைய முடியாது என்ற உத்தரவாதம் இருக்க வேண்டும். இன்றையதினம் இவைகளுக்கெல்லாம் குந்தகம் விளைவிக்கிற வகையில், அவையின் உரிமைகளை மீறுகிற வகையில் இரகசியச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தச் சுற்றறிக்கை செயல்படுத்தப்பட்டதா அல்லவா என்பது வேறு விஷயமாக இருந்தாலும், ஒன்றை நான் மறப்பதற்கில்லை. இந்த இரகசியச் சுற்றறிக்கை செயல்படுத்தப்படவில்லை என்பதற்கான எந்த உத்தரவாதமும் இங்கே இல்லை. இந்த உத்தரவு செயல்படுத்தப்படவே இல்லை என்றால், அந்தத் துறையின் ஆணைகள் எப்படி மதிக்கப்படுகின்றன என்பதையே காட்டும். ஆனால், இப்படிப்பட்ட ஒரு சுற்றறிக்கையைத் தயாரித்து, அதில் கையெழுத்திட்டு வெளியிட்டதே இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். இந்த அவையின் உறுப்பினர்கள் சுயேச்சையாகச் செயல்படுவதை மிரட்டுகிற செயலாகும். இதில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. மொத்தமாகவே இந்த அவையின் உறுப்பினர்களை மிரட்டியிருக்கிறார்கள், இந்த அவையின் உரிமையை மொத்தமாகவே மீறியிருக்கிறார்கள். இந்த அவையின் முழு உரிமையையும்

(முற்பகல் 11-40)

மீறியிருக்கிறார்கள். இந்த அவையின் மொத்த மரியாதையையும் அவமதித்திருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்டவர்களை உரிமைக் குழுவிற்கு அனுப்பி இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்பதில் நியாயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இது இந்த அவையின் மிக முக்கியமான பிரச்சினை என்பதால், இது பற்றி அறிவிப்பு கொடுக்காத மற்ற கட்சித் தலைவர்களுடைய கருத்தையும் தாங்கள் அறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 26.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவை விதி 159-ன்கீழ் நான் தங்களுக்கு அனுப்பிய உரிமை மீறல் பிரச்சினையைப்பற்றி எனது கருத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

31—1—1981 நாளிட்ட, ரகசியமிக்க அவசர, எண் 6228 குறிப்பாணை ஒன்று "எதிரொலி" பத்திரிகையில் வெளியாகியிருப்பதை தங்களுடைய பார்வைக்கு அனுப்பி, அதோடு போட்டோ ஸ்டட் காப்பியையும் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இந்த அவையினுடைய சுதந்திரத்தையும், இந்த அவையினுடைய இறையாண்மையைப் பறிக்கிற சூழ்நிலையையும் இந்த அவையின் உறுப்பினர்கள் அச்சமின்றி தங்களுடைய பணியை ஆற்ற முடியாத சூழ்நிலையையும் அந்தக் குறிப்பாணை உருவாக்கியிருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இந்த அவையில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் தங்களுடைய பாதுகாவலில் தங்களுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். தங்களைத் தவிர இந்த மண்ணுலகத்தில் யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குப் பரிபூரண சுதந்திரத்தையும், இறையாண்மையையும், உரிமையையும் இந்த அவை பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

பாராளுமன்றம், நிர்வாகம், நீதிமன்றம் ஆகிய இந்த மூன்று அமைப்புகளும் ஒன்றோடு ஒன்று இணையாது, ஒன்றையொன்று அடிமைப்படுத்தாது, ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தாது தனித்தனியான முறையில் செயல்படுகிற முறையை அமைத்து வெற்றி கண்டு, இந்த அமைப்பு முறை ஒன்றே சிறந்தது என்று அரசியல் நிபுணர்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டு சுதந்திரம் பெறுகிற காலத்தில் இந்த அமைப்பு முறையை ஏற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிற பாரம்பரியமிக்க ஜனநாயக முறையை பாராளுமன்ற முறை நமக்குத் தருகிறது. பாராளுமன்ற முறைப்படி ஆட்சி புரிகிற நாட்டில் பாராளுமன்ற அடிப்படை உரிமை குன்றிமணி அளவுக்குக்கூட குன்றாமல் பார்த்துக்கொள்ளுவதுதான் பாராளுமன்ற ஜனநாயக மரபுக்கு நாம் செய்கின்ற மரியாதையாக அமையும். இந்தக் குறிப்பாணையின் மூலமாக அந்த நிலையில் பாராளுமன்ற உரிமை பெருமளவிற்கு மீறப்பட்டு, ஆதிக்கம் செலுத்தப்பட்டு, நிர்வாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. அந்தக் குறிப்பாணையைப்பற்றிய முழு விவரங்களையும் தங்களுக்குத் தந்திருந்தாலும், இந்த அவையினுடைய உறுப்பினர்களுக்குத் தரவில்லை. எனினும் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விரிவாக ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருப்பதால், நானும் விளக்கமாக முழு விவரத்தையும் சொல்லாமல் ஒரு சில பகுதிகளை மட்டும் படிக்க விழைகிறேன்.



1981 பிப்ரவரி 26] [திரு. ம. சங்கரலிங்கம்]

" தமிழ் நாடு சட்டமன்ற மேலவை நிகழ்ச்சிகளைக் கண்காணிப்பதுபற்றி கீழ்வரும் உத்தரவுகள் வெளியிடப்படுகின்றன " தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் நிகழ்ச்சிகளைக் கண்காணிப்பது தங்களுக்குள்ள உரிமையே தவிர. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆங்கில வார்த்தை என்ன போடப் பட்டிருக்கிறது ?

திரு. ம. சங்கரலிங்கம் : The following instructions are issued regarding coverage of Tamil Nadu Legislative Assembly and Council" என்று இருக்கிறது. "கண்காணிப்பது" என்பதற்கும் "கவரேஜ்" என்பதற்கும் மாறுபட்ட கருத்து இருக்கலாம் என்று நீங்கள் கருதலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத்தான் நான் கேட்டேன். நான் இன்னும் எந்தக் கருத்துக்கும் வரவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : நீங்கள் அப்படிக் கருதிவிட்டதாக நான் கருதவில்லை. என்னுடைய கருத்தை நீங்கள் தெரிந்துகொள்ள விழைகிறீர்கள் என்ற எண்ணத்தோடுதான் நான் சொல்லுகிறேன். ஆங்கிலத்திலே "கவரேஜ்" என்று போடப்பட்டிருக்கிறது. இந்த அவையில் என்ன நடக்கிறது என்று முழு அளவில் தெரிந்துகொள்ள காவல் துறைக்கு, புலனாய்வுத் துறைக்கு எந்த விதமான உரிமையுமில்லை. எதையெதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். அவையில் நடப்பதில் எவற்றைக் குறிப்பில் ஏற்ற வேண்டுமோ அவற்றைக் குறிப்பில் ஏற்றி, எவற்றை அகற்ற வேண்டுமோ அவற்றை அகற்றி அதிகாரபூர்வமாக அதைத் தாங்கள் அறிவிக்கிறீர்கள். அதை இந்த நாடே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. காவல் துறை முழு அளவில் கண்காணிக்க முயன்றதே ஒரு பெரிய குற்றம்.

அது மாத்திரமல்ல, இந்தக் குறிப்பாணையில் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் ஆகியவர்களை முறை வைத்து அனுப்ப வேண்டும் என்றும், எல்லோரும் இதில் பயிற்சி பெற வேண்டும் என்றும், அவை காலையிலும், மாலையிலும் நடைபெறுகிறபோதும், ஒரே சமயத்தில் இரு அவைகள் நடைபெறுகிறபோதும் யார், யார் எப்படி, எப்படி செல்ல வேண்டும் என்றும் சிறுசிறு விளக்கங்களைக்கூடத் தெரிவித்துச் சொல்லியிருப்பது இந்த அவையின் உரிமை மீறலாகும்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் கண்காணித்து மூன்று இடங்களுக்குத் தகவல் கொடுக்கச் சொல்கிறார்கள். சி.ஐ.டி. சூப்பிரண்டெண்டன்ட் நகரப் பகுதி சி.ஐ.டி. சூப்பிரெண்டெண்டன்ட், சி.ஐ.டி. கன்ட்ரோல் ஆகிய மூன்று இடங்

களுக்கு இங்கே சேகரிக்கப்படுகிற செய்திகள் ஒரே சமயத்திலே அனுப்பப்படு கின்றன. வெளி நடப்பு செய்வதற்குரிய காரணங்கள், போலீசார் பற்றி மன்றத்தில் எழுப்பப்படுகிற விமர்சனங்கள் ஆகியவற்றைக் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் போலீசாரை வைத்துக்கொண்டுதான் ஆள முடிகிறது. சர்வாதிகார நாட்டில்தான் போலீசார் ஆட்சி. ஜனநாயக நாட்டில் போலீசார் நிர்வாகத்தின் கையில் இயங்குகிற அமைப்பு. நிர்வாகம் சட்டமன்றத்திற்குக் கீழ்ப்பட்டு நடக்கிற ஓர் அமைப்பு. அப்படியிருந்தால்தான், இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்க முடியும். அதற்கு எதிர்மாறாக நிர்வாகத்தை மிஞ்சி, சட்டமன்றத்தை மிஞ்சி, போலீசார் கண்காணிக்கிற நிலை என்றால், போலீஸ் ஆட்சிக்கு போலீசார் தங்களைத் தயார் செய்கிற அமைப்பு முறையை ஏற்படுத்துகிறார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த நிர்வாகத்தினுடைய அனுமதியோடு இது நடந்திருக்காது என்று நான் நம்புகிறேன். நிர்வாகத்தை பை-பாஸ் பண்ணியிருக்கிறார்கள். நிர்வாகத்தைக் கடந்து ஓர் அமைப்பு முறை அவர்களுக்குக் கீழ் இருக்கக் கூடிய காவல் துறையிலே உருவாகிவிட்டதோ என்னவோ. இது குறித்து அரசை எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுவும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் சி.ஐ.டி.-க்கள் கொஞ்சமும் தாமதம் இல்லாமல் தெரிவிக்க வேண்டும் என்றும், அதே சமயத்தில் தாங்கள் யார் என்று தெரிந்துவிடாமல் சாமர்த்தியமாகச் செயல்பட வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதை சி.ஐ.டி. துறை அதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டிய அளவிற்கு சி.ஐ.டி. அதிகாரிகள் அவ்வளவு பலவீனமாகவா இருக்கிறார்கள்? தாங்கள் யார் என்று காட்டாமல் இருந்தால்தான், சி.ஐ.டி. என்று பெயர்.

**திரு. ம. சங்காலிங்கம் :** அவர்கள் செய்கின்ற செயல் எவ்வளவு தவறானது, உரிமையற்றது, ஜனநாயகப் படுகொலை, எவ்வளவு சர்வாதிகாரப் பாதையில் போகிற போக்கு என்பது அவர்களை எச்சரிப்பதிலிருந்தே தெரிகிறது. சட்டமன்ற நிகழ்ச்சிகளை சாமர்த்தியமாகக் கண்காணிக்க வேண்டும் என்றும், இதைக் கண்காணித்தவர் யார் என்று தெரிந்துவிட்டால், பிறகு தர்மசங்கடமான சூழ்நிலைக்கு ஆளாவார்கள் என்ற எச்சரிக்கையோடும் எடுத்துச்சொல்லி, தினசரி கன்சாலிடேட்டட் ரிப்போர்ட் அனுப்ப வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். அவைக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளுவது, தங்களை வேண்டிக்கொள்ளுவது ஒன்றே ஒன்றுதான். இந்த அவையின் உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்ற, போலீசார் செய்த தவறுகளை, போலீஸ் நிர்வாகத்தில் ஏற்படுகிற தவறுகளை, ஆட்சியில் ஏற்படுகிற



தவறுகளை இங்கே வந்து சொல்லுகிறபோது, அவர்கள் எந்தவிதமான அச்ச உணர்வுக்கும் ஆட்படாமல் இருக்க வேண்டும். கண்காணிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு ஏற்பட்டாலே அவர்கள் கடமையை ஆற்றத் தடையாக இருக்கும். திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, ஒருவேளை அவர்களே வெளியே வந்து எச்சரிக்கை செய்வார்களோ என்ற சந்தேகம் வருவதாகச் சொன்னார்கள். போலீசார்பற்றி, போலீசார் செய்த தவறுகளைப் பற்றிப் பேசுகிறபோது, அவர்கள் கண்காணிக்கப்பட்டு, பிறகு வெளியே சாலையில் நடந்து செல்லுகிறபோது, அதன் விளைவாக சிலவற்றைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்ற உணர்வு தோன்றினால், இந்த அவை உறுப்பினர்கள் தங்கள் கடமையைச் சரிவர ஆற்ற முடியாமல் தடுக்கப்படுகிறார்கள் என்பதுதான் பொருள். இத்தகைய நிலை உருவாவதைப்பற்றி இதற்கு முன்னாலேயே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தாங்களும் பார்வையாளர்கள் மாடியைப் பார்த்ததும், அவர்கள் ஓடியதும், பிறகு வராமல் இருந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் இந்த அவைக்குப் புதியதல்ல

(முற்பகல் 11-50)

பாராளுமன்ற நடவடிக்கைகளையும், மற்ற அவைகளின் நடவடிக்கைகளையும் சி.ஐ.டி. துறையினர் கண்காணிக்க முயன்று கொண்டிருப்பதும், அதைத் தடுக்க முயன்ற செய்திகளும் வரலாற்றிலே பல பகுதிகளிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் சொல்வதெல்லாம் சரி. இந்த மாதிரி சுற்றறிக்கை வந்த நிலை இதற்கு முன் ஏற்பட்டிருக்கிறதா? அரசாங்கத்திலேயிருந்து இந்த அறிக்கை வந்திருக்கின்றதால் மட்டும்தான் இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல. இந்த மாதிரி பிரச்சினை முன்பு வந்திருக்கின்றதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. ம. சங்காலிங்கம் :** தலைவர் அவர்களே, அதிலே இருந்துதான் இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் வருகிறது. இதுபோல சி.ஐ.டி. கண்காணிப்பு நடைபெறுகிறதோ என்ற அச்சம் பல இடங்களிலே இருக்கிறது. ஆனால் ஒரு சுற்றறிக்கையின் மூலம் திட்டமிடப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட முறையிலே கண்காணிக்கப்படுவது என்பது ஜனநாயக வரலாற்றிலே இதுதான் முதல் தடவை. அப்படி ஏற்படுகிறபோது, அதற்கு நாம் ஒரு சரியான முடிவு ஏற்படுத்த வேண்டும். ஒரு ஜனநாயகத்திற்கு முறையான வழி காட்டுகின்ற மரபுக்கு முன் மாதிரியாக அமைகின்ற நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து.

இதைச் சொல்கின்றபோதெல்லாம், இந்தப் புத்தகங்களை எல்லாம் தேவைப்பட்டால், தாங்கள் பின்னால் ஒரு தடவை வாசித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லி முடிக்கிறேன்.

பாராளுமன்ற உரிமை என்ன என்பதைப்பற்றி பல கருத்துக்களை, பல பெரியவர்கள், பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான், எர்ஸ்கின் மே அவர்களின் பார்லிமெண்டரி விதிகளில் பக்கம் 67, சேப்டர் 5-ல் இருப்பதை மொழிபெயர்த்துச் சொல்கிறேன்.

"பாராளுமன்ற உரிமை என்பது ஒவ்வொரு சபையும் தனியாகவும் கூட்டாகவும் அனுபவித்து வரும் சில விசேஷ உரிமைகளின் மொத்த வடிவம்—பாராளுமன்றமே உயர்நீதி மன்றம் என்று சொல்லியிருக்கிறார்கள்—பாராளுமன்றம் உயர்நீதி மன்ற அமைப்பின் ஒரு அங்கம் என்ற நிலையில் ஒவ்வொரு சபையும் உரிமைகளை அனுபவித்து வருகிறது. இவ்வுரிமையின்றி ஒரு சபை தனது கடமையை ஆற்ற இயலாது. இவ்வுரிமை மற்ற தனி நபர் அமைப்புகளுக்குரிய உரிமைகளை விட விஞ்சியது. இவ்வுரிமை நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாயினும் ஓரளவுக்கு சாதாரண சட்டத்திலிருந்து விதிவிலக்கு பெற்றதாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "

"பாராளுமன்ற உரிமையினுடைய நோக்கம்" என்ன என்பதை எம். என். கௌல், 'தி கோடிஃபிகேஷன் ஆஃப் லா ஆன் பிரிவிலேஜஸ்' என்ற பகுதியிலே சொல்கிறார்.

"பாராளுமன்ற உரிமையின் நோக்கம் பாராளுமன்றத்தினுடைய சுதந்திரம், ஆற்றல், கௌரவம் இவைகளைக் காப்பதே ஆகும். பாராளுமன்ற உரிமை மீறல், அவையை அவமதிப்பது ஆகும்" என்றும் பி. வி. சிட்லே, அப்புராவ், ஆலிஸ்டரி போன்ற அறிஞர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை நான் இங்கே விளக்கிச் சொல்லத் தேவையில்லை. இந்தச் செய்கை, இந்தச் சுற்றறிக்கை ஜனவரி 31 ஆம் தேதியன்று வெளியானது. வெளியானது என்றால், அமுல்படுத்தப்பட்டது என்றுதான் பொருள்.

இந்த அறிக்கை வராமலேயே கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இப்போது அறிக்கையே வந்து கண்காணிக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை அவர்கள் தரப்பிலேயிருந்து அறிக்கை வந்ததே தவிர, கண்காணிக்கப்படவில்லை என்று சொல்லலாம். அறிக்கை இல்லாமலேயே கண்காணிக்கப்படுகிறது, கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. இப்போது அறிக்



கையின் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்பதையும் நிரூபித்திருக்கிறோம்.
ஆகவே அதை மறுக்க முடியாது. எங்களைக் கண்காணிக்கின்ற, இந்த
அவையினுடைய உரிமையைப் பாதிக்கின்ற, இந்த அவையினுடைய கௌர
வத்தைப் பாதிக்கின்ற, இந்த அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள்
சுதந்திரமாக, அச்சமற்ற முறையில் தங்களுடைய கடமையைச் செய்ய முடி
யாத சூழ்நிலையை உருவாக்கிய உரிமை மீறல் ஆகிய ஜனநாயகப் பாராளு
மன்ற உரிமை மீறல் செயல் இது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.
தலைவர் அவர்களே, இந்தச் சுற்றறிக்கையை யார் வெளியிட்டார்களோ,
அவர்களை, இந்த அவைக்கு அழைத்து அவர்களுடைய விளக்கத்தைக் கேட்ட
பிறகு, மீண்டும் அவையினுடைய எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களுடைய
கருத்துக்களையும் கேட்டு, அவை முன்னவர் அவர்களுடைய கருத்தையும்
தெரிந்துகொண்டு தீர்ப்பு கூறுவதன் மூலம் உலக நாடுகளில் இந்த ஜனநாயக-
பாராளுமன்ற உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டு இந்த உரிமைப்
பிரச்சினையை எழுப்ப அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :— இதன்மீது அரசாங்கத்தின் கருத்தை அறிந்து மீண்டும் ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : தாங்கள் தீர்ப்பு சொல்கிறீர்களா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தீர்ப்பு என்பதல்ல. பிறகு ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் சொல்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### (1) இராமேசுவரம் தீவு அருகில் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, ராமேசுவரம் தீவு
அருகில் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்ட
தனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 76-77 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே ஒன்று தெளிவாகத் தெரிகிறது. 1978 ஆம் ஆண்டிலே முடிவடைந்திருக்க வேண்டிய இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த பணி இன்னும் முடிவடையாமல் காலதாமதம் ஆகிறது. இதிலே சில சந்தேகங்கள். இந்த பாம்பன் சாலைப் பாலம் கட்டும் வேலைத் திட்டத்திற்கு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் நம்முடைய துறை விதிகளின்படி ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப் பொருள்களின் மீது இன்ஷூரன்ஸ் செய்திருக்க வேண்டும். ஆனால் இன்ஷூரன்ஸ் செய்யாமல் இந்த வேலையை அவர்கள் தொடங்கியதாகத் தெரிகிறது. இன்ஷூரன்ஸ் செய்யப்படாவிட்டால், இந்த வேலைத் திட்டத்தை துவக்க விதிமுறைகளின்படி அனுமதி தரப்படக்கூடாது. அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்திருந்தால், இன்று அரசிடம் அவர்கள் நஷ்டஈடு கேட்க வேண்டிய பிரச்சினை எழாது. அப்படி இன்ஷூரன்ஸ் செய்யாமல் அந்த வேலையைத் தொடங்கியதற்காக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த வேலை** 16—11—1978 அன்று முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கால நீட்டிப்பு கேட்டு, அரசாங்கத்திடமிருந்து கால நீட்டிப்பு 30-6-1980 வரையிலே பெற்றிருக்கிறார்கள். அதற்கு மத்தியிலே 24-11-1978லே சேதம் ஏற்பட்டிருக்கிறது. தற்காலிகக் கட்டுமானத்தில், மரப் பாலத்தில் இது போன்றவைகளில் எல்லாம் சேதம் ஏற்பட்ட காரணத்தினால்தான் ஒப்பந்தக்காரர்கள் அந்தப் புயலால், விதிவிலக்குக்குரிய இடையூறு, அன்எக்ஸ்பெக்டட் ரிஸ்க், ஏற்பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலே அவர்கள் நஷ்ட ஈடு கேட்டிருக்கிறார்கள். இன்ஷூரன்ஸ் செய்யப்பட வேண்டுமென்பது முக்கியமான ஒன்று. ஆனால் அவர்கள் இன்ஷூரன்ஸ் செய்யவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு ஏற்கெனவே இருக்கிறது என்றும், அதன்மீது அவர்கள் அரசாங்கத்திடம் கேட்ட நஷ்டஈடு கொடுக்க முடியாது என்றும் நாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. இன்னொன்று, முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டம் நிறைவேறக் காலதாமதம் ஆவது மட்டுமல்ல, திட்டப் பணிகளின் மதிப்பீட்டுத் தொகை மேலும் அதிகரிக்கக்கூடிய நிலைமையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பணிக்கு மீண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதாக அறிக்கையிலே இருக்கிறது. இப்படி மீண்டும் ஒப்பந்தம் கோரி





பிறகு செய்வதனால் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையிலே டிப்பார்ட்மெண்டல் எக்சிகியூஷன் என்ற முறையில் நெடுஞ்சாலைத் துறையே இந்தப் பணியை மேற்கொள்ள விதிமுறைகள் இருக்கின்றன அல்லது அரசு நிறுவனமான கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் மூலமாக இந்தப் பணியை முடிப்பதற்கு நமக்கு வேண்டிய விதிமுறைகள் இருக்கின்றன. எனவே டிபார்ட்மெண்டல் எக்சிகியூஷன் அல்லது கன்ஸ்டரக்ஷன் கார்ப்பரேஷன் மூலமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கெனவே மத்திய அரசினுடைய அமைச்சர் திரு. வீரேந்திரபட்டீல் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அவர்களும் சீக்கிரமாக இந்த வேலையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் பழைய ஒப்பந்தத்தை 29-12-1980 அன்று முழுமையாக ரத்து செய்து விட்டு புதிய ஒப்பந்தத்தைக் கோரியுள்ளார்கள். உடனடியாக இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(2) 1980-ல் சென்னைப் பெருநகரில் சாலை விபத்துக்கள் பெருகி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது குறித்தும் அதைத் தடுக்கும் பொருட்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. ம. சங்கரலிங்கம்): மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-ல் சென்னைப் பெருநகரில் சாலை விபத்துக்கள் பெருகி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது குறித்தும் அதைத் தடுக்கும் பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 78-79 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அவையின்முன் வைக்கப்பட்ட விவர அறிக்கையிலிருந்து 1980-ல் 5,163 விபத்துக்களும் 1979-ல் 4,728 விபத்துக்களும் நடைபெற்றதாகத் தெரிகிறது. விபத்துக்களின் எண்ணிக்கை கூடி இருந்தாலும், வாகனங்களுடைய எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, .2 சதவிகிதம் குறைந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி விபத்துக்கள் ஏற்பட்டு பாதசாரிகள், ஏழை மக்கள் சம்பந்தமில்லாதவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைத் தடுப்பதற்குரிய 6 வழிவகைகள் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வழிமுறைகளிலே லைசென்ஸ் கொடுக்கின்ற முறையிலே வழிமுறைகள் எதுவும் போடவில்லை. சாலை அகலப்படுத்துதல், பாதை அதிகப்படுத்துதல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் லைசென்ஸ் கொடுக்கும்போது, முறையாகப் பயிற்சி பெற்றவர்களுக்குக் கொடுப்பது என்றும் பயிற்சி பெறாதவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்றும் குடித்துவிட்டுப் போதையில் இருந்தால், அவர்கள் ஓட்டினால் விபத்துக்கள் ஏற்படுவதால், அப்படிப்பட்டவர்களுக்கு லைசென்ஸை ரத்து செய்வது என்றும் இருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் மீண்டும் அவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது போன்றவற்றை நிறுத்த வேண்டும். அந்த வாகன ஓட்டிகளுக்கு கொடுக்கின்ற லைசென்ஸ் விதிமுறைகளைச் சீர்திருத்தம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கே மேலவையிலே ஒரு வினாவிற்குப் பதில் அளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். குடித்துவிட்டு வாகனங்கள் ஓட்டுவார்களானால், அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதுபோன்று ஓட்டுநர் உரிமை வழங்குவதைப் பொறுத்தவரையிலும், இதுவரையில் ஆங்காங்கு தனியார் பயிற்சிப் பள்ளியை வைத்து பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிலே மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி, அதற்காக பயிற்சிப் பள்ளியை அரசாங்கமே நடத்துவதன் மூலமாக தரமான ஓட்டுநர்களைத் தயாரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு உத்தரவிட்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில், புதிதாக ஒரு ஸ்குவாட் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக உரிமையில்லாமல் தவறாக ஓட்டுகின்றவர்களைத் தடுப்பதற்கும் மிக வேகமாக



வண்டிகளை ஓட்டுவதைத் தடுப்பதற்கும் வழிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இது நடைமுறைப்படுத்தப்படுமானால், நிச்சயமாக விபத்துக்கள் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

திரு. ம. சங்கரலிங்கம்: வாகனங்களை ஓட்டிச் செல்கிறவர்கள் விதிப்படி வாகனங்களை ஓட்டிச் சென்றால் 50 சதவிகிதம் விபத்துக்கள் குறையும் இப்போதுகூட நாம் சாலைகளிலே ஒன்றைப் பார்க்க முடிகிறது. ரெயில்வே லெவல் கிராசிங்கில், வாகனங்களை ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்துவதில்லை. எனவே வாகன ஓட்டிகள் சட்டத்திற்குக் கீழ்படியும் முறையில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கும், அது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதற்கு, போக்குவரத்துத் துறையிலே 'ரிசர்ச் விங்' ஒன்றை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இதற்கு முன்பே, இதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்றால், அது போய்க் கொண்டேதான் இருக்கும். இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எனவே கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம், இதைக் குறைக்க முடியுமென்று நம்புகிறோம்.

4. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1979-80 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையும் 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையையும் அவைமுன் வைத்துள்ளேன். நான் ஆற்ற வேண்டிய உரையினை @ நூல் வடிவாக மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தந்துள்ளேன். அவைகளை, நான் அவையில் உரையாற்றியதாக ஏற்று, அவைக் குறிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகு என்னுடைய பதிலை, எதிருரையாக வைக்கின்றேன்.

---

@ 79-119 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I rise to offer my remarks on the Annual Financial Statement for 1980-81 and the Supplementary Financial Statement for 1979-80 of the Tamil Nadu Electricity Board which have been placed on the table of the House for discussion.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

The Hon. Minister, in his speech, has come out with very depressing statistics and I am glad to find that he shares the pessimism of the Members on this side of the House regarding the power position in our State and the possibilities of power development during the next five years. The Hon. Minister has come out with some rather severe criticism of the performance of past Governments, the performance of the Central Government, the performance of the Central Power Commission, and the performance of BHEL which has supplied equipments to Ennore and Tuticorin. In fact, it is one unending criticism of various authorities connected with the development of power; but one significant factor is that he has failed to include himself and the State Electricity Board in his criticism of the performance of the power sector. He has made a reference to the fact that the 11th Annual Power Survey Committee has fixed a growth rate of only 5.7 per cent for Tamil Nadu and he has rightly stressed that this growth rate is hardly adequate to meet the future needs of our State. But may I ask him a question why such a low growth rate has been fixed for Tamil Nadu alone in comparison with other States and if such a growth rate was fixed, why it was not possible for our Engineers and officials in the State Electricity Board to put across a more convincing case before the Annual Power Survey Committee which is, after all, a highly technical body and which would not lightly decide on such matters, except on the basis of certain facts placed before the Cimmittee. I would like to know whether our case was presented before the Committee properly and if not, what the reasons were for the laggardness in presenting our case. I entirely agree that this 5.7 per cent rate is a very mythical growth rate that has been prescribed for Tamil Nadu. In the past, in the debates that have taken place in this House, we have envisaged a growth rate of well over 9 to 10 per cent for Tamil Nadu and I cannot speak of other States. In power planning, it is not merely necessary to take present consumption into account but also plan for the future and it is vital that we should programme for Plan projects which would leave us a certain amount of surplus in the years to come. When we ask how the power is to be shared between States and when



the Hon. Minister talks of Centrally sponsored schemes, I request that more clarity should be given on this issue, because if we are pleading for sharing of power generated by Centrally sponsored schemes, are we not committing ourselves to a share of power from the Neyveli Power Station also which is due to produce 1,200 MW of power? It has been a long-standing claim of the States of Kerala, Karnataka and even Andhra Pradesh that they should share a certain amount of power produced from Neyveli, whereas we have always held that the power produced at Neyveli should be given in its entirety to Tamil Nadu. I believe that when we put across such ideas, we should also be careful to see that it does not rebound on us. Then, we have the Kalpakkam Nuclear Power Project which is due to be commissioned, possibly in two to three years' time. Nobody can predict the time because it is already overdue by three or four years. But, what is going to happen when power is produced at Kalpakkam? Is the Hon. Minister's thesis of sharing with the other Southern States going to be proposed in this matter also? I mention this because if we put across these points, it may later on be quoted against us and they will say, "You have yourselves asked for sharing of power generated by Centrally sponsored projects and, therefore, there is no case for you to refuse to share either Kalpakkam power or Neyveli power with other Southern States". We must remember that the situation has changed radically in Karnataka and Andhra Pradesh. Ten years ago, Karnataka was a surplus producer of power but, today, they have power cuts ranging from 20 per cent to 40 per cent. It looks as if Karnataka and Andhra Pradesh are going to be deficit in power in the years to come. The only State which might have a comfortable power position, and that too if it has a favourable monsoon, is Kerala State. It may have surplus power to sell when the monsoon is good, but it will definitely be deficit when the monsoon fails. I, therefore, plead that when we ask for a Southern grid and when we ask for a power-sharing in Centrally sponsored projects, we should be very careful in formulating our views because tomorrow Tamil Nadu having 1,200 MW. power produced at Neyveli and 200 MW. of power produced by the Kalpakkam Nuclear Power Plant should not be deprived of this 1,400 MW. which other States are even now claiming that they should share because they are Central Power projects.

Then, Sir, in the sharing of power, what should be the criterion? Should it be pro-rated to the production of power in the respective States or should it be given on the basis of the deficit in each State? The Hon. Minister says, because today Tamil

Nadu is highly deficit, that it should be shared on the basis of the consumption in the respective States. I would like to point out that the time is not far, as I have mentioned, when both Andhra Pradesh and Karnataka are going to put forth strong cases because their consumption has gone up and they are also going to be deficit. So, I would request that clear principles be enunciated and thought about before we commit ourselves to these matters.

(பிற்பகல் 12-10)

The Hon. Minister has complained, and very rightly too, because many other State Governments have also complained, about the performance of the equipment that has been supplied by Bharat Heavy Electricals to the thermal stations in Tamil Nadu and other States. Sir, this is one peculiar sector where the Government will not be able to blame the private sector for the ills in the economy. The power sector is entirely managed either by the State Governments or by the Central Government and most of the Power equipments for our Thermal Stations are also manufactured by the Central Government undertakings. Therefore, we come to a situation where the State Government are finding fault with the Central Government for delaying the sanction of plans and for delay in supplying the equipments. We tend to over-look that and there may be other factors for this. In relation to our Thermal Projects, we have seen the dismal performance of our Thermal Stations. Take, for instance, our Ennore Thermal Station. Quite apart from the fact whether it is 110 MW or 220 MW generators that are not performing well in the Thermal Station—we have read about this in the Reports of the Public Accounts Committee also—there is something radically wrong with the functioning of the cooling system which has resulted in the Ennore Thermal Station having less than 35 per cent of its rated capacity. In certain years, it is not even 30 per cent of rated capacity. The Hon. Minister has mentioned that it is being looked into. But, this is being looked into for the past five years and in the Power Sector, if we are going to take such delayed decisions, it has a tragic effect on the industrial economy of the State because new industries cannot be started in Tamil Nadu. Let alone the power-intensive industries, even other industries could not be started without power and the employment opportunities for our technicians and engineers will become bleak. There is no use of trying to make a scape-goat of each other in the matter of poor performance in our Thermal Stations. I entirely agree with him when he has stated that the matter is being taken up with the BHEL for rectification and for



supply of new equipment to our new Thermal Stations. There is an imperative need although our foreign exchange position is bad to draw on foreign exchange for urgent import of essential power equipment. Instead of importing 700 crores of rupees worth fertilisers and 500 crores of rupees worth other consumable articles like cement, etc., it would be far more worth while for us to import on a priority basis equipments required for our 250 MW and 500 MW Thermal Stations so that we may keep to the schedule of installation of Thermal Plants which are being delayed ever since 1966-67, the year in which our Five-Year Plans started to fail. I, therefore, entirely agree with him when he has mentioned it in his speech and I believe he will rightly stress in the meetings which he holds with the Government of India that import of essential equipment for our new Thermal Stations is absolutely necessary not only in Tamil Nadu but in the entire nation which is now going through difficulties because of periodic power deficits. Otherwise, we would also have to face the miserable position in which West Bengal finds itself today. I mention West Bengal, not for making any criticism of that Government but the power failure in West Bengal is a classic example of the consequences of failure to bestow sufficient care on power generation, proper transmission and distribution. In a day of 24 hours, there are periodic load sheddings and power cuts and there is not a single day in Calcutta when there is no power cut. Power cut in domestic areas will cause only a temporary inconvenience, but so far as industries are concerned, whether small scale, middle scale or large scale, which are heavily dependent on power, they cannot afford to have a periodic power cut. The Hon. Minister himself has the frankness to mention in Statement No. 1 that right from 1970 onwards up to 1980, there have been periodic power cuts for three to six months and the power cut has ranged from 25 per cent to 70 per cent. May I remind that from 1980 to 1990, according to the expectations of power-planners, there will be the possibility of only eight hours' supply per day in Tamil Nadu? Hereafter, in my opinion and in the opinion of experts who have studied it, Tamil Nadu will have a perennial power cut of 25 per cent, whether the monsoon succeeds or whether the monsoon does not succeed. We must remember that even if we have the North-east monsoon, the power generated from these hydel reservoirs will be exhausted by the month of January and February and invariably we are to have a cut between the months of March and July. There is need for urgent and radical thinking on this issue because quoting excuses for the power cuts is not going to help the economy. If our [illegible] today is shattered, if inflation is haunting every sector of

[Thiru A. R. Damodaran] [1981 பிப்ரவரி 26

national activity, it is because of the failure of the most important infrastructural activity of the Government which has failed miserably over the past 15 years due to poor planning, poor execution and poor administration.

Sir, mention has been made of the new schemes that are to be started in Tamil Nadu. I have been speaking on the Electricity Board Budgets for the past 16 or 17 years and I am sorry if sometimes I should be repetitive. Of the new schemes that have been suggested, the hydro-electric schemes are, of course, to be exploited to the full. But, may I ask one simple question? When Thiru O. P. Raman was Electricity Minister, when he was succeeded by Thiru Sadiq Pasha who became the Power Minister and now when Thiru Ramachandran is the Power Minister, there is one single refrain which they always mention when we talk of projects like Hogenakal which should have been, 15 years ago, constructed at a cost of 65 crores of rupees generating 500 to 600 MW. of power. I think it is the ultimate pinnacle of selfishness on the part of all the States involved. I shall not exclude Tamil Nadu because we have adopted certain stances in refusing to share certain of our resources which is merely being taken up by other States. We have reached a stage where such projects must be handled by the Centre. I have been a firm believer in States' rights, States' responsibilities and State autonomy. But, I must confess that in schemes of inter-State importance, we must not quarrel with the Centre on these issues. We must request them to take up these projects and arrive at a reasonable agreement regarding the sharing of power from these projects which would be started purely by the Centre. I think that we should forget, for a moment, our old claims of State's powers, etc. on this matter because all these claims finally resulted in such projects being left idle over the past 13 or 14 years. Thiru Sadiq Pasha, I think in 1974, mentioned that he was going to meet the Minister of Power in Mysore and that within a few weeks some settlement would result—and I hope that it is found in the Report of the Council Debates—and I mentioned that if the two Ministers were not able to arrive at an agreement, the honourable course for them would be to resign from their Power portfolios. It is not as if I am asking Thiru Ramachandran to resign. I am only saying that the time has come for us to consider the degree of urgency in implementing these power projects because we have been playing politics too long in the power field and the sooner we solve these economic issues the better it would be for our State as well as the Southern States.



1981 பிப்ரவரி 26]

THE HON. THIRU S. RAMACHANDRAN. If by my resignation there is a prospect of getting that scheme, I am prepared to do it.

(பிற்பகல் 12-20)

THIRU A. R. DAMODARAN: When I mentioned my point, I was not calling for the resignation of Thiru Ramachandran I only said that the Power Ministers of the four Southern States should tackle their task with a greater sense of urgency, considering the interests of the region as a whole. The resignation also will not solve the problem at all. Another will take his place and will give the same explanation. The present Minister is in a better position because he is a Power Engineer himself and he has been able to understand the various issues and even in his speech he has mentioned all these matters.

The other issue I would like to raise is the question of financial performance of the Board. There is nothing surprising in the Electricity Board continuing to lose because this has been happening right from 1970. The reason is very simple. The Electricity Board is not an autonomous Board at all because it has to take directives from the Government particularly on the question of tariffs. I agree that the Government, for reasons of their own, political or social, had to give directives to the Electricity Board in the matter of tariff. The Hon. Minister has mentioned that a sum of Rs. 77 crores is being lost to the Electricity Board because of the subsidised power tariff to the agriculturists. I will not go into the question of subsidising power tariffs because industries have been allowed to have subsidised tariff and so many concessions have been granted to the industries. If, as a matter of public policy, the Government feel that subsidy should be given to agriculturists, they can certainly do that.. But my point is this. If they want to give this Rs. 77 crores, it should form part of the general budget and the sum should be paid to the Electricity Board as subsidy. Otherwise, there is a tremendous distortion in the commercial activities of the Board, with the result that there is a clamour for raising the domestic tariff which is now 72 paise and industrial tariff which is now 10 to 15 per cent above the tariff in the other States. It is on account of the decision of the Government that the agricultural tariff has been pegged down to 12 paise and 14 paise and I do not wish to go into the merits of that decision when I am dealing with the Electricity Board Budget. My request to the Government is that it shoull be treated as a subsidy and paid to the Electricity Board,

instead of giving a loan of Rs. 20 crores and then trying to recover 8 or 9 per cent interest on the loan granted. This is a matter which could be decided by the Board while framing its tariff policy. But, in my opinion, having watched the activities of the Board, I can say with certainly that there is no autonomy at all for the Electricity Board to determine its tariff structure; there is constant interference from the Government for policy reasons and naturally the performance of the Electricity Board is disastrous. I do not think there is any country in the world which will run an Electricity Board, except for the States in India, of course, with such reckless disregard for the consequences of its activities. From 1967-68 we have been pointing out that the Government have neglected generation of power and the Hon. Minister has now confessed that they have neglected generation of power. When I spoke in 1974 that for the sake of rural electrification programmes, the Government were diverting resources from generation to dis.ribution for political reasons, not even one Member of this House was prepared to support me on this point. Even today, what do the Government mean by their scheme of hut-electrification, which the Hon. Minister has announced? I ask in all frankness whether it would not mean the same thing as the rural electrification scheme introduced in 1972-73 whereby there was systematic diversion of resources from generation to distribution. Even today, in the figures for 1979-80 and 1980-81 that have been mentioned by the Hon. Minister, I find that there is no increase in Plan allocation for generation. In fact, there has been one welcome feature from 1977-78. Even at the risk of being misunderstood, I congratulated the Janata Government on their policy at that time of earmarking substantial amounts for Irrigation and Power. It is actually from 1977-78 that the Power outlay was doubled and it is from then that our State Government have also been planning assiduously to increase the generating capacity. But, I find from the statements which the Hon. Minister himself has given that, unfortunately, in the allocations that he has made for generation of power there is no substantial difference between the two years. The only increase in outlay has been Rs. 33 crores in transmission. It is a welcome feature and I shall come to that a little later. My plea is that we should not divert resources from generation to other schemes, either as a welfare measure or for political reasons, because we are destroying the economic viability of the Electricity Board. I believe that, with a loss of Rs. 105 crores, we are faced with a disastrous situation and unless steps are taken to see that this situation is rectified, there is no hope at all between 1980 and





1985 for further development in the power sector. If we analyse what we have to develop in the power sector, we have no more hydro-electric resources excepting a few projects which will give 25 MW., 12 MW., 14 MW., etc. which is nowhere near the need of Tamil Nadu. Every year, we require a 250MW. station. Apart from filling up the gap in the past, we require a 250 MW. 300 MW. station every year for the next ten years if we are to cope with the demand in Tamil Nadu. Therefore, I would like to know specifically from the Hon. Minister the amount of resources that are required for his rural electrification and hut-electrification schemes and whether there is going to be any diversion. If it is a matter of only Rs. 10 or 20 lakhs, then, of course, I would have no objection at all. But, if it is a diversion from generation to distribution, then we should certainly be careful about this.

Sir, the Hon. Minister has mentioned one very important matter and that is the amendment to the Electricity Supply Act of 1948. He has mentioned in his speech that this old Act does not give the State Government any power to give directives to the State Electricity Board. I have not been able to understand what exactly the difficulties of the Hon. Minister are in this respect. To my knowledge, for the past 15 years we have been doing nothing else but to give directives to the State Electricity Board which has been very faithfully carrying out the directives of the Government. It is because it has been faithfully carrying out the directives of the Government that it is in trouble today, whether it is in tariff matters or in staffig pattern. They have a staff of 99,900 and odd persons and in the statistics given it has been clearly shown that 20 per cent of the staff of the Electricity Board is surplus to requirements. This is a stage similar to that in the B. & C. Mills where it is alleged that they have a certain surplus labour which is contributing to the downfall of that particular concern. We cannot afford to allow the same thing to happen to our State Electricity Board with its investment of Rs. 700 or 800 crores. If we are to suggest measures, I will not ask for retenchment because it is politically impossible though from the economic point of view it is desirable. But, they may at least try to keep their staff at this particular figure for the next three years, utilise the surplus personnel who are being paid salaries endlessly in the Electricity Board and divert them to more useful and productive activities. Let us take a simple thing like meter-reading and bill-collection. I have been pleading that in domestic houses we do not

require a bill every month and that we do not require these bill-collectors to come and read the meters because the average consumption is there. I have suggested that the Electricity Board may take the 1980 consumption devide it by 12 and give the consumers a bill every month. Once in four months, they may check the meter taking care, of course, to see that the meter is not tampered with. The meters have to be absolutely pilfer-proof because we do not want people to tamper with the meters. But, do we require a meter reader to come and note the reading every month? They are not mechanising their operations, they are not mechanising their accounting system and they will not have computerisation in the Electricity Board. But, still they want to treat the 4 million consumers—which will go up to 6 million consumers by 1985 or 1986 in the fashion in which they are being treated now. They just cannot manage such an organisation with such ante-diluvian

(பிற்பகல் 12-30)

and out-dated methods of management. A radical re-structuring is required but it requires courage also on the part of a political ministry because staff and industrial relations are involved. I am not saying that all these people should be thrown out of employment. I only suggest that the time has come for us to freeze and to freeze the non-Engineering personnel of the Electricity Board. Actually in the Electricity Board of Tamil Nadu, we are having only about 4,000 or 5,000 qualified Engineers and Diploma-holders and about 94,000 non-Engineering personnel. The ratio between technical and non-technical personnel work out roughly to 1:20. The Hon. Minister who is himself a technocrat should take steps to see that the technical personnel of the Electricity Board is strengthened. For the past 2 1|2 years what the Electricity Board has been doing is to hold umpteen meetings with the leaders of political parties to discuss the sole question of agricultural tariff and what the power tariff should be for the agricultural sector. They have been wasting precious time for the past 2 1|2 years and the officers of the Electricity Board had been accompanying the Collectors to the Villages to pull off fuses and re-connect them after collection of dues. They have wasted their time, instead of directing their attention to generation of power. The Hon. Minister wants that the Electricity Supply Act should be amended for the purpose of giving directives to the Electricity Board. We have no objection to the Government amending the Act, for the purpose of running the Electricity Board efficiently. But the Government are not running the Board efficiently and that is my complaint. If power generation is not attended to, we will not be able to get new industries. If we do not get new industries, we will not be



able to provide employment to several lakhs of people coming into the employment market every year, not to mention the backlog we already have. The Government want to take up electrification of huts. How is it going to improve industrial production? The Hon. Minister has been frank in his speech and I want him to be courageous enough to make the correct approach for power generation.

One word about consumers. We have now been talking about the performance of the Electricity Board and the dismal performance of the Board. I think this is a prelude to revision of tariff and the Hon. Minister will eloquently put it as rationalisation of tariff without tears. The Hon. Minister will not shed tears but the persons who will shed tears are the industrial consumers and domestic consumers who will have to pay through their nose. I agree that there is justification. The coal prices have gone up, the cost of labour has gone up and the interest charges have also gone up. There is a clear economic case for revision of tariff. But, I shall not comment on that because at the appropriate time we will offer our suggestions. But, even if they do increase the tariff today, how is the Hon. Minister going to increase it for the agriculturists, the beloved section of the Government, or so they say? So they talk about but the agriculturists have a different view. They say that the present Government have no sympathy for the agriculturists and the Government say that they have every sympathy and that the agriculturists are their beloved section. How is he going to increase the tariff for the agricultural scector? Is he going to increase it from 12 to 14 or 16 paise against which there has been so much agitation and so much back-pedalling by the Government over these 3 1|2 years? Then, what are the economic criteria by which he will run the Electricity Board? I would like to state that the moment of truth has arrived and the public and the consumers have to be taken into confidence. I have been mentioning for the past ten years that if people want more thermal stations, they will have to pay more in Tamil Nadu for power. There is no alternative. If the Government subsidise the Electricity Board to the extent of Rs. 105 crores, they will have to increase the sales tax from 4 per cent to 6 per cent and pay a Rs. 100 crores loan to the Electricity Board and try to recover interest which has not been recovered at all for the past four or five years. I would request the Hon. Minister to take the Members into confidence and not to divert attention by criticising the various authorities concerned. They may or may not be responsible. On this side of the House, since I have not participated in the discussions with the Central

Power Commission of the Central Government, I am in no position to say what is wrong or right at the present moment. I can only speak as far as the consumers in Tamil Nadu are concerned. The old complaints still remain.

I am glad that additional provision has been made during the next year for transmission and distribution. But, we still have unauthorised power shut-downs and low-voltage problems resulting in sensitive electrical equipment being burnt out. I believe that the line-transmission losses which were 12 per cent in 1965 have gone up to 21 per cent and that they have brought it down by 1 1|2 per cent or 2 per cent. I know that the previous complaints about sub-standard equipments used in distribution lines and transmission lines are being attended to. But, I would request the Hon. Minister to realise that without adequate funds and good equipment there is no possibility of our increasing the standard of service in our Electricity Board. The consumers have a lot of grievances and, in fact, we have brought it to the notice of the Hon. Minister. In the amendment to the Electricity Supply Act, I would request the Hon. Minister to include only one clause and that is to make it possible for consumers to sue the Electricity Board and collect damages if, due to low voltage, our equipments get burnt. For every refrigerator, television set and other electrical equipment, I must buy a booster for Rs. 400 or Rs. 500. If I buy a refrigerator or television set for Rs. 2,500 or Rs. 3,000. I have to buy a booster for Rs. 500 to see that the television set does not get burnt out. Because these boosters also are made with sub-standard equipments, both the booster and the television set get burnt out. May I ask what the Hon. Minister is going to do about this? He may not be concerned but the consumers by the lakhs ask this question. The Electricity Board does not have any sort of dialogue with the consumers. The consumers are the most neglected people in the Electricity Board. They cannot approach the Electricity Board and get the problems of low-voltage, unauthorised shut-downs, etc., solved. We will get some reply if we bring a call-attention motion here. I would like to state that the time has come for them to treat the 4 million consumers in a better manner. Therefore, I request that it may be made possible for the consumers to sue the Electricity Board. In the United States of America, if I lose my arm travelling in the Railways, I will probably be paid, according to whatever estimate they make of my worth, a minimum of 2 lakh dollars which is about Rs. 16 lakhs. I am not saying that the Electricity Board should lay down such a provision. But, I would certainly make the plea, and I have



been trying to get lawyers interested in this, that there should be a provision to sue the Electricity Board. Similarly, the Corporation of Madras is digging putting up dung-holes and pits and people may fall into those holes because there is not a single light in the night. The time has come for us to tell the Electricity Board which is a public utility concern that unless they give us proper service, they have got to pay the damages for the damage that may be caused to the sensitive electrical equipments.

(பிற்பகல் 12-40)

I would only end by pleading that in the Electricity Board itself, or at least in the Producing Centres, Thermal Stations etc., special incentive schemes should be offered to the staff—technicians, engineers in all our thermal stations, if they are able to improve the production by one or two per cent, thereby increasing the output of electricity which will benefit us with crores of rupees. We should have an incentive scheme to reward these persons who work well in these stations. We are having more than 99,000 employees, those who work well, those who do not work and those who work with indifference, and we are treating all of them alike. At least in the producing centres, the Government may draw up an incentive scheme whereby the technical and the non-technical personnel involved in the operation of the Unit may be rewarded suitably if they are able to improve the production of electricity in those centres by even one per cent or two per cent so that those employees could be enthused to work more in relation to production of electricity.

I hope that the Hon. Minister will not take amiss my harsh criticisms. I had to make them because we have been discussing this problem for too long and there is steady deterioration in the generation, transmission, distribution and other operations of the Board, which is the direct result of the neglect of the resources of the Board for the past 10 years, whether it was D.M.K., or A.I.A.D.M.K. or the Congress Party that was in power. It is not my concern which party was in power and I am only concerned with the interests of consumers of the Electricity Board. I can tell the Board that as far as the consumers of the Electricity Board are concerned, they are seriously perturbed about the present situation and industrial development will definitely have a slide back unless the Government are able to improve the performance and services rendered by the Board.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகுத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்கள் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று நாங்கள் எடுத்துச் சொல்லுகிறபோது, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நாங் களும்தான் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்று பதில் சொல்லுவதைப்போல, மத்திய சர்க்கார் பல்வேறு திட்டங்களுக்கு இசைவு தர வில்லை, அதற்காக நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று நிதி நிலை அறிக்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தமிழகத்திலே 18 புனல் மின் நிலையங்கள், நான்கு அனல் மின் நிலை யங்கள், நெய்வேலியில் ஒரு அனல் மின் நிலையம் ஆகிய மின் நிலையங்களின் மூலமாக 2,929 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அனுமதி வழங்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் புதிய மின் திட்டங் களுக்காக மத்திய அரசின் அனுமதியைக் கேட்டிருக்கிறோம். "மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்க்கிறோம், வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டிருப்பதைவிட ஏற்கெனவே உள்ள மின் நிலையங்களில் ஆண்டுக்காண்டு மின் உற்பத்தி அதிகப்படாமல் குறைவதற்கு யார் காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும். அல்லது ஆட்சியில் இருப்பவர்கள் சரியாகக் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், அந்தத் துறையிலேயே முன்பு பணியாற்றியவர். நானும் பொது வாழ்க்கைக்கு வந்து கிட்டத்தட்ட 25 ஆண்டுக்காலம் இந்த இலாக்காவோடு தொடர்பு கொண்டு, கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு, கிராமப்புறத்தில் தொழில் செய்யக் கூடியவர் களுக்கு மின்சாரம் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி, மின் சாரத்தை அவர்களின் உபயோகத்திற்காகப் பெற்றுத் தந்தவன். ஆனால் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், அந்தத் துறையில் இருந்த அதிகாரிகள், எப்படி சுவிட்சைப் போட்டால் உடனே பிரகாசமாக விளக்கு எரிகிறதோ அதைப்போல, சுறுசுறுப்பாகப் பணியாற்றி நல்ல பெயரை அந்தத் துறைக்குச் சம்பாதித்துக் கொடுத்தார்கள். ஆனால் இன்றைய தினம் நிர்வா கத்தில் மந்தப் போக்கு ஏற்படுவதற்கு என்ன காரணம், இடையிலே யார் தடையாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.



அந்த அடிப்படையிலே, இந்தத் துறை மிகவும் செம்மையாகச் செயல்படாத சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் என்னதான் திட்டம் போட்டு நிதி ஒதுக்கினாலும், மின்சார வாரி யத்திலே இருக்கின்ற அலுவலர்கள் திறம்படச் செயல்படாவிட்டால், திட்டம் முழுமையாக நிறைவு பெறாது. முன்பு திறமையாகச் செயல்பட்டவர்கள் இப்போது செயல்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைக் கண் டறிந்து, அரசியல் தலையீடு, மேல்மட்டத் தலையீடு இல்லாமல் அவர்கள் சுயேச்சை அதிகாரத்தோடு, வேகமாகச் செயல்படக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேட்டூரில், கீழ் மேட்டூரில் புனல் மின் திட்டம், 120 மெகாவாட் உற்பத்தி செய்கின்ற திட்டத்திற்கு அனுமதி பெற்று ஆரம்பித்தோம். ஆனால் அங்கு ஆமை வேகத்தில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். அணை கட்டுவதற்குத் தேவைப்படுகிற கம்பி, சிமென்ட் போன்ற எல்லாப் பொருள்களையும் மேலேயே வைத்துக் கொண்டு அவ்வப்போது பொருள்களைக் கீழே கொண்டுபோய் அணையைக் கட்டினார்கள். சில மாதங்களுக்கு முன்பு திடீரென்று மழை வந்து, மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டு, அனைத்தையும் அடித்துக்கொண்டு போய் விட்டது என்று சொல்லுகிறார்கள். இதை ஒப்பந்தக்காரர் கிளப்பினாரா அல்லது வேறு யார் கிளப்பினார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் பெருத்த சேதம் என்று அதையே காரணமாகக் காட்டி அந்த வேலையைப் பூர்த்தி செய்வதில் மிகுந்த காலதாமதத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். ஆகவே அதை விரைவுபடுத்தி 1981 ஆம் ஆண்டுக்குள் முடிக்கின்ற வகையில் பணியை மேற் கொள்ள வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திரு. க. அருணாசலம் தலைமை)

மேட்டூரில் அனல் மின் திட்டத்தை ஏற்படுத்த மத்திய சர்க்காரின் அனு மதியைப் பெற்று பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு திட்டத்தைப் போடுகிறபோது, எந்த இடத்திலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று முன்கூட்டியே தேர்ந்தெடுத்து, மதிப்பீடு தயார் செய்து, மாநில அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்து, பிறகு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று நிறைவேற்றுவதுதான் வழக்கம். ஆனால் சமீபத்திலே மின்சார வாரியத்தின் தலைவர் மேட்டூருக்கு வருகை தந்து எந்த இடத்திலே. மேட்டூருக்குப் பக்கத்திலே அமைக்கலாமா, இடைப்பாடிக்குப் பக்கத்திலே

அமைக்கலாமா, பள்ளிபாளையத்திற்குப் பக்கத்திலே அமைக்கலாமா என்று ஆய்வு நடத்தியதாகக் கேள்விப்பட்டேன். திட்டத்தைப் போடுகிறபோதே இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தால், திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த முடியும் : குறிப்பிட்ட காலத்திலே நிறைவேற்ற முடியும். அனுமதி பெற்று விட்டு இடத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபடக் கூடாது. செல்வாக்கு படைத்தவர்கள் தங்களுக்கு வேண்டிய பகுதியிலே அமைய வேண்டும் என்று விரும்பி யாராவது முயற்சி செய்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு இடம் கொடுத்து விடாமல் மேட்டூருக்குப் பக்கத்திலேயே அமையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். மின்சார வாரியத் தலைவரும், அலுவலர்களும் உட்கார்ந்து பேசி அங்கே அமைப்பதுதான் சரியென்று கருத்து தெரிவித்ததாக பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். இப்படி திட்டத்தை நிறைவேற்ற அனுமதி பெற்று விட்ட பிறகு இடத்தைத் தேர்ந்தெடுப்பதால், மின் உற்பத்தியை அதிகரிப்பதிலே காலதாமதம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1963 ஆம் ஆண்டு முதல் ஆய்வு செய்யப்பட்ட திட்டம்தான் ஒகனேக்கல் திட்டம். அது நல்ல திட்டம். கர்நாடக மாநிலத்தோடு நம்முடைய மாநில அரசாங்கம் கலந்து பேசி அத்திட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து அது நிறைவேற்றப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் அவர்களும், கர்நாடக முதலமைச்சர் அவர்களும்கூட ஒகனேக்கலில் கூடிப் பேசுவார்கள் என்றும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அறிவிப்பு வந்து, அவர்களுடைய சுற்றுப் பயண நிகழ்ச்சிளும் எங்களுக்கு வந்தன. ஆனால் ஒகனேக்கலில் கூடிப் பேசவில்லை. அப்போது கர்நாடகாவில் முதலமைச்சராக இருந்த திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள், அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாது என்று அறிவித்துவிட்டதால், அந்தத் திட்டம் நிறைவேறவில்லை என்று அப்போது தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 12-50)

ஆகவே எப்படி இருந்தாலும் இந்தத் திட்டத்தை நாம் நிச்சயமாக வலியுறுத்திப் பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அறிக்கைகள் விடுவது அல்லது விளம்பரத்தைச் செய்துகொள்வது என்பது மட்டும் போதாது. அதிலே முனைப்பாக இருக்க வேண்டும். அதை நிறைவேற்ற முடியுமா முடியாதா என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இந்த ஒகனேக்கல் திட்டம் ஒரு நல்ல திட்டம் என்று பொறியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத் திட்டம்கூட இன்றைக்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்து ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருப்பதாகும். அதிலே போதிய அளவுக்கு உற்பத்தி செய்யவில்லை. இந்த இரண்டாவது அனல் மின் நிலையத்தைக்கூட விரைவுபடுத்துகின்ற பணி நடைபெறவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்க்க வேண்டும். இதிலே, கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசிடத்திலே வாதாடி வாங்கியிருக்கிறோம். நிதி ஒதுக்கீடு இருக்கிறது. அதையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிடுவது மட்டும் போதாது. அங்கே அவர்களுக்குள்ளே சில டெக்னிகல் பிரச்சினைகள் வரும்போது, அவர்கள் எழுத்து மூலமாகத் தொடர்புகள் வைத்துக்கொண்டு, அந்தப் பிரச்சினைகள் தீர்வதில் காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். அதையெல்லாம் நாம் பார்க்கிறோம். மத்திய சர்க்காரிலே இருக்கக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும்கூட, மாநில அரசுக்கும் இதிலே முழுமையான தலையீடு இருக்க வேண்டும். கல்பாக்கம் மின் நிலையம்கூட அப்படித்தான் இருக்கிறது. நம்முடைய மாநில அரசுக்கு அதிலே எந்த அளவுக்கு வேலை முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பது தெரியாது. அந்த அளவுக்கு இன்றைக்கு சூழ்நிலைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நெய்வேலி, கல்பாக்கம் மின் நிலையங்கள் எல்லாம் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். நம்முடைய மாநில அரசும் அதிலே போதிய அளவுக்கு இதுவரை முயற்சி எடுக்கவில்லை. இனிமேலாவது தக்க முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் விவசாயிகள் மின் கட்டணம்பற்றிச் சொல்கிறார்கள். சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று இரண்டாகப் பிரித்துச் சொல்கின்றார்கள். அதிலேயும் வேறு மாநிலங்களிலேயிருந்து வாங்கி விற்கின்ற மின்சாரம் பற்றியும், அந்த மாநிலங்களில் உள்ள மின் கட்டணங்கள் பற்றியும் சொல்கிறார்கள். கணக்குக் காட்டி இங்கே வாதத்திற்காக எடுத்துச் சொல்கிறார்கள். இப்படி நாம் வித்தியாசமாகக் கட்டணங்கள் வைத்திருப்பதை விட, பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று 12 பைசா, 14 பைசா என்று வைத்திருப்பதைவிட, 12 பைசா என்று ஒரே நிலையிலே இருக்க வேண்டும். எல்லோருக்கும் 12 பைசாதான் என்று சொல்ல வேண்டும். 12 பைசாதான் நாங்கள் வசூல் செய்வோம் என்று அறிவித்தால், அது ஓரளவுக்கு போராடிக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு திருப்தியை அளிக்கக்கூடிய வகையிலே இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதைப்போல, இப்போதுகூட சமீபத்திலே பழைய பாக்கிகளைக் கட்ட 1 பிளஸ் 1 என்ற அடிப்படையிலே முறை வகுத்திருக்கிறார்கள். பழைய கட்டணத்தையும் புதிய கட்டணத்தையும் மாதந்தோறும் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் கட்டணம் செலுத்த அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் இந்த பில்கள் மாதந்தோறும் வருகிறதா என்றால் இல்லை. 1 பிளஸ் 1 என்ற அடிப்படையில் பழைய பாக்கி எந்த அளவுக்கு இருக்கிறது, எவ்வளவு மாதந்தோறும் கட்ட வேண்டும் என்று விவரங்களைக் கேட்டால், இந்த மாதம் எத்தனை யூனிட்டுகள் பயன்படுத்தியிருக்கிறார்கள், எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்ற விவரங்களைக் கேட்டால், கணக்காய்வுப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களால் கொடுக்க முடியவில்லை. எங்களுக்கு 1 பிளஸ் 1 என்று மொத்தமாகப் போட்டு பில் கொடுக்கிறார்கள். என்னிடத்திலே ஆதாரமில்லாமல் நான் அமைச்சர் அவர்களிடத்திலே இதைப்பற்றிப் பேசவில்லை. ஏற்கெனவே கட்டிவிட்ட பாக்கிக்கு மீண்டும் பில்லைத் தருகிறார்கள். கட்டிவிட்ட பிறகு, நாங்கள் அது தெரிந்து கேட்டால், அடுத்த மாதம் கழித்துக்கொண்டு கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படிக் குறைபாடுகள் இருக்கின்ற கணக்காய்வுப் பிரிவு இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் நிரம்ப இருக்கின்றன. ஏ.ஈ., சூப்பர்வைசர் போன்றவர்கள்தான் பில்லைத் தயார் செய்கிறார்கள். இப்படிப்பட்ட குறைகளை நீக்க வேண்டும். கணக்காய்வுப் பிரிவில் தனி அலுவலர்களை நியமித்து பழைய பாக்கி எவ்வளவு கட்ட வேண்டும், எவ்வளவ மின்சாரம் பயன்படுத்தியிருக்கிறார்கள், புதிய பாக்கி இந்த மாதம் எவ்வளவ கட்ட வேண்டும் என்பது போன்ற விவரங்களையெல்லாம் தெரிவிக்க வேண்டும். விவசாயிகள் அவைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே பரிட்சார்த்தமாக சில நடைமுறைகள் இருக்கின்றன. பயன்படுத்துகின்றவர்களுக்கு என்று ஒரு அட்டை வைத்திருந்தார்கள். அதிலே 'ரீடிங்' எடுத்துக்கொள்வார்கள். அது மீட்டர் பக்கத்திலேயே இருக்கும். அது வீட்டிலே இருந்தாலும், கிணற்றுக்குப் பக்கத்திலே இருந்தாலும், பம்பு செட்டுக்கு உபயோகப்படுத்துவதாக இருந்தாலும், அதற்கென்று ஓர் அட்டையைக் கொடுத்து அங்கே வைத்திருப்பார்கள். அந்த அட்டை மூலமாக விவரங்கள் கிடைத்தன. ஆனால், அதை இப்போது கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட முறையை நிச்சயமாகக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால்தான், விவசாயிகள் தாங்கள் எவ்வளவு மின்சாரம்





உபயோகித்தார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, உடனடியாகக் கட்டணத்தைச் செலுத்த வாய்ப்பு ஏற்படும். அப்போதுதான் அவர்களுக்கு அது சுலபமாக முடியும். அவர்களுக்கு மாதந்தோறும் அவர்கள் உபயோகிக்கின்ற இடத்திலேயே அட்டை மூலமாகத் தெரியப்படுத்துகின்ற வகையிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கணக்குப் பிரிவைப் பொறுத்தவரையில், அவர்கள் செய்வது சரிதானா என்பதைப் பார்க்க வேண்டும். அது ஒரு தனிப் பிரிவாகவே இயங்குகிறது. மின்சாரம் உபயோகிப்பவர்கள் அங்கே போய்க் கேட்டால், ஒரு பதிலும் கிடைப்பதில்லை. முறையாகப் பதில் கொடுக்கின்ற அளவுக்கு அவர்கள் அந்த இடத்திலே இல்லை. ஒழுங்கான பதிலைப் பெற முடியவில்லை. மின்சாரம் விநியோகம் செய்யக்கூடியவர்கள் கணக்காய்வுப் பிரிவிலே போய்க் கேட்டாலும், தகவலைப் பெற முடியாத நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மீட்டர் வாடகை ரூபாய் 2 என்று இருக்கிறது. முன்பு ரூபாய் 4 என்று இருந்ததைக் குறைத்து இப்போது ரூபாய் 2 ஆக ஆக்கியிருக்கிறார்கள். அதையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மீட்டர் சர்வீஸ் சார்ஜ் என்று எல்லாம் வைத்திருக்கிறார்கள். மீட்டரைப் பராமரிக்கின்ற பொறுப்பு யாருக்கு? விவசாயிகளுக்கு, உபயோகிப்பவர்களுக்கு இருக்கக்கூடாது. மின்சார வாரியத்திலே இருக்கின்ற ஏ.டி.ஈ., அவர்கள் பொறுப்பில் இருக்க வேண்டும். அவர்கள்தான் சர்வீஸ் பொறுப்பை ஏற்க வேண்டும். அவர்கள்தான் கணக்கு வைக்க வேண்டும். அந்த மீட்டர்கள் ரிப்பேர் ஆகிவிட்டாலும், அவர்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதையும் உபயோகப்படுத்தக்கூடியவர்களிடத்திலேதான் வசூல் செய்கிறார்கள். மீட்டரைப் பாதுகாக்க வேண்டியது மின்வாரியத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். அது பழுதடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சர்வீஸ் உடனடியாகச் செய்ய வேண்டும். அது மின் வாரியத்தைச் சேர்ந்த பணியாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் உபயோகப்படுத்துகின்றவர்கள்மீது பளுவைச் சுமத்துகிறார்கள். மின் வாரியம் அவர்கள்மீது, மீட்டர் சார்ஜ் ரூபாய் 2, சர்வீஸ் சார்ஜ், ஏதாவது பழுது ஏற்பட்டால் கட்டணம் என்று இப்படியெல்லாம் பணம் வாங்குவது சரியல்ல, முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கட்டணங்களையெல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது குடிசைகளுக்கெல்லாம் 10, 12 ரூபாய்கள் கொடுத்தால் விளக்குப் போட்டுத் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப் போட்டுக் கொடுத்த இடத்தில் 75 சதவிகிதம் விளக்குகள் எரிய வில்லை என்ற நிலைமைகள் இருக்கின்றன. தற்காலிகமாக ஒரு கொம்பைக் கொண்டுவந்து நிறுத்தி அங்கேயிருந்து ஒயர்களையெல்லாம் இழுத்து, ஒரு பல்பைப் போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். ஒரு காற்று அடித்தவுடன் அது ஆடுகிறது, அந்த இடத்தில் லைட் எரிவதில்லை. நாம் சர்வீஸ் கொடுத்து விட்ட காரணத்தினாலேயே அவர்கள் எல்லாம் அங்கு ஒரு ஆர்ஸ் பவர், அரை ஆர்ஸ் பவர் வைத்துக்கொண்டு குடிசைத் தொழில்களைக்கூட ஆரம்பிக் கிறார்கள். அவர்கள் மின்சாரத்தை நேரடியாகவே எடுத்துக்கொள்கிறார்கள். அதற்கெல்லாம் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. குடிசைத் தொழில் செய் கிறார்கள் என்று மின் வாரியத்திற்குத் தெரிந்து கண்டுபிடிக்கப்பட்டால், உடனே அவர்கள் 'டிஸ்கனக்ஷன்' செய்து விடுகிறார்கள். அவர்கள் தொழில் செய்ய தனியாக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். அவர்கள் வீட்டிலே செய் கிறார்கள் என்று சொன்னால், அதற்கென்று ஒரு கட்டணம் வசூல் செய்யலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்கள் ரெகுலராகவே ஒரு மீட்டர் போட்டுக்கொள்ளலாம். தனியாகவே சர்வீஸ் வாங்கிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** அதையும் மின்சார வாரியமே செய்து கொடுத்து விட வேண்டும். தொழில் செய்யக்கூடிய இடங்களிலே அப்படி யாராவது வேண்டுமென்று விரும்பிக் கேட்டால், அவர்களுக்கு மீட்டர் வைத்துக் கொடுத்துவிட வேண்டும். அது அவர்களுக்கு நன்மையைத் தரும். அதன் மூலம் மின்சார வாரியத்தின் வருமானம் அதிகமாகும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல, இன்றைக்குப் பணியிலே இருக்கும்போது விபத்திலே இறக்கும் மின்சார ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதுபோல, 30 ஆண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கும் 10,000 ரூபாய் கொடுக்கும் வகையில், அந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். அதன் மூலம் அந்த வாரியத்திலுள்ள பணியாளர்களுக்கு மன நிறைவு ஏற்படும். 15 ஆண்டுகளுக்குப் பிறகு, இப் போது நவீன முறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதை விட பின் தங்கியிருக்கிறோமென்று சொல்லும் நிலைமை தான் இருக்கிறது.





எனவே இப்படிப்பட்ட சலுகைகள் அளிப்பதன் மூலம், பழைய நிலைக்கு அவர்கள் சென்று, அரசாங்கம் சலுகை அளித்திருக்கிறது, நாம் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு வேகமாகச் செயல்படு வார்கள். எனவே இந்தத் திட்டத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் 20 ஆண்டுகள் வேலை செய்தவர்கள் 'வாலண்டரி ரிடையர்மென்ட்' என்ற திட்டத்தின்கீழ் தாங்களாகவே எழுதிக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். அப்படிச் செல்லுகிறவர்களுக்கு ஒரு தொகை—அதாவது 5000 ரூபாய், தருவோமென்று நம்முடைய அமைச்சரவர் கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் அரிசனக் காலனிகளுக்கெல்லாம் மெர்க்குரி விளக்கு கள் போட்டார்கள். தமிழ் நாட்டில் 3 கோடி ரூபாய்க்கு மெர்க்குரி லைட்டுகள் வாங்கியிருப்பார்கள். மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். அதிகாரிகளுக்கெல்லாம் தெரியும். இன்றைக்கு, அப்படி வாங்கிப் போடப்பட்ட மெர்க்குரி விளக்குகளில் 100க்கு 90 சதவிகிதம் எரியவில்லை. அவை தீய்ந்து போய்விட்டன. அப்படிப் பட்ட தரமில்லாத பல்புகளை வாங்க யார் காரணம்? எதற்காக வாங்கி னார்கள்? அவற்றை டெஸ்ட் செய்தார்களா? அப்படிப்பட்ட மோசமான பல்புகளை 3 கோடி ரூபாய்க்கு வாங்கி, இன்றைக்கு பியூஸ் போயிருக்கிறதே, அதற்கு யார் பொறுப்பு? அதற்கு பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதுகூட சோடியம் லைட் போடுகிறார்கள். ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டது. இங்கே இப்போது கொடுக்கப்பட் டுள்ள குறிப்பிலேயும் இருக்கிறது. அவர்களே கம்பத்தைக் கொண்டு வந்து பிக்ஸ் செய்து, சோடியம் லைட்டைப் பொருத்திக் கொடுக்க 5,000 ரூபாய் ஆகிறதென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சோடியம் லைட்டைக் கட்டாயம் வாங்க வேண்டுமென்று ஒரு அமைச்சர் தான் செல்லக்கூடிய இடங் களிலெல்லாம் சொல்வதாக, நாங்கள் கேள்விப்படுகிறோம். எல்லோரும் அந்த வேலையைச் செய்கிறார்களென்று சொல்லவில்லை. உடுமலைப் பேட்டை நகரசபையில் 2-1/2 லட்சம் ரூபாய்க்கு அந்த பல்புகளை வாங்கு என்று 'ஓரல்' ஆக, உத்தரவு போட்டு, அதை ஆணையரும் நம்பி வாங்கிய பிறகு, ஆர்.டி. &எல்.ஏ. துறையிடம் அனுமதி கேட்ட நேரத்தில், யாரைக் கேட்டு வாங்கினீர்கள், அனுமதி கொடுக்க மாட்டோமென்று அவர்கள் மறுக்க, அதற்குப் பின்னாலே யார் சொன்னார்களோ அவர்களே தலையிட்டு, அங்கே வாங்கப்பட்டிருக்கிறது. மெர்குரி லைட்டுகளை டெஸ்ட் செய்து, தரமான லைட்டுகள்தானா என்று பார்த்து வாங்கிப் போடாத காரணத்தால், இன்றைக்கு அவ்வளவும் பியூஸ் போய்விட்டன. அதைப்போல இதை வாங்கு

வதில் அமைச்சர் அவர்கள் ஏன் தலையிட வேண்டும்? இன்னும் சொல்லப் போனால், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தங்கள் தங்களுடைய நிதிநிலைக்கேற்ப பல்புகள் வாங்க வேண்டுமென்றால், மேலதிகாரிகள் ஒப்புதல் பெற்ற பிறகுதான் வாங்கும் சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, நகராட்சிகள் அந்த பல்புகளை வாங்க வேண்டுமென்று சூழ்நிலை உருவாக்கப்படுவது ஒரு மோசமான முன் உதாரணமாக அமைந்துவிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் எச்.டி. லைன், எல்.டி. லைன் என்று வைத்திருக்கிறார்கள். மின் சாரத்தை முறையாக, சிக்கனமாகப் பயன்படுத்துகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் அவர்களுக்குத் தனி லைன் போட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால், அப்படிப் போட்டுக் கொடுக்கவில்லை. உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சேலத்திலே, நெற்றிமேட்டிலே சப்-ஸ்டேஷன் இருக்கிறதென்று சொன்னால், அங்கேயிருந்து 5, 6 மைல்வரையிலுள்ள விவ சாயிகள் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். தொழிற்சாலைகளை நடத்துபவர்களுக்கும் அங்கேயிருந்து சப்ளை போகவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் மின்சாரம் கொடுக்க முடியவில்லை. தொழில் நடத்துபவர்களுக்கும் மின்சாரம் கொடுக்க முடியவில்லை. நம்முடைய அமைச்சரவர்கள், ஆளுநர் அவர்கள் உரையின் மூலமாக ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். 1981, ஜூன் 30ஆம் தேதிவரை 30 சதவிகிதம் மின் வெட்டுதான் இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் 30 சதவிகிதம் மின் வெட்டுதான் இருக்கிறதா என்பது அமைச்சரவர்களுக்கே தெரியும். நான் நினைக்கிறேன், 60, 65 சத விகிதத்திற்கு மேல் மின் வெட்டு இருக்குமென்று. எத்தனை சதவிகிதம் மின்வெட்டு இருந்தாலும், அதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும். விவசாயிகளுக்கு இத்தனை மணி நேரம் தருவோமென்று சொல்ல வேண்டும். ஏற்கெனவே மின் வெட்டு வரும்போது, இப்படிச் சொல்லும் முறையை வைத் திருக்கிறோம். அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொறியாளர்கள் அல்லது சூப்பர் வைசர்கள் விவசாயிகளிடம் சென்று, இந்த வாரத்தில், இந்த நாளில், இந்தத் தேதியில், இந்த நேரத்தில்தான் மின்சாரம் வரும் என்று சொல்லிவிட்டு, விவசாயிகளிடத்தில் எழுதி வாங்கி வந்து விடுவார்கள். அதற்குத் தகுந்தாற் போல விவசாயிகள் பயன்படுத்திக்கொள்வார்கள். அதுபோலத்தான் தொழில் களுக்கும் இருந்தது. ஆனால் இன்றையதினம் அது அறவே கைவிடப்பட் டிருக்கிறது. இன்றைக்கு மின் வெட்டு 30 சதவிகிதமென்று அறிவித்தாலும், சில இடங்களில் 6 மணி நேரம்தான் தொழில்களுக்குத் தருகிறோமென்று சொல்லுகிறார்கள். ஆனால், திடீரென்று அங்கே இருக்கும் அலுவலர்கள்,



வரக்கூடிய இடத்திலிருந்து மின்சாரம் கிடைக்கவில்லை என்று சொல்லி, 4 மணி நேரம் பயன்படுத்தலாமென்று சொல்லுகிறார்கள். அந்த நான்கு மணி நேரம்கூட காலையிலே 10 மணியிலிருந்து இத்தனை மணி வரை; இரவு 10 மணியிலிருந்து இத்தனை மணிவரை; ஆக 8 மணி நேரம் கிடைக்கும் என்ற உத்தரவாதமில்லை. எனவே இதை நம்பிக்கொண்டு தொழில் செய்ய முடியவில்லை. அதைப் போல விவசாயிகளுக்கு எந்த, எந்த நேரத்தில் மின் சப்ளை கிடைக்குமென்று நம்பி, விவசாயத்தைச் செய்ய முடியவில்லை. ஆகவே இன்றைக்கு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலைவாசிகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக்கூட முறையாக குறிப் பிட்ட நேரத்தில் மின்சாரம் கிடைக்கவில்லை. எனவே ஆட்சியாளர்கள் இதுபற்றிக் கலந்து பேசி, தகுந்த உத்தரவை வழங்க வேண்டும். அப்படி வழங்காவிட்டால், பெருத்த நஷ்டம் ஏற்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது போன்று 'டூ பியூஸ் சர்வீசு'க்குக் (Two fuse service) கூட மின்சாரம் சரியாக வருவதில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, மின் வெட்டு என்பது ஒன்று, 'லோட் ஷெட்டிங்' என்பது ஒன்று. மின் வெட்டு 30 சதவிகிதம்தான். ஆனால், கடந்த ஒரு வார காலமாக 'லோட் ஷெட்டிங்' அதிகமாகியிருக்கிறது. அதற்குக் காரணம், கேரளாவிலே உள்ள வர்களுக்கு ஆற்றிலே ஒரு விழா இருக்கிறது என்பதுதான். முழு அளவிற்கு மின் உற்பத்தி செய்தால், ஆற்றிலே மிகுந்த அளவிற்குத் தண்ணீர் போகும். அப்போது அந்த விழாவை அவர்களால் நடத்த முடியாது. அந்த விழா கூடியவிரைவில் முடிந்துவிடும். அதற்குப் பிறகு அவர்கள் நமக்குத் தர வேண்டிய அளவிற்கு மின்சாரம் தருவார்கள். ஆகவே, இதில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள சங்கடம்தான் அது. அதைப்போல நெய் வேலியில் 100 மெகாவாட் மின்சாரம் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, இதை வைத்து மின் வெட்டு என்று நீண்ட கால அடிப்படையிலே ஒரு தீர்மானத்திற்கு வர முடியாது. அநேகமாக இன்னும் இரண்டு மூன்று தினங்களிலே அது சரியாகிவிடும்.

திரு. சோ. ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, மறுபடி முறை யாக தொழிலுக்கு இவ்வளவு மணி நேரம், விவசாயத்திற்கு இவ்வளவு மணி நேரம், பகலிலா அல்லது இரவிலா என்பதை வரையறுத்துச் சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில்களைப் பொறுத்த வரையில், அவர் களுக்குத் தனி லைன் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1981 பிப்ரவரி 26

சமீபத்திலே மின் வெட்டைக் கொண்டு வருகிறபோது ஒன்றை அறிவித்தார்கள். ரூரல் ஏரியாவை இது பாதிக்காதென்று சொன்னார்கள். பொதுவாக நகரங்களிலே தொழிற் பெருக்கம் ஏற்படுவதால், மக்கள் தொகை அதிகமாகி, நகரத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது. ஆகவே கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் அதற்கு அங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலே ரூரல் பகுதிகள் என்று பிரித்து, அங்கு தொழில்களுக்கு மின் வெட்டு இல்லை என்று அறிவித்தார்கள். உள்ளபடியே அது பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை நாங்கள் பாராட்டுகிறோம். பொதுவாக மின்சார வாரியம் மிக, மோசமாக, மந்தமான நிலையிலே இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

ஆத்தூர் பகுதியில் கிழங்கு மில் ஆலை இருக்கிறது. அங்கே 2 மணி நேரம் கூட சப்ளை கிடைக்கவில்லை. அதுபோல் ஜவ்வரிசி தயாரிக்க முடியாத நிலைமையும் இருக்கிறது. அதன் காரணமாக அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, அங்குள்ள தொழில்கள் ஒன்றும் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் பகுதியில் சப்-ஸ்டேஷன் ஒன்று நிறுவவேண்டுமென்று ஏற்கெனவே அரசும் மின் வாரியமும் முடிவெடுத்து, அதை இளம்பள்ளிக்குப் பக்கத்திலிருக்கிற வேம்படித்தாளம் கனககிரி பகுதிக்கு ஏற்படுத்துவதாக இருந்ததை வேறொரு பகுதிக்கு ஒருசிலர் மாற்ற முயற்சி எடுத்ததாகத் தெரிகிறது. அதை வேறொரு பகுதிக்கு மாற்றக் கூடாது என்கிற கோரிக்கையை அப்பகுதி மக்கள் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள், என்னிடத்திலும் தந்திருக்கிறார்கள். அது வேம்படி பகுதியில் இருப்பது தான் மிகவும் நல்லது என்று கேட்டுக் கொண்டு, இன்றையதினம் தொழில்களை நடத்துபவர்கள் எல்லாம் ஏமாற்றத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள், அவர்களுடைய ஏமாற்றத்தைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக அக்கறை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சார அமைச்சராக இருப்பதால், மின் வாரியத்திலே பணியாற்றுபவர்களுக்கு இன்னும் பல சலுகைகளை அளித்து, துறையை இன்னும் விரிவுபடுத்தி,



1981 பிப்ரவரி 26] [திரு. சோ. ஆறுமுகம்]

இன்னும் வேகமாக மின்சார வாரியம் செயல்படும்படி செய்ய வேண்டும். மத்திய அரசின் மீது பழியைப் போட்டு, புள்ளி விவரங்களை இங்கே எடுத்துச் சொல்லி தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது முறையாகாது என்று சொல்லி முழுப் பொறுப்பையும் இந்த அரசு ஏற்று இந்தத் துறையில் நல்ல வளர்ச்சியைக் காணவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் ஆங்கிலத்தில் பேச அனுமதியளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

I may, first of all, congratulate the Hon. the Minister for Electricity on the best efforts that he is putting forth with the invaluable support of the Hon. the Chief Minister. We see very often that the Hon. the Chief Minister and the Hon. the Minister for Electricity go to Delhi and ask for clearance of many projects.

It is very interesting to know that out of nearly 64,000 villages in our State, about 63,500 villages have been electrified. But, as the hon. Member Thiru Damodaran pointed out elaborately, the demand is increasing and the Government have to admit that the 30 per cent cut is inevitable. I have been telling every industrialist that they should place, not 25 per cent but 50 per cent reliance on generators to combat the power-shedding also. But, there are certain industries which cannot have power-generators. For example, it is impossible in the cement industry because it is a continuous process industry. To use generators in that industry will be too costly and the public cannot afford the increase in the cost of cement. Therefore, it is necessary for the Government to have new projects. In this connection, I am not able to understand why the Kalpakkam project is still being delayed. There must be something in that. They say that some units are not ready but we do not know when they will be ready because so many years have gone by. I think that the Government must request the Government of India immediately to go into the matter and set things right.

Sir, there is no use of complaining of changes of officers in the Electricity Board. That would not matter at all. The particulars and figures are there and every time a new officer or Chairman comes, he can always handle things without any difficulty. I am glad that the Chairman and other officers posted to the Electricity Board from time to time function well. But, I would request the

Hon. Minister to appoint a Planning Cell permanently for the Electricity Board. I do not think there is at present a permanent Planning Cell in the Electricity Board with experienced engineers on it. Quite apart from attending to routine items of work like giving connections, power-shedding, attending to repairs in units at Neyveli or Ennore, etc., planning has to be done for the future. I do not think that the State Planning Commission can be expected to attend to this planning. So, there should be a separate Planning Cell in the Electricity Board itself which would function independently. The people in the Planning Cell can work out and give details to the Hon. Minister and to the Board so that they may tell the Government of India that they want so much money for the various projects. Today I can assure the Government that they need not be anxious about money. There is plenty of money in the market and there is plenty of money with the people who have small sums like thousands to invest. Now they have no opportunity to invest in shares because there are no new industries. Further, investment in shares has also become not much remunerative. The Reserve Bank of India has plenty of money to spare. Other commercial banks have also got money. Why? There are no new industries seeking financial help from the banks. The Electricity Board can easily float a loan and it will be fully subscribed because it is a well equipped institution and the people will be sure of their investment and return because of the guarantee by the Government. I would, therefore, request the Government to push through new schemes.

It is mentioned in the speech of the Hon. Minister that there are about 9 lakh pumpsets and if half of them work simultaneously, 1,500 MW will be required but since that much power is not available, they could not be given continuous power supply. We want them to prosper and we should supply them sufficient electricity. No hon. Member will differ from the views expressed by hon. Friends Thiru Arumugam and Thiru A. R. Damodaran. We are making our suggestions so as to strengthen the hands of the Hon. Minister to get more money from the Government of India and from the public. The speeches made here will enable the public to subscribe more for the loans raised.

I would like to impress one thing on the Hon. Minister. I read in the papers about the talks had by the Hon. the Chief Minister and the Hon. the Minister for Electricity with the Kerala Ministers and I found the names of some dams mentioned. I do not find the exact purport of the speech in the papers. I hope the





Hon. Minister will explain the purport of their talks. I do not see the reason why they have not taken up the scheme which we have been speaking about for a very long time, even during Thiru Kamarajar's period. There are hills 50 miles south of Madurai on the way to Courtallam and the waters flowing in the rivers go to the Arabian Sea. The original programme was to take that water after having a tunnel in the hills and it was not at all implemented. The Government of Kerala had 23 Hydel schemes at that time but it had completed only 7 of them. I would request the Government to ask the Kerala Government why the remaining schemes were not implemented and what the snag was. Money will not be a problem because money is available. If they had implemented those schemes, they would have plenty of electricity. There is no doubt about it.

(பிற்பகல் 1-20)

Agriculture also will prosper only if electric pumpsets are made use of. Therefore, I would request that the scheme near Rajapalayam may be taken up. I may have mentioned the name of the scheme wrongly because I do not know the exact name. But, I have mentioned the exact location. In my speeches also in the Assembly, every year for about ten years between 1950 and 1960, I have mentioned about this and many files on this scheme were there in the Secretariat.

With these words, I offer my warmest felicitations to the Hon. Minister and wish the best of good luck to the Electricity Board, the Hon. the Chief Minister and the Hon. the Minister for Electricity. Thank you.

திரு. க. அருணாசலம் : அவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி வருங்காலத்தில் இன்னும் அதிகமான அளவில் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. மனிதன் மனிதனுடைய உழைப்பிலே வாழ்ந்து கொண்டிருந்த காலம் போய் இப்போது இயற்கைச் சக்தியை உபயோகப்படுத்தி, வாழ்க்கையை மேம்பாடடையச் செய்யும் இந்தக் காலத்திலே நாமும் மின் உற்பத்தியை அதிகமாகச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். நமக்குக் கிடைக்கும் இயற்கை வளம் அதற்குக் குறுக்கே நிற்கிறது. நமது தேவைகள் நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகிக் கொண்டு வருகின்றன. பல வழிகளிலேயும் நாம் மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நீர் மின்சாரம், அனல்

மின்சாரம் இவைகள் மட்டும் போதுமா என்ற கேள்வியும் இப்போது இருக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் திட்டமிடுகின்றவர்கள் இப்போது வட்டாரத்தை மையமாக வைத்து திட்டமிடுகிறார்கள். அதனாலே சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. உலக அளவிலே வட்டாரம் என்று வருகின்றபோது, சவுத் ஈஸ்ட் ஏஷியா ரீஜியன் என்று சொல்லும்போது, அவர்கள் அதைத் தனி ரீஜியன் என்று சொல்கிறார்கள். நாம் ஒரு பிளாக்கை ஒரு ரீஜியனாக வைத்து திட்டமிட்டால் நல்லது. இப்போது இருப்பதைப் பார்த்தால், மாநில அளவிலே நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய திட்டமிட வேண்டும். நம்முடைய வரம்புக்குள்ளே, நம்முடைய வட்டாரங்களிலே பல பகுதிகளிலே 'சுயதேவைப் பூர்த்தி' என்று சொல்லி பல வேலைகளை நாம் செய்து வருகிறோம். குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்றவற்றைக் கூட நாம் இந்த அடிப்படையில் செய்கிறோம். மக்களின் வாழ்க்கை பல் வேறுபட்ட தேவைகளைக் கொண்டு ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதால், மின்சாரத்தைப் பொறுத்தவரையிலும், அந்த மாதிரி வட்டார அளவில் ஒருங்கிணைந்த திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். மின்சாரம் தேவையான அளவு கிடைக்காவிட்டால், 'எக்கனாமிக் டெவலப்மென்ட்' பாதிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சினையும் மக்களின் வாழ்க்கையோடு இணைந்திருப்பதால், எல்லாப் பிரச்சினைகளைப் போல இதற்கும் திட்டமிட வேண்டும். மனிதனுடைய 15 முதல் 25 சதவீதத் தேவைகளை அங்கங்கே உள்ள வேறுபல வசதி வாய்ப்பையும் பயன் படுத்தி நிறைவு செய்துகொள்ளலாம். சூரியன், காற்று இவைகளிலிருந்து எடுக்கும் சக்தியின் மூலமாக நாம் நமது மின்சாரத் தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்யலாம் என்று சொன்னார்கள். இந்தச் சக்திகளையெல்லாம் அதிகமாகப் பயன்படுத்தும்போது Exploitation of natural resources என்று சொல்லி, இயற்கைச் சூழ்நிலைகளையெல்லாம் Exploit பண்ணும்போது அதனால் Ecological imbalance கூட வருமென்றும் அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தேவையில்லாத வழிகளில் Exploit செய்வதைக் குறைக்க வேண்டும்.

மின்சாரத்திற்கு சூரிய வெப்பத்தை உபயோகப்படுத்தலாம். குஜராத், மஹாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் இதுசம்பந்தமாக முற்போக்கான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். கிராமங்களைப் பொறுத்தவரையில், அடுப்பெரிக்க விறகு உபயோகப்படுத்துகிறார்கள். விறகுக்காக காடுகளை அழிக்கிறார்கள். அதற்குப் பதிலாக நாம் இப்போது சூரிய சக்தியை உபயோகப்படுத்த வேண்டும். மின்சார வாரியம் என்று இருப்பதை 'எனர்ஜீ' வாரியம் என்றெல்லாம் இப்போது சொல்கிறார்கள். சூரிய சக்தியைப் பயன்



படுத்துவதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும், அதற்குத் தேவைப்படும் எல்லாவிதமான உற்சாகத்தையும் நாம் அளிக்க வேண்டும், அதற்குத் தேவைப்படும் கருவிகளை நாம் வழங்க வேண்டும். அண்மையிலே, குஜராத் மாநிலத்திலே 2000 அடுப்புகளை Integrated Rural Development என்ற திட்டத்தின் மூலமாகத் தயார் செய்து, அவைகளுக்கு சப்சிடி கொடுத்திருக்கிறார்கள். 500 ரூபாய் விலையுள்ள சோலார் குக்கரை 200 ரூபாய்க்கு வழங்கினார்கள். 300 ரூபாய் சப்சிடி கொடுத்தார்கள். அதுபோல மஹாராஷ்டிரா மாநிலத்தில் சாணத்திலிருந்து எரிவாயு எடுக்க சப்சிடி கொடுக்கிறார்கள். இதற்கெல்லாம் சப்சிடி கொடுக்க வேண்டுமா என்று கேட்டால், இவைகள் புதிதாக இருப்பதால், யாரும் வியாபார நோக்கோடு செய்ய மாட்டோம் என்று சொல்கிறார்கள்; ஆகவே தான் சப்சிடி கொடுக்கிறார்கள். 'சோலார் குக்கர்' செய்வதற்குத் தேவைப்படும் கண்ணாடி மற்றும் சாமான்கள் எல்லாம் செய்ய வேண்டும். இதனுடைய உபயோகத்தைப் புரிந்துகொண்டு, எல்லோரும் சோலார் குக்கரை உபயோகப் படுத்தக்கூடிய ஒரு நிலைமை வந்துவிட்டால், சப்சிடி தேவையில்லை. ஆரம்பத்திலே சப்சிடி கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். இதுபற்றியெல்லாம், வேளாண்மைக் கல்லூரியிலே யாரோ ஆராய்ச்சிகள் செய்து அப்படியே போட்டு வைத்திருக்கிறார்கள். மின் வாரியமே இதுபற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டால் மிகவும் நல்லது. சென்ற ஆண்டுகளில் ஆராய்ச்சிக்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் கடந்த கால நிலைமைகளைப் பார்த்தால், ஒதுக்கிய பணத்தில் மிகக் குறைந்த அளவுக்குத்தான் செலவிடுகிறார்கள். சென்ற முறை 4 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். இப்போது 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதுகூட செலவு செய்ய முடியாத நிலை ஏற்படக்கூடாது. டிரான்ஸ்ஃபார்மர் மற்ற தேவைப்படும் சாமான்கள் பற்றியெல்லாம் நாம் ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். சூரிய வெப்பத்தை உபயோகப்படுத்துவது, காற்றை உபயோகப்படுத்துவது பற்றியெல்லாம் கூட நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். எந்தக் காலத்திலே சூரிய வெப்பம் அதிகமாகக் கிடைக்கிறதோ அந்தக் காலத்திலே அதைப் பயன்படுத்த வேண்டும். இப்போது நெல் அறுவடை செய்யப்படுகிறது என்று சொன்னால், அந்த நெல்லைக் காயப்போடுவதற்கு வெப்பம் வேண்டும். அதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அப்படிப் பயன்படுத்தும் மின்சாரத்திற்குப் பதிலாக சூரிய வெப்பத்தை உபயோகப்படுத்த ஏற்பாடு செய்தால், அதனால் நமக்கு இருக்கும் மின்சாரத் தட்டுப்பாடு குறையும். முன்காலத்தில் எல்லாம் காற்று அடிக்கும் திசையைப் பொறுத்து 'விண்ட் மில்' வைத்திருந்தார்கள். கோயம்புத்தூரிலே தடாகம் பகுதியிலே கூட அப்படிப்பட்ட 'விண்ட் மில்' வைத்திருந்தார்கள். பின்னர் வேகமாகக் காற்று அடித்த

தனால், அது உடைந்து போய்விட்டது என்று சொன்னார்கள். முற்போக்கான நாடுகளில், காற்று அதிகமாக அடிக்கும்போது, அந்த 'வின்ட் மில்' தானாக நின்றுவிடும் அளவுக்குக் கூட ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே அதிகமான அளவுக்கு இதில் நாம் அக்கறை எடுக்க வில்லை. இந்த வகையிலும் நாம் சிறப்பு கவனம் எடுக்க வேண்டும்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. அருணாசலம் :** நான் அதிகமாக நேரத்தை எடுத்துக்கொள்ளாமல் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி முடிக்கிறேன். இந்தத் திட்டம் தேசிய அளவிலே இருப்பதால் இங்கு இருக்கும் பல குறைபாடுகளைச் சொல்கிறபோது, சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். இப்போது இருக்கும் தேய்மானம் 3 சதவீதம்தான். ஆகவே, கருவிகளைப் புதுப்பிக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஒரு கருவி 30 வருட காலம் இருக்கும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. அந்தக் கருவி 10 வருட காலம் வரையில்தான் சில நேரங்களில் இருக்கும். அது இடத்துக்கு இடம், பகுதிக்குப் பகுதி மாறும். கடற்கரைப் பகுதியை எடுத்துக்கொண்டால், அந்தக் கருவி துருப் பிடித்து சீக்கிரம் தேய்ந்து போய்விடும். தேய்மானம் 3 சதவீதத்திற்கு மேல் போகக் கூடாது என்று சொன்னால், எதிர்காலத்திலே இவைகளையெல்லாம் சீர்செய்ய முடியாமல், வளர்ச்சியே இல்லாமல் போய்விடும். அப்படித்தான் இன்றைய தினம் சில மில்கள் சிக் மில்களாக இருக்கின்றன. மில்களுக்குத் தேய்மானம் போடுவது இல்லை. பின்னர் ஒரு குறிப்பிட்ட காலத்திலே அவைகள் உபயோகப்படுத்த முடியாத அளவுக்குப் போய்விடுகின்றன. இதற்கெல்லாம் இன்னும் அதிகமான அதிகாரம் தேவை என்று சொன்னால்கூட, நாம் கொடுக்க வேண்டும்.

திட்டம் போடும்போது, பொதுவாக இரண்டு மூன்று மாநிலங்கள் சேர்ந்து திட்டமிட வேண்டும் என்று சொன்னால், அப்படிச் செய்யும்போது கால தாமதமும் ஏற்படும் என்று சொன்னால், அப்படித் திட்டமிடுவதை மத்திய அரசே செய்யலாம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ப என்ன என்ன செய்ய முடியுமோ அவைகளை நாம் செய்யலாம். நிலக்கரியை வாங்கி மின்சார உற்பத்தியைச் செய்ய முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். தூர இடங்களிலே உற்பத்தி செய்து கொண்டு வருவதாக இருந்தால் 20, 25 சதவிகிதம் இழப்பு ஏற்படும் என்று சொன்னால் நாமே அந்த நிலக்கரியை தூர இடங்களிலேயிருந்து கொண்டு வந்து, மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் மின்சார



நிலையங்களை அமைத்தால், அது பெரிய அளவுக்கு நம்முடைய திட்டங்களை நிறைவேற்ற உதவியாக இருக்குமா என்பதையும் பார்க்க வேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையிலே பல நல்ல காரியங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

அவைகளையெல்லாம் விரைவில் செயல்படுத்த வேண்டும். இன்னொரு நல்ல காரியம், அதிலும் பாராட்டுக்குரிய காரியம் என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்கு முன்பு பேசியவற்றையெல்லாம் தொகுத்துக் கொடுத்து, அச்சிட்டுக் கொடுத்து இவைகளில் இன்னின்னவற்றைச் செய்து முடித்திருக்கிறோம், இனி எதிர்காலத்தில் இன்னின்னவைகளைச் செயல்படுத்த இருக்கிறோம், இன்னின்னவைகளைச் செயல்படுத்த முடியாது என்பதையெல்லாம் அதில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே பாராட்டுக்குரியதாகும். இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் நன்கு யோசித்துப் பார்த்துச் செயல்படுத்துவதற்காகத்தான் நாம் மின்வாரியத்தை வைத்திருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்த மின்வாரியத்தைப் பொறுத்தவரையில், இது நமது மாநிலத்திற்கு மட்டும் என்று ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, இவ்வாரியம் நமது ஆணைக்குட்பட்டதல்ல என்றும், 1948 ஆம் ஆண்டு சட்டப்படி நிறுவப்பட்டதால், அதையொட்டியே இயங்கிக்கொண்டிருக்கிறது என்றும், மாநில அரசு அவர்களுக்கு உத்தரவு போட்டு காரியம் செய்யக்கூடிய நிலையில் அது இருக்க வேண்டும் என்றும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். சட்டத்தில் அப்படி இருந்தாலும், நமது அரசு குறிப்பிட்ட உத்தரவுகளைப் போட்டு நம் மாநிலத்திற்குத் தேவையான முற்போக்குத் திட்டங்களையும் காரியங்களையும் நடத்த நமக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அப்படிச் செய்து மின் வாரியத்தையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். முன்னே அது ஒரு டிபார்ட்மெண்டாக இருந்தது. பிறகு அதை மின் வாரியமாக மாற்றினோம். அது இன்னும் டிப்பார்ட்மெண்டைப்போலவே செயல்படுவது சரியல்ல. டிபார்ட்மெண்ட்டாக இருந்தபோதும் சரி, வாரியமாக இருந்தபோதும் சரி, நிதி கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே அவர்கள் தங்கள் இஷ்டப்படி ஆட்களை நியமிக்கிறார்கள். அனுமதிக்கப்பட்ட இடங்கள் இல்லாமலேயே ஆட்களை நியமிக்கிறார்கள் என்ற குறை இருந்து வருகிறது. கிராமங்களுக்குச் சென்றால், மின்வாரியத்தைப்பற்றி மக்கள் பேசிக்கொள்வது கேட்பதற்கு வேதனையாக இருக்கிறது. இருக்கிற டிபார்ட்மெண்ட்டுகளிலேயே மின்சார டிபார்ட்மெண்ட்தான் மிகவும் மோசமாக நடக்கிறது என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் 4 ஆம்

தேதியிலிருந்து மின் கட்டணத்தைக் கட்டலாம் என்று சொல்லும்போது, அவர்களை 12 ஆம் தேதிக்கு மேல் வந்து கட்டுங்கள் என்று சொல்லி திருப்பி யனுப்பிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு மீண்டும் ஒருமுறை கியூவில் நின்று கட்ட வேண்டியிருக்கிறது என்று கிராமத்தில் உள்ள ஜனங்கள் அங்கலாய்க்கி றார்கள். அது மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் எதாவது கொடுத்தால்தான் நடக்கிறது என்றும் சொல்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட குறைகளை யெல்லாம் போக்கி மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதித்ததற்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-32)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

196. Notification issued with G.O. Ms. No. 2436, Agriculture, dated the 26th December 1980 in regard to the nomination of the Director of Animal Husbandry, Madras as Special Officer for the Tamil Nadu Veterinary Council for a period of one year. [Laid on the table of the House under section 16(7) of the Tamil Nadu Registration of Veterinary Practitioners Act, 1957 (Tamil Nadu Act XXI of 1957).]

197. Notification issued with G.O. Ms. No. 1220, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 13th December 1980 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 in Volume-I of the Tamil Nadu Services Manual, 1977. [Laid on the table of the House under Article 320(5) of the Constitution of India.]

198. Notification issued with G.O. Ms. No. 2592, Home (Cinemas), dated the 3rd October 1980 in regard to an amendment to rule 103(2) (ii) of the Tamil Nadu Cinemas (Regulation)



Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

199. Notification issued with G.O. Ms. No. 2254, Home (Cinemas), dated the 2nd September 1980 in regard to amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

200. Annual Accounts of the Tamil Nadu Slum Clearance Board along with Audit Report thereon for the years from 1971-72 to 1976-77. [Laid on the table of the House under section 41 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

### B. Reports, Notifications and Other Papers.

40. Twelfth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1977 to 31st March 1978. (Tamil and English).

## இணைப்பு I

[39 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### விவர அறிக்கை.

பாம்பன் பால வேலை, ஒப்பந்தக்காரர் திருவாளர்கள் நீலகண்டன் அண்டு பிரதர்ஸ், சென்னை, அவர்களுக்கு ஒப்பந்தத் தொகை ரூபாய் 513.08 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்க, 10—10—1974 அன்று ஒப்பந்தமாகி, 17—11—1974 அன்று பால வேலை துவக்கப்பட்டது. ஒப்பந்தப்படி, பால வேலைகள் அனைத்தும் 16—11—1978 அன்றே முடிவடைந்திருக்க வேண்டும்.

2. வேலையின் முன்னேற்றம் தடைபட்டதற்கு ஒப்பந்தக்காரர்கள் திறமையுடன் செயல்பட தொடர்ந்து தவறியதே ஆகும். இதனால் முழு வேலையையும் முடிக்க வேண்டிய காலமான 16—11—1978 அன்று 32 சதவிகித அளவிற்கே வேலையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

3. வேலையை முடிப்பதற்காக ஒப்பந்தக்காரர்கள் 31—12—1980 வரை கால நீட்டிப்பு அளிக்கும்படி கோரினர். அவர்களுக்கு நான்கு தருணங்களில் 31—10—1979, 31—12—1979, 31—3—1980 மற்றும் 30—6—1980 வரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எந்தவொரு வேலையையும் செய்து முடிக்கவில்லை. கடைசியாக அவர்களுக்கு 30—9—1980 வரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டது. இது தவிர அவர்கள் வேலையின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தி கடைசியில் ஜூலை 79-ல் 36 சதவிகித அளவிற்கு வேலைகள் செய்த நிலையில் எல்லா வேலைகளையும் நிறுத்தி விட்டனர். ஒப்பந்தக்காரர்கள் ஜூலை 79 வரை செய்து முடித்த வேலைகளின் மதிப்பு ரூபாய் 221.33 இலட்சங்களாகும்.

4. பாம்பன் பகுதியில் 24—11—1978 அன்று வீசிய புயலினால் ஒப்பந்தக்காரர்களின் தற்காலிக கட்டுமானங்களாகிய மரப்பாலம், மற்றும் இதர தளவாடங்களும் சேதத்திற்கு உள்ளாகியது. இப்புயலை விதிவிலக்குள்ள 'இடை Excepted risks ) என்று கூறி ஒப்பந்தக்காரர்கள் நஷ்டஈடாக முதலில் மதிப்பிறக்கத் தொகையாக ( Depreciated loss ) ரூ. 20.66 இலட்சங்களும் மற்றும் தொகையாக குறிப்பிடாத புயல் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் செயல் அமைப்புச் செலவு, தொழிலாளர்களை மீண்டும் அமைக்கும் வகையில் ஏற்படும் செலவு ஆகியவைகளுக்காகவும் கோரி மனு செய்தார்கள். இது பரிசீலனையில் இருந்துகொண்டு இருக்கும்போது, 8—11—1979 அன்று வானியல் துறையிடமிருந்து ஓர் அறிக்கை கிடைக்கப்



பெற்றது என்றும், இதன்படி நவம்பர் 78-ல் ஏற்பட்ட புயல், டிசம்பர் 64-ல் ஏற்பட்ட புயலுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் இதற்கு முன் நிகழ்ந்திராத வகையில் இல்லை என்பது தெரியவந்தது என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்தார். இந்த அறிக்கையின்படி விதி விலக்குள்ள இடையூறு (Excepted risks) ஏற்படாததால் நிலைமை முழுமையாக மாறிவிட்டது. அதன்படி ஒப்பந்தக்காரர்களின் நஷ்ட ஈட்டுக் கோரிக்கை ஒத்துக்கொள்ளும் வகையில் இல்லை என்று தலைமைப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டது. இப்பிரச்சினை பல கட்டங்களிலும், பல மட்டங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் முழுமையாக ஆராயப்பட்டது.

5. அதன் முடிவாக ஒப்பந்தக்காரர்களுக்கும், பாம்பன் பாலத் திட்டத் துறைக்கும் இடையேயுள்ள தகராறு அல்லது கருத்து வேற்றுமை குறித்து ஒப்பந்த விதிகளின்படி நடக்குமாறு ஒப்பந்தக்காரர்களுக்கு அரசால் தெரிவிக்கப்பட்டது.

6. ஒப்பந்த விதிகளை மதிப்பது குறித்து ஒப்பந்தக்காரர்கள், தங்கள் கடமையை நிறைவேற்றும்படி நடவடிக்கை எடுக்குமாறும், மீதமுள்ள பணிகளை விரைவில் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பாம்பன் பாலத் திட்ட தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

7. ஒப்பந்தக்காரர்கள், பாம்பன் பாலத் திட்ட இரண்டாம் செயற் கோட்டம், கோட்டப் பொறியாளரின் அறிவிப்பில் உள்ள கோரிக்கைக்கு உட்பட்டு நடக்கத் தவறியதால், கோட்டப் பொறியாளர் 29—12—1980 அன்று ஒப்பந்தத்தை முழுமையாக ரத்து செய்துள்ளார்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மீதி வேலைகளை செயல்படுத்த ஒப்படைப்பதற்கும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் ஒப்பந்தக்காரர்கள் நடுவினரை மாற்றக் கோரி உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளனர். ஆகவே இவ்விஷயம் வழக்காடு மன்றத்தின் முன் உள்ளது.

[1981 பிப்ரவரி 26

## இணைப்பு II

[41 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசிடம் உள்ள தகவலின்படி சென்னைப் பெருநகரில் 1977, 1978, 1979, 1980 ஆண்டுகளில் நடைபெற்றுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| வருடம் | வாகனங்களின் எண்ணிக்கை. | விபத்துக்களின் எண்ணிக்கை. | வாகனங்களின் எண்ணிக்கையோடு விபத்துக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்ட சதவிகிதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1977 | 73,030 | 5,176 | 7.1 |
| 1978 | 80,869 | 5,022 | 6.2 |
| 1979 | 84,106 | 4,728 | 5.6 |
| 1980 | 95,589 | 5,163 | 5.4 |

மேலே கண்ட புள்ளி விவரங்களின்படி சென்னைப் பெருநகரில் விபத்துக்கள் அரசின் தடுப்பு நடவடிக்கையால் குறைந்துகொண்டு வந்துள்ளது. இருந்தாலும் இன்னும் விபத்துக்களைக் குறைப்பதற்கு அரசு கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது:—

(1) கனரக மோட்டார் வண்டிகள் அதிக வேகமாக செல்வதைத் தடுப்பதற்கு இவ்வண்டிகளுக்கு வேகக் கட்டுப்பாட்டை நிர்ணயித்து இவ்வண்டிகளின் ஓட்டுநர்களை எச்சரிக்கும் வகையில் எலக்ட்ரானிக் முறையில் இயங்கும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்று பொருத்தப்பட வேண்டும் என்று தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் உரிமங்கள் வழங்க நிர்ணயிக்கும் நிபந்தனைகளில் ஒன்றாக விதிக்கப்பட்டுள்ளது.

(2) சாலைகளை அகலப்படுத்துதல்.

(3) நடைவழி சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

(4) இரயில் பாதை கடவுகளுக்கு மேல் மேம்பட்ட பாலங்கள் அமைத்தல்.

(5) நடைபாதை மற்றும் சைக்கிள் போக்குவரத்து வசதிகள் செய்தல்.

(6) போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்காக தானியங்கி மின்விளக்குகள் அமைத்தல்.



1981 பிப்ரவரி 26]

2. போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மோட்டார் வாகனங்களின் இயந்திரங்களின் ( Engine ) தன்மையினை அவ்வப்போது சோதனை செய்து தக்க நிலையில் உள்ளனவா என்று சோதனை செய்கின்றனர். காவல் துறை அதிகாரிகள் போக்குவரத்து விதிகளை வண்டி ஓட்டிகள் கவனமாகக் கடைப்பிடிக்கிறார்களா இல்லையா என்று உன்னிப்பாகக் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

3. மேலே கண்ட நடவடிக்கைகளால் சென்னைப் பெருநகரில் விபத்துக்கள் மேலும் குறைந்துகொண்டே வருகிறது.

## இணைப்பு III

[43 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அவை முன்வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1979-80 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சக்தி ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61 ஆம் பிரிவின்படி, அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியம் செயல்படுவது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் வாரியமும் கருத்தில் கொள்ளும். மின் வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கை பற்றி இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தின்போது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. மின் சக்தியே, மக்களுக்கு மிகவும் பயனுள்ள சக்தியாகும். பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமானது. சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இது இன்றியமையாதது. இம்மாநிலத்தில் மின்சாரத் தேவை விரைவாகப் பெருகி வரும்போது கூடுதல் மின் உற்பத்தித் திறன் அதற்கு ஏற்பப் பெருகவில்லை. இதனால், பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 1970-80-ல் 25 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை மின்வெட்டு விதிக்கப்பட்டுள்ளது.

1970-80ல் மின்வெட்டு விதிக்கப்பட்ட அளவை I -ஆம் விவர அறிக்கை கொடுக்கிறது. இந்த மின்வெட்டு காரணமாக, 1960-70-ல் 10.1 சதவீதமாக இருந்த உற்பத்தி வளர்ச்சி வீதம், 1971 ஆம் ஆண்டிற்கும் 1977 ஆம் ஆண்டிற்கும் இடையே உள்ள கால அளவில் 3.1 சதவீதமாகக் குறைந்து விட்டது. எனினும், மின் சக்தி அதிக அளவு கிடைத்ததால், 1977-79-ல் மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 14 சதவீதமாக உயர்ந்துள்ளது.

4. 1981 ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. இனிவரும் பத்தாண்டுகளின் மின் சக்தி நிலைமை நமக்கு மனநிறைவு அளிப்பதாக இல்லை. மின்சக்தி குறித்துத் திட்டமிடுவதைப் பொறுத்த வரையில், ஆண்டு மின் சக்தி ஆய்வுக் குழுக்கள் தமிழ் நாட்டிற்கு முற்றிலும் ஆதரவாக இல்லை. 1983-84 ஆம் ஆண்டளவில், தென் வட்டாரத்திற்கான மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 9.5 சதவீதமாகவும், நாட்டின் மின் உற்பத்தி வளர்ச்சி 10.8 சதவீதமாகவும் இருக்கும் எனவும், தமிழ் நாட்டில் மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 7.9 சதவீதமாக இருக்கும் எனவும் 10-ஆவது ஆண்டு மின் சக்தி ஆய்வுக் குழு மதிப்பிட்டுள்ளது. தென் வட்டாரத்தின் மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 8.9 சதவீதமாகவும், தமிழ் நாட்டிற்கான மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 5.7 சதவீதமாகவும் இருக்குமென 11-ஆவது ஆண்டு மின் சக்தி ஆய்வுக் குழு வளர்ச்சி வீதத்தை மேலும் குறைத்து மதிப்பிட்டுள்ளது. நாட்டிலேயே தமிழ்நாடுதான் குறைந்த அளவு மின் சக்தி வளர்ச்சி வீதம் பெற்றிருக்கும் என மதிப்பிடுவது தமிழ் நாட்டிற்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

1978-79 ஆம் ஆண்டில் மின்வெட்டு விதிக்கப்படாத நிலையில், மின் சக்தி பயன்படுத்துவதில் 17.3 சதவீதம் அதிகரித்தது. இது மின் சக்தி குறித்து திட்டமிடுவதில் ஏற்பட்ட பெரும் குறைபாட்டைக் காட்டும். தமிழ் நாட்டிற்கான மின் சக்தித் திட்டப்பணி மதிப்பீடுகளை அவை நடப்பு நிலையைக் கருத்திற் கொண்டு உருவாக்கப் படவில்லை என்றும் நியாயமற்றவை என்றும் கூறித் தமிழ் நாடு அரசு தள்ளிவிட்டது. புது டில்லியில் 1980 நவம்பரில் நடைபெற்ற மின் சக்தி அமைச்சர்கள் கூட்டத்தில், தமிழ் நாடு தொடர்ந்து மின் சக்தி பற்றாக்குறையின் பிடியிலிருந்து விடபடவேண்டுமாயின், நமது தேவைகளுக்கும் மேற்பட்டு 10 சதவீதம் ஒதுக்க வேண்டும் என. நான் வலியுறுத்தியுள்ளேன்.

5. தற்போது மின்சக்தி திட்டங்கள் வட்டாரக் கண்ணோட்டத்திலேயே வகுக்கப்படுகின்றன. இதனால், தமிழ்நாடு போன்ற மின்சக்திப் பற்றாக் குறையுள்ள மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன என்று நமது அனுபவத்திலிருந்து தெரிய வருகிறது. மின்சக்தி உபரியாக உள்ள மாநிலங்களை மின்சக்திக்காக தொடர்ந்து நம்பியிருப்பது, பற்றாக்



குறையுள்ள மாநிலங்களின் நீண்ட கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்காது. ஏனெனில், அது பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும். அவசரத் தேவை, பற்றாக்குறை ஆகியவற்றை ஈடு செய்ய, மாநிலங்களுக்கிடையே மின்சக்தி வாங்குவது அவசியமாக இருக்கலாம். ஆனால் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு ஒவ்வொரு மாநிலமும் பாடுபட வேண்டுமென்று தமிழ்நாடு கருத்துக் கொண்டுள்ளது. மின்சக்தி குறித்துத் திட்டமிடுதல், மேம்பாடு தொடர்பாக மாநிலமே—வட்டாரமல்ல—ஓர் அலகாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மத்திய அரசு பொறுப்பேற்கும் நிலையங்களிலிருந்து அண்டை மாநிலங்களிலுள்ள மின்சக்திப் பற்றாக்குறையின் விதாச்சாரத்தின் அடிப்படையில் மின்சக்தியைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒப்புக்கொண்டாலன்றி மின்சக்தி உபரியாக உள்ள மாநிலங்கள், அவற்றிற்கு மின்சாரம் தேவைப்படாவிட்டாலும், மேற்கொண்டும் ஒதுக்கீடு பெறும் ஆதலால், வட்டார அடிப்படையில் திட்டமிடும் கோட்பாடு முழுவதும் பகுத்தறிவிற்கு ஒவ்வாதது. மின்சக்தி பற்றாக்குறை மாநிலங்கள் அப்பற்றாக் குறையில் ஓரளவு ஈடுசெய்யப்படாத நிலையிலேயே தொடர்ந்து இருக்கும். பற்றாக்குறை மாநிலம், மின்சக்தி உபரியாக உள்ள அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்க வேண்டிய நிலையில் உள்ளது. பெரும்பகுதி மின்சாரம் அண்டை மாநிலங்களிலிருந்தல்லாமல் மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் நிலையங்களிலிருந்து வாங்கப்படுமாறு உறுதி செய்வது பொருத்தமாகும்.

6. தற்போதுள்ள மின்சக்தி பற்றாக்குறை நிலைமையில், தற்போதுள்ள அனல் மின்நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி அளவை அதிகரிப்பதே முதல் தடவையாகும். எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி அனல் மின்நிலையங்களின் மின்சக்தி உற்பத்தி அளவை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நான் சுருக்கமாகத் தற்போது விளக்குகிறேன்.

7. 1969-70-ல் எண்ணூர் அனல் மின்நிலையத்தின் முதல் பிரிவு தொடங்கப் பட்ட நாளிலிருந்து அந்நிலையம் கடுமையான தொழில் நுட்பச் சிக்கல்களை எதிர்நோக்கி வந்துள்ளது. இந்த நிலையத்திலிருந்து சராசரி 5,359 KWHR/ K.W. மின்சக்தி கிடைக்குமென்று மத்திய மின்சக்தி மன்றம் எதிர் பார்த்தது. ஆனால், 3,600 KWHR|KW மின்சக்திதான். கிடைத்தது. நாடு முழுவதும் 120/110 மெகாவாட் திறனுள்ள மின்நிலையங்களின் உற்பத்தித் திறன் மனநிறைவு அளிப்பதாக இல்லை. மத்திய மின்சக்தி மன்றம் செய்த பகுப்பாய்வின்படி, நாட்டிலுள்ள 120/110 மெகாவாட் திறனுள்ள மின்நிலை யங்கள் சுமார் 24; அவை உற்பத்தி செய்த மின்சக்தியின் அளவு 3,30. KWHR|KW மட்டுமே.

என்னூர் அனல் மின்நிலையத்தில் அடிக்கடி ஏற்பட்ட உற்பத்திக் குறைவுகளைக் குறித்த விரிவான ஆய்விலிருந்து நிலையச் சாதனங்களின் பொறியியல், வடிவமைப்புக் குறைபாடுகளின் காரணத்தாலேயே அங்கு மின் உற்பத்திக் குறைவு ஏற்படுகிறது எனத் தெரிய வந்தது. உண்மையில், 110 மெ.வா. யூனிட் மின் உற்பத்தித் திறனை 85 மெ.வா. யூனிட் மின் உற்பத்தியாகக் குறைப்பதென ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால் 110 மெ.வா. யூனிட் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை வழங்கிய செக்கோசுலோவாகிய நாட்டைச் சேர்ந்த ஸ்கோடாவிலுள்ள நிறுவனத்தின் வல்லுநர் குழுவை 1980-ம் ஆண்டு ஆகஸ்ட்/செப்டம்பர் திங்களில் என்னூர் அனல் மின் நிலையத்தைப் பார்வையிட்டு இயந்திரங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்ய ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. செக்கோசுலோவாகிய வல்லுநர் குழு அளித்த பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு, இயந்திரங்களை மேம்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் உதிரி, மாற்றுப் பாகங்களை உற்பத்தி செய்து வழங்குமாறு 'பெல்' ( (BHEL) நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இம்மேம்பாட்டுப் பணிகளைப் படிப்படியாக சுமார் ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

8. தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள 210 மெ.வா. உற்பத்தித்திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தின் முதல் பிரிவு 1979 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் மின் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிலையத்திற்குப் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. 'பெல் (BHEL) நிறுவனம் தயாரித்து வழங்கிய 210 மெ.வா மின் உற்பத்தித் திறன் கொண்ட 13 பிரிவுகள் நாட்டின் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. தற்போது இந்தப் பிரிவுகளில் பலவற்றிலும் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. பிரச்சினைகளில் சில பொதுவானவையாகும். இப்பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியும் அவற்றிற்குத் தீர்வுகாணும் பொருட்டும் மின்சார வாரியம் "பெல்" (BHEL) நிறுவனத்தை அணுகியுள்ளது. முதல் பிரிவு, 1980 ஆம் ஆண்டு சூன் திங்கள் வரை எரி எண்ணெயின் துணை கொண்டு இயங்கி வந்தது. பின்னர், 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதி முதல் நிலக்கரியை எரி பொருளாகக் கொண்டு இயங்கி வருகிறது. நிலக்கரியின் துணையுடன் மீண்டும் இயங்கத் தொடங்கிய இப்பிரிவு, பொதுவாக மனநிறைவளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. 1980 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் 72 மில்லியன் யூனிட்டுகளையும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் 77 மில்லியன் யூனிட்டுகளையும் இப்பிரிவு உற்பத்தி செய்தது. இது இப்பிரிவின் உற்பத்தித்திறனில் 1980 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் உற்பத்தியளவு 47.6 சதவீதமும், 1980





ஆம் ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் உற்பத்தியளவு 49.3 சதவீதமும் ஆகும். இப்பிரிவு வழங்கும் மின்சக்தியின் சராசரியளவு 200 மெ.வாட்டும் தினசரி உற்பத்தியளவு 4 மில்லியன் யூனிட்டுகளும் ஆகும். தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள 210 மெ.வா. உற்பத்தித்திறன் கொண்ட பிரிவின் இரண்டாவது பிரிவு 1980 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் இயக்கி வைக்கப்படவிருந்தது. சோதனை ஓட்டத்தின்போது, தரை இணைப்பில் தவறு நிகழ்ந்ததன் காரணமாகச் சுழற் பொறியில் பழுது ஏற்பட்டது. எனவே, இச்சுழற் பொறிக்குப் பதிலாக, கைவசம் இருந்த மூன்றாம் பிரிவின் சுழற்பொறி பொருத்தப்பட்டு இப்பிரிவில் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் மின் உற்பத்தி தொடங்கியது. இப்பிரிவு, உச்ச அளவாக 120 மெ.வா. மின் சக்தி உற்பத்தி செய்தது. அதனுடைய கணிப்பீட்டு அளவு உற்பத்தித் திறனை விரைவில் எய்தும். 3 ஆம் பிரிவை 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கும் வகையில் அப்பிரிவின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தின் சுரங்கப் பணிக் கருவிகளில் அடிக்கடி பழுதேற்பட்டதாலும், வடகிழக்குப் பருவமழை காரணமாகச் சுரங்கத்தில் வெள்ளப் பெருக்கேற்பட்டதாலும், 1979 ஆம் ஆண்டு நெய்வேலி அனல் மின்திட்டம் பெருமளவு பாதிக்கப்பட்டு அதன் உற்பத்தியளவு மிகக் குறைந்தது. அங்கு, ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தியாகுமெனக் கணிக்கப்பட்டிருக்க, 1979-80 ஆம் ஆண்டில் கிடைத்த உற்பத்தியளவு 2.89 மில்லியன் மட்டுமே. புதிய சுரங்கப்பணிக் கருவிகளை நிறுவியதையடுத்தது, 1980 ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து மின் உற்பத்தி நிலைமை சீரடைந்தது. 1973-74 ஆம் ஆண்டில் நெய்வேலி அனல் மின் நிலையத்தில் முழுஅளவு உற்பத்தித்திறனை நிலை நிறுத்துவதற்கு அப்போது கிடைத்து வந்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியளவு போதுமானதாக இராததால் அங்கு இருந்த 50 மெ.வா யூனிட் உற்பத்திப் பிரிவுகள் இரண்டு, எரி எண்ணெயின் துணையுடன் இயங்கி மின் உற்பத்தி செய்யும் வகையில் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டன. தற்போது பழுப்பு நிலக்கரி உற்பத்தி நிலைமை சீரடையுமென்று எதிர் பார்க்கப்படுவதால், அவ்வாறு மாற்றப்பட்ட எண்ணெயால் இயங்கும் மின் உற்பத்திப் பிரிவு ஒன்றை மீண்டும் பழுப்பு நிலக்கரி எரிதிறனால் இயங்குகின்ற மின்உற்பத்திப் பிரிவாக மாற்றுவதற்குரிய பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்து, இந்த ஆண்டில் பாசனக் காலத்தின்போது எரியெண்ணெயால் இயங்கும் இன்னொரு மின் உற்பத்திப் பிரிவும் பழுப்புநிலக்கரி எரிதிறனால் இயங்கும் பிரிவாக மாற்றப்படும்.

10. கல்பாக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள அணு மின் நிலையம் 1973-74-ம் ஆண்டிலேயே மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் அங்கு இன்னும் மின் உற்பத்தித் தொடங்கவில்லை. அண்மையில் நமது முதலமைச்சர்

அவர்கள் இந்தியத் தலைமையமைச்சரை நேரில் கண்டு, இந்த நிலையத்தில் மின் உற்பத்தியை விரைவில் தொடங்க வேண்டிய இன்றியமையாமை பற்றி விளக்கியுரைத்துள்ளார். தமிழ் நாட்டில் மின் உற்பத்திக்குரிய இயற்கை வளங்கள் மிகக் குறைவாக உள்ளபடியால் தமிழ்நாட்டில் ஒவ்வொன்றும் 235 மெ.வா. உற்பத்தித் திறனுள்ள மேலும் இரண்டு அணு மின் உற்பத்திப் பிரிவுகள், அமைக்கப்பட வேண்டுமெனவும் இவற்றில் ஒன்று கல்பாக்கத்திலும், மற்றொன்று திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்திலும் அமைக்கப்பட வேண்டுமென்றும் தமிழக முதல்வர் விளக்கியுள்ளார்.

11. 1979-ம் ஆண்டில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழை நன்றாகப் பெய்தது. அதன் விளைவாகப் புனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 5,533 மில்லியன் யூனிட்டுகள் மின் சக்தி உற்பத்தி செய்ய முடிந்தது. இது முன்னர் கண்டிராத சாதனையாகும். ஆனால், 1980-ம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை வழக்கமான அளவு பெய்த போதிலும், வட கிழக்குப் பருவமழை பொய்த்தது.

மேட்டூர் நீங்கலாக, எல்லாத் நீர்த் தேக்கங்களிலும் 23—1—1981 அன்று 862 மில்லியன் யூனிட் தண்ணீர் மட்டுமே இருந்தது. ஆனால் இவற்றின் முழு கொள்ளளவு 2,215 மில்லியன் யூனிட் ஆகும். 23—1—1980 அன்று அவற்றில் 1,300 மில்லியன் யூனிட் நீர் இருந்தது. மேட்டூர் அணையில் இக்காலத்தில் இருந்த நீரின் அளவை கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது மிகக் குறைந்த அளவாகும். ஆனால், இதன் முழு கொள்ளளவு 210 மில்லியன் யூனிட் ஆகும். 23—1—1980 அன்று 136 மில்லியன் யூனிட்டும் 23—1—1981 அன்று 22 மில்லியன் யூனிட்டும் இருந்தது. கேரள மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வழங்கப்பட்ட மின்சக்தியின் அளவு 1979-80 ஆம் ஆண்டிலிருந்து குறைந்து கொண்டே வந்துள்ளது. ஏனெனில் கேரள மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி மின்சக்தியை கர்நாடகமும் தமிழ்நாடும் பகிர்ந்து வருகின்றன. ஆனால், முந்தைய ஆண்டுகளில் உபரி மின்சக்தி முழுவதையும் தமிழ்நாடே எடுத்துக் கொண்டது. கேரளாவிடமிருந்து பெறப்படும் மின் சக்தி குறைந்ததன் காரணமாக, தமிழ்நாட்டில் பற்றாக்குறை நிலைமை மேலும் மோசமடைந்தது. கிடைக்கும் அளவுக்கும் தேவைப்படும் அளவுக்கும் இடையே உள்ள பற்றாக்குறை அளவைச் சரிக்கட்ட, 75 பரிதிறனுக்கு மேல் மின் இணைப்பு வழங்கப்பட்ட குறைவழுத்த தொழில்கள் அனைத்திற்கும், உயரழுத்த தொழில்களுக்கும் 30 சதவீதத் தேவை குறைப்பும் 30 சதவீத மின்வெட்டும் 1—12—1980 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் பகல் நேரத்தில் 6 மணி நேரமும் இரவு நேரத்தில் 8 மணி நேரமும் தற்போது மின் சக்தி வழங்கப்பட்டு வருகிற உயரழுத்த, குறைவழுத்தத்





தொழில்களுக்கு மின்வெட்டினின்று விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவற்றுக்கு வழங்கப்படும் மின்சக்தி குறைக்கப்பட்டதன் காரணமாக அவை ஏற்கனவே ஓரளவு மின்வெட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

12. இம்மாநிலத்தில் சுமார் 9 இலட்சம் விசையேற்றங்கள் உள்ளன. இவற்றுக்கு அளிக்கப்பட்ட மொத்த மின் இணைப்பின் அளவு சுமார் 3,000 மெகாவாட் ஆகும். ஒரே நேரத்தில் இவற்றில் பாதி விசை யேற்றங்கள் செயல்பட்டாலும். இவற்றுக்கு மட்டும் தேவைப்படும் மின் சக்தியின் அளவு 1,500 மெகா வாட் ஆகும். இந்த அளவு திறன் கிடைக் காது. எனவே கிராமப் பகுதிகளில் விசையேற்றங்களைத் தொகுதிகளாகப் பிரித்து அவற்றுக்கு மின்சக்தி முறை அடிப்படையில் வழங்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள 18 புனல் மின் நிலையங்களில் 9 நிலையங்கள் பாசனத் துடன் இணைக்கப்பட்டவை. கோடை நாட்களில் பெரும்பாலான மின் நிலையங்கள் மூடிவிடப் படுகின்றன. இதனால் புனல் மின்சக்தி உற்பத்தியும் குறைந்துவிடுகிறது. வேளாண்மைக்கு மின் சக்தி அதிகமாக தேவைப் படும் கோடை காலத்தில் 1,369 மெகாவாட் புனல் மின் சக்தியில் ஏறத்தாழ பாதி அளவு கிடைப்பதில்லை.

13. இன்றைய தமிழ்நாடு மின் இணைப்பு மொத்தம் 1,369 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 18 புனல் மின் நிலையங்களையும், 600 மெகா வாட் திறன் கொண்ட நெய்வேலி அனல் மின் நிலையம் உட்பட 1,560 மெகா வாட் திறனுடன் கூடிய 4 அனல் மின் நிலையங்களையும் தூத்துக்குடியில் உள்ள 210 மெகா வாட் திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவுகளையும் கொண்ட தாகும். மொத்த நிறுவு திறன் 2,929 மெகா வாட் ஆகும். 1978—79-ல் இருந்ததைவிட இது 420 மெகா வாட் அதிகமாகும். ஆனால், அதில் 630 மெகா வாட் பருவ மழையின் போது கிடைப்பவையாகும். நிலக்கரியின் விலை ஆண்டுக்காண்டு உயர்ந்துகொண்டே வருவதால், அனல் மின் நிலையங் களில் ஒரு யூனிட் மின் சக்தித் தயாரிப்பதற்குத் தேவைப்படும் நிலக்கரியின் விலையைக் காட்டிலும் புனல் மின் நிலையங்கள் சிலவற்றில் மின் சக்தி தயாரிப்பதற்காகும் செலவு குறைவாக இருப்பதால், மழை காலத்தில் செயல் படும் புனல் மின் திட்டங்களையும் மேம்படுத்துவது அரசின் கொள்கையாக உள்ளது.

14. 1979—80-ல் உயரளவு தேவை 1,710 மெகாவாட் ஆகும். தமிழ் நாட்டில் மின் அமைப்பின் உயரளவுத் தேவை, தென் மண்டலத்தில் மொத்தத் தேவையில் 40 சதவீதமாகும்; அனைத்திந்திய அளவில் அது 11 சதவீத மாகும். 1979—80-ல் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியும். வாங்கிய மின் சக்தியும் 10,414 மில்லியன் யூனிட் ஆகும். இது தென் மண்டல உற்பத்தியில்

சுமார் 38 சதவீதமாகும் ; அனைத்திந்திய அளவில் 9.8 சதவீதமாகும். மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு, நாட்டில் மூன்றாவது நிலையில் உள்ளது.

15. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு 38.35 இலட்சம் பேர் மின்சக்தி பயன்படுத்தினர். அவர்களில் 20.32 இலட்சம் பேர் வீட்டுக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவோர், 5.43 இலட்சம் பேர் வணிகக் காரியங்களுக்காகப் பயன்படுத்துவோர், 8.87 இலட்சம் பேர் வேளாண்மைக்காகப் பயன்படுத்துவோர், 1.42 இலட்சம் பேர் தொழில்களுக்கு பயன்படுத்துவோர், ஏனையோர் பல்வகை காரியங்களுக்குப் பயன் படுத்துவோர் ஆகும். விற்பனை செய்யப்படும் மின்சக்தியில் 48 சதவீதம் தொழில் துறையாலும், 27 சதவீதம் வேளாண்மைத் துறையாலும் 9 சதவீதம் வீட்டுப் பயனீட்டாளர்களாலும் எஞ்சியது ஏனைய வகையினராலும் பயன்படுத்தப்படுகிறது. மொத்த மின்சக்தி விற்பனையில் சுமார் 39 சதவீதம் உயரழுத்த மின்சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகளாலும் சுமார் 9 சதவீதம் குறைவழுத்த மின் சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகளாலும் பயன்படுத்தப்படுகிறது.

16. தமிழ்நாடு மின் இணைப்பு இந்தியாவிலேயே பரந்த அளவில் அமைந்த 3.2 இலட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள கூடுதல் உயரழுத்த, உயரழுத்த, குறைவழுத்த மின் கம்பித் தொடர்களையுடைய மிகப் பெரிய அமைப்பாகும். 355 கூடுதல் உயரழுத்த/உயரழுத்த துணை மின் நிலையங்களும், 48,595 மின் பகிர்ந்தளிப்பு மின் அழுத்த மாற்றிகளும் உள்ளன. மொத்தம் 64,012 கிராமங்கள், சிற்றூர்களில் 63,462 கிராமங்கள், சிற் ர்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. அரிசன குடியிருப்புகள் அனைத்திற்கும் (25,683) மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

17. சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு மின் வசதி செய்து கொடுப்பதற்காக, இவ்வரசு கடந்த ஆண்டு, கிராமப்புறங்களில் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியது. ஓராண்டுக் குறுகிய காலத்திற்குள், 2.3 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட 189 ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களில் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களின் தொடர்ந்த வேண்டுகோளுக்கிணங்க, தெரு விளக்கு பராமரித்தலை மின் வாரியம் ஏற்று பராமரித்து வருகிறது.



18. இவ்வரசு, புதிய திட்டங்களுக்கான அனுமதி குறித்து வலியுறுத்தி வந்துள்ளது. இதன் விளைவாக, மேட்டூர் அணையில் காவிரி ஆற்றின் நீரோட்டத்தில், 120 மெகாவாட் மொத்த கொள்திறனுள்ள கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கும், 420 மெகாவாட் மொத்த கொள்திறனுள்ள மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கும் குந்தா மின் நிலையம் V இல் 20 மெகாவாட் கூடுதல் யூனிட்டுக்கும் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வனைத்துத் திட்டங்கள் குறித்த பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களையும், தூத்துக்குடி அனல் மின் திட்டமும் (630 மெ. வா.) தவிர, சேர்வலாறு புனல் மின் திட்டம் (20 மெ. வா.), காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் (400 மெ. வா.) ஆகியவை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் கீழே குறிப்பிட்ட கால அளவில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது :—

| | |
|---|---|
| தூத்துக்குடி III ஆம் யூனிட்டு | 1982 மார்ச். |
| சேர்வலாறு புனல் மின் திட்டம் | 1983—84 |
| காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் | 1983—84 |
| கீழ் மேட்டூர் | 1983—84 |
| மேட்டூர் அனல் மின் திட்டம் | 1984—85 |
| குந்தா மின் நிலையம் V -இல் கூடுதல் யூனிட் | 1984—85 |

தற்போதுள்ள அனல் மின் நிலையங்களின் நிறுவு திறன் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் அளவுக்கும், உண்மையில் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்திக்குமிடையே தற்போது பெரும் வேறுபாடு உள்ளது. உள் நாட்டு இயந்திரங்களின் செயல்திறன் எந்தவொரு நிலையத்திலும் 45 சதவிதத்திற்கு மேல் இல்லை. இச் சூழலில், தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் புதிய திட்டங்களிலாவது சிறந்த இயந்திரங்களை அதிக அளவில் நிறுவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தாமலிருக்க இயலாது. மின் சக்திப் பற்றாக்குறையினால் தற்போது சில இன்றியமையாப் பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மின் உற்பத்தி இயந்திரங்கள், போன்ற அடிப்படைச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணியைப் பயன்படுத்துவதே சிறந்த வழியாகும். இதற்கிணங்க, மேட்டூர் அனல் மின் திட்டத்திற்குத் தேவைப்படும் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கும்படி இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

19. மத்திய அரசின் அனுமதி கிடைப்பதை எதிர்பார்த்து (I ) சண்முகா நதி புனல் மின் திட்டம் (30 மெ. வா.), (II மேல் அமராவதி புனல் மின் திட்டம் (30 மெ. வா.) குறித்த தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்

பட்டுள்ளன. தொழில் நுட்ப—பொருளாதார காரணங்களினால் இத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பினும், இத்திட்டங்களுக்கான அனுமதி, காவிரி நீர்ப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான நீர்கோள் பகுதி முழுவதும் தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைந்திருப்பதைக் குறிப்பிட்டு, உடனடி அனுமதி வழங்க அரசு வலியுறுத்தியுள்ளது.

20. கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு அடுத்த ஆண்டில் மின் உற்பத்தியை தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணிகளும் 630 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அனல்மின் நிலையத்தை நிறுவும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. கல்பாக்கத்தில் 235 மெகா வாட் திறன் கொண்ட இரு பிரிவுகளைக் கூடுதலாக ஏற்படுத்தவேண்டும் எனவும், 210 மெகா வாட் திறன்கொண்ட இரு பிரிவுகளைக் கூடுதலாக ஏற்படுத்துவதன் மூலம் நெய்வேலியில் இரண்டாம் அனல்மின் நிலையத்தின் திறனை 630 மெகா வாட்டிலிருந்து 1,050 மெகாவாட்டுக்கு உயர்த்தவேண்டுமெனவும், திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் இரண்டாம் அணுமின் நிலையம் நிறுவல் வேண்டும் எனவும் மாநில அரசு கருத்து தெரிவித்துள்ளது.

21. 1980-85 ஆம் ஆண்டுக்குரிய ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்குரிய மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் தவிர, மேலும் சில திட்டங்களையும் மின்வாரியம் சேர்க்கக் கருதியுள்ளது. அத்திட்டங்கள் வருமாறு :—

| | மெ. வா. |
|---|---|
| (I) வட சென்னை அனல் மின் நிலையம் | 630 |
| (II) பேசின் பாலத்தில் தற்போதுள்ள மின் உற்பத்தி பிரிவுகளை மாற்றியமைத்தல். | 110 |
| (III) பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் | 30 |
| (IV) சோழத்தி புழா புனல் மின் திட்டம் | 60 |
| (V) பாண்டியாறு-புன்னம்புழா புனல் மின் திட்டம் திட்டம் | 150 |
| (V ) நெல்லித்துறை புனல் மின் திட்டம் | 50 |
| (VII) ஒகேனக்கல் புனல் மின் திட்டம் | 250 |
| (VIII) நீராறு நல்லாறு புனல் மின் திட்டம் | 155 |
| (IX) நுண் நீர் மின் திட்டம் (பைக்காரா, கீழ் பவானி, வைகை அணை) | 16 |





மேற்கூறிய திட்டங்களில், ஒகேனக்கல், பாண்டியாறு-புன்னம்புழா, சோழத்தி புழா ஆகிய திட்டங்கள் மாநிலங்களுக்கிடையிலான திட்டங்களாகும். அவற்றுக்கு கருநாடக அல்லது கேரள மாநிலத்தின் இசைவைப் பெற வேண்டியுள்ளது. ஒகேனக்கல் திட்டம் பற்றி 1963 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆய்வு நடைபெற்று வருகின்றது. கேரள அரசுடன் ஓர் உடன்பாடு ஏற்பட்டபோதிலும், பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம் 1965 முதற்கொண்டு செயலாக்கப் படாமலுள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட உழவர்கள், பாண்டியாறு-புன்னம்புழா நீரைக் கிழக்காகத் திருப்பிவிடும்படிக் கோரிய போது, அவ்வாறு திருப்பிட கேரள அரசு விரும்பவில்லை. சோழத்திப்புழா புனல் மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கலாமெனில், இது பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, விரைவில் உடன்படிக்கை செய்துகொள்வதில் கண்ணும் கருத்துமாய் உள்ளது ; விரைவில் உடன்பாடு ஏற்படின், மேலும் காலவிரயமின்றி இத்திட்டங்கள் அனைத்தையும் விரைவில் செயல்படுத்த இயலும். இதுபற்றி கேரள மாநில முதலமைச்சருடன் கலந்தாலோசிக்கும் பொருட்டுத் தமிழ்நாடு மாநில முதலமைச்சர் விரைவில் திருவனந்தபுரம் செல்லவிருக்கிறார்.

22. நான் முன்னர் குறிப்பிட்டவாறு, மின் சக்தி உற்பத்திக்கு தேவைப்படும் இயற்கைவள வாயில்கள் நம்நாட்டில் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன. ஆகவே, மின் சக்தியை வேறுவழியில் பெறுவதற்கு, உடனடியாக ஆவன செய்யவேண்டியது அவசியமாகும். கடலில் 3,000 அடி ஆழத்திலுள்ள குளிர்ச்சியான நீருக்கும், மேல்பரப்பிலுள்ள வெப்பமான நீருக்கும் இடையே காணப்படும் வெப்ப வேறுபாட்டை பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்ய இயலுமென்று முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இம்முறையில் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் பரந்துபட்டதும், இயற்கைவளம் மிக்கதுமான கடற் பரப்பு தமிழ்நாட்டில் உள்ளது. தமிழ்நாட்டின் கடற்பகுதியில், 25 மெகாவாட் திறன்கொண்ட, கடலிலிருந்து அனல் மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை (OTEC) நிறுவும் பொருட்டு நுணுக்க ஆய்வு நடத்துவதற்காக மின்வாரியம், மத்திய அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது. இத் திட்டத்திற்கான செலவு மொத்தத்தையும் மத்திய அரசின் திட்ட வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

23. 1970-80 கால அளவில் தொடக்க ஆண்டுகளில் கிராமப்பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆயின் மின்சக்தி கொண்டு செல்லும் திட்டத்திற்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம்

[1981 பிப்ரவரி 26

கொடுக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மின் கம்பித் தொடரில் ஏற்பட்ட மின் இழப்பு 1970-71 ஆம் ஆண்டில் 17.20 சதவீதமாக இருந்தது. 1974-75 ஆம் ஆண்டில் 21.45 சதவீதமாக அதிகரித்தது. அதுமுதற்கொண்டு, இதனைச் சரிப் படுத்தும் பொருட்டு, மின்சக்தியைக் கொண்டு செல்லுதல்-வழங்குதல் திட்டம் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டு 16 புதிய துணைமின் நிலையங்களும் 334 கி.மீ. தொலைவிற்கு கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர்களும் அமைக்கப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டில், 35 புதிய துணை மின் நிலையங்களும், 1,200 கி.மீ. தொலைவிற்கு கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர்களும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. மேலும் குறைந்த அளவு வோல்டேஜ் கொண்ட திருவலத்திலும், சேலத்திலும் 25 (MVAR) திறன் கொண்ட ஒரே காலத்தில் இயங்கத்தக்க இரு கன்டன்சர்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மின் சக்தியைக் கொண்டு செல்வதற்கு 1980-85 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில், 126 புதிய துணை மின் நிலையங்களையும், 4,500 கி.மீ. தொலைவிற்கு கூடுதல் உயரழுத்த மின் கம்பித் தொடர்களையும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. மின் கம்பித் தொடரில் ஏற்படும் இழப்பு படிப்படியாக 16.57 சதவீதமாகக் குறைக்கப்படுள்ளது.

24. புதிய திட்டங்களைச் செயலாக்குவதிலும், மின் சக்தியைக் கொண்டு செல்லுதல், வழங்குதல் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மூலப்பொருள்கள் கிடைக்காததே புதிய திட்டங்களைச் செயலாக்குவதற்கு முக்கியத் தடையாக உள்ளது.

சிமிட்டியும் உருக்கும் நாடு முழுவதிலும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றன. அலுமினியம் குறைவாகக் கிடைப்பதால், மின் கடத்திகளையும் புதைமின் கம்பிகளையும் வழங்குவதில் பாதிப்பு ஏற்படுகிறது. மின் இணைப்புக் கொடுப்பதற்குத் தேவையான குறிப்பிட்ட சில அத்தியாவசிய மின் கம்பித் தொடர் சாதனங்களும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றன. எல்லா மாநிலங்களும் மின் வளர்ச்சித் திட்டங்களைப் பெரும் அளவில் தொடங்கியதால், மின் சாதனங்கள் வழங்குவோரிடம் தேவைக் குறிப்புகள் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றன; இதன் விளைவாக தரமான சாதனங்களைக் குறிப்பிட்டகால அளவுக்குள் வழங்க இயலவில்லை. நாட்டில் குறைவாக கிடைக்கப்பெறும் அவசியமான நுணுக்கமிருந்த இடு பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



1981 பிப்ரவரி 26]

25. மின்சக்தி குறித்த திட்டச் செலவு, படிப்படியாக 1974—75 ஆம் ஆண்டில் 36.27 கோடி ரூபாயிலிருந்து 1980-81 ஆம் ஆண்டில் 176 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அதன் விவரங்கள் வருமாறு :—

(ரூபாய் கோடியில்.)

| இனம். | 1974—75 (கணக்குகள்). | 1978—79 (கணக்குகள்.) | 1979—80 (கணக்குகள்). | 1980—81 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மின் உற்பத்தி | 13.61 | 70.03 | 79.78 | 83·75 |
| மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்—வழங்குதல் | 13.15 | 32.96 | 51.01 | 70.00 |
| கிராமப்பகுதி மின் இணைப்புத் திட்டங்கள். | 9.35 | 18.00 | 26.30 | 21.50 |
| ஏனையவை | 0·16 | 2.53 | 1.58 | 0.40 |
| மொத்தம் .. | 36.27 | 123.52 | 158.67 | 175.65 |

1980—81 ஆம் ஆண்டில் மூலதனச் செலவு 176 கோடி ரூபாய்; அரசிடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 75 கோடி ரூபாய் வெளி அங்காடியிலிருந்து கிடைக்கும் கடன் தொகையான 26.55 கோடி ரூபாய், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 8.47 கோடி ரூபாய், கிராமப்புற மின் இனைப்புக் கழகத்திடமிருந்து கிடைக்கும் கடன் தொகையான 2.93 கோடி ரூபாய் ஆகியவற்றைக் கொண்டும். எஞ்சியுள்ள தொகையை வாரியத்தின் உள்நிதி வாயில்களிலிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் பெறுவதன் மூலமும் சரிகட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

26. மின்சார வாரியத்திற்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ. 24.56 கோடி ஆகும். 1980—81 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்

எதிர்பார்க்கப்படும் இழப்புத் தொகை ரூ. 64.77 கோடி ஆகும். அண்மைக்கால மதிப்பீட்டின்படி, எதிர்பார்க்கப்படுகின்ற இழப்பு ரூ. 105.37 கோடி ஆகும். மின் உற்பத்தி, மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல்—வழங்குதல் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிக செலவு, மின்சாரத்தைப் பயன்படுத்தும் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு சலுகை விகிதங்களில் மின்சாரம் வழங்குதல், கேரளம், நெய்வேலி ஆகியவற்றிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதில் ஏற்பட்ட அதிக செலவு, எண்ணூர் அனல் மின் நிலையத்திடமிருந்து குறைந்தளவே மின்சக்தி கிடைப்பது போன்றவை இந்த இழப்பிற்கு முக்கிய காரணங்களாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், நிலக்கரி விலை டன் ஒன்றுக்கு (சிங்கரேணி) ரூ. 82 லிருந்து ரூ. 114 ஆகவும் (இந்திய நிலக்கரி) ரூ 128 ஆகவும் எரி எண்ணெய் விலை கிலோ லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1,017 லிருந்து ரூ. 1,364 ஆகவும் (அண்மையில் இது கி. லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2,430 ஆக மேலும் உயர்ந்துள்ளது) கடல்வழியே நிலக்கரியைக் கொண்டு வருவதற்கான கட்டணம் டன் ஒன்றுக்கு ரூ. 99 லிருந்து ரூ. 169 ஆக உயர்ந்துள்ளது; இரயில்வே கட்டணம், 1—4—1979 லிருந்து 10 சதவீதமும், 15—7—1980 லிருந்து மேலும் 15 சதவீதமும் உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்புச் செலவுகளினால் 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 57 கோடி வருவாய்க் கணக்கில் கூடுதலாக செலவாகும்.

1979—80 ஆம் ஆண்டில் சலுகை விகிதங்களில் மின்சாரம் வழங்குவதால் ஏற்படுகின்ற இழப்பு, ரூ. 88.70 கோடி என மதிப்பிடப்படுகிறது. இதில் வேளாண்மைப் பிரிவினருக்கு சலுகை விதக் கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுவதால் ஏற்படும் இழப்பு ரூ. 71.22 கோடி ஆகும். 1977—78 ஆம் ஆண்டில் கேரள அரசு வழங்கிய மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு ரூ. 12.5 காசாக இருந்தது; அது இப்போது யூனிட் ஒன்றுக்கு 28 காசாக உள்ளது. நெய்வேலியில் எண்ணெய் மூலம் எரியூட்டப் பட்டு உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 42 காசு என இருந்தது; இப்போது யூனிட் ஒன்றுக்கு 77.87 காசாகவும் (ஆயத்தீர்வை உட்பட சுமார் 92 காசு 1 யூனிட்), பழுப்பு நிலக்கரி மூலம் எரியூட்டப்பட்டு உற்பத்தி செய்ப்படும் மின் சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 14.37 காசு ஆக இருந்து இப்போது யூனிட் ஒன்றுக்கு 19.05 காசாக அதிகரித்துள்ளது. 1980—81 ஆம் ஆண்டில் ஏற்படக்கூடிய கூடுதல் செலவு ரூ. 19.00 கோடி என மதிப்பிடப்படுகிறது; இதில், கேரளத்திடமிருந்து வாங்கும் மின்சாரத்திற்கான கூடுதல் செலவு ரூ. 5 கோடி ஆகும்.

27. மின் கட்டணம் 1974 அக்டோபரில் கடைசியாகப் பொதுவாகத் திருத்தியமைக்கப்பட்டது. அப்போதிலிருந்து, மின் கட்டணம் அவ்வப்போது தற்காலிகமாக உயர்த்தப்பட்டு வந்துள்ளது; அதன் விளைவாக ஆண்டொன்றுக்கு ரூ. 50.77 கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது என்றாலும், வேளாண்மைத் துறைக்குச் சலுகைகள் வழங்கிய காரணத்தால், இக் காலவளவில், வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11.60 கோடி குறைந்தது. 1977-78 ஆம் ஆண்டில் யூனிட் ஒன்றுக்கு 26.5 காசாக இருந்த ஒட்டு மொத்த வசூல் வீதம் 1979-80-ல் 15 சதவீதம் உயர்ந்து யூனிட் ஒன்றுக்கு 30.5 காசு ஆகியது. அதே கால அளவில், மின்சார உற்பத்தி, அனுப்புகை பங்கீடு ஆகியவற்றுக்கான இடு பொருட்கள், செலவும் 28 சதவீதம் உயர்ந்தது. மின் கட்டண அமைப்பைச் சீரமைத்து விரிவான முறையில் திருத்தியமைப்பதற்கான பரிவுரைகளைச் செய்ய வேண்டி, அரசு 1980 ஆம் ஆண்டு சூலை திங்களில் மின் கட்டண ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தது.



28. வருவாய் பாக்கியை வசூலிக்க மின்சார வாரியத்திற்கு மிகவும் கடினமாக உள்ளது. 31—3—1980 ஆம் ஆண்டு நிலவரப்படி ரூ. 44.07 கோடி நிலுவையாக இருந்தது. உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களிடம் ரூ. 15.41 கோடி நிலுவையாக உள்ளது. இத்தொகையில் 'மால்கோ' நிறுவனம் ரூ. 9.43 கோடியும் பிற மாநிலங்கள் ரூ. 2.98 கோடியும். அரசு நிறுவனங்களும் உள்ளாட்சி மன்றங்களும் ரூ. 0.96 கோடியும், தேசிய நூணி ஆலை கழகத்தினால் (என்.டி.சி.) எடுத்துக்கொள்ளப்பட்ட நலிவுற்ற ஆலைகள் ரூ. 0.37 கோடியும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் ரூ. 1.00 கோடியும் செலுத்த வேண்டியுள்ளது. 'மால்கோ' நிறுவனத்திடமிருந்து பாக்கித் தொகையை வசூலிக்கும் விவகாரம் உயர்நீதி மன்றத்தில் முடிவடையாமல் உள்ளது. வேளாண்மைக் காரியங்கள் உட்பட, குறைவழுத்த மின் பயனீட்டாளர்களிடமிருந்து 31—3—1980 ஆம் நாள் நிலவரப்படி ரூ. 28.66 கோடி வசூலாகாமல் உள்ளது. இவ்வாறு பாக்கித் தொகை சேர்ந்து கொண்டே போவது மின்சார வாரியத்தின் நிதி நிலைமையைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

29. மின்சாரத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளில் ஒரு பிரிவினர் மின் கட்டணத்தைச் செலுத்தவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனால் 1977 ஆம் ஆண்டிலிருந்தே மின் கட்டணப் பாக்கி சேர்ந்து கொண்டே இருக்கிறது. இப்பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பதற்காக பல்வேறு விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் 1980 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களிலும், 1981 ஆம் ஆண்டு ஜனவரியிலும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. அப்பேச்சு வார்த்தைகளின் முடிவில், ஒரு மாத மின் கட்டணத்துடன் ஒரு மாத நிலுவைத் தொகையைச் சேர்த்துக் கட்டுவது என்ற வீதத்தில் விவசாயிகள் தங்களது மின் கட்டணப் பாக்கியைச் செலுத்த அனுமதிப்பது என முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவை, அநேகமாக எல்லா விவசாயிகள் சங்கங்களும் வரவேற்றன. நவம்பருக்குப் பிறகு இது

வரையில் ரூ. 10.38 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1980 நவம்பரில் ரூ. 37.60 கோடியாக இருந்த வசூல் பாக்கி, ரூ. 27.22 கோடியாகக் குறைந்துள்ளது. மின் கட்டணம் செலுத்தத் தவறிய வேளாண்மைப் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையும் 5.63 இலட்சத்திலிருந்து 1.66 இலட்சமாகக் குறைந்துள்ளது.

30. விவசாய மின் இணைப்புகளுக்கான மீட்டர் வாடகை ( (Meter Rent ) 1—7—1980 முதல் ரூ. 4-லிருந்து ரூ. 2 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இந்தச் சலுகையின் காரண மாக வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.

31. வாரியத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கும் இடையேயான உறவு மிகவும் இணக்கமானதாய் இருந்து வருகிறது. வாரியமும் பல்வேறு தொழிற் சங்கங்களும் கலந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி சம்பந்தப்பட்ட அனை வருக்கும் மனநிறைவு தருகின்ற வகையில் ஊதிய வீதங்களும் பணிச் சுமையும் உரியகாலத்தில் திருத்தியமைக்கப்பட்டன.

32. மின் தொழில் அதிக முதலீடு செய்ய வேண்டிய ஒரு தொழிலாகும். மின் உற்பத்தி, அனுப்புகை, பங்கீட்டு அமைப்புகளைப் பராமரித்து சீரமைக்க பெருமளவில் பணம் தேவைப்படுகிறது. சமீப காலத்தில் பொருள்கள், உதிரி பாகங்கள், துணைப்பாகங்கள் ஆகியவற்றின் விலை கணிசமாக உயர்ந் துள்ளது. பெரும்பாலான வழங்கு நிறுவனங்களால் குறிப்பிட்ட நேரங்களில் பொருள்களை வழங்க முடியவில்லை. இதனால், அனுப்புகை, பங்கீட்டு அமைப்புகளைத் திறமையாகப் பராமரிப்பது பாதிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக பல பகுதிகளில் மின் அழுத்த மாற்றிகளின் சுமைகள் அதிகரித் துள்ளன; வோல்ட்டேஜ் குறைந்து மின் வழங்கலில் குறுக்கீடுகள் ஏற்பட்டுள்ளன.

33. மின் சக்தியை அனுப்புவதையும், பங்கீடு செய்வதையும் உரியவாறு பராமரிப்பதற்கு பழைய சாதனங்கள், பழைய மின் கடத்திகள், மின் கம்பிகள் முதலியவற்றிற்குப் பதிலாக புதியனவற்றைப் போட வேண்டியுள்ளது. நிலையான இருப்புகளின் மதிப்பு மீது சுமார் 3 சதவீத அளவில் இப்போது வகை செய்துள்ள தேய்மானச் சேமநிதி, இச்செலவை ஏற்பதற்குத் தேவை யான பண வசதிகளை உருவாக்குவதற்கு போதுமானதாக இல்லை. தேய் மானச் சேம நிதிக்கான விதி முறை ( Formula ) 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் 68 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசினால் முறைப்படுத்தப்படுகிறது. மாநில அரசுக்கு தேய்மான விதிமுறையை நிர்ணயிக்க அதிகாரம் இல்லை. மாநில அரசு, இவ்விதிமுறையை மாற்றுவதன் அவசியத்தை மத்திய அரசுக்குத் தெரிவிக்க உத்தேசித்துள்ளது.



34. 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் மாநில அரசு, வாரியத்துக்கு அவசியமான கட்டளைகளை பிறப்பிக்க வேண்டிய துறைகள் வரையறுக்கப்பட்டதாகும். இது ஒரு மத்தியச் சட்டமாகும். இச்சட்டம் நாடாளுமன்றத்தின் மூலமாகத்தான் திருத்த இயலும். மின்சார வாரியம், மாநிலத்தில் முக்கியமான பொது பயன்பாட்டு நிறுவனமாதலால், அது உரிய வாறும், திறம்படவும் செயல்படுவதற்கு மாநில அரசும், சட்ட மன்றமும் பொறுப்பு வகிக்கையில் மக்களுக்குத் திருப்திகரமான முறையில் பணி புரிவதற்கு இயலும் வகையில் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கு நமக்கு சட்டப்படிக்கான அதிகாரங்கள் இல்லை. கடந்த ஆண்டில் புது டில்லியில் நடைபெற்ற மின் சக்தி அமைச்சர்கள் மாநாட்டில் இந்நிலைமையை நான் எடுத்துக் கூறினேன். இம்முக்கியமான பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவிக்க இயலும்.

35. தமிழ்நாடு மின் வாரியம், 1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் 1957 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மாநிலத்திற்குத் தேவையான மின் சக்தியை வழங்க ஏற்பாடு செய்வதும், மின் சக்தியைத் திறமையாகவும், சிக்கனமாகவும் அனுப்பி பங்கீடு செய்வதும் இதன் முக்கிய பணிகளாகும். மின்சக்தியின் தேவையும், பயனும், மின்சக்திப் பிரிவின் முக்கியத்துவம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், மின்வாரியம் பல்வேறு பொறுப்புகளும் சிக்கலான பிரச்சினைகளும் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மின்சக்தி அனுப்பும் முறையை வலுப்படுத்தவும், பங்கீட்டுப் பணியைச் சீரமைத்து நவீனப்படுத்தவும், பயனீட்டாளர்களுக்கு மின்சக்தியை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் வாரியத்தால் தனித்தனியாகப் போதுமான கவனம் செலுத்த இயலவில்லை. இவ்வரசு, அதிக மின் உற்பத்தி செய்வது குறித்து கணிசமான முக்கியத்துவம் அளித்துள்ளது. கூடுதலாக 1,400 மெகாவாட் உற்பத்தித்திறனுடன் மின்சக்தி உற்பத்திக்காக 1980-85 ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 1,022 கோடி முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, சமூகத்தில் வறிய பிரிவினருக்கும் மின் சக்தியை வழங்க அரசு ஆர்வம் கொண்டுள்ளது. தற்போதுள்ள நிறுவன அமைப்பு முப்பதாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு தற்போதுள்ள தேவையை ஈடு செய்வதற்குப் போதுமான அளவில் இல்லை. நிர்வாக வகையிலும், பணி வகையிலும் தனித்தனியாகக்கூடிய முறையில் இவ்வமைப்பு மீண்டும் மாற்றியமைக்கப்படவேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டிய அமைப்பின் நடைமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

36. மின்சார வாரியம் செயல்படுகின்ற விதத்தைச் சீரமைப்பதற்கான கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

## மின்வெட்டு குறித்த விவரங்கள்

| நாள். | வீட்டு உபயோகம். | உயரழுத்த மின்சாரம் தொழிற்சாலைகள். | உயரழுத்த மின்சாரம் (வணிகம்). | குறைவழுத்த மின்சாரம் (தொழிற் சாலைகள்). | குறைவழுத்த மின்சாரம் (வணிகம்). | முக்கிய மானவை. | உயரளவுதேவை மீதான மின் வெட்டு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | சதவீதம். | சதவீதம். | சதவீதம். | சதவீதம். | சதவீதம். | சதவீதம். | சதவீதம். |
| 17—6—1972 முதல் 13—7—1972 வரை .. | மின்வெட்டு இல்லை .. | தொடர்ச்சி 15 தொடர்ச்சியற்ற 25 | 25 | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இலலை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. |
| 14—7—1972 .. | மின்வெட்டு நீக்கப்பட்டது. | | (மின்வெட்டு நீக்கப்பட்டது) | | | | |
| 1—10—1972 முதல் 31—1—1973 வரை .. | 25சதவீதம்(திங்கள்ஒன்றுக்கு 1000 யூனிட்டுகளுக்கு மேல்). | தொடர்ச்சி 155 தொடர்ச்சியற்ற | 25 | 25 | 25 | மின்வெட்டு இல்லை. | (1971 செப்டம்பருக்கும் 1972 செப்டம்பருக்கு மிடையே மிக உயர்நிலை |
| 1—2—1973 முதல் 14—2—1973 வரை. .. | 25சதவீதம் (திங்கள் ஒன்றுக்கு 100 யூனிட்டுகளுக்குமேல்). | தொடர்ச்சி 25 தொடர்ச்சியற்ற 40 | 25 | 25 | 25 | மின்வெட்டு இல்லை. | ஷை |
| 15—2—1973 முதல் 18—6—1973 வரை. .. | 25 சதவீதம் (100 யூனிட்டு களுக்குமேல்; உச்சவரம்பு 150யூனிட்டுகள்). | தொடர்ச்சி 75 தொடர்ச்சியற்ற 75 | 50 | 75 | 25 | 15 | 30 |
| 19—6—1973 முதல் 7—7—1973 வரை. .. | 25 சதவீதம் | 50 | 50 | 50 | 25 | 10 | 30 |
| 8—7—1973 முதல் 16—7—1973 வரை. .. | 25 சதவீதம் | 25 | 25 | 25 | 25 | 20 | 30 |
| 17—7—1973 | மின்வெட்டு நீக்கப்பட்டது | .. | (மின்வெட்டு நீக்கப்பட்டது). | | | | |
| 1—10—1973 முதல் 31—3—1974 வரை. .. | மின்வெட்டு இல்லை (150 யூனிட்டுகளுக்கு மேல் இரு மடங்கு கட்டணம்). | 15 | 15 | 15 | 15 | 10 | 1—9—1971 லிருந்து மிக உயர்நிலை. |
| 1—4—1974 முதல் 7—5—1974 வரை. .. | ,, | 30 | 30 | 30 | 30 | 30 | 15 |
| 8—5—1974 முதல் 31—5—1974 வரை. .. | ,, | 60 | 60 | 60 | 60 | 15 | 15 |
| 1—6—1974 முதல் 4—8—1974 வரை. .. | ,, | 60 | 60 | 60 | 60 | 15 | 40 |
| 5—8—1974 முதல் 11—8—1974 வரை. .. | ,, | 40 | 40 | 40 | 40 | 15 | 15 |
| 12—8—1974 முதல் 26—8—1974 வரை. .. | ,, | 40 | 40 | 40 | 40 | 15 | 15 |
| 27—8—1974 | மின்வெட்டு நீக்கப்பட்டது. | | (மின்வெட்டு நீக்கப்பட்டது. | | | | |

| நாள் | மின் வெட்டு குறித்த விவரங்கள் வீட்டு உபயோகம் | உயரழுத்த மின்சார தொழிற்சாலைகள் | உயரழுத்த மின்சாரம் (வணிகம்) | குறைவழுத்த மின்சாரம் (தொழிற் சாலைகள்) | குறைவழுத்த மின்சாரம் (வணிகம்) | முக்கிய மானவை | உயரளவு தேவை மீதான மின் வெட்டு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | (சதவீதத்தில்.) | | | | | | |
| 1—12—1974 முதல் .. 8—1—1975 வரை. | மின்வெட்டு இல்லை (250 யூனிட்டுகளுக்கு மேல் அபராதத்தொகை விதத்தில் கட்டணம் விதிக்கப்பட்டது.) | 40 | 40 | 40 | 40 | 15 | முக்கியமானவை 15 சதவீதம் ஏனையவை. 30 |
| 9—1—1975 முதல் .. 3—4—1975 வரை. | ஷை | 60 | 60 | 60 | 60 | 25 | முக்கிய மானவை 20 ஏனையவை 40 |
| 4—4—1975 முதல் .. 16—5—1975 வரை. | மாதத்திக்கு 200 யூனிட்டுகளுக்கு மேல் 40 சதவீதம் (18—3—1975 லிருந்து) | 75 | 75 | 75 | 75 | பணி 25 தொழிற்சாலை 40 | ,, |
| 17-5-1975 முதல் 31-5-1975 வரை. | ,, | 60 | 60 | 60 (7-5-1975 லிருந்து). | 60 | பணி 20 தொழிற்சாலை 30 | ஷை |
| 1-6-1975 முதல் 24-6-1975 வரை. | மாதத்துக்கு 250 யூனிட்டுகளுக்கு மேல் 40 | 40 | 40 | 40 (15-6-1975 லிருந்து 25). | 40 | பணி 15 தொழிற்சாலை பணி 25 | முக்கியமான பணி 15 முக்கியமான தொழிற்சாலை பணி. 20 ஏனையவை 30 |
| 25-6-1975 | | | மின் வெட்டு நீக்கப்பட்டது. | | | | |
| 26-7-1976 முதல் 3-4-1977 வரை. | மின்வெட்டு இல்லை. | முன்னுரிமை 25 ஏனையவை 30 | 30 | 39 (24-11-1976 லிருந்து 15). | 30 | பணி 25 செய்தித்தாள் 25 | முக்கிய பணிகள் செய்தித்தாள்கள் 20 முன்னுரிமைத் தொழிற்சாலை. 20 ஏனையவை 40 |
| 4-4-1977 முதல் 30-4-1977 வரை. | மின்வெட்டு இல்லை. | முன்னுரிமை 40 ஏனையவை 40 | 40 | 25 | 30 | பணி 30 செய்தித்தாள் 30 | முக்கியமான பணிகள் செய்தித் தாள்கள். 30 முன்னுரிமை தொழிற் சாலை 30 ஏனைய வை |

இணைப்பு 101 1981 பிப்ரவரி 26]

மின் வெட்டு குறித்த விவரங்கள்.

(சதவிதத்தில்.)

| நாள் | வீட்டு உபயோகம் | உயரழுத்த மின்சாரம் தொழிற்சாலைகள் | உயரழுத்த மின்சாரம் வணிகம்) | குறைவழுத்த மின்சாரம் (தொழிற் சாலைகள்) | குறைவழுத்த மின்சாரம் (வணிகம்) | முக்கிய மானவை | உயரளவு தேவை மீதான மின்சார வெட்டு |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1-5-1977 முதல் 24-5-1977 வரை. | மின்வெட்டு இல்லை. | முன்னுரிமை 50<br>ஏனையவை 50 | 50 | 25 | 30 | பணி 30<br>செய்தித்தாள் 25 | முக்கியபணிகள் 30<br>முன்னுரிமைத் தொழிற்சானல 30<br>செய்தித் தாள்கள். 20<br>ஏனையவை 40 |
| 25-5-1977 முதல் 31-5-1977 வரை. | மின் வெட்டு இல்லை | முன்னுரிமை 25<br>ஏனையவை 30 | 30 | 25 | 30 | பணி 25<br>செய்தித்தாள் 25 | முன்னுரிமைத் தொழிற்சாலை 20<br>முக்கிய பணிகள். 20<br>செய்தித் தாள்கள் 20<br>ஏனையவை 40 |
| 3-6-1977 முதல் 10-6-1977 வரை. | மின்வெட்டு இல்லை. | முன்னுரிமை 25<br>ஏனையவை 30 | 30 | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | முன்னுரிமைத் தொழிற்சாலை 20<br>ஏனையவை 40 |
| 1-7-1977 | | | மின் வெட்டு நீக்கப்பட்டது. | | | | |
| 27-3-1979 | மின்வெட்டு இல்லை. | முன்னுரிமை<br>ஏனையவை | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலை 15<br>தொடர்ச்சி யின்றி இயங்கும் தொழிற் சாலை 30 |
| 27—6—79 .. | .. | | மின்வெட்டு நீக்கப்பட்டது. | | | | |
| 5— 2—1979 | .. மின்வெட் இல்லை | மின்வெட்டு இல்லை | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | |

| | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 28—1—1980 .. | .. மின் வெட்டு இல்லை | .. தொடர்ச்சி 15 சதவீதம் தொடர்ச்சியற்ற 25 சதவீதம் | பொதுக் காரிய (மின் கட்டணம்) 15 சதவீதம் | .. | .. | .. | ஷை |
| 1—3—1980 .. | .. மின் வெட்டு இல்லை | .. தொடர்ச்சி 30 சதவீதம் தொடர்ச்சியற்ற 60 சதவீதம் | பொதுக் காரிய (மின் கட்டணம்) 30 சதவீதம். | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | உயர் அழுத்த மின்சாரம் தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலைகள். 30 சதவீதம் உயர் அழுத்த மின்சாரம் தொடர்ச்சியின்றி இயங்கும் தொழிற் சாலைகள் 40 சதவீதம். உயர் அழுத்த மின்சாரம் பொதுக் காரியம் (மின் கட்டணம்— ) 20 சதவீதம் |
| 1—7—1980.. | .. மின் வெட் இல்லை | .. மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | உயர் அழுத்த மின்சாரம் தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலைகள் 20 சதவீதம். உயர் அழுத்த மின்சாரம் தொடர்ச்சியின்றி இயங்கும் தொழிற் சாலைகள் 20 சதவீதம் உயர் அழுத்த மின் கட்டணம்-5 20 சதவீதம். |

| (1) | (2) | (3) | | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17—7—1980 | | | | தேவைப்படும் மின்சார அளவின் மீதான வெட்டு நீக்கப்பட்டது. | | | | |
| 1—12—1980 | .. மின்வெட்டு இல்லை. | .. தொடர்ச்சி, 30 சதவீதம். | தொடர்ச்சியற்ற. | மின்வெட்டு இல்லை. | 75 பரித் திறனும் அதற்கு மேலும் சேர்க்கப் பட்ட மின் சக்தி கொண்ட தொழிற் சாலைகளுக்கு 30 சதவீதம். | மின்வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | உயர் அழுத்த மின்சாரம் தொடர்ந்து இயங்கும் தொழிற் சாலைகள், 30 சதவீதம். உயர் அழுத்த மின்சாரம்—தொடர்ச்சி யின்றி இயங்கும் தொழிற் சாலைகள் 30 சதவீதம் |

[1981 பிப்ரவரி 26

1981 பிப்ரவரி 26]

## இணைப்பு I

திட்டக் காலங்களில் தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31ஆம் தேதி). | முதலாவது திட்டம் 1951-56. | இரண்டாவது திட்டம் 1956-61. | மூன்றாவது திட்டம் 1961-66. | வருடாந்திர திட்டம் (1966-69) மூன்று ஆண்டுகள். | நான்காவது திட்டம் 1969-74. | ஐந்தாவது திட்டம் 1974-78. | 1979-80 தோராயமாக. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| அ. மின் உற்பத்தி— | | | | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டுகளில்). | 156 | 256 | 571 | 1,070+ *300 | 1,070+ *400 | 1,654+ *600 | 1,824+ *600 | 2,119+ *600 |
| 2. மின் உச்சத் தேவை (மெகாவாட்டுகளில்). | 110 | 172 | 381 | 717 | 997 | 1,207 | 1,641 | 1,710 |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,260 | 6,948 | 9,453 | 10,414 |
| இ. மின் அனுப்புதலும் வினியோகித்தலும்— | | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 72,689 | 77,126 |
| 2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,04,977 | 1,97,017 | 2,22,659 | 2,49,266 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 174 | 192 |
| 4 உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 150 | 163 |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள் | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 | 37,453 | 43,666 | 48,595 |
| 6 மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.5 | 7.7 | 13.6 | 18.22 | 27.07 | 34.00 | 38.35 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 92 | 116 | 127 | 157 | 175 |

* நெய்வேலி

[1981 பிப்ரவரி 26 | 1981 பிப்ரவரி 26]

## இணைப்பு I

### திட்டக் காலங்களில் தமிழ்நாட்டின் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ஆம் தேதி. | முதலாவது திட்டம் 1951-56. | இரண்டாவது திட்டம் 1956-61. | மூன்றாவது திட்டம் 1961-66. | வருடாந்திர திட்டம் (1966-69) மூன்று ஆண்டுகள். | நான்காவது திட்டம் 1969-74. | ஐந்தாவது திட்டம் 1974-78. | 1979-80 தோராயமாக. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| உ. கிராம மின் வசதி— மின் வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை | 1,813 | 3,543 | 18,760 | 22,137 | 31,727 | 61,072 | 63,339 | 63,428 |
| 2. மின் வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்புகளின் எண்ணிக்கை. | .. | .. | .. | .. | 6,280 | 23,768 | 24,797 | 25,653 |
| 3. மின் இணைப்பு அளிக்கப் பட்ட வேளாண்மை விசை யேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 | 2,56,594 | 4,10,119 | 6,81,205 | 8,05,616 | 8,87,227 |
| எ. செலவும் வருவாயும்— | | | | | | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக்கணக்கில்). | 23.82 | 54.02 | 133.21 | 293.28 | 356.07 | 552.20 | 799.09 | 1,048.45 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக்கணக்கில்). | 3·12 | 5·94 | 15·82 | 34.67 | 50.22 | 114.28 | 223.14 | 245.12 |

# இணைப்பு—2

## திட்டகால செலவு.

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர். | ஏற்பட்ட செலவு. 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 | 1980–81-ம் ஆண்டுக்கான மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| I. உற்பத்தி— | | | | | |
| அ. முடிவுற்ற திட்டங்கள்(8)* | 3.69 | 2.24 | 0.21 | 0.18 | 0.18 |
| இ. தொடர்ந்துவரும் திட்டங்கள்— | | | | | |
| 1. மேல்கொடுமண்டு 1-ம் நிலை மேல்கொடுமண்டு 2-ம் நிலை | 0.32 | 0.26 | 0.22 | 0.32 | 0.17 |
| 2. சுருளியாறு .. .. | 5.64 | 5.16 | 3.24 | 1.61 | 0.99 |
| 3. சேர்வலாறு .. .. | 0.13 | 0.43 | 1.05 | 1.41 | 3.16 |
| 4. காடம்பாறை .. .. | —0.88 | 0.42 | 12.19 | 14.52 | 14.72 |
| 5. பாண்டியாறு—புன்னம்புழா | 1.15 | —0.20 | —0.13 | —0.25 | .. |
| 6. நெல்லித்துறை .. .. | .. | —0.03 | —0.01 | .. | .. |
| 7. தூத்துக்குடி அனல்மின் திட்டம்— | | | | | |
| 1-ம் நிலை .. .. | 34.28 | 42.81 | 36.34 | 29.85 | 10.20 |
| 8. தூத்துக்குடி அனல் மின் திட்டம்— | | | | | |
| 2-ம் நிலை .. .. | .. | 4.07 | 15.44 | 28.97 | 24.70 |
| 9. கீழ் மேட்டூர் .. .. | .. | .. | 0.06 | 3.17 | 19.63 |
| 10. மேட்டூர் அனல்மின் திட்டம் | .. | .. | .. | .. | 4.90 |
| உ. மேம்பாடு திட்டங்கள்— | | | | | |
| 11. எண்ணூர் மேம்பாடு திட்டம் | .. | 0.69 | 0.95 | .. | .. |
| 12. பேசின்பிரிட்ஜ் மேம்பாடு திட்டம். | .. | 0·05 | 0·47 | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| ஏ. புதிய திட்டங்கள்— | | | | | |
| 13. மேல் அமராவதி .. .. | .. | .. | .. | .. | 2.50 |
| 14. சண்முகா நதி .. .. | .. | .. | .. | .. | 2.50 |
| 15. வட சென்னை அனல்மின் திட்டம். | .. | .. | .. | .. | 0.10 |
| மொத்த உற்பத்தி (அ முதல் எ முடிய)... | 44.33 | 55.90 | 70.03 | 79.78 | 83.75 |



| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| II. | மின் அனுப்புதல், பங்கீடு செய்தல். | 13.03 | 19.75 | 32.96 | 51.01 | 70.00 |
| III. | கிராம மின்வசதி .. .. | 17.86 | 13.74 | 18.00 | 26.30 | 21.50 |
| IV. | மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் | .. | 0.01 | 2.24 | 1.31 | .. |
| V. | புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு. | 0.19 | 0.20 | 0.25 | 0.23 | 0.30 |
| VI. | மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி. | 0.04 | 0.04 | 0.04 | 0.04 | 0.10 |
| | நிகர மொத்தம் .. | 75.45 | 89.64 | 123.52 | 158.67 | 175.65 |

* 1. குந்தா நீர்மின் திட்டம் 3-ம் நிலை, 2. பரம்பிக்குளம் ஆளியாறு, 3. கோதையாறு, 4. சென்னை அனல்மின் திட்டம் விரிவாக்குதல், 5. எண்ணூர் அனல்மின் நிலையம், 6. எண்ணூர் அனல்மின் நிலையம் விஸ்தரிப்பு, 7. குந்தா 4-ம் நிலை, 8. நடுவட்டம் திருப்புதல் திட்டம்.

வரைவு 6-வது திட்டச் (1980-85) செயற் குறிப்புகள் (மின்சாரம்)

| | மின் திட்டங்கள். | இடம் (மாவட்டம்). | பயன் மெ.வா./ எம்.யூ. | மதிப்பிடப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்) | இலக்கு ஆண்டு. | 6-வது திட்டத்தில் கிடைக்கும் பயன்கள். | 6-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள். மெ.வா./எம்.யூ. | 6-வது திட்டத்தில் ஒதுக்கீட்டின் மதிப்பீடு (80-85). | கருத்துரை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | உற்பத்தி | | | | | | | | |
| | அ. முடிவுற்ற திட்டங்கள் | .. | .. | .. | .. | .. | .. | 4.17 | .. |
| | இ. ஒப்புதல் பெற்று மற்றும் நடைபெறும் திட்டங்கள். | .. | .. | .. | | | | | |
| 1. | எண்ணூர் அனல் மின் நிலை நிலையம் மேம்பாடு திட்டம். | செங்கல்பட்டு | | 18.04 | .. | .. | .. | 18.04 | திருப்திகரமான செயல்திறன் எதிர் பார்க்கப்படுகிறது. |
| 2. | பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலைய மேம்பாடு திட்டம். | சென்னை | | 0.80 | .. | .. | .. | 0.80 | திருப்திகரமான செயல்திறன் எதிர் பார்க்கப்படுகிறது. |
| 3. | தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1-ம் நிலை. | திருநெல்வேலி | 420/ 2,200 | 178.00 | 80-81 | 210/1,100 | .. | 17.93 | 210 மெகாவாட் முதல் பிரிவு 7/79ல் துவக்கப்பட்டது. |
| 4. | 2-ம் நிலை | .. | 210/ 1,100 | 85.00 | 81-82 | 210/1,100 | . | 36.53 | .. |
| 5. | சுருளியாறு (நீ) | மதுரை | 35/114 | 26.62 | | | | 3.36 | 8/78-ல் துவக்கப் பட்டது. நிலுவை யிலுள்ள பணி களுக்கு ஒதுக்கீடு. |
| 6. | மேல்கொடுமண்டு மற்றும் லோன் பள்ளத்தாக்கு திருப்புதல் 1 மற்றும் 2-ம் நிலைகள் (நீ). | நீலகிரி | 27 (11+16) | 1.48 | 80-81 | ../16 | . | 0.39 | முதல் நிலை 77-ல் முடிக்கப்பட்டது. 2-ம் நிலை 5/80-ல் முடிக்கப்பட்டது. |
| 7. | சேர்வலாறு (நீ) | திருநெல்வேலி | 20/75 | 21.57 | 83-84 | 20/75 | .. | 16.43 | .. |
| 8. | காதம்பாறை (நீ) | கோயம்புத்தூர் | 400/79 | 103.39 | 83-84 | 400/79 | .. | 71.41 | . |
| 9. | பாண்டியாறு—புன்னம்புழா (நீ) | நீலகிரி | 150/391 | 100.00 | 86-87 | .. | 150/391 | 69.09 | கேரள மாநிலத்தின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது. |
| 10. | நெல்லித்துறை (நீ) | கோயம்புத்தூர் | 50/109 | 20.77 | 86-87 | .. | 50/109 | 19.65 | ஷெ |
| 11. | கீழ்மேட்டூர் (நீ) | சேலம் பெரியார். | 120/537 | 89.71 | 83-84 | 90/403 | 30/134 | 86.02 | .. |

வரைவு 6-வது திட்டச் (1980 85) செயற் குறிப்புகள் (மின்சாரம்).

| | இடம் (மாவட்டம்). | பயன் மெ. வா./ எம்.யூ. | மதிப்பிடப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்). | இலக்கு ஆண்டு. | 6-வது திட்டத்தில் கிடைக்கும் பயன்கள். | 6-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள், மெ.வா/எம்.யூ | 6-வது திட்டத்தில் ஒதுக்கீட்டின் மதிப்பீடு (80-85). | கருத்துரை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 12. குந்தா 5-ம் நிலை கூடுதல் திட்டம் (நீ). | நீலகிரி | 20/36 | 5.03 | 84-85 | 20.36 | .. | 5.03 | |
| 13. மேட்டூர் அனல் மின்திட்டம் | சேலம் | 420/2,247 | 189.70 | 84-85 | 210/1,123 | 210/1,124 | 161.30 | .. |
| பகுதி மொத்தம் (அ—இ) | | 1,845/6,915 | 840.11 | | 1160.3932 | 440/1,758 | 510.15 | |
| உ. ஒப்புதல் எதிர்பார்த்து எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள் * | | .. | | | | | | |
| 1. மேல் ஆமராவதி (நீ) | மதுரை | 30/104 | 15.78 | 85-86 | .. | 30/104 | 15.36 | .. |
| 2. சண்முகாநதி (நீ) | மதுரை | 30/125 | 20.51 | 85-86 | .. | 30/125 | 20.09 | .. |
| 3. பார்சன் பள்ளத்தாக்கு (நீ) | நீலகிரி | 30/53 | 11.56 | 85-86 | .. | 30/53 | 10.50 | .. |
| பகுதி மொத்தம் (உ) | | 90/282 | 47.85 | .. | .. | 90/282 | 45.95 | .. |
| எ. புதிய திட்டங்கள். | | | | | | | | |
| 1. வட சென்னை அனல் மின் நிலையம். | செங்கல்பட்டு | 630/3,370 | 273.37 | 89-90 | | 630/3,370 | | திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 2. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் (மாற்றம்). | சென்னை | 110/550 | 53.56 | 86-87 | .. | 110/550 | 41.33 | மத்திய மின் சக்திக் குழு மற்றும் திட்டக் குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 3. சோலாத்திப்புழா (நீ) ** | நீலகிரி | 60/225 | 23.40 | 86-87 | .. | 60/225 | 20.00 | ஷை |
| 4. சின்னார் - சித்தார் திருப்பு தல் திட்டம் (நீ). | கோயம்புத்தூர் | ../19 | 1.15 | 83-84 | 19 | .. | 1.15 | ஷை |
| 5. பைக்காரா (மிகச் சிறிய நீர் மின் திட்டம்.) | நீலகிரி | 2/10 | 1.5 | 85-86 | .. | 2/10 | 1.30 | ஷை |
| 6. கீழ் பவானி (மிகச் சிறிய நீர் மின் திட்டம்). | கோயம்புத்தூர் | 8/39 | 5.78 | 85-86 | .. | 8/30 | 5.00 | ஷை |
| [illegible] (மிகச் சிறிய நீர் மின் திட்டம்). | மதுரை | 6/24 | 3.76 | 85-86 | .. | 6/24 | 3.20 | ஷை |
| [illegible] | தர்மபுரி | 250/864 | 75.00 | .. | .. | 250/304 | 22.50 | மத்திய நீர் மின் திட்டக் கழகத்தினால் செயல் படுத்த ஆலோசனை உள்ளது. |

வரைவு 6-வது திட்டச் (1980—85) செயற் குறிப்புகள் (மின்சாரம்).

| மின்திட்டங்கள். | இடம் (மாவட்டம்). | பயன் மெ.வா./ எம்.யூ. | மதிப்பிட்டப் பட்டுள்ள செலவு (கோடி ரூபாய்) | இலக்கு ஆண்டு. | 6-வது திட்டத்தில் கிடைக்கும் பயன்கள். | 6-வது திட்டத்திற்கு அப்பால் கிடைக்கும் பயன்கள் மெ.வா./எம் யூ. | 6-வது திட்டத்திற்கு ஒதுக்கீட்டின் மதிப்பீடு (80-85) | கருத்துரை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| ஐ. முன் நடவடிக்கை | | | | | | | | |
| 1. நீரார் நல்லார் (நீ) மாக்கடல் வெப்பசக்தி மின்சக்தி மற்றும் இதர திட்டங்கள் | கோயம்புத்தூர் | 155/373 | 18.33 | .. | .. | 155/373 | 80.00 | திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது |
| பகுதி மொத்தம் (எ+ஐ) .. | | 1221/5474 | 455.86 | | /19 | 1221/5455 | 174.48 | |
| மொத்த உற்பத்தி (அ முதல் ஐ முடிய). | | 3156/12671 | 1,343.82 | .. | 1160/3951 | 1751/7495 | 730.58 | .... |
| ஒ மத்திய அரசுத் திட்டம் .. | | | | | | | | |
| 1 கல்பாக்கம் அணுமின் திட்டம் | செங்கல்பட்டு | 470/2600 | .. | 1981-82 | 470/2600 | .. | .. | .... |
| 2 நெய்வேலி 2-வது சுரங்கம் .. | தென்ஆற்காடு | 630/2709 | .. | 1984-85 | 630/*2700 | .. | .. | .... |
| பகுதி மொத்தம் (ஒ) .. | | 1100/5300 | .. | .. | 1100/5300 | .. | .. | .... |
| மொத்தம் (அ முதல் ஊ முடிய). | | 4256/17971 | 1,343.82 | .. | 2260/9251 | 1751/7495 | 730.58 | .... |
| II மின் அனுப்புதல் பங்கீடு செய்தல். | .. | .. | .. | .. | .. | .. | 407.00 | .... |
| III கிராம மின் வசதி .. | .. | .. | .. | .. | .. | .. | 170.00 | .... |
| IV மற்றவை .. .. | .. | .. | .. | .. | .. | .. | 1.56 | .... |
| (அ) புதிய திட்டங்கள் குறித்த ஆய்வு. | .. | .. | .. | .. | .. | .. | .. | |
| (ஆ) மின் சக்தி குறித்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள். | .. | .. | .. | .. | .. | .. | 9.00 | .... |
| பகுதி மொத்தம் IV | .. | .. | .. | .. | .. | .. | 10.56 | .... |
| (நிகர மொத்தம் IV முதல் 5 முடிய). | | 4256/17971 | 1,343.82 | .. | 2260/9251 | 1751/7495 | 1,318.14 | .... |

(நீ)—நீர் மின் திட்டங்கள்

*தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு

*செலவும் பயனும், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் பகிர்ந்து கொள்ளும்.

உ-ல் உள்ள வட சென்னை அனல் மின் நிலையத்திற்காக முன் நடவடிக்கை ஐ-ல் உள்ள முதல் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

364|55|81 72 (378)

[Issued : 27-6-1981

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY 27th FEBRUARY 1981

Volume CLXXIV No. 2

2 ௦ ஜூ 1981

©
GOVERNMENT OF TAMIL NADU
1981

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

PRICE 2 *Rupees.*]

(378)

பொருளடக்கம்

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்— 12—134

2. தகவல் கோரல்—
உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி சிறைச் சாலையிலிருந்து அவைக்கு வர ஏற்பாடு குறித்து .. .. .. .. 135—36

3. கவன ஈர்ப்பு—
(1) பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலை நகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது குறித்து. .. 136—138

(2) தென்னாற்காடு மாவட்டம், வடலூரி லுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து .. .. 138—139

4. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கையை அளித்தல் .. .. 139

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980—81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1979—80 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதம்—தொடர்ச்சி. .. 139—208

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். .. .. 208

143874

D

V2 11,32'N 85

N85 1241-3

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1981 பிப்ரவரி 27.

மாசி 16, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள்.

* 87 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை முந்திரிப் பருப்பு தயார் செய்யும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன ?

(இ) அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) மூடப்பட்டிருப்பதால், வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 23.

(இ) தேவையான அளவு கச்சாமுந்திரி கிடைக்காமையால்.

(உ) 1,520.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 23 முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆலைகளில் வேலை செய்துவந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு இப்போது வேலை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கச்சா முந்திரியை ஒதுக்கீடு செய்வதில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சிறப்பிடம் கொடுத்து, தொழிலாளர் களுடைய நலனைப் பாதுகாக்க அரசு முன்வருமா ?

[1981 பிப்ரவரி 27

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** கச்சா முந்திரி ஒதுக்குவதை, மத்திய சர்க்காருக்கு உட்பட்ட கொச்சியில் உள்ள இந்திய முந்திரி நிறுவனம் செய்து வருகிறது. அதிக அளவிற்கு தமிழகத்திற்கு ஒதுக்குமாறு தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தமிழகத்தில் முந்திரிப் பயிரின் விளைச்சலை அதிகப்படுத்துகிற திட்டம் அரசிடம் இருக்கிறதா ? கன்னியாகுமரி மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் முந்திரியைப் பயிரிட ஊக்குவிக்கும் வகையில் சப்சிடியைக் கொடுத்து உதவ அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** முந்திரியை அதிக அளவு உற்பத்தி செய்ய வனத் துறையும், வேளாண்மைத் துறையும் அதிக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

**திரு. ஆ. நல்லசிவன் :** சுமார் 75,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 150 முந்திரி ஆலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. அங்கே ஆண்டில் நான்கைந்து மாதங்களுக்குத்தான் அவர்களுக்கு வேலை இருக்கின்றது. முந்திரிக் கோட்டாவை ஒதுக்குவதில் ஏற்கெனவே கேரளாவிற்குத் தான் முன்னுரிமை அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் 75,000 தொழிலாளர்கள் வேலையின்றி தவிப்பதால், தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தமிழக அரசு, அதிக அளவு தேவை என்பதை மத்திய அரசிடம் வலியுறுத்தி, நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

* 88 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, செப்டம்பரில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள சுமார் 850 சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள், தொடர்ந்து சில நாட்கள் மூடப்பட்டிருந்தன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) அரசுக்கு அதுபற்றி முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?



1981 பிப்ரவரி 27]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) மற்றும் (இ) கலால் வரி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சில தீப்பெட்டித் தொழிலதிபர்கள் 22—9—1980-லிருந்து 24—9—1980 வரை 3 நாட்கள் தங்கள் தொழிற் சாலைகளை மூடினர்.

(உ) மற்றும் (எ) இந்த கலால் வரி மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் வருவதால், மாநில அரசு இதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மத்திய அரசின் கலால் வரி உயர்வால் தமிழகத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் பல தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கும் நிலை உருவாகியிருக்கிறது. மாநில அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு சிறு தொழில்களுக்குக் கலால் வரியைக் குறைக்க, தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஏற்கெனவே சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குச் சலுகைகள் இருக்கின்றன. மத்திய அரசு, தீப்பெட்டி உற்பத்தியாளர்களை மூன்று தரமாகப் பிரித்துள்ளது. ஒன்று, இயந்திரங்கள் மூலம் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் "விம்கோ" நிறுவனம்; இரண்டு, உற்பத்தி வரம்பின்றி கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள்; மூன்று, குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகள் என்று மூன்று வகையாகப் பிரித்து மூன்று வகையான கலால் வரி விதிக்கப்படுகிறது. முதல் வகைக்கு குரோஸ் ஒன்றுக்கு ரூ. 7.20, இரண்டாவது வகைக்கு குரோஸ் ஒன்றுக்கு ரூ. 4.50, மூன்றாவது வகைக்கு ரூ. 1.60 கலால் வரியாக விதிக்கப்படுவதால், சிறு தொழிலில் உற்பத்தி செய்பவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

## *Master Plan for Kodaikanal.*

* 89 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have prepared a Master Plan for the development of Kodaikanal;

(*b*) if so, the details thereof; and

(*c*) when it is likely to be implemented?

[1981 பிப்ரவரி 27

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : (அ), (இ) & (உ) கொடைக்கானல்** ஏரிப் பகுதியை மேம்படுத்தும்பொருட்டு பாத் அண்டு அசோசியேட்ஸ் என்னும் கட்டிடக்கலை நிறுவனத்தால் பெருந்திட்டம் (Master Plan) ஒன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**திரு. த. சந்தோஷம் :** கொடைக்கானலில் உள்ள ஏரியில் படகு ஓட்டுவதைத் தவிர வேறு எந்தவிதமான பொழுதுபோக்கு வசதிகளும் அங்கு இல்லை. குறிப்பாக "பிரயன்ஸ் பார்க்கில்" சிறுவர்களுக்குப் போதுமான பொழுதுபோக்கு வசதிகள் இல்லை. வயது வந்தவர்களுக்குக் கூட, ஏரியில் படகு ஓட்டுவதைத் தவிர, வேறு எந்தவிதமான வசதிகளும் இல்லை. ஆகவே அங்கே குழந்தைகளுக்கான பூங்காவையும், மிருகக் காட்சி சாலையையும், பெரியவர்களுக்காக மீன் பிடிக்கும் வசதிகளையும் செய்து தருவதில் அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அவர்கள் அளித்திருக்கிற திட்டத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்கா அமைக்கும் திட்டம் அடங்கியிருக்கிறது. அதைப் போல பெரியவர்களுக்காக, "இன்டோர் ரெக்ரியேஷன் ஸ்டேடியம்", நீச்சல் குளம், போன்ற வேறு பல திட்டங்களை பொழுது போக்கு வசதிகளுக்கேற்ற வகையில் அறிவித்திருக்கிறார்கள். அதையொட்டி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. த. சந்தோஷம் :** வெள்ளைக்காரர்கள் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் நான் கொடைக்கானலுக்குப் போயிருக்கிறேன். இப்போதும் சென்று வந்திருக்கிறேன். இரண்டுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. நம்முடைய மக்கள் திறந்த வெளியைக் கழிப்பிடமாக உபயோகப்படுத்தும் வழக்கம் இப்போது இருக்கிறது. அதனால் அங்கே துர்நாற்றம் அடிக்கிறது. ஆகவே பொதுக் கழிப்பிடங்களை அங்கே ஏற்படுத்தவும், திறந்தவெளியைக் கழிப்பிடங்களாக உபயோகப்படுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுக்கவும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இதுபோன்ற திட்டங்களை கொடைக்கானல் நகரியம்தான் ஏற்றுச் செய்ய வேண்டும். இது சுற்றுலாத் துறையின் பொறுப்பில் வராது. மேலும் இந்தக் கருத்தை நகரியத்திற்கு அறிவித்து, மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறபோது, இதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றுகிற முயற்சியில் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று சுற்றுலாத் துறை அறிவுறுத்துமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



1981 பிப்ரவரி 27]

**திரு. ம. சங்கரலிங்கம் :** கொடைக்கானலில் "ஆப்சர்வேட்டரி" ஒன்று இருக்கிறது. கல்கத்தாவில் "பிர்லா பிளானடேரியம்" என்று ஒன்றை வைத்து சுமார் இரண்டு, மூன்று மணிக்கு ஒரு முறை வானத்தில் உள்ள நட்சத்திரங்கள், அவற்றின் நடமாட்டங்கள் ஆகியவற்றைச் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளுகிற அளவிற்கு விளக்கிச் சொல்லுகிறார்கள். கொடைக்கானலில் உள்ள "ஆப்சர்வேட்டரியையும்" அப்படி மாற்றி கொடைக்கானலில் தங்குபவர்களுக்குப் பொழுதுபோக்காகவும், அதே நேரத்தில் விஞ்ஞானரீதியில் விஞ்ஞான அறிவைப் பெறுவதற்காகவும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** "ஆப்சர்வேட்டரி" என்ற வானிலை ஆராய்ச்சிக் கூடத்தில் மக்கள் போய்ப் பார்க்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது இயலாது என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிற கல்கத்தாவில் இருக்கிற அந்த அமைப்பு தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற அமைப்பாகும். அப்படிப்பட்ட ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று சில தனியார் நிறுவனங்களால் சில திட்டங்கள் தரப்பட்டிருக்கின்றன. சென்னையில் கூட அப்படிப்பட்ட ஒன்றை அமைக்கலாம் என்று கேட்டிருக்கிறார்கள். பல இலட்சக்கணக்கான, பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு ஏற்படுகிற அளவிற்கு அந்தத் திட்டம் இருக்கிறது.

கொடைக்கானலில், பொதுமக்களை, சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிற வகையிலே, தொலைநோக்கு (டெலஸ்கோப்பை) இரண்டை வைத்து, ஒரு புறத்திலே வைகை அணைக்கட்டுப் பகுதியையும், இன்னொரு புறத்திலே பழனி ஆண்டவர் கோயிலையும் பார்க்கிற வகையிலே ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திட்டம் நீண்டகாலத் திட்டமாக, பெரிய செலவில் நிறைவேற்றப்படுகிற திட்டமாக இருப்பதால், பொருளாதாரச் சூழ்நிலை, மற்ற வசதிகள் ஆகியவற்றை ஒட்டித்தான் இதைப் பரிசீலிக்க இயலும்.

(முற்பகல் 10-40)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கொடைக்கானலில் இந்த மேம்பாட்டுத் திட்டம் சிறப்படைந்தாலும் பலரும் வருவதை மேலும் கவரக்கூடிய வகையில், அதை மத்திய அரசு சுற்றுலா மையம் என்று அறிவிக்குமா ? கழிப்பிடங்கள் கட்டினாலும் வருத்தப்படுகின்றவர்கள் இருப்பதால், கொடைக்கானலில் அப்படிக் கட்டாமல் விட்டுவிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மத்திய அரசு சுற்றுலா மையம் என்று அறிவித்து மத்திய அரசு தத்து எடுத்துக்கொண்டு மொத்தச் செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், சில திட்டங்களுக்கு

உதவி செய்கிறார்கள். சில இடங்களிலே இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சில திட்டங்களை, விடுதிகளை நடத்துகின்றார்கள். தமிழகத்திலேயும், பல்வேறு திட்டங்களுக்கு என்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு உதவி கிடைக்கிறபோது, இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையின்படி, யாரோ குறை சொல்கின்றார்கள் என்ற காரணத்திற்காக, கழிப்பிடங்களைக் கட்டுவதை அரசு நிறுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்கள்.

* 90 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரும்பாலான நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்புப் பொறியாளர்கள் அலுவலகங்கள், சென்னையிலேயே உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இவற்றை, கண்காணிப்புப் பொறியாளர்களின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் மையமாக உள்ள நகரத்திற்கு மாற்ற, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த ஊரகச் சாலை (Rural Roads Circle) மற்றும் ஆய்வு (Investigation) வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களை சென்னையிலிருந்து முறையே சேலத்திற்கும், மற்றும் திருச்சிராபபள்ளிக்கும் 1—4—1981 முதல் மாற்றுவதற்காக உத்தரவுகள் வழங்கப்பட்டு உள்ளன. மற்ற அலுவலகங்கள் அவைகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை உத்தேசித்து சென்னையிலேயே இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த நெடுஞ்சாலைத் துறைக் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களில் பெரும்பாலானவற்றை வேறு இடங்களுக்கு, மாநகரங்களுக்கு, மாவட்டத் தலைநகரங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற எனது கோரிக்கையின் அடிப்படையில் முன்பு நெடுஞ்சாலைத் துறை பொறுப்பேற்றிருந்த அமைச்சர் அவர்கள்கூட இந்த மாமன்றத்திலே சொல்லி, நிர்வாகச் சீர்திருத்தம் என்ற அரசின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கருத்து பரிசீலிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இதிலே முக்கியமானது "ரெபடிஷன் ஆஃப் மார்ச்சஸ்"



என்பது. இதன் மூலம் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு வீண் செலவும், வீணாக நேரத்தைச் செலவழிக்கக்கூடிய குறைபாடுகளும் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகள், இந்த அலுவலகங்கள் மாநிலத் தலைநகரத்திலே இருப்பதால் ஏற்படுகின்றன. இதனால், திறன் வாய்ந்த மேற்பார்வை (Effective supervision) என்ற பணியிலும் குறைபாடுகள் ஏற்படுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் இந்த இரண்டு அலுவலகங்களை மாற்றியமைத்தாலும்கூட, இன்னும் சில அலுவலகங்களை மாற்றியமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச்சொல்லிய, "ரெபடிஷன் ஆஃப் மார்ச்சஸ்", அதாவது சரியான முறையிலே மேற்பார்வை செய்யமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. அதுபோலவே ஊரகச் சாலைகள் திட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை உடனடியாக சேலத்திற்கும், அதே நேரத்தில் இன்வெஸ்டிகேஷன் சர்க்கிள் அலுவலகத்தை திருச்சிராப்பள்ளிக்கும் மாற்றியிருக்கிறார்கள். மொத்தம் ஒன்பது கண்காணிப்பு நிறுவனங்கள் சென்னையிலேயே இருக்கின்றன. அதிலே இரண்டு மட்டும் மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏழு நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த ஏழிலே ஒரு சில கண்காணிப்புப் பொறியாளர் வட்ட அலுவலகங்களை மாவட்டத் தலைநகரங்களுக்கே மாற்றலாமா என்பது பரிசீலனையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கண்காணிப்புப் பொறியாளர்களும், அவர்களின் அலுவலர்களும் பல காரியங்களைப் பார்க்கவேண்டிய சூழ்நிலைகள் இருப்பதால், பல சாலைகள் பராமரிக்கப்படமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக, அவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷனை இன்னும் குறைத்துக் கொடுக்க வேண்டும். ஆகவே இன்னும் கண்காணிப்புப் பொறியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாமா என்பது அரசினுடைய யோசனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவி.

* 91 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவிக்கு, நேரடி நியமனத்திற்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.**

(இ) ஊராட்சி வளர்ச்சித் துறையில் எல்லா நிலைகளிலும் தேக்க நிலை இருப்பதால் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதவிக்கு நேரடி நியமனத்திற்கென ஏதும் தனி ஒதுக்கீடு செய்வது விரும்பத்தக்கதல்ல. ஆகவே இதுபற்றி இப்போது பரிசீலிக்கும் உத்தேசமில்லை.

## *Sale of Vegetables etc. on Platforms*

* 92 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether permission has been granted by the Corporation of Madras for the sale of vegetables, fish and meat on roads and roadside platforms ; and

(*b*) if so, the names of such places ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சைதாப்பேட்டை கூட்டுறவு மீன் விற்பனை சங்கத்திற்கு அண்ணாநகர் 3-வது அவின்யூவில் நகராட்சிக்கு சொந்தமான ஓர் இடத்தில் ஒரு மீன் அங்காடி நடத்த மூன்று வருட காலத்திற்கு மாநகராட்சி அனுமதியளித்துள்ளது. இதைத்தவிர ரோடுகளிலோ தெரு ஓர நடைபாதைகளிலோ காய்கறி, மீன் இறைச்சி விற்பதற்கு நகராட்சியில் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மாநகராட்சியினுடைய அனுமதி யாருக்கும் வழங்கப்படவில்லை என்று சொன்னாலும், சாலையோரங்களிலே நிரந்தரமாகக் கடைகள் வைத்துக்கொண்டு மீனையும், இறைச்சியையும், காய்கறிகளையும் விற்கின்ற நிலைமை தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. லாயிட்ஸ் ரோடு போன்ற பல்வேறு பகுதிகளிலே கடைகள் வைப்பதற்கு அனுமதி வழங்கவில்லை என்றாலும். அந்தப் பகுதிகளைத் துப்புரவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் காரணத்திற்காக மாநகராட்சி அந்தப் பகுதிகளைத் துப்புரவாக வைத்துக்கொள்கின்ற பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளாமல், அந்த இடங்களில் உள்ள பொதுவான கழிப்பிடங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா ? அதற்கு ஏற்ற வகையில் மாநகராட்சிக்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இதுபோன்ற நிலைமைகள் பல பகுதிகளில் இருக்கின்றன. குறிப்பாக, தெருவோரக் கடைகள் என்று வைத்துவிடுகிறார்கள். அப்புறப்படுத்தினாலும் கூட, அந்த நேரத்தில், உடனடியாக



பக்கத்திலுள்ள சந்துகளுக்குப் போய்விடுகிறார்கள். ஒரு மூலையில் போய் கடை வைத்துக்கொள்கிறார்கள். அதிகாரிகள் போன பிறகு மீண்டும் அதே இடத்திற்கு வந்து கடையை வைத்துக்கொள்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருந்தால், இதுபோன்ற தெருவோர நடைபாதைக் கடைகளை அப்புறப்படுத்த முடியும். இதை ஏன் சொல்கின்றேன் என்றால், இதை ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்கிவிடுகிறார்கள். அந்த மாதிரி பிரச்சினைகள் எழாமல் பார்த்துக்கொண்டால், இந்த நிலைமைகளைப் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அப்புறப்படுத்துவது என்பது வேறு. அவர்கள் அந்த வழியிலேயே கடை வைக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அந்த இடத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்கு இருக்கிறது. இறைச்சி, மீன் போன்றவைகளையெல்லாம், அந்தக் கழிப்பிடங்களுக்கு அருகில் பாதை ஓரத்தில். பக்கத்துப் பக்கத்திலே, வைத்து விற்கிறார்கள். மக்கள் உபயோகப்படுத்துகின்ற பாதையிலே வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே யாரும் காரிலோ, சைக்கிளிலோ, நடந்தோ போகமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. சாலையோரக் கடைகள், அங்காடிகள், மாநகராட்சியினுடைய அனுமதியில்லாமலேயே நிரந்தரமாக இருந்துகொண்டிருக்கின்றன. அப்புறப்படுத்தப்பட வேண்டிய இடங்களில், கடைகளை எடுக்கும்போது, அரசியல் பிரச்சினைகள் வந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடங்களில் அரசே ஆய்வாளர்களை வைத்து, நல்ல பொருள்களை விற்கக்கூடிய அளவுக்குக் கண்காணிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாலும் அந்தப் பகுதிகளில் அழுகிய, கெட்டுப்போன காய்கறிகள் விற்கிற நிலைமைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் மாநகராட்சி அதிகாரிகள் மூலம் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சென்னையைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களில் இதுபோன்ற நிலைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சாலையோர, நடைபாதை மீன். இறைச்சிக் கடைகளை மாநகராட்சி அதிகாரிகள் அப்புறப்படுத்துகின்றார்கள். இந்த அடிப்படை நிலைமைகளை உணர்ந்துதான் மாநகராட்சியும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இன்னும்கூட லாயிட்ஸ் சாலை, பட்டேல் சாலை, ரங்கநாதன் தெரு, தெற்கு மாடவீதி. நாராயணநாய்க்கன் தெரு, இந்த இடங்களில் எல்லாம் இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நாம் அந்த இடங்களை எவ்வளவு சுத்தமாக, சுகாதாரமான முறையில் வைத்துக்கொள்ள வேண்டு

மென்று அறிவித்தாலும்கூட, மீன், இறைச்சி விற்கின்ற இடத்தைச் சுகாதாரமாக வைத்துக்கொள்வது சுலபமல்ல. அங்குள்ள கழிப்பிடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்த மாதிரியான நடைபாதைக் கடைகளைத் தவிர்க்க, அவர்களுக்கென்று தனியாகக் கட்டிடங்கள் கட்டி கடைகளாகத் தருகிறபோது, 'ஏர் கண்டிஷன்' அறைகள் வைத்துள்ள கடைகளாகக் கொடுக்கலாம். அங்கே வைத்துள்ள மீன்கள் இப்போது கருவாடுகளாக மாறித்தான் கிடைக்கின்றன. ஆகவே இந்த நிலையை மாற்ற, அதுபோல செய்து கொடுக்கும் யோசனை அரசுக்குண்டா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** சாதாரணமாகவே அங்கே கடைகள் வைக்கக்கூடாது என்றிருக்கிறது. பிரச்சினையே அப்படி இருக்கிறது. 'ஏர் கண்டிஷன்' கடைகள் கண்டிப்பாக இப்போது கொடுப்பதாக இல்லை. அந்த இடங்களை எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமாக வைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சுத்தமாக வைத்துக்கொள்ள மாநகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-50)

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் சுட்டிக் காட்டியது போல, சென்னைப் பெரு நகரத்தில் மாத்திரமல்லாமல் பிற நகரங்களிலும் நடைபாதைகளில் கடைகள் வந்து, அதனால் மக்கள் நடைபாதைகளில் நடக்க முடியாமல், சாலைகளில் நடந்து, அதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன. நடைபாதைக் கடைக்காரர்களுக்கு அரசியல்வாதிகள் பக்கபலமாக இருந்துகொண்டு, அவர்களை கடைகளை வைக்கச் சொல்கிறார்களென்று சொல்லுகிறார்கள். எனவே, இதில் அரசு தயவு தாட்சண்யமின்றி நடைபாதைக் கடைகளை அகற்றி, விபத்துக்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமா? மேலும் நடைபாதைகளில் கடைகள் இருப்பதால், அங்கே பெருத்த கூட்டம் ஏற்பட்டு, பெண்கள், பள்ளிக்கூடம் செல்லும் மாணவிகள் போகும்போது, அநாகரீகச் செயல்கள் நடக்க வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, அத்தகைய செயல்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப் போல, இதுபோன்ற நிலை தமிழகமெங்கும் இருக்கிறதென்பது உண்மை. குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக



பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறையிலேயே இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் ஆங்காங்கே இருப்பதால், நடைபாதைகளில் மக்கள் நடக்க முடியாமல், சாலைகளின் குறுக்கே நடந்து, விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே அவைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. த. சந்தோஷம்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது, உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால், இந்தக் கடைகளை அகற்றி விடலாமென்று சொன்னார்கள். இது சரியாகப் புரியவில்லை. உறுப்பினர்கள் என்ன மாதிரி ஒத்துழைப்புத் தர வேண்டும்? உறுப்பினர்கள் அந்தக் கடைகளில் உள்ள காய்கறிகளை அள்ளிக் கொண்டு போக வேண்டுமா? வேறு என்ன செய்ய வேண்டும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அரசு இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்றபோது, அவர்கள் உறுப்பினர்களிடத்தில்தான் வருவார்கள். இதை ஒரு பிரச்சினையாகக் கொண்டு வருவார்கள். அப்போது, அரசாங்கம் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அதை ஒரு பிரச்சினையாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வரக்கூடாதென்பதற்காகத்தான் சொன்னேன்.

## சென்னை-வேதாரண்யம் திருவள்ளுவர் துரிதப் பேருந்து.

* 93 வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) நல்ல வசூலைத் தந்து வந்த சென்னை-வேதாரண்யம் திருவள்ளுவர் துரிதப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதால், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய இரு வட்டங்களிலுமுள்ள பொதுமக்கள் அல்லல்படுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) & (இ) பொது மக்களின் நன்மையைக் கருதி மீண்டும் இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் துரிதப் பேருந்துகளை விரைவில் இயக்கவிருக்கிறது.

[1981 பிப்ரவரி 27

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஏற்கெனவே சென்னையிலிருந்து வேதாரண்யம் சென்று திரும்பிய திருவள்ளுவர் துரிதப் பேருந்து சரியான நேரத்தில் வந்து கொண்டிருந்தது. ரயில்வே கால அட்டவணைப்படி 9-20-க்கு சென்னை எக்ஸ்பிரஸ் வருகிறது. அதற்கு முன்னதாக பஸ் வரக்கூடிய வாய்ப்பு இருந்தால், இதில் இடம் இல்லாவிட்டாலும், ரயிலிலே செல்லும் வாய்ப்பு இருந்தது. ஆனால் 9-20-க்குள் பஸ் வரும் சூழ்நிலை இல்லாததால், பஸ்ஸை நம்பாமல் ரயிலிலேயே செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். எனவே ரயில் வருவதற்கு முன்பு திருத்துறைப்பூண்டிக்கு பஸ் வருவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து கவனத்தில் கொண்டு செயலாற்றப்படும். அங்கே யாரும் வண்டியில் ஏறவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தப்படவில்லை. அது குறைந்த தூரம்தான் ஓடுகிறது. சாதாரணமாக 550 கிலோ மீட்டர் ஓட வேண்டும். ஆனால் அங்கே 396 கிலோ மீட்டர்தான் ஓடுகிறது. இதனால் கட்டுமானச் செலவுகள் அதிகமாகுமென்பதால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது இன்னொரு டிரிப் அதிகமாக்கப்பட்டு, மூன்று பேருந்துகளை விட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

## Bus Permits

* 94 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of bus permits issued to individuals who have undertaken to lay the roads on which the Buses were intended to ply ;

(*b*) the details of the distances so laid for each of the permits so issued ; and

(*c*) the cost thereof in each case?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இது போன்றதொரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அறிவித்ததாக எனக்கு நினைவு. அரசு அந்த அறிவிப்பின் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கைகளை இனிமேல் எடுக்க இருக்கிறதா அல்லது அந்தப் பரிந்துரை அரசின் கவனத்திற்கு வராமல் கைவிடப்பட்டிருக்கிறதா ?



1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இதைச செயல்படுத்த வேண்டுமென்றுதான் அரசாங்கம் முயற்சி எடுத்தது. அப்படி முயற்சி எடுக்கின்றபோது, மாநிலப் போக்குவரத்து அதிகாரியும், மண்டலப் போக்குவரத்து அதிகாரிகளும் விதி 57-லே அதைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விதி 155-ன்படி சில வழிமுறைகளை இதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். ரோடுகளைப் போடுகிறவர்களுக்குப் பேருந்து உரிமம் வழங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போட முடியாது. அதில் தலையிடவும் முடியாது. விதிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பாட்டைச் செய்தபோது, மக்களிடத்தில் அதற்கு ஆதரவு எப்படி இருக்கிறதென்று பார்த்தபோது, சரியான ஆதரவில்லை. எனவே, இதில் புதிய முறைகளைக் கொண்டு வந்து, மக்கள் ஏற்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இதில் வேறு மாற்றங்கள் செய்வது பற்றிய பரிசீலனை இருந்தாலும், அதற்கிடையிலே கிராம மக்களுக்குப் பேருந்து வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலே இப்போது இருக்கின்ற திட்டத்தின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா ? மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கருத்துகூட அந்த அடிப்படையிலேதான் வெளி வந்ததென்ற காரணத்தால், கிராம மக்களுக்கு அதிகப்படியான பேருந்து வசதிகளைச் செய்ய என்ன வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததே, அரசாங்கம் கிராமங்களில் சாலைகளைப் போடுவதற்கு முன்பாக, தனியார்கள் சாலைகளைப் போட்டால் பேருந்து வசதிகள் கிராமங்களுக்குக் கிடைக்குமென்பதற்காகத்தான். ஒரு கிலோ மீட்டர் சாலை போட 30,000 ரூபாய் செலவாகுமென்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் கட்டண விகிதம், இதர செலவுகள் போன்றவற்றைப் பார்க்கும்போது, இதைச் செய்ய முன்வருவார்களா என்று பார்த்தால், முன்வரவில்லை என்ற நிலையில், இப்போது அது சாத்தியமாக இராதென்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. கிராம மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளைப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, ஏற்கெனவே இரண்டு மூன்று முறை நான் சொல்லியது போன்று, கட்டணத்தைப் பொறுத்த

வரையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு கொடுத்தால் இரண்டு ஆண்டுக் காலத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் வசதிகளைச் செய்ய முடியு மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இப்போது சில கிராமப் பகுதிகளிலே ஓடிக் கொண்டிருக்கிற அல்லது ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள்கூட சில இடங்களிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. அமைச்சரவர்கள் சில ஊர்களிலே மீண்டும் துவங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். எனவே ஏற்கெனவே பேருந்து ஓடிக்கொண்டிருந்த எல்லாக் கிராமங்களிலும் பேருந்து வசதிகள் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அந்த அளவிலே என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிற தென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏற்கெனவே ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் எங்கே நிறுத்தப்பட்டிருந்தாலும், அவற்றை மீண்டும் இயக்க வேண்டும்; வசூலானாலும், ஆகாவிட்டாலும் இயக்க வேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறோம். குறிப்பிட்ட இடங்களிலே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்தியிருக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கிறோம். அரசின் கொள்கையே, வசதியில்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டு மென்பதுதான். எனவே இருப்பதை எடுப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. கடைசியாகக் கட்டணப் பிரச்சினைபற்றிச் சொன்னேன். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னேன். அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லவில்லை. என்னுடைய திருப்திக்காகச் சொல்லுவார்களென்று எதிர்பார்த்தேன். சொல்லவில்லை, பரவாயில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 13—2—1981 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் 69, 70, 71 ஆகியவை ஒத்திப் போடப்படுகின்றன.

**வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.**

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி சிறைச்சாலையிலிருந்து அவைக்கு வர ஏற்பாடு குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியோடு நான் அரசினிடத்தில் ஓர் வேண்டுகோளை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் இப்போது சிறைச் சாலையில் இருக்கிறார்கள். தடையை மீறிய வழக்கில் சம்பந்தப்பட்டிருப்ப தாகச் சொல்லலாம். அவர் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக செயல் படுவதற்கு, காவலிலேயே அவரை இங்கே கொண்டு வந்து, மீண்டும் காவலோடு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம் அவர் இந்த அவையில் உறுப்பினராகச் செயல்படுவதற்கான நிலை ஏற்படும். எனவே உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்து, அதை அரசினர் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரசுத் தரப்பிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னதாக எதிர்க் கட்சித் தலைவருடைய தகவலுக்காகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி எனக்குக் கடிதம் எழுதினார். சிறைச்சாலை சூப்பரின்டென்டுக்கு நான் கடிதம் எழுதி அவரை இங்கே அனுப்ப வேண்டுமென்று கடிதம் எழுதினார். அதுபற்றி விசாரித்ததில் அதுபோல் மரபு உயர்நீதி மன்றத்திலும், சுப்ரீம் நீதிமன்றத்திலும் இல்லை. தானே சட்டத்தை மீறி உட்பட்ட வழக்கில் தலைவர் ஈடுபடுவதற்கில்லை என்று சொன்னார்கள். சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் அதுபோல் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பது பற்றி நான் அவருக்குத் தகவல் கொடுத்து விட்டேன். அரசுத் தரப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. சட்டத்தை இயற்றுவதற்குரியவர்கள் நாம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். சட்டத்தை இயற்றுபவர்களே சட்டத்தை மீறுகின்றபோது, நடவடிக்கைக்கு ஆளாவது இயற்கை. சட்டப்படி அவர்கள் வெளியே வருவதற்கான வழி முறைகள் இருக்கின்றன. அவற்றை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 27

அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறைச்சாலையிலிருந்து இங்கு அவர்கள் காவல் துறையினரோடு அல்லது காவல் துறையினரின் பாதுகாப்போடு வருவது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுடைய பெருமைக்கும் சரியானது என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதுமட்டுமல்ல இப்போது காவல் துறை என்றாலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவராகவே வருவதற்குரிய வாய்ப்புகள் சட்டப்படி இருக்கின்றன. சட்டப்படியுள்ள அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு மாறாக தலைவரவர்களின் மூலமாக மேலவையின் மூலமாக வெளியிலே நடைபெற்றிருக்கிற ஒரு காரியத்திற்கு தங்களைத் தலையிடச் சொல்வது அல்லது இந்த அவையை தலையிடச் சொல்வது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

3. கவன ஈர்ப்பு.

(1) பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம் மற்றும் பா. ரா. தாமஸ் ஆகியோர் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதும், தொடர் நடவடிக்கையாக மீண்டும் போராட்டம் நடத்தவிருப்பதுமான நிலையில் ஆசிரியர், மாணவர், பொது மக்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 209-2 2 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



1981 பிப்ரவரி 27]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பொதுவாக ஆசிரியர்கள் எந்தத் துறையில் பணி புரிந்து தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டாலும், அவர்களுக்குப் பிழைப்பு ஊதியம் தரப்படுகின்ற ஒரு முறை நடைமுறையில் இருந்து வருகிறது. ஊராட்சித் துறை, அரசுத் துறை அனைத்திலும் இந்தச் சலுகை இருந்து வருகிறது. ஆனால், தனியார் துறை ஆசிரியர்களுக்கு இந்தப் பிழைப்பு ஊதியம் வழங்கப்படவில்லை. இந்தக் கோரிக்கை வருங்காலத்தில் நிறைவேற்றப்படும் என்கிற வகையில் தற்காலிக பணிநீக்கம் செய்யும் ஆசிரியர்களுக்குப் பிழைப்பு ஊதியம் ஒழுங்காகக் கொடுக்கப்பட வழிவகை செய்யும் முறையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்தும்) விதிகள், 1974 திருத்தப்பட இருக்கிறது என்று இதிலே தரப்பட்டிருக்கிறது. அதைக் காலதாமதம் இல்லாமல் விரைவிலே, அண்மையிலே நிறைவேற்றுவார்களா என்பதை அவைக்கு அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) விதிகள், 1974 பரிசீலிக்கப்பட்டு திருத்தப்பட இருக்கிறது. அதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குகின்றபோது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்கள் 1 ஆம் தேதி யார் யார் இடைநிலை ஆசிரியர்களாகத் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் தகுதி அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்களுக்கான ஊதியம் தரப்பட வேண்டும் என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அதேபோல, இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்கள் பி.டி. தகுதி பெற்றிருந்தால், அவர்களுக்கு பி.டி. ஆசிரியர்களுக்கான ஊதியம் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அப்படி பி.டி. தகுதி பெற்ற ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இருப்பது கல்வியின் தரத்தை உயர்த்த உதவிபுரிவதாக இருக்கும். இப்போது இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் கூட, வருங்காலத்திலாவது இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதி பெற்றிருந்தால், இடைநிலை ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தை வழங்குவதைப்போல் இவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அந்தத் தேதியிலிருந்து இந்தச் சலுகையை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

[1981 பிப்ரவரி 27

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதியைப் பெற்று, இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டு அந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இடைநிலை ஆசிரியருக்கான வேலையைச் செய்து கொண்டு பயனை அனுபவிக்கிறார்கள். அதற்குரிய வகையில் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படை இதிலே இல்லவே இல்லை. இருக்கின்ற வேலையில், தகுதிக்கேற்ற சம்பளம் கொடுப்பது என்பது அரசுத் துறையிலே எங்குமே ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று.

**(2) தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து.**

*** திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை நிர்வாகம், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்தும், தொழிலாளர் இலாகா அதிகாரிகளின் ஆலோசனைகளை ஏற்க மறுத்தும், தொழிற்சாலையை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்துள்ளது குறித்து".

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தப் பிரச்சினை குறித்து நேற்று நடைபெறுவதாக இருந்த பேச்சுவார்த்தை நடைபெற்றதா? உடன்பாடு ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** லேட்டஸ்ட் இன்பர்மேஷன். நேற்று பேச்சுவார்த்தை நடந்தது. மேலும் நடைபெறுவதாக இருக்கிறது. தொடர்ந்தும் நடைபெறும். பேச்சுவார்த்தை நடத்துபவர் ஜாயின்ட் கமிஷனர் ஆஃப் லேபர் திரு. ராஜா சுப்பிரமணியம்.

---

@213-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 பிப்ரவரி 27]

**திரு. ஆ. நல்லசிவன் :** மூலதனத்தோடு ஒப்பிடும்போது நிகர லாபம் அதிகமாக இருக்கிறது. என்.டி.சி. மில், கூட்டுறவு மில் விஷயங்களில் சிபாரிசு செய்தது போல் 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகையை இனாமாகவாவது கொடுக்க சிபாரிசு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் நடைபெறும்.

**4. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கையை அளித்தல்.**

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கையை அவை முன் சமர்ப்பிக்கிறேன்.

**5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதம்.—தொடர்ச்சி.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கின்றவர்கள் இல்லையென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, கடைசி நேரத்தில் பல பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி பல முறை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பேசப் போகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னாலேயே பெயர் கொடுக்க வேண்டும். பெயர் கொடுத்தவர்கள் இல்லையென்று நினைக்கின்றபோது, கடைசி நேரத்தில் பல பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தைச் சுருக்கி, விரிவாகப் பேசாமல் சுருக்கமாக விரைவில் பேசி முடித்து, ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சாரத்தினுடைய நிலையை நினைத்துப் பார்க்கிறபோது, நம்முடைய மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் மின்வெட்டில் இருக்கிற மாநிலமாக இருந்து வருகிறது. 75 சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் மின்வெட்டைச் சந்திக்கிறது என்ற

நிலையைப் பார்க்கும்போது, அதனால் தொழில் எந்த அளவுக்குப் பாதிக்கப் படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். மின்வெட்டினால் தொழில் பாதிக்கப் படுகிறது என்று சொல்கிறோம். ஆனால், இந்த மின்வெட்டால் இன்னொரு தொழில் வளர்ந்து விடுகிறது என்பதையும் நாம பார்க்க வேண்டும். அமெரிக்காவிலே ஒரு முறை 9 மணி நேரம் மின்சார வெட்டு ஏற்பட்டது. லிஃப்ட்கள் எல்லாம் இயங்காமல் அங்கங்கேயே நின்றுவிட்டன. மக்கள் இருளிலே இருந்தார்கள். அந்த ஆண்டுக் கணக்கைப் பார்த்தபோது, இன்னொரு புள்ளிவிவரம் கூடியிருப்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள். அந்த ஆண்டு மக்கள் தொகை அதிகமாகப் பெருகியிருந்ததை அவர்கள் கண்டார்கள். அதனால், இப்படி மின்வெட்டு இல்லாத ஒரு மாநிலமாக நம்முடைய மாநிலம் வரவேண்டும் என்பதிலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் காட்டிலும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அளவோடு பெற்று வளமோடு வாழ வேண்டும் என்பதோடு அதிக மின்சாரத்தைப் பயன்படுத்தி, குறைந்த அளவு குழந்தைகளைப் பெற வேண்டும் என்ற நிலை வரவேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே உருவாக வேண்டும்.

ஐ.நா. நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தை நான் அண்மையில் கண்டேன். ஒவ்வொரு நாடும் எந்த அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது என்பதும், அந்த நாட்டின் பரப்பளவையொட்டி ஒவ்வொரு தனி மனிதனும் எந்த அளவுக்கு மின்சாரத்தை உபயோகிக்கிறான் என்ற கணக்கையும் பார்க்கும்போது, 1961-லே இந்தியாவிலே ஒரு தனி மனிதன் 75 யூனிட் மின்சாரத்தைப் பயன்படுத்தினான் என்பதும், 1976 ஆம் ஆண்டு கணக்குப்படி 152 யூனிட்டுகள் அவன் பயன்படுத்தினான் என்ற கணக்கையும் பார்க்கும்போது, மின்சாரத்தைப் பயன்படுத்துவது இரண்டு மடங்காக நம்முடைய நாட்டிலே உயர்ந்திருப்பதைப் பார்க்கலாம். அமெரிக்க நாட்டிலே 1967-லே 3 ஆயிரம் யூனிட்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்க 1976-லே, 9,014 யூனிட்டுகள் ஒரு தனி மனிதன் பயன்படுத்தும் அளவுக்கு உயர்ந்து அந்த உயர்வின் அளவு 3 மடங்காக இருக்கும் நிலையைப் பார்க்கும்போது, வளர்ச்சிக்கேற்ற திட்டங்களை நாம் இன்னும் உருவாக்க வேண்டும் என்ற உண்மை புலனாகிறது. நம்முடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற கருத்துப்படி, மின்சக்தி ஆணைக் குழுவிற்கு சரியான கணக்கைத் தரவில்லை என்பதும், தமிழ் நாட்டின் தேவையைச் சரியான முறையில் நாம் அந்தக் குழுவிற்கு உணர்த்தவில்லை என்கிற கருத்தையும், நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.





இங்கே மின்வெட்டு இருக்கின்ற நேரத்திலே மின்சாரத்தைப் பயன்படுத்தும் அளவும், மற்ற மாநிலங்களிலே மின்வெட்டு இல்லாத நேரங்களிலே மின்சாரத்தைப் பயன்படுத்தும் அளவும் கணக்கிடப்பட்டுப் பார்க்கின்றபோது, இன்னும் 10 ஆண்டுக் காலத்திலே கணக்கிட்டுச் சொல்லும்போது, 3.80 சதவீதமாகவும் 11 ஆண்டுக் காலத்திலே கணக்கிடும்போது 5.7 சதவீதமாகவும் உயர்ந்து, இப்படியே நமக்குத் தரப்படுகின்ற மின்சாரத்தின் அளவு குறைந்து கொண்டே போகுமானால், இந்தியாவிலேயே குறைந்த அளவு மின் சக்தி நமக்குக் கிடைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு நம்முடைய தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையும் பாதிக்கப்படும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதோடு, தனி மனிதன் பயன்படுத்தும் அளவைப் பார்க்கும்போது, உலக நாடுகளில் இந்தியா எந்த அளவுக்குக் குறைவாக மின்சாரம் பயன்படுத்துகிறது என்பதும், ஒட்டுமொத்தமாக இந்தியாவிலே மின்சாரம் தயாரிப்பதற்கு எந்த அளவுக்கு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்பதும், அப்படிக் கவனம் செலுத்தி தேவையான அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமானால்தான் இந்த நாடு முன்னேற வழி ஏற்படும் என்பதும் நாம் முக்கியமாக சிந்தித்துப் பார்க்கவேண்டிய பிரச்சினைகளாகும். ஸ்வீடன் நாட்டை எடுத்துக்கொண்டால், அந்த நாடு 4,50,000 சதுர மைல் பரப்புள்ள ஒரு நாடு. அந்த நாட்டிலுள்ள மக்கள் தொகை 83 லட்சம். அங்கு தயாரிக்கப்படும் மின்சாரத்தின் அளவு 86,416 மில்லியன் யூனிட். தனி மனிதன் 9,471 யூனிட் அங்கே பயன்படுத்துகிறான். அந்தச் சின்ன நாட்டிலே தயாரிக்கப்படும் இயந்திரங்களை உலக நாடுகள் எல்லாம் விரும்பி வாங்குகின்றன. இங்கு திருச்சியிலே இருக்கும் 'பெல்' நிறுவனத்தில் கூட அந்த இயந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள். அந்த நாட்டோடு இணைந்து 'எலக்ட்ரோ பெரிப்பிரேட்டர்' அமைத்திருக்கிற நிலையையும் நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, மின்சாரத்திலே ஒரு நாடு எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறதோ, மின்சாரம் எந்த அளவுக்கு ஒரு நாட்டால் பயன்படுத்தப்படுகிறதோ, அந்த அளவுக்கு அந்த நாடு தொழிலிலே வளர்ச்சியடைகிறது என்பது உண்மை. ஆகவே, அதற்குரிய வழிவகைகளை நாம் காண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்திய நாட்டைப் பார்க்கும்போது, 32 லட்சத்து 88 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டு 62½ கோடி மக்கள் தொகையுடன் விளங்குகிறது. இந்த நாடு 95,335 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. தனி மனிதன் 182 யூனிட் மின்சாரம் தான் பெறுகிறான். இந்த நிலைமைகளை நாம் பார்க்க வேண்டும். கி.பி. 2,000 ஆண்டிலே இந்தியாவிற்கு மின்சாரம் எந்த அளவுக்

குத் தேவைப்படும் என்று ஒரு கணக்கு போட்டிருக்கிறார்கள். அந்தக் கணக்குப்படி, இப்போது உற்பத்தி செய்யப்படும் அளவை விட 4 மடங்காக நமது தேவை உயர்ந்து அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய சூழ்நிலைகளையெல்லாம் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம்.

நமது தேவை இப்படி இருக்கும்போது, நாம் எந்த அளவுக்கு மின்சாரத்தைப் பற்றிக் கவனம் செலுத்துகிறோம் என்பதையும், நாட்டில் அதுபற்றி என்ன கருத்து தரப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஹைதராபாத்திலே தென் மாநிலங்களின் மின்சார அமைச்சர்களுடைய மாநாடு நடந்தது என்பதும், அதிலே மத்திய அமைச்சர் ஒரு கருத்தைத் தெரிவித்தார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். The Minister favoured the idea of having an All India Engineering Service which should include Power Engineers. அகில இந்திய ரீதியாக 'மின்சார எஞ்ஜினியரின் அமைப்பு' உருவாக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். 1960-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் மின்சார ஊழியர்களுடைய கூட்டத்திலே, இங்கே அமைச்சராக அமர்ந்திருக்கிற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே நடந்த கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட ஒரு அமைப்பு நாட்டுக்குப் பயன்படாது என்பதும், ஒரு மாநிலத்தினுடைய நலத்திற்கு உகந்ததல்ல என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள். அடுத்து, இன்னொரு கருத்தையும் அந்த மாநாட்டிலே தெரிவித்தார்கள். The Union Minister who was addressing the Conference of Power Ministers of Southern Region here on Tuesday called upon the State Governments to mobilise resources to finance Power projects and not depend solely on the Centre. மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டாம், மாநில அரசே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்துதான் அது. அதனை இப்போது சொல்லியிருக்கக்கூடாது. இந்தியாவிலே திட்டங்கள் உருவாக்கப்பட்ட நேரத்திலே சொல்லியிருந்தால், நியாயமாக இருந்திருக்கும். ஒரு மாநிலத்தின் மின்சார வளர்ச்சிக்காக எடுக்கப்படுகிற கவனம், அதிலே வருகிற லாபம் அந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல. துணைபுரிகிற மாநிலங்களுக்கும் பயன்பட வேண்டும். மின்சாரம் தேவைக்கு அதிகமாகக் கிடைக்குமானால், தண்ணீரைப் போல அதைத் தேக்கி வைக்க முடியாது. தேவைக்கு அதிகமாகக் கிடைக்குமானால், அதை யாருக்காவது கொடுக்க வேண்டும். அந்த நிலையிலே, அண்டை



மாநிலங்களுக்கும் இது பயன்படுவதாலே இதிலே மத்திய அரசு தலையிடுவது, மத்திய அரசு பொறுப்பு ஏற்பது நியாயம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். "When any one State supplies power to another State, it should be on the reasonable cost and the difficult situation should not be exploited by any State." மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்கின்ற கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களை நாம் கேட்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. நாம் அவர்களிடம் மின்சாரம் கேட்கும்போது, ஏதோ ஒரு வியாபாரத்தைப்போல நினைத்து அவர்கள் கொடுக்கின்ற ஒரு நிலை இப்போது இருக்கிறது. "கூடுதல் விலை நீங்கள் கொடுக்க முடியுமா?" என்று கேட்டு வியாபாரம் ஆக்குகிறார்கள். அதுமட்டுமல்ல. இன்னும் ஒரு விஷயம் என்னவென்றால், "நாங்கள் தருகின்ற மின்சாரத்தைக் கொண்டு உங்கள் மாநிலத்தில் இந்தக் காரியத்திற்குப் பயன்படுத்துங்கள்" என்ற ஒரு கட்டாயத்தை அவர்கள் விதிக்கும்போது, ஒரு மாநிலத்தினுடைய உரிமைகளுக்கு, ஒரு மாநிலத்தினுடைய நல்ல கருத்தையும் அனைத்து மாநிலங்களும் எண்ணிப்பார்க்க அளவுக்கு தாக்குதல் வரும் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, இந்த அரசினுடைய எண்ணங்களுக்கு மறைமுகமாக சில தொழிலதிபர்களாலே, எந்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் தெரிவித்திருப்பது போல ஒரு "பவர் பாலிசி' எப்படி மின்சாரத்தை உற்பத்தி செய்வது, உருவாக்குவது, உபயோகிப்பது என்ற புதிய திட்டத்தைப்பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

அதோடு, Mr. Vikram Mahajan, Union Minister of State for Energy requested the States to ponder over the high cost of the Inter-State disputes which delayed several projects. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் பல மோதல்களாலே பல திட்டங்கள் நடைபெறாமல் இருக்கின்றன என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதனாலே, இதைத் தவிர்க்கும் நல்ல முயற்சியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இப்போது அண்டை மாநிலங்களை அன்போடு அணுகியிருக்கிறார்கள். அண்மையிலே திருவனந்தபுரம் சென்றிருந்த போது இதுவரை அடைக்கப்பட்டிருந்த கதவு, இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. முதலில் 'இல்லை' என்று சொன்னவர்கள் 'பார்க்கிறோம்' என்று சொல்லும் அளவுக்கு அந்தக் கதவு இப்போது திறந்திருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய நல்ல

இதயம் தான். நாம் ஒருவரை விரும்புகிறோம் என்று சொன்னால், அவரை மனத்தாலே விரும்புகிறோம். அவர் அதற்கு விரோதமாகப் போனால், மனம் கசந்து அவரை மறந்துவிடுகிறோம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், இதயத்தாலே ஒருவரை விரும்பி அவர் ஏற்றுக்கொள்கிறார். அப்படி இதயத்தாலே விரும்பப்படுகிறவர் விரோதம் செய்கிறபோது, அவருடைய இதயம் கசக்கிறது. அந்த நல்ல இதயத்தைப் பெற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை அண்டை மாநிலத்தைச் சார்ந்தவர்கள் அன்போடு புரிந்து கொண்டு, இன்று நயக்காக அவர்களே வாதாடிப் பெற்றுத்தருகின்ற ஒரு நல்ல நேரம், நல்ல சமயம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நாம் அதை நழுவ விட்டுவிடக்கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொண்டு அந்த முயற்சியிலே வெற்றி காண வேண்டும் என்று விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், லாப நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகும் முறை மாற வேண்டும். அதோடு மின் உற்பத்தியைப் பொறுத்தவரை, மத்திய அரசு மூலமாகக்கூட செயல்படலாம் என்ற கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நீர் மின்சார உற்பத்தி (என்.எச்.பி.சி.), அனல் மின்சார உற்பத்தி (என்.டி.பி.சி.) ஆகிய நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளின் மூலமாக எடுத்துக்கொள்ளும்போது, இதில் அரசியல் குறுக்கீடு இல்லாமல், 'எங்கே மின்சாரம் கிடைத்தாலும், அனைவருக்கும் அதில் பயன் இருக்கிறது' என்ற நோக்கத்தோடு இதிலே அணுக வேண்டும். தென் நாட்டிலே மேற்கு-கிழக்கு நோக்கிப் பாயும் நதிகளிலேயிருந்து 11 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் எடுக்கலாம் என்று டாக்டர் சௌத்திரி அவர்கள் "Power Resources of India" என்ற நூலிலே குறிப்பிடுகிறார். இதையெல்லாம் எண்ணிப் பார்த்து மின்சாரத்தைப் பெருக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும். இப்படி ஒரு பொது மத்திய நிறுவனம் முயற்சி எடுத்துக்கொண்டால், காவேரிப் பிரச்சினையாகட்டும், ஒகேனக்கல் திட்டமாகட்டும், அவைகள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேற வசதி ஏற்படும். மத்திய நிறுவனங்களிலே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லாதது ஒரு குறை என்று பலரும் சொல்கிறார்கள் Central Electrical Authorities Rural Electrification Corporation. Department of Power Central Water and Power Commission இவை போன்ற மத்திய நிறுவனங்களிலே ஒவ்வொரு மாநிலத்தையும் சேர்ந்தவர்கள் இருந்தால்தான், அந்த மாநிலத்தின் சார்பாக உள்ள பிரச்சினைகளை நன்றாக வலியுறுத்த முடியும். தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள் அங்கமாக



இல்லாததால், நம்முடைய பிரச்சினைகளைச் சரியாக வற்புறுத்த இயலவில்லை என்று சிலர் கருதுகிறார்கள். அதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது தோட்டங்களிலே வீடு அமைத்துக்கொள்கின்ற வழக்கம் கோவை, சேலம் போன்ற மாவட்டங்களிலே இருக்கிறது. முன்பெல்லாம் அவர்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று சொன்னால், அவர்கள் 10 சதவீதம் வருவாயைக் கணக்கிட்டு மின் இணைப்பு வழங்கும் நிலை இருந்ததை இப்போது மாற்றியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது. அப்படி ஒவ்வொருவரும் தனியாக இணைப்பு கேட்கிறபோது, அதற்குத் தேவைப்படும் கம்பம், கம்பி போன்றவற்றுக்கு அவர்கள் காசு கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. கிராமங்களிலே மக்கள் குடி போக வேண்டும், நகரங்களிலேயே மக்கள் நெருங்கி இருக்கக்கூடாது என்ற நல்ல கொள்கையின் அடிப்படையில், இப்படி கிராமங்களிலே குடியேறுபவர்களுக்கு அவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு மின்சார இணைப்பைக் கேட்டால், அதற்குத் தேவைப்படும் கம்பம், கம்பி போன்றவற்றிற்கு அவர்கள் காசு கொடுக்க வேண்டும் என்று இருப்பதை நீக்கிவிட்டால், தவிர்த்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்திலே கோழிப் பண்ணை இப்போது நிறைய வளர்ந்திருக்கிறது. அதற்கென்று வரி எதுவும் இங்கே கிடையாது. ஆனால், இப்போது அதற்கென்று தனியாக வரி இருக்கிற கர்நாடக மாநிலத்திலே போய் கோழிப் பண்ணை வைத்துக்கொள்ளலாம் என்று மக்கள் நினைக்கின்ற அளவுக்கு இப்போது சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், கோழிக் குஞ்சுகளை வளர்க்க ஆரம்ப காலத்திலே மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறார்கள். அதற்குத் தேவைப்படும் மின்சாரத்திற்கு 35 பைசா வசூலிக்கிறார்கள். அதற்குத் தேவைப்படும் வெளிச்சத்திற்கு 15 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். இப்படியாகக் கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இப்போது கணக்கிடுகின்ற முறையில் சில தவறுகள் ஏற்பட்டு யூனிட்டுக்கு 75 பைசா என்று வசூலிக்கின்ற நிலையும், 6 மாதத்திற்கு வசூலிக்கின்ற நிலையும் இருப்பதால், அதிலே சிரமங்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பம்புசெட்டுக்கு மின் இணைப்புக் கொடுப்பதைப் பொறுத்தவரையில், வருஷத்திற்கு 2½ லட்சம் பேர்கள் மனு செய்து 30 ஆயிரம் பேருக்கு இணைப்பு தரப்படுகின்ற நிலையைக் கொஞ்சம் சீர்திருத்தி உயர்த்த வேண்டும்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 பிப்ரவரி 27

இணைப்பு கொடுப்பது 1 லட்சம் என்று உயர்த்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற கொள்கையிலே மாதம் 10 ஆயிரம் பேருக்கு வழங்கும் நிலையைக் கொஞ்சம் விரைவுபடுத்தி வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற அந்த நல்ல திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கும் அளவுக்கு, பஞ்சாப், ஹரியானா, கேரளா போன்ற தன்னிறைவு பெற்றிருக்கக்கூடிய மாநிலங்களைப் போல, நாம் தன்னிறைவு பெற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இன்னும் 159 கிராமங்களும், 390 குக்கிராமங்களும் தான் எஞ்சியிருக்கின்றன. மொத்தம் உள்ள 549 கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், தமிழகமும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக, தன்னிறைவு பெற்ற மாநிலங்கள் மூன்றோடு சேர்ந்து நான்காவதாக இடம்பெறும்.

மின்சாரத்தை வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இருப்பதை இழக்காமல் இருப்பதற்கு பல வழிமுறைகளை நாம் கையாளலாம்.

(முற்பகல் 11.20)

ஜப்பான் நாட்டில் "டிமாண்டு கண்ட்ரோல் மீட்டர்" என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் ஒரு இயந்திரத்திற்கு எவ்வளவு மின்சாரம் தேவையோ அந்த அளவு மின்சாரம் மட்டும் தரப்படுகிறது. இதன் காரணமாக மின்சாரம் அங்கே மிச்சப்படுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அது மட்டுமல்ல ஜப்பான் நாட்டில் "Ultra High Voltage" என்ற முறையில் 550 கே.வி.ஏ-வும் கனடா நாட்டில் 700 கே.வி.ஏ.வும் மின்சாரத்தை அனுப்பும் முறையைக் கையாண்டு வருகிறார்கள். இப்போது நமது நாட்டில் போபாலில் நாம் 400 கே.வி.ஏ. மின்சாரத்தைக் கடத்தும் சாதனங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஜப்பான் மற்றும் கனடா நாட்டில் கையாளப்படும் முறைகளை நாமும் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தைக் குறைவாகச் செலவு செய்யவும் அதன் மூலம் சிக்கனத்தைக் கையாளவும் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே பவர் ஸ்டேஷன்களில் நாம் அதனுடைய முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் 300 மெகா வாட் மின்சாரம் தேவை என்றால் அங்கே 500 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்யும் நிலையத்தை உருவாக்குகிறார்கள். அதிலிருந்து 300 மெகா



1981 பிப்ரவரி 27] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

வாட் மின்சாரத்தை மட்டும் எடுக்கிறார்கள், அதாவது, அதற்காக 5 பாய்லர்கள் இருந்தால் ஒன்றைப் பாதுகாப்பாக வைக்கிறார்கள். ஒன்றைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் வைத்துக் கொள்கிறார்கள். மற்ற 3 யூனிட்களை மட்டுமே உண்மையில் பயன்படுத்துகிறார்கள். ஆனால், நமது நாட்டிலோ நாம் 5 யூனிட்டுகளையும் பயன்படுத்தி அதன் மூலம் மின் சக்தியையும் எடுத்து வெகு வேகமாக இயந்திரங்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். இதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேவையான அளவுக்கு மட்டுமே மின்சாரத்தை உபயோகிக்கும் கருவியை ஜப்பான் நாட்டில் வைத்துக்கொண்டிருப்பதால், மிகுந்த லாபம் அடைகிறார்கள். ஆனால் நமது நாட்டிலோ அப்படிப்பட்ட முறை இல்லாத காரணத்தால், இரு வகைகளில் நமக்கு நட்டம் ஏற்படுகிறது. ஒன்று மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. மின் சக்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தொழில் பாதிக்கப்படுகிறது. அதைப் போலவே மின் சக்தியை மீறிச் செயல்படுவதன் காரணமாகவும் துண்டிப்பு ஏற்பட்டு அதனாலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே எந்த அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு மட்டுமே பயன்படுத்த உதவி செய்யும் கருவிகளையும் நாம் உபயோகிக்க வேண்டும். அமெரிக்க நாட்டில் மைக்ரோ கம்ப்யூட்டர் முறையைக் கையாள்கிறார்கள். ஒரு காருக்கு 5 சிலிண்டர் தேவை என்றாலும், எந்த எந்த இடத்தில் 3 சிலிண்டர் மட்டும் வேலை செய்தால் போதுமோ அந்த இடங்களில் 3 சிலிண்டர் மட்டுமே வேலை செய்யக்கூடிய வகையில் மைக்ரோ கம்ப்யூட்டர் என்ற கருவியை உபயோகிக்கிறார்கள். அதைப் போலவே ஒரு 'லேத்'-ல் எந்த அளவுக்கு ஒரு பொருளைக் கடைய மின்சார சக்தி தேவையோ அதை மட்டுமே அளந்து தருகிற இயந்திரச் சாதன வசதிகளையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதன் மூலமெல்லாம் அந்த நாடுகளில் மின்சாரத்தை மிச்சப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிக்கன நடவடிக்கைகளை நாமும் நமது மாநிலத்தில் மேற்கொள்ள வேண்டும்.

அதைப்போலவே மின் திருட்டைத் தவிர்க்க கூடுமானவரை தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இறுதியாக, நமது மாநில மின்துறை அமைச்சர் அவர்கள் தென் மாநில மின்துறை அமைச்சர்களின் மாநாட்டிற்கு அனுப்பிய செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "Having exploited almost all resources the state had to rely on Thermal and Nuclear power" இது சம்பந்தமாகத்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்கூட "எனெர்ஜி கமிஷன்" ஒன்றை உருவாக்குவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒரு

நல்ல யோசனை என்பதையும் அதன் மூலம் நமது மாநிலத்திற்குப் பயன்பட வேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, சூரிய ஒளி, மற்றும் கடல் அலையிலிருந்து மின்சாரம் பெறுதல் நிலையையும் நாம் ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டும். சீனாவில் இப்படி கடல் அலைகளிலிருந்து மின் சக்தி எடுப்பதைக் கையாண்டு வருகிறார்கள். இன்றையதினம் அது 3-ஆவது டைடல் வேவ் பவராக இருக்கிறது. உலகத்திலேயே அது 3-ஆவது இடத்தைப் பெறுகிறது. 40 கிலோ வாட் டைடல் ஸ்டேஷனோடு உருவான சீனா இன்றைக்கு 200 கிலோ வாட் அளவுக்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. அதோடு இரஷ்ய நாட்டைப் போல் சோலார் செல் மூலம் 500 கிலோ வாட் மின்சக்தியைத் தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதைப் போலவே குறைந்த அளவு மின்சாரத்தை 20 ஆண்டுக் காலத்திற்குக் காக்க முடியும் என்ற திட்டத்தையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இத்தகைய திட்டங்களையெல்லாம் நமது கிராமப்புறங்களுக்குக் கொண்டு வருவது நமக்கு லாபகரமாக இருக்கும்.

நம்முடைய நோக்கமே மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அதை வளப்படுத்த வேண்டும் என்பது. அதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். கடந்த காலங்களில் சில தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். சமயநல்லூரில் இருந்ததையும் இழந்த நிலையையும் அதைக் குறித்து சர்க்கார் வருத்தப்பட்ட சங்கதியையும் நாம் அறிவோம்.

> "கோயில் சிலை செய்வோம்; கோயிலில் பூசை செய்வோம்
> கோயில் சிலை திருடோம்"

என்ற வரிகள்தான் எனக்கு நினைவுக்கு வருகின்றன. அந்த முறையில் இல்லாமல் தமிழகம் தொழில் துறையில் முன்னேற்றம் காண வேண்டும். அதன் மூலம் நாடு வளம் பெற நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இத்துறையில் அதிகமான அளவுக்குப் படித்துத் தேர்ச்சி பெற்று, சிறந்த மாணவராக வெளிவந்து, இத் துறையிலேயே அலுவலராகப் பணியாற்றி, இத்துறைக்கான அமைச்சர்



பொறுப்பையும் ஏற்று செயல்பட்டுக் கொண்டு வருகிறார். அவருடைய பதவிக் காலத்தில் தமிழகத்தில் மின்வெட்டு என்ற அவல நிலையே இருக்கக்கூடாது என்று பொதுமக்கள் மிக அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். அந்த அளவுக்கு அவருடைய ஆற்றலிலும் திறமையிலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மின் வெட்டுக் குறைபாடு என்பது அவருடைய பதவிக் காலத்தில் நிரந்தரமாக நீக்கப்பட்டு, தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வேண்டுமென்றும், இனி தமிழகம் மின் வெட்டு என்ற அவப் பெயருக்கு ஆளாகாமல் இருப்பதற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வெற்றி காண்பார்கள் என்றும் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப்போலவே நாங்களும் அவர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

இயற்கை சூழ்நிலை காரணமாக நமக்கு ஏற்படுகிற மின்வெட்டு என்ற அவல நிலையைத் தவிர்க்க நாம் மாற்று ஏற்பாடுகளைப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது. நமது மாநிலம் பருவ மழையையே நம்பியிருக்கும் மாநிலம். பருவ மழையால் அடிக்கடி ஏமாற்றப்பட்டு வருகிற மாநிலம் நமது மாநிலம். எனவே இயற்கையின் நுட்பமான இந்த நிலையை அடிப்படையாக வைத்து மின்வெட்டு இனி இல்லாத வகையில் மாற்று ஏற்பாடுகளை நாம் பரிசீலனை செய்து மின் தட்டுப்பாட்டை நிரந்தரமாகவே போக்கத் தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இதற்கான 'மாற்று ஏற்பாடுகளைக் குறித்து பல்வேறு இடங்களில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே நாம் அனல் மின்சக்தி மூலம் மின் பற்றாக்குறையைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கும் போதே, அணுசக்தியை எந்த அளவுக்குப் பயன்படுத்தி நாம் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதும் உண்மை. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், சூரிய வெப்பத்தையும் மற்றும் கடல் அலையையும் பயன்படுத்தி அதிலிருந்து ஆக்க சக்தியை உருவாக்கி, அவற்றின் மூலமாகவும் எவ்வாறு இந்த நாட்டு மக்களுக்கு நாம் பயன் கிட்டச் செய்ய முடியும் என்பதையும் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். சான்றாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து சூரிய வெப்பத்தை ஆக்க சக்திக்காகப் பயன்படுத்துவது குறித்து அற்புதமான ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆசிரியர்களும் மாணவர்களுமாகச் சேர்ந்து பல அரிய கண்டு

பிடிப்புகளைச் செய்திருக்கிறார்கள். இந்தப் புதிய கண்டுபிடிப்புகளையெல்லாம் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்த முடியும் என்பதை ஆராய வேண்டும். இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் எந்த அளவுக்கு மின் இழப்பை நாம் ஈடு கட்ட முடியும் என்பதையெல்லாம் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கண்டுபிடிப்புகள் நம் மாநிலத் தேவைகளுக்கு எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு பல்வேறு இடங்களிலும் ஆராய்ச்சி செய்து அவற்றின் மூலமாக மின் இழப்பை ஈடுகட்ட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கிராமங்களில் உள்ள தெரு விளக்குகள் இப்போதும் சரியாக எரிவதில்லை. இப்படிப்பட்ட புகார் ஏற்கெனவே இருந்துதான் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலிருந்து தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை மின் வாரியமே ஏற்றுக்கொண்டது. இப்போது மின் வாரியமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும், இக்குறைபாடு பரவலாகப் பல இடங்களிலும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் இக்குறைபாடு பரவலாகச் சொல்லப்படுவது தற்போது வழக்கமாகிவிட்டது. இந்த நிலைக்கு மின் வாரியம் ஆளாகக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். தெரு விளக்குப் பராமரிப்புப் பொறுப்பை மின் வாரியமே மேற்கொண்ட பிறகும், தெரு விளக்குகள் சரிவர எரிவதில்லை என்ற நிலை இனி வரக்கூடாது என்ற கருத்தை நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் என்பது இந்த அரசின் பாராட்டத்தகுந்த, சிறந்த ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கும் மின் வசதியை உருவாக்கித் தரும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக எல்லோராலும் பாராட்டப்படுகிற திட்டமாக இது இருந்தாலும், இந்தத் திட்டத்தில் இருக்கிற ஒரு குறைபாட்டையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் இணைப்புக் கோரி போடப்படும் மனுக்களை வாங்குவதில் பொது மக்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இதைத்தான் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



இதற்கான விண்ணப்ப மனுக்கள் பல்வேறு விலைகளில் பல்வேறு இடங்களில் தனியார்களால் விற்கப்படுகின்றன. ரூபாய் 4, ரூபாய் 5 இன்னும் ரூபாய் 10 என்ற அளவுக்குக் கூட அநியாயமான விலைக்கு இந்த மனுக்கள் விற்கப்படுகின்றன. காரணம் இந்த மனுக்கள் தனியாரால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதன் காரணமாக ஏழை எளிய மக்கள் இந்த மனுக்களைப் பெறுவதில் மிகுந்த அவதிக்கு ஆளாகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு மாற்று ஏற்

(முற்பகல் 11-30)

பாடாக மின்சார வாரியம் இந்த மனுக்களை அச்சடித்து, குறைந்த விலையில் மின்சாரத் துறையின் மூலமாக விற்பனை செய்யலாம். இது எளிதாக மக்களுக்குக் கிடைக்கும். அதே நேரத்தில் குறைந்த விலையிலும் கிடைக்கும். இதை மின்சார வாரியம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, லைசென்ஸ் பெற்ற ஒயரிங் காண்ட்ராக்டர்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். லைசென்ஸ் பெற்ற ஒயரிங் காண்ட்ராக்டர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கட்டணம் ஒன்று இருக்கிறது. பல இடங்களிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கட்டணத்திற்கு அதிகமாகக் கேட்கிறார்கள். அதிகமாகக் கட்டணம் கொடுத்தாலொழிய சான்றிதழ்களைக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அரசு நிர்ணயித்திருக்கிற குறைந்தபட்ச கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு மின் இணைப்பைக் கொடுக்கும் நிலை இல்லை என்ற புகார் மாநில முழுவதும் இருக்கிறது. இது நியாயமான புகார் கூட. பயிற்சி பெற்ற, மின்சாரத் துறையில் டிப்ளமா பட்டம் பெற்ற, ஏராளமான இளைஞர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை மின்சார வாரியமே நியமனம் செய்து, லைசென்ஸ் பெற்ற ஒயரிங் காண்ட்ராக்டர்களுக்கு அனுமதி கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் மூலமாகச் சான்றிதழ்கள் கொடுப்பது என்ற நிலைமையை ஏற்படுத்தினால் நல்லது. அதற்குரிய கட்டணத்தைக் கூட வசூலிக்கலாம். இப்படிச் செய்வதால் இடையிலே உள்ள இடைத் தரகர்களுக்கு இடம் இல்லாமல் போகும், வேலையில்லாத பட்டதாரிகளுக்கும் வேலை கிடைக்கும். மின்சார வாரியத்திற்கும் வருமானம் வரும். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மின் கட்டணத்தை வசூலிப்பதில் இப்போது இருக்கின்ற ஏற்பாடுகளில் உள்ள குறைபாடுகள் என்னவென்பது எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். மின் கட்டண அலுவலகங்களுக்குச் சென்று பொது மக்கள் மின் கட்டணத்தைச் செலுத்துவதில் அவர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகள், நடைமுறைப் பிரச்சினைகள் எல்லாம் மின் வாரியத்திற்கு நன்றாகத் தெரியும். குறிப்பிட்ட சில நாட்களில் அலுவலகங்களில் ஏராளமான கூட்டம் கூடி தேங்கி நிற்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். இந்தக் குறைபாட்டை நீக்க, நகராட்சிகளில் பில் கலெக்டர்கள் இருப்பதைப் போல, மின் வாரியத்திலும் பில் கலெக்டர்கள் பதவியை ஏற்படுத்தி, அவர்கள் வரியை வசூலிப்பதைப் போல இவர்கள் வீடுதோறும் சென்று மின் கட்டணத்தை வசூல் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்கினால், பொது மக்களுக்குத் தொல்லைகள் குறையும், பல பேருக்கு வேலை வாய்ப்பையும் உண்டாக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதுகுறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

'திரி ஃபேஸ் லைன்' எளிதாகக் கிடைப்பதில்லை. மீட்டர் இல்லையென்பதற்காக இணைப்புக் கிடைப்பதில்லை என்ற புகார் பரவலாக இருக்கிறது. இந்தக் குறையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில் நான் இருப்பதால், அது குறித்த ஒரு கோரிக்கையை விடுக்க விரும்புகிறேன். கல்வித் துறையில் முறைசாராக் கல்வித் திட்டம் நடைபெறுகிறது. பள்ளிகளுக்குச் சென்று படிக்க வாய்ப்பு இல்லாத இளைஞர்கள், முதியவர்கள், இரவுப் பள்ளிக்குச் சென்று படிக்கக் கூடிய ஏற்பாடுகளை முறைசாராக் கல்வித் திட்டத்தின் மூலம் அரசு செய்திருக்கிறது. அதற்கு நல்ல ஆதரவு இருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் மின்விளக்கு வசதி இல்லை. மண்ணெண்ணெய் லாந்தர் விளக்கின் ஒளியில் பாடம் நடத்தப் படுகிறது. இதனால் சரியான கவர்ச்சியில்லை. ஆகவே என்னுடைய கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை, மின்சார வாரியம் வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் துவக்கப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் மின் விளக்கு வசதி கொடுத்துவிட்டால், கிராமப்புறங்களில் முறைசாராக் கல்வி சிறப்பாக நடைபெறுவதற்கும், இரவு நேரங்களில் கிராம மக்கள் வந்து படிப்பதற்கும் உதவியாக இருக்கும். ஆகவே இது குறித்து மின்சார வாரியம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





சென்னை மாநகராட்சியில் சென்ற ஆண்டு 12 பஞ்சாயத்துக்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட பின்னர் அந்தப் பஞ்சாயத்துக்களில் உள்ள மக்கள் அனைவரும் ஒழுங்காக மாநகராட்சிக்கு வரியைச் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் வரியைச் செலுத்திய பிறகும் கூட தெரு விளக்கு வசதிகள் செய்து தரப்படவில்லை. சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், வேளச்சேரி, தரமணி, திருவான்மியூர் போன்ற மூன்று பஞ்சாயத்துக்களில் தெருவிளக்கு வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை. மாநகராட்சிக்கு வரி செலுத்தக் கூடிய உரிமையை அவர்களுக்குக் கொடுத்த பின்னரும், அவர்கள் தங்கள் கடமையைச் செய்த பின்னரும், தெருவிளக்கு வசதியை அவர்களுக்குச் செய்யாமல் இருக்கிறோம் என்றால், இதில் என்ன நியாயம் இருக்கிறது ? ஆகவே இது குறித்து மின்சார வாரியம் பரிசீலனை செய்து தக்க பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டு, அவர்களுக்குத் தெரு விளக்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை வரவு-செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கொள்கைப் பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிடும்போது, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சார உற்பத்திக்காக திட்டம் தீட்டுகிறபோது, மாநில அளவிலே செய்வதுதான் நல்லது என்றும், பிரதேச அடிப்படையிலே செய்வது சிக்கலை உண்டாக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். பிரதேச அடிப்படையிலே பார்க்கும்போது, உபரியாக வைத்துக் கொண்டிருப்பவர்கள், "அரிசியை சிமென்டை நீங்கள் கொடுத்தால்தான் நாங்கள் மின்சாரத்தைக் கொடுப்போம்" என்று பேரம் பேசுகிறார்கள். ஆகவே நமக்குத் தேவைப்படுகிற மின்சாரத்தை நியாயமான முறையில் பெற முடியாத நிலைமை இருப்பதாலும் உபரியாக உள்ள மாநிலத்தை நாம் சார்ந்திருக்க வேண்டிய நிலைமை இருப்பதாலும், பிரதேச அடிப்படையில் திட்டங்களைப் போடுவது சரியல்ல என்பது அரசின் கருத்து. அந்த முறையிலே அதை நான் வரவேற்கிறேன்.

அடிக்கடி பற்றாக்குறை ஏற்படுவதால், அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதால், இதை மத்திய அரசின் பொறுப்பிலே விட்டுவிடலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூட பேசினார்கள். ஆனால், நான் அந்தக் கருத்திலிருந்து மாறுபடுகிறேன். அது மட்டுமல்ல. மின்சார

அமைச்சர் அவர்கள் கூட, சென்ட்ரல் கிரிட்டில் சேருவதால், அனுகூலம் இருப்பதாகப் பேசியதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அது சரியல்ல. நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காரணம், தன் கையில் உள்ள அதிகாரத்தை அரசியல் நோக்கோடு பயன்படுத்தும் ஆட்சி தான் மத்தியில் உள்ள ஆட்சி. பல சமயங்களில் மாநில அரசுக்கு எதிராக தன் அதிகாரங்களைப் பயன்படுத்தும் போக்கு இருப்பதை நாம் பார்க்கும்போது, நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில் பார்த்தால், தேசம் பூராவும் உற்பத்தி செய்யப்படும் அளவு 1983-84 ஆம் ஆண்டில் 10.8 சதவீதம் உயரும் எனவும் தென் பிராந்தியத்திற்கான மின் வளர்ச்சி விகிதம் 9.5 சதவீதமாக இருக்கும் எனவும் பத்தாவது ஆண்டு மின்சக்தி ஆய்வுக் குழு கணக்கிட்டுள்ளது. அதில் தமிழ் நாட்டில் எவ்வளவு உயரும் என்று பார்த்தால், 7.9 சதவீதம்தான் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 11-வது ஆண்டு ஆய்வுக் குழுவின் அறிக்கையில், தென் பிராந்தியத்திற்கு மின் உற்பத்தி வளர்ச்சி வீதம் 8.9 சதவீதம் எனவும், தமிழ் நாட்டிற்கு 5.7 வீதம் எனவும் குறைத்துப் போட்டிருக்கிறார்கள். அதாவது 3.2 சதவீதம் குறைத்துப் போட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி ஒரு பக்கம் பாரபட்சம் பண்ணுகிறார்கள். இன்னுமொரு பக்கத்திலே அரசியல் பிரச்சாரம் செய்யும்போது, தமிழ்நாட்டில் உற்பத்தி குறைந்துவிட்டது, பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது, அதற்குக் காரணம் இந்த மாநில அரசுதான் என்றும் பேசுகிறார்கள். 1960 ஆம் ஆண்டுகளில் தொழில் உற்பத்தி வளர்ச்சி 10 சதவீதமாக இருந்தது இப்போது தமிழ் நாட்டில் 3.1 சதவீதமாக இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1960 ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்போது 10.1 சதவீதம் உற்பத்தி இருந்தது. 1970 ஆம் ஆண்டுகளில் அது 3.1 சதவீதமாக ஆகியிருக்கிறது. 1970 ஆம் ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சிகள் இருந்தன. அப்போது மின்சாரத் திட்டத்தின் வளர்ச்சி வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் மத்திய அரசு மாநில அரசுகளை பாரபட்சமாக நடத்துகிறதோ என்று சந்தேகப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவேதான் பிரச்னைகளை மக்களுக்கு தெளிவாக விளக்க வேண்டும்.

மத்திய அரசில் வேலைக்கு உணவு என்றொரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் மேற்கு வங்காளத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தானியம் முழுவதையும் கொடுக்கவில்லை. தங்களுக்குக் கிடைக்கவேண்டிய தானியம் கிடைக்கவில்லை என்று மேற்கு வங்க அரசு



சொன்னபோது, மத்திய சர்க்காரிலிருந்து என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஏற்கெனவே கொடுத்த அரிசிக்குக் கணக்கு வரவில்லை என்ற ஒரு தவறான விவரத்தை * மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார். அதை விசாரிக்க வேண்டும் என்று கோரி, ஜனாதிபதி அவர்களுக்கு மேற்கு வங்க முதலமைச்சர் ஒரு வேண்டுகோளை விட வேண்டியதாயிற்று.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த விஷயம் இங்கே நடந்ததல்ல. இதில் அவர் * சொன்னாரா அல்லது இவர் * சொன்னாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் "மத்திய அமைச்சர் * சொன்னார்" என்று சொல்லுவது அவைக் குறிப்பில் இருப்பது சரியல்ல. அவருக்கு அது நியாயமாகத் தோன்றலாம். பாராளுமன்ற முறைப்படி அப்படிச் சொல்லுவது நியாயமல்ல. ஆகவே அதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அதை நீக்க வேண்டிய அவசியமில்லை. பார்லிமெண்டில் அந்த விவரங்கள் தவறு என்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU K. RAMAMOORTHY : It is unparliamentary in this House. வேறு ஏதோ மாநிலத்தில் சொன்னதை இங்கே சொல்லுவது என்பது It is more unparliamentary and it is better he knows the Parliamentary procedure.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * என்ற வார்த்தை பாராளுமன்ற முறைக்கு உகந்ததல்ல என்பதால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

(முற்பகல் 11-40)

**திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் அவர்கள் மேற்கு வங்காளம் பற்றிச் சொல்கிறார்களா அல்லது மத்திய சர்க்கார் பற்றிக் குறை சொல்கின்றார்களா என்று புரியவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** மேற்கு வங்காளம் பற்றியா அல்லது மத்திய சர்க்கார் பற்றியா என்பதல்ல. மேற்கு வங்கத்தில் நாம் பாதிக்கப்படவில்லை. மாநில அரசு கிரிட்-ஐ சென்ட்ரல் கிரிட்டிலே இணைக்கின்ற சமாசாரம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஸ்டேட் அடிப்படையிலே பற்றாக்குறை இருப்பதால், மின்சாரம் வாங்கவேண்டியதாக இருக்கிறது. சென்ட்ரல் கவர்ன்மெண்ட் நடத்துகின்ற மின்சார உற்பத்தி நிலையங்களை மத்திய

---

* மேலவைத் துணைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

கிரிட்-லே இணைத்துக் கொள்ளட்டும். நமக்கு தேவைப்படுகின்றபோது செண்ட்ரல் கிரிட்டிலே வாங்கிக் கொள்ளலாம். ஆனால் நம்முடைய கிரிட்-ஐ அதில் இணைக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். proper and efficient functioning of the Electricity Board என்பது மாநிலத்தினுடைய பொறுப்பு என்று சொல்கிறார்கள். ஆனால் மாநில அரசிடம் இன்றைக்கு அதிகாரம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1948 ஆம் ஆண்டு எலக்ட்ரிசிடி சப்ளை ஆக்ட்-ஐத் திருத்த வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அந்த 'போர்டு' ஒரு 'அடானமஸ் பாடி' என்று சொன்னார்கள். அதிலே தமிழ் நாடு ஸ்டேட் கவர்ன்மெண்ட் அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். சேர்மேன் மற்றவர்களை எல்லாம் தமிழக அரசு தான் நியமித்துள்ளது. அப்படியிருக்க நமக்கு எங்கே அதிகாரம் இல்லாமல் இருக்கிறது என்று திரு. தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். நான் சொல்ல விரும்புவது இதுதான். திட்டமிடுவது அல்லது நிதி திரட்டுவது, மெஷினரிகளை வாங்குவது இதுபோன்றவைகளுக்கு மாநில அரசுக்கு அதிகாரம் பெற ஆக்டைத் திருத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த 'எலக்ட்ரிசிடி சப்ளை ஆக்ட்' திருத்தப்பட வேண்டும் என்ற விஷயத்தை ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பங்குகொண்ட மின்சாரத்துறை ஆலோசனைக் குழுவில் ஒரு தீர்மானமாக 24—11—1980-ல் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த அரசுக்கு அதன் இஷ்டம்போல் எலக்ட்ரிசிடி சார்ஜை ஒழுங்குபடுத்தவும், திட்டங்கள் இடவும், நிதி திரட்டவும், தேவையான தளவாடங்களை வாங்கவும் அதிகாரம் இல்லை. மாநில அரசு கூறுவதை போர்டு ஏற்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அது இந்த நாட்டு மக்களுக்குத் தெரிய வழியில்லை. மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்ற நிலை இருக்கிறது என்பதை மக்களுக்குச் சொல்லவேண்டும். மின்சார அமைச்சர் அவர்கள் எதற்காக இன்றைக்கு அப்படி மொத்தம் பொதுவாக அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள்? என்ன அதிகாரம் இல்லை, என்ன அதிகாரம் வேண்டும் என்று திட்டவட்டமாக மக்களுக்கு எடுத்துச்சொல்லி விளங்க வைக்க வேண்டும். அதற்கு மாநில அரசின் விளம்பரத் துறையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் மத்திய அரசுச் சட்டம். அது ஒரு காலத்தில் மத்திய அரசினால் நிறைவேற்றப்பட்ட சட்டம். நடைமுறையிலே சிக்கல்கள் வந்து. அந்தச் சட்டத்தில் ஒரு திருத்தத்தை மாநிலம் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினால், கொண்டுவர முடியாது. இந்தச் சட்டத்திற்குத் திருத்தம் பாராளுமன்றம் தான் கொண்டுவர முடியும். அதோடு மட்டுமல்ல, மாநில அரசு ஒரு உத்தரவிட்டு அதை மின் வாரியம் ஏற்க மாட்டேன் என்று சொல்லுமானால், நல்லவேளை அப்படிச் சொல்லவில்லை, அதைப் பற்றி மாநில அரசு கேட்க முடியாது. அதை ஒன்றும் செய்ய இயலாது. இந்தப் பிரச்சினையும் மத்திய அரசுக்குப் போவதில்லை. மத்திய அரசினாலே உருவாக்கப்பட்ட மத்திய மின்குழு. சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அத்தாரிட்டிக்குத் தான் போகிறது. அவர்கள் பார்த்து மின் வாரியம் சொல்வதுதான் சரி, மாநில அரசு சொல்வது சரியல்ல என்று சொல்வார்களானால், அதைத்தான் எடுத்துக் கொள்வார்கள். அரசியல் சட்டத்தைக்கூட திருத்தக்கூடிய காலம் இது. ஆனால், இந்தச் சட்டம் இப்போது இப்படி இருக்கிறது. நாம் அதைத் திருத்த முடியாமல் இருக்கிறோம். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். தேய்மானத்திற்கு மூன்று சதவிகிதம் தான் என்று வைத்திருக்கிறார்கள். விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. அது நமக்குத் தெரிகிறது. அந்தத் தேய்மானத்தின் அளவை அதிகப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறோம். அது நம்மால் முடியவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசாக இருந்தாலும் கூட, நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியின் முன்னால் கைகட்டி நிற்க வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவேதான் செண்ட்ரல் ஆக்ட் திருத்தப்பட வேண்டுமென்ற முறையில் இங்கே சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

நஷ்டத்தைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நஷ்டங்களுக்கு நான்கு காரணங்களைச் சொன்னார்கள். அதில் இரண்டு காரணங்களைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்பற்றி திருச்சியைச் சேர்ந்த திரு. டி. ஆர். ராஜகோபாலன் என்பவர் இந்து பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்பற்றி நானும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

1964-ல் வெங்கடராமன் கமிட்டி என்று ஒன்று அமைக்கப்பட்டு அதன் அறிக்கையில் எலக்ட்ரிசிடி போர்டில் மின்சார கட்டணம் எப்படி விதிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். செலவுகள் போக 11 சதவிகிதம் லாபம் கிடைக்கக்கூடிய அளவுக்கு மின்சாரக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை திருச்சி திரு. ராஜகோபாலன் அவர்கள் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். திரு. வெங்கட்ராமன் ஏற்கெனவே அவர் 1964-ல் மத்திய அரசால் அமைக்கப்பட்ட அக் கமிட்டியின் கன்வீனராகயிருந்தார். அக்கமிட்டி பின்வருமாறு கூறியுள்ளது மெயின்ட்டினஸ்க்கோ, ஆப்பரேஷனுக்கோ, தேய்மான நிதிக்கோ அல்லது வட்டி கட்டவோ ஏற்படுகின்ற குறைவை, துண்டு விழுகின்ற தொகையை மாநில அரசு சரிக்கட்டிக் கொள்ளவேண்டும் என்று கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. ஹைடென்ஷன் இன்டஸ்ட்ரீஸ்க்கெல்லாம் மின்வாரியம் 11 சதவிகிதம் லாபத்தில் நடக்கும் அளவுக்கு கட்டணம் விதிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு கட்டணம் விதிக்காவிட்டால், துண்டுவிழுவதை அரசு சரிக்கட்டிக்கொள்ள வேண்டுமென்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அரசு வந்த பிறகு பெருந் தொழில்களுக்கு 8 பைசா, 7 பைசா என்று இருந்த கட்டணத்தை 24 பைசா என்று உயர்த்தியிருக்கிறது. இன்றைக்கு தமிழ் நாட்டிலே மின்சார உற்பத்திச் செலவு 30 பைசா வரை உயர்ந்துவிட்டிருக்கிறது. எனவே 24 பைசா என்று வைத்திருப்பதுகூட ஹைடென்ஷன் இன்டஸ்ட்ரீஸ்க்கு குறைவானது தான். அதிகப்படுத்தலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கேரளத்திலே இருந்து நமக்கு வரக்கூடிய மின்சாரத்தின் ரேட்டும் அதிகமாக இருக்கிறது. அதையும் குறைத்து வாங்குவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். ராஜ்யத்திற்கு ராஜ்யம் உபரி மின்சாரத்தை சப்ளை செய்யும் போது, ஜெனரேஷன் சார்ஜ், டிரான்ஸ்மிஷன் சார்ஜ் மட்டும்தான் சேர்க்க வேண்டும், லாபம் வைக்காத அளவில் ரேட்டை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசின் கமிட்டி ஒன்று சில ஆண்டுகளுக்கு முன்பு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதை கேரள அரசின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

நெய்வேலி பற்றியும் ஒரு வார்த்தை. அதை ஒரு ஜெனரேட்டிங் கம்பெனியாக வைத்துப் பார்க்கும்போது, அங்கே உற்பத்தியாகின்ற மின்சாரத்தின் உற்பத்திச் செலவு மிகவும் குறைவாகத் தான் இருக்கும் என்று சொல்லப்படு





கிறது. அங்கே உரமும் வேறு பல பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் ஏற்படுகின்ற நஷ்டத்தை மின் உற்பத்தியுடன் சேர்த்து ஒட்டுமொத்தமாக நஷ்டம் என்று சொல்கின்றார்கள். உண்மையில் அங்கே சுரங்கத்தின் வாயிலில் மின் உற்பத்தி நிலையம் உள்ளது. மின்சார உற்பத்திச் செலவு கணக்கை மட்டும் தனியாகப் பார்த்தால் உற்பத்திச் செலவு குறைவாகத் தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றியும் திரு. ராஜகோபாலன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அரசைப் பொறுத்தவரையில் திருப்திகரமாக இருக்கின்றது என்று குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். 1980 பிப்ரவரியில் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் சம்பளம் சம்பந்தப்பட்ட பிரச்சனை பற்றி ஒரு உடன்பாடு ஏற்பட்டது உண்மைதான். ‘ஃபிரின்ஜ் பெனிபிட் சம்பந்தப்பட்ட ஒரு உடன்பாடு செய்துகொள்ள விவாதிப்பதற்கு நேரம் இல்லை என்பதன் காரணமாக, பிறகு சீக்கிரமாகப் பேசி உடன்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். அது அந்த ஒப்பந்தத்தில் இருக்கும் ஒரு ஷரத்தும் ஆகும். இந்த ஒப்பந்தம் 1980 பிப்ரவரியிலே போடப்பட்டது. இதுவரையில் ஒரு ஆண்டுக்காலம் ஆகியும் ஒரு முடிவும் இன்னும் ஏற்படவில்லை. இதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக மின்சார போர்டிலிருந்து எழுத்துபூர்வமான கடிதம் வந்திருக்கிறது. அதில் 31—1—1981-க்குள் இந்தப் பிரச்சினை பேசி தீர்க்கப்படலாம் என்று கூறியிருக்கிறார்கள். இன்று பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி ஆகிவிட்டது. வாரியத்தின் வாக்குறுதியும் ஒப்பந்தமும் ஒரு ஆண்டு ஆகியும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இனி லேபர் காண்ட்ராக்ட் பற்றிச் சிலவிசயங்களைச் சொல்கிறேன். லேபர் பிரச்சினை என்று வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர் தாமோதரன் அவர்கள் நேற்றுகூட அங்கு அதிகப்படியான ஆட்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இது குறித்து என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். இன்றிருக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட ஓர்க் லோட்படி, தற்போது அமுலில் உள்ள நியதிப்படி, அங்கே 16,000 காலிப்பதவிகள் இருக்கின்றன என்று உறுதியாகச் சொல்கிறேன். இன்றைக்கு அங்கே ஒரு லட்சம் பேர்கள் இருக்க வேண்டிய இடத்தில், 85,000 பேர்கள் தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்னமும் 15,000 வேகன்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த

அளவுக்குக் கீழ்மட்டத்தில் ஆட்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. ஆனால் மேல் மட்டத்தில் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் மூன்று சிப் இன்சினியர்கள் இருந்த இடத்தில் 11 சிப் இன்சினியர்கள் இப்போதிருக்கிறார்கள். 30 எஸ்.ஈ.-க்கள் இருந்த இடத்தில் 70 எஸ்.ஈ.-க்கள் இருக்கிறார்கள். மேல் மட்டத்திலே எண்ணிக்கை உயர்த்தப்படுகிறது. அங்கே நிர்வாகச் செலவு உயர்ந்திருக்கிறது. இது யாருக்கும் தெரியவில்லை ஆனால், அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு வேலைப் பளு அதிகரித்திருப்ப தால் 15 ஆயிரம் காலியிடங்களையும் நிரப்ப வேண்டும் என்று சொல்லும் போது, அதிகச் செலவாகும் என்று சொல்லப்படுகிறது குறிப்பாகச் சொல்ல

(முற்பகல் 11-50)

போனால் இன்றைய தினம் காலியாகவுள்ள 15,000 பதவிகளிலும் கான்ட்ராக்ட் லேபராக 15,000 பேர்களை வைத்திருக்கிறார்கள். கண்காணிப்புப் பொறி யாளர்களிடம் எழுதிக் கேட்டதில் அவர்கள் அதற்குக் கொடுத்துள்ள கணக் கின்படி 11,000 பேர் கான்ட்ராக்ட் லேபராக இருப்பதாக எனக்குத் தகவல். பொறியாளர்கள் மெயின்டெயின் பண்ணும் லிஸ்டில் இல்லாமல் 4,000 பேர்கள் தனியாக இருக்கிறார்கள் ஆக மொத்தம் 15,000 பேர் கான்ட்ராக்ட் லேபராக இருக்கிறார்கள். மின் வாரியத்தின் தொழிலாளியாக இருந்து செய்ய வேண்டிய வேலையை, புதிதாக ஆள் எடுக்காமல், கான்ட்ராக்ட் லேபரை வைத்துச் செய் கிறார்கள். இன்றையதினம் 'கான்ட்ராக்ட் லேபர் ஒழிப்பு-ஒழுங்கு படுத்துதல் சட்டம்' அமுலில் இருக்கிறது. மத்திய அரசு நிறைவேற்றிய சட்டமாகும் அது இந்த நிலையில் சர்க்கார் கையில் உள்ள நிறுவனத்தில் நிரந்தரமாகத் தேவைப்படும் அளவிற்குத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளாமல், கிட்டத் தட்ட 15,000 பேர்களைக் கான்ட்ராக்ட் தொழிலாளர்களாக வைத்துக்கொண் டிருக்கிறார்கள். பொறியாளர்கள் கணக்குச் சொல்லும் 11,000 பேர்களில் 6,000 பேர்கள் தான் இன்றைக்கு கான்ட்ராக்ட் லேபராக ரிகார்டில் இருக்கி றார்கள். மீதம் 6,000 பேர்கள்வரை பினாமியக் கணக்கில் இருக்கிறார்கள் அது எவ்வாறு என்பதைக் கூற விரும்புகிறேன். அசிஸ்டன்ட் என்ஜினியர் கையிலே ஆயிரம் ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறார்கள். அவர் யாரை வேண்டுமினாலும் வேலைக்கு வைத்துக்கொண்டு கான்ட்ராக்டை நிறை வேற்றிக் கொள்ளலாம். அவரிடம் லிஸ்ட் கிடையாது. டிபார்ட்மென்டில் ரிகார்ட் கிடையாது. குத்து மதிப்பாக வேலை செய்வார்கள். ஆயிரம் ரூபாயில் 200 ரூபாய் செலவழித்திருந்தால், அதை ஏ.ஈ. இடம் கொடுத்து விடுவார்கள். மீண்டும் அவரிடம் தொடர்ந்து 1,000 ரூபாய் இருந்துகொண்ட இருக்கும்.



அவர் தனக்கு வேண்டியவர்களை, சொந்தக்காரர்களைக் கூட வைத்துக் கொண்டு தானே கான்ட்ராக்ட் வேலையைச் செய்யலாமென்ற நிலைமை இருக் கிறது, ஏ.ஈ. கையில் 1,000 ரூபாய் கொடுத்து, அவர் இஷ்டம் போல் குறைந்த ரூபாயில் கான்ட்ராக்ட் வேலை செய்யலாமென்பதால், 15,000 போஸ்டுகள் காலியாக இருந்தும், அவை நிரப்பப்படாமல், கிட்டத்தட்ட 8,000 அல்லது 9,000 பேர்களுக்கு ஏ.ஈ. மூலமாக குறைந்த கூலிக்கு வேலை கொடுக்கிறார்கள். இப்படி வேலை நடக்கிறது மின் வாரியத்திலே. இது கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் ஆக்டுக்கு விரோதமானது. பப்ளிக் செக்டாரில் இப்படிப்பட்ட தவறு நடக்கும்போது, வேறு யாரைப் பார்த்து அந்தச் சட்டத்தை அமுல் செய்யுங்களென்று அரசு கேட்க முடியும்? இம்ப்ரெஸ்ட் அமவுன்டை ஏ.ஈ. இடம் கொடுத்து, குறைந்த ஊதியத்தில் ஆள் பிடிப்பதைவிட்டு, இருக்கும் ஆட்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏ.ஈ.-யிடம் ஆயிரம் ரூபாய் கொடுப்பது எப்படிச் சரியானது? அதற்கு அவர்கள் அச் சிட்ட 'வவுச்சர்' கொடுப்பதில்லை. கையால் எழுதி வவுச்சர் கொடுக்கிறார் கள். இது எப்படி சரியாக இருக்க முடியும்? அங்கே ரெகுலர் ஒர்க்கராக இருந்தால், ஸ்தாபன பலத்தின் மூலம் அதிகமான சம்பளம் கேட்கிறார்கள், கான்ட்ராக்ட் லேபராக' அதுவும் லிஸ்டில் இல்லாமல்' வேலை கொடுத்தால் அவர்கள் அதிகம் கேட்க முடியாது என்று இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மின் வாரியத்திலே விஜிலன்ஸ் செல் என்று ஒன்றை வைத்திருக் கிறார்கள். அதில் 'சீஃப் விஜிலன்ஸ் ஆபீசர்' ஒருவர் இருக்கிறார். அவருக்குக் கீழே 12 விஜிலன்ஸ் ஆபீசர்கள் 100 சிப்பந்திகள் இருக்கிறார்கள். இவர்கள் தமிழ் நாடு பூராவும் மின்சார வாரியத்தில் வேலையில் இருக்கிறார்கள். அந்த விஜிலன்ஸ் ஆபீசர்கள் எவ்வளவு ஊழல்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் மூலமாக என்ன பிரயோசனம் ஏற்பட்டிருக்கிறது' அப்படிக் கண்டு பிடித்த வழக்குகளில் ரெகவரி ஏற்பட்டிருக்கிறதா என்பது பற்றிய விவரங்க ளில்லை. ஆனால் இவர்கள் எதற்கு உபயோகப்படுத்தப் படுகிறார்களென்றால் தொழிலாளர்களையும்' தொழிற்சங்கங்களையும் கண்காணிக்க உபயோகப்படுத் தரப்படுகிறார்கள். துறையில் நடைபெறும் ஊழல்கள் கான்ட்ராக்டில் ஏற்படும் ஊழல்களைக் கண்காணிக்க இருப்பதாக அவர்களுக்குப் பெயர் இருக்கிறது. ஆனால், அந்த வேலைகளை விட்டுவிட்டு தொழிற் சங்கங்களைக் கண் காணிக்கும் வேலைகளைப் பிரதானமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் 12 விஜிலன்ஸ் ஆபீசர்கள்' சீப் விஜிலன்ஸ் ஆபீசரும் என்ன செய்கிறார்கள்? தொழிலாளர்கள் இன்னின்ன செய்கிறார்கள் என்று வாரிய அதிகாரிகளுக்கு

இவர்கள் ரிப்போர்ட் கொடுக்கிறார்கள் உடனே சம்பந்தப்பட்ட வாரிய அதிகாரிகள் தொழிலாளர்களை 'சஸ்பென்ட்' செய்கிறார்கள். வாரியத்தில் 'ஸ்டேன்டிவ் ஆர்டர்' இருக்கிறது. அதற்குப் புறம்பாக தொழிலாளர் துறை சட்டத்துக்குப் புறம்பாக தொழிலாளர்களை சஸ்பென்ட் செய்கிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறீர்களென்று மின்வாரிய அதிகாரிகளைக் கேட்டால் 'விஜிலன்ஸ் ரிப்போர்ட் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அது என்ன ரிப்போர்ட் என்று விஜிலன்ஸ் அதிகாரியைக் கேட்டால்' 'கான்பிடென்ஷியல்' என்று அவர் பதில் சொல்லுகிறார். எனவே அந்த அமைப்பு எதற்காக இருக்கிறதென்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். தொழிலாளர்களைக் கண்காணிக்க அவர்களைப் போடுவதாகயிருந்தால் சி.ஐ.டி என்று பெயர் வையுங்கள் விஜிலன்ஸ் ஆபீசர் என்று போட்டு' இந்தக் காரியங்களைச் செய்யச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு தொழிலாளர் விரோதப் போக்காக இருக்கிறது. உண்ணாவிரதம் இருந்தால்' நடவடிக்கை எடு என்று டிப்பார்ட்மென்டல் சர்குலர் இருக்கிறது. விடுமுறை நாட்களில் உண்ணாவிரதம் இருந்தால் தர்ணா பண்ணினால் அதற்குக் கூட ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்குலர் இருக்கிறது. ஸ்டிரைக் பண்ணினால்தான் தப்பு என்கிறீர்கள். இப்போது உண்ணாவிரதம் இருந்தால் கூட அதற்கும் தண்டனை கொடுங்கள் என்று சர்குலர் போட்டிருக்கிறீர்கள். தொழிற்சங்க ஊழியர்களை இடமாற்றம் செய்கிறார்கள். தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களை 'அன்டிசைரபிள் எலிமென்ட்ஸ்' 'மிஸ்சீப் மேக்கர்ஸ்' என்று சர்க்குலரில் சொல்லுகிறார்கள். அமைச்சரவர்களே தொழிற் சங்கத் தலைவராக இருந்தார்கள்.. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் பேசியபோது' அமைச்சரவர்கள் அண்ணாவின் முன்னிலையில் பேசிய பேச்சுக்களையெல்லாம் படித்தார்கள் இன்றைக்கு அவருடைய ஆட்சியில் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 'அன்டிசைரபிள் எலிமென்ட்ஸ்' மிஸ்சீப் மேக்கர்ஸ்' அவர்களின் லிஸ்டைக் கொடுங்கள் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அந்த சர்க்குலரை 'ஸ்டிரிக்ட்லி கான்பிடென்ஷியல்' என்று செக்ரட்டரியே அனுப்பியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சரவர்களின் தலைமையில் உள்ள இலாகா இப்படி இருந்தால் எப்படி! அப்படியிருந்தால் தான் தொழிலாளர்களைச்சமாளிக்க முடியுமென்று நினைக்கிறார்களோ என்னவோ ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : We will have a list as "most desirable" instead of "undesirable".



**திரு. ஆ. நல்லசிவன் :** எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், விஜிலன்ஸ் டிபார்ட்மென்டை தொழிலாளர்களைக் கண்காணிக்கத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக இவ்வளவையும் சொல்கிறேன். விஜிலன்ஸ் டிபார்ட்மென்ட் தொழிலாளர் பிரச்சினையில் தலையிடக்கூடாது. ஊழல்கள் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கத்தான் அந்தத் துறை இருக்க வேண்டும். தொழில் தகராறுகளை லேபர் பெர்சனல் ஆபீசர்கள் மூலமாகத்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் விஜிலன்ஸ் ஆபீசர்கள் தலையிடு செய்யக்கூடாதென்று சொல்லி' என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : On a point of clarification. Sir. The hon. Member Thiru Nallasivan said that I had asked that all the generating stations in Tamil Nadu be handed over to the Centre. I only said that such projects as Hogenakal which involved the approval of two States should be run by the Centre and not that all generating stations should be handed over to the Centre.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் 5 பேர் பேசி முடித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை தர வேண்டியிருப்பதால், மின்சாரம் என்ற தலைப்பிலே மின்னைப் போல் சுருக்கமாகவும் சாரமாகவும் குறுகிய காலத்தில் பேசி முடிக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ப. மாணிக்கம் : தலைவரவர்களே, இந்த அறிக்கை இங்கே விவாதத்திற்காகக் காலம் கடந்து வந்திருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 1981ஆம் ஆண்டு இறுதியில் வைக்கப்பட்டு, நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலைமை வருங்காலத்தில் தொடரக் கூடாது. இதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு கொள்கையளவில் இதில் எடுத்துக் காட்டியுள்ள பிரச்சினைகளின் மீது மட்டும் எனது நிலையைக் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே வரக்கூடிய 5 ஆண்டுக்கு 1,022 கோடி மெகாவாட் திட்டம் என்றும் இதில் உற்பத்தி 1,400 மெகாவாட் திட்டம் என்றும் பிற்பகுதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நடுவிலே கொடுத்திருக்கக்கூடிய விவரமான திட்டத்தினுடைய குறியீடுகளைக் கூட்டிப்பார்த்தால், 1,451 மெகாவாட் வருகிறது. ஆகவே 51 மெகாவாட் வித்தியாசம் இருக்கிறது. அது ஏன் என்று மாண்புமிகு அமைச்சர்

அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒருகால் உத்தேசமாக அப்படிப் போட்டிருக்கலாம். அப்படிப் போட்டிருந்தால் கூட, 51 மெகா வாட் வித்தியாசம் வரவேண்டிய அவசியமில்லை.

முக்கியமாக அரசு மின்சார உற்பத்தி பற்றி இன்றுள்ள நிலைமையைக் கணக்கிட்டு சில பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறது. அதிலே ஒன்று தமிழ் நாட்டிலே ஏழ்மை 62 சதவிகிதம் என்று கூறப்படுவதால் அதைப் போக்க தொழில்களிலே, விவசாயத்திலே அபிவிருத்தி ஏற்பட வேண்டும். அதற்கு மின்சாரம் தவிர்க்க முடியாதது. மின்சாரம் இல்லாமல் உற்பத்தியைப் பெருக்காமல், ஏழ்மையைப் போக்குவது என்பது சாத்தியமில்லை. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழ் நாட்டிலே இன்றையதினம் 9 லட்சம் பம்ப்செட்டுகள் இருக்கின்றன. விவசாயிகள் கட்ட வேண்டிய மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பிரச்சினை வேறு. அது பற்றிப் பின்னால் சொல்கிறேன். ஆனால் அவர்கள் இன்றையதினம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மொத்த உற்பத்தியைப் **பெருக்கித் தந்திருக்கிறார்கள். குறிப்பாக கரும்பு, பருத்தி, வேர்க்கடலை** போன்ற உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழகம் பெருமளவுக்கு முன்னேறியிருக்கிறது. அதற்குக் காரணமே மின்சாரம் தான். தொழில்கள் **எவ்வளவு முக்கியமானவையோ அது போல் விவசாயிகளும் மிக மிக முக்கிய**மானவர்கள். வருகிற 5 ஆண்டுகளுக்கு அரசு போட்டிருக்கிற குறிக்கோள் குறைவு என்பது தான் என்னுடைய கருத்து. அரசு மேற்கொண்டிருக்கிற கொள்கை நிலை சரியானது. காரணம் தேவைக்கு மேலே 10 சதவிகித **ரிசர்வ் இருக்க வேண்டும், அந்த முறையில் திட்டமிட வேண்டுமென்ற** கொள்கையை மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாடு டெல்லியில் நடைபெற்றபோது, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். 10 சதவிகிதம் ரிசர்வ் வேண்டும் என்பது சரிதான். ஆனால் அரசு அனைத்துத் துறை அளவில் மேற்கொண்டிருக்கிற மின்சார சம்பந்தமான கொள்கை சரிதானா என்பதை மின்சாரம் எல்லாத் தேவைகளிலும் விவசாயத் தேவையிலும் வளர்ந்து கொண்டிருக்கிற நிலையில் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். அது இப்போது செய்யப்படவில்லை இன்றைக்குள்ளவாறு அதற்குரிய சட்டத்திலே திருத்தம் அவசியம் தேவை. மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரை, மத்திய அரசு தான் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். அதுபோல் விநியோகத்திலும், தேவையை **கணக்கிடுவதிலும்** மாநில அரசுக்குத் தான் அதிகமான கடமை **இருக்கிறது.**



இன்றைக்கு இருக்கிற மின்சாரச் சட்டத்திலே திருத்தம் தேவை. திட்டத் தேவையை அது பூர்த்தி செய்யவில்லை. இன்றைக்கு அது எந்தமாதிரி அமைந்திருக்கிறது என்றால், ஒரு மத்திய அரசின் திட்டம் போல் இருக்கிறது. சட்டத்திலே மாநில அரசுகளுக்கு அதற்கான வாய்ப்புகள், கடமைகள், உரிமைகள் வழங்கப்படக் கூடிய முறையிலே திருத்தம் தேவை. **தமிழகத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டு ஒன்று** சேர்ந்து நாடாளுமன்றத்திலே இதற்கான ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சி இது வரை மேற்கொள்ளப்படவில்லை. துரிதமாக அதைச் செய்ய வேண்டும். அப்படி உடனே செய்யாவிட்டால், நம்முடைய மின்சார உற்பத்தி, டிரான்ஸ்மிஷன், விநியோகம் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பது மிக மிகக் கடினம். உடனே சட்டத் திருத்தம் இதற்குத் தேவை. அதை உடனே நம்முடைய மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, அனைத்திந்திய அளவில், பிரதேசம் என்ற அடிப்படையில் மின்சாரத்தைக் கணக்கிடும்போது, அதனால் பல இக்கட்டுகள் ஏற்படுகின்றன. இப்போது கேரளா மின்சார உற்பத்தியில் உபரியாக இருக்கிறது. நாம் கேரளாவைச் சார்ந்திருக்கிறோம். இதனால் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. **ஒவ்வொரு மாநிலமும் இன்றைக்கு வளர்வதற்குத் துடிக்கின்றது. அவர்கள் எல்லாம் தங்கள் முன்னேற்றத்திற்காக முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அப்படிச் செய்யும்போது நாம் நம்மிடத்தில் உபரியாக உள்ள அரிசியைத் தரலாம், அதுபோல், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடிய சிமெண்டைத்தரலாம். இன்னும் டயர், அரிசி போன்றவை கேரளாவிற்குத் தேவைப்படுவதால் தரலாம். இவற்றை நாம் கொடுத்து விட்டு அங்கிருந்து தண்ணீர்** பெறலாம், மின்சாரம் பெறலாம். ஆனால் அப்படிச் செய்யும்போது கூட, பண்டமாற்று என்று வரும்போது, மத்திய அரசினுடைய அணுகுமுறை சரியில்லை. இன்றைக்கு 'பார்டர்' (Border) பிரச்சினையில் மாநில அரசுகள் ஒன்றுக்கொன்று பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. மத்திய **அரசு மாநில அரசுகளுக்கு மின்சார உற்பத்திக்கும் விநியோகத்திற்கும்** அதிகமான வாய்ப்புகளைத் தர வேண்டும். அதற்குரிய சட்டத் திருத்தம் கொண்டு வர நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசுகளை மட்டும் ஒரு யூனிட்டாக வைக்க வேண்டும். அப்படிச் செய்யப்படவில்லையென்றால், வருங்காலத்தில் சிக்கல்கள் ஏற்படும். உதாரணத்திற்கு குஜராத், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் இன்றைக்குப் பல பிரச்சினைகள்

வந்திருக்கின்றன. தமிழகத்திலேயும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. இதை நம்முடைய அரசு மத்திய அரசுக்கும்' மத்திய எலெக்ட்ரிசிட்டி அத்தாரிட்டிக்கும் தெரியபடுத்த வேண்டும்.

மின்சார போர்டில் ஏற்கெனவே மெம்பர் பிளானிங் என்று இருக்கிறது. இதுபற்றி நான் அதிகமாகத் தெரிந்தவன் என்ற முறையில் கூறவில்லை. பிளானிங் செக்‌ஷனைப் பலப்படுத்துவதற்கு 'பிளானிங் செல்' என்கிற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுமாதிரி கொண்டு வரலாம். அதற்குரிய நிதி ஆதாரங்கள், வாய்ப்புகள் இவைகளை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் புதிய ஆராய்ச்சி முறைகளை இதிலே மேற்கொள்ளவேண்டும். இதற்கான பொறுப்பு எலெக்ரிசிட்டி போர்டிடம்தான் இருக்க வேண்டுமா இல்லையா என்பதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மத்திய அரசின் அல்லது மாநில அரசின் சட்டம் என்று எல்லாம் பார்க்காமல் ஆக்க பூர்வமான ஆராய்ச்சி இதற்குத் தேவை. அதுபோல் தமிழ் நாட்டில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி நாம் எந்த வகையில் நம்முடைய மின்சாரச் சக்தியை அதிகரிக்கலாம் என்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதற்கென்று முதலீடு செய்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். அதுபோல் கடல் நீரிலிருந்து மேல் பாகத்திலிருக்கும் வெப்பம் மற்றும் அடிப்பாகத்திலேயிருக்கும் வெப்பம் இவற்றைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கின்ற முறையைப் பரிசோதனை முறையில் அரசு ஆரம்பிக்கத் திட்டம் வைத்திருக்கிறது. அது ஒரு மாதிரித் திட்டம் என்று கூறப்படுகிறது. இப்போதே நம்முடைய இண்டியன் இன்ஸ்ட்டியூட் ஆஃப் டெக்னாலஜியில் சூரிய ஒளி ஆராய்ச்சியில் நிறைய நிபுணர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாய அபிவிருத்திக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் என்று ஒட்டுமொத்தமான பொதுக் கொள்கையாக மத்தியக் கொள்கையாக மேற்கொண்டிருக்கிற மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதற்கான ஆராய்ச்சிக்கு அதிகமான முதலீடு மாநில அரசு செய்வது அவசியம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

---





**(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)**

**(பிற்பகல் 12-10)**

இதை மின்சாரத் துறையின் மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்ற அவசியம இல்லை. மின்சார உற்பத்தி அபிவிருத்தி என்ற பிரச்சினை வரும் போது' இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்கென்று தேவையான ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், நிச்சயமாக முன்னேற்றம் காண முடியும். இதில் உள்ள பல்வேறு பிரச்சினைகளிலே எலக்ட்ரிசிட்டி போர்ட் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக ஜெனரேஷன் சம்பந்தமாக, அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இப்போது மின்சார உற்பத்தி, விநியோக ஏற்பாடுகள் வெகுவாக வளர்ந்திருக்கின்றன. அதனால் இப்போது இருக்கும் இந்த அமைப்பு முறை போதாது. இது பழைய அமைப்பு முறையாக இருக்கிறது. இந்த முறையை நிச்சயமாக மாற்றியமைக்க வேண்டும். அந்த முறைகள் இப்போது பரிசீலனையில் இருக்கின்றன. Modalities are being worked out. மத்தியிலே வந்த கருத்துக்கள், வெள்ளோட்டமாக வெளியிலே விடக்கூடிய கருத்துக்களாக இருக்கின்றன. அரசுக் கொள்கையை உருவாக்குவதற்கு வெளியிலே வெள்ளோட்டமாகக் கருத்துக்களை விடுவது வழக்கம். இப்படி வெள்ளோட்டம் விட்டு நயமாகக் 'கேன்வாஸ்' செய்கிறார்கள். உற்பத்தியைப் பொதுத் துறைக்கும், விநியோகத்தைத் தனியார் துறைக்கும் கொடுக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. எனவேதான் Modalities are being worked out என்று சொன்னால், அந்த மாதிரி வழிகளிலே நம்முடைய அரசு இப்போது சிந்திக்கிறதா? அப்படி சிந்திக்கிறது என்று சொன்னால், அது சரிதானா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். இப்போது இந்த முறையில் ஒரு புனரமைப்பு தேவையா? ஒரு கட்டுக்கோப்பிலே தான் மாறுதலே தவிர, கோட்பாடு அடிப்படையிலே அது மாறுதலாக இருக்கக்கூடாது. இந்த மின்சார வாரியத்திலே பல அதிகாரிகள் பொறுப்பிலே உள்ளவர்கள் இருக்கிறார்கள். அதிகாரிகளை அடிக்கடி மாற்றுவது என்பது நல்லதல்ல. அனுபவம் தொடர்பாக இருப்பதைப் பாதிக்கும் வகையிலே அவர்கள் மாற்றப்படுகிறார்கள். அப்படி அடிக்கடி மாற்றப்படுவதால், அனுபவ அடிப்படையிலே காரியங்களை ஆற்ற முடியவில்லை. தொழிலாளர் சம்பந்தமாக இரண்டொரு அம்சங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, 15 ஆயிரம் காலி இடங்கள் என்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்த விவரம் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. ஒருசில வித்தியாசங்கள் இருக்கலாம். புள்ளிவிவரங்களை வெவ்வேறு வழிகளில் பெறும்போது

இந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே இருக்கும் இந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். பல இடங்கள் இப்போது காலியாக இருக்கின்றன. ரெக்ரூட்மென்ட் செய்வது ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஏற்கெனவே அங்கு பணிபுரிந்து ரிட்டையர் ஆன ஊழியர்களின் குடும்பத்திற்கு என்று 1/3 பங்கும், காண்ட்ராக்ட் லேபருக்கு 1/3 பங்கும், எம்பளாய்மென்ட் எக்ச்சேஞ்ச் மூலமாக 1/3 பங்கும் என்று வகுத்து ஒரு திருப்திகரமான முறையிலே இந்தக் காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிராவிடன்ட் பண்ட் கணக்கு கிட்டத்தட்ட 70 ஆயிரம் பேர்களுக்கு 6 ஆண்டுக் காலமாக சரிவர வைக்கப்படவில்லை. இப்போது மின்சார வாரியம் மிகவும் விரிவடைந்திருக்கிறது. அவர்கள் கணக்கு வைப்பதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கலாம். இருந்தாலும் 6, 7 ஆண்டுக் காலக் கணக்குகள் சரியாக இல்லாமல் இருக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே கணக்குகளைச் சீர்படுத்தி up-to-date ஆக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு புதிய முறைகள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அது என்னவாயிற்று ? இவைகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும்.

இப்போது மின்சார வாரியம் நஷ்டத்திலே நடைபெறுகிறது. இந்த நஷ்டத்தைச் சரிகட்டும் முறையிலே என்ன செய்யலாம் என்று ஆலோசனைகள் செய்ய வேண்டும். ஐரோப்பிய நாடுகளிலே ஒரு குறிப்பிட்ட துறையிலே அபிவிருத்தி காண்பதற்கு சம்பந்தப்பட்ட வேலைகளிலே நேரடியாக fie'd experience உள்ளவர்களை ஈடுபடுத்தி அனுபவ ரீதியாக என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வரலாம், transmission, distribution எல்லாம் எப்படிச் செய்யலாம் என்றெல்லாம் ஆலோசனை நடத்தி செயல்படுகிறார்கள். அப்படி அந்த வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களின் கருத்துக்களை அறிந்து செய்வதால் எந்தவிதமான கஷ்டங்களும் இல்லாமல் தேவையான மாற்றங்களைச் செய்யலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அதுபோல நாமும் செய்யலாம். 110, 120 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையில் கோளாறு வருகிறது என்று சொன்னால், உள்நாட்டிலே உற்பத்தி செய்யும் சாதனங்களைப் பயன்படுத்துவதால்தான் என்று சொல்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டும். ' இம்போர்ட் ' பண்ண வேண்டுமென்று சொன்னால், தேவையான சாமான்களை 'இம்போர்ட்' பண்ண வேண்டும். மேலும், தேவையான திறமை நம்மிடமே இருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மத்திய





அரசினுடைய கொள்கைகளுக்கும், வழிகாட்டுதல்களுக்கும் கட்டுப்பட்டிருந்தாலும், நம்முடைய மாநில அரசு ஆக்க பூர்வமான சில நடவடிக்கைகளை எடுத்து அபிவிருத்தி காணவேண்டும். Field workers, Engineering workers போன்றவர்களைப் பயன்படுத்தி, என்னென்ன நடவடிக்கைகளின் மூலம், எப்படி அபிவிருத்தியைக் காணலாம் என்று ஆலோசனை செய்ய வேண்டும். Electricity council என்று மின்சாரத் துறைக்கு ஒரு குழு இருக்கிறது. அதிலே கூட ஆலோசனைகளைச் சொல்லலாம். அபிவிருத்தி என்று எடுத்துக்கொண்டால், அந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர்களின் Contribution தான் அதிகரிக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் இந்த முறையில்தான் நடவடிக்கையை மேற்கொண்டு முன்னேறுகிறார்கள். மேலும், விஞ்ஞான பூர்வமாக அது சரியானது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக, மின்சாரத் துறையிலே இருக்கும் பல பகுதிகளிலேயிருந்து என்னென்ன ஆலோசனைகளைப் பெற முடியுமோ அவைகளைப் பெற்று நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்தி காண முடியுமா என்று அரசு சிந்திக்க வேண்டும் என்று கூறி அமைகிறேன், வணக்கம்.

திரு. ஏ. ஜே. தாஸ்-: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும்' 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 30 சதவீத மின்வெட்டு 1—12—1980 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது. அதிகார பூர்வமாக 30 சதவீத மின்வெட்டு என்று சொன்னாலும் இன்றைக்கு ஏறக்குறைய சுமார் 60 முதல் 70 சதவீத மின்வெட்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இன்றைக்கு தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகள் கர்நாடகத்திற்கும், ஆந்திரா மாநிலத்திற்கும் போகக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அப்படி அண்டை மாநிலத்திற்கு இந்தத் தொழிற்சாலைகள் செல்லுமானால், வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி உயர்வும், உற்பத்திக் குறைவும் ஏற்படும். இப்போது இருப்பது 30 சதவீதம் மின்வெட்டு தானே என்று அரசு சொல்லலாம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சென்னை நகரத்திற்கு அருகாமையில் உள்ள நெற்குன்றம் என்ற பகுதியிலே 60 சதவீதம்' 79 சதவீதம் மின்வெட்டு இருப்பதால்' அந்தப் பகுதியிலே உள்ள தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏன் இந்த நிலை அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறது என்று விசாரித்ததில் உதவிப் பொறியாளர் ஒருவர் 9 ஆண்டு காலமாக அதே இடத்தில் இருக்கிறார், அவர் தயவு காட்டினால்தான் மின்சாரம் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறதாம். ஆகவே,

அரசால் நிர்ணயிக்கப்பட்ட அந்த 70 சதவீதம் மின்சாரம் அந்தப் பகுதிக்கு ஒழுங்காகக் கிடைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு மின்வசதி செய்து கொடுத்திருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகின்றேன். காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்த மின் உற்பத்தித் திட்டத்தில் அங்கு கான்ட்ராக்ட் எடுத்திருக்கும் ஹின்டுஸ்ட்டான் கன்ஸ்ட்ராக்ஷன் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்திற்கும் அதில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் இடையில் உள்ள தொழில் தகராறு காரணமாக அந்த நிறுவனம் கதவடைப்பு செய்து, அதன் காரணமாக கட்டுமான வேலைகளும் 6 மாத காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். பல ஆயிரக்கணக்கான வாரிய அதிகாரிகளும், தொழிலாளர்களும் மற்றும் காண்ட்ராக்ட் ஊழியர்களும் வேலையில்லாமல் அங்கே காலம் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாரியம் சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகள் அரசுக்குத் தெரிந்திருக்குமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இத்தகைய காரணங்களால் இந்தத் திட்டம் நிறைவேறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது இதனுடைய விளைவுகள் கணக்கிடப்பட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினை கொண்டு வரப்பட்டதா என்ற விவரம் தெரியவில்லை. இதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும் தெரியவில்லை. இந்தவிதமான நிர்வாகக் கோளாறுகளால் மக்களின் வரிப் பணம் வீணாக்கப்படுகிறது. line loss என்று சொல்லப்படும் மின் இழப்பு 1970-71-ல் 17.20 சதவீதமாக இருந்தது 1974-75-லே 21.45 சதவீதமாக உயர்ந்

**(மாண்புமிகு மேலவைத்துணைத் தலைவர் தலைமை.)**

**(பிற்பகல் 12-20)**

திருக்கிறது. அது முதற்கொண்டு இதனைச் சரிப்படுத்தும் பொருட்டு மின் சக்தி கொண்டு செல்லுதல், வழங்குதல் திட்டம் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 30 சதவீதம் லைன் லாஸ் என்று சொல்லப்படும் வகையில் திருட்டுப் போகிறது. கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து நாம் 70 சதவீத மின்சாரத்தைத்தான் பெறுகிறோம் என்ற நிலை ஏற்பட்டிருக்



கிறது. லைன் லாசைப் பொறுத்தவரையில், இதனைக் கண்டுபிடிக்க ஒரு பொறியாளர் இருக்கிறார். அவருக்குக் கீழே பல உதவிப் பொறியாளர்கள்' மற்றும் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். இப்படி இத்தனை அதிகாரிகளை நியமித்தும்கூட 30 சதவீத மின்சாரம் லைன் லாஸ் என்ற பெயரில் திருடு போகிறது என்றால், இத்தனை அதிகாரிகளும் வேலை செய்கிறார்களா இல்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இத்தனை வருஷங்களாகப் பல கோடி ரூபாய் செலவு செய்தும், இன்னும் 30 சதவீதம் லைன் லாஸ் ஏற்படுகிறது என்றால், இந்த அதிகாரிகளெல்லாம் உண்மையில் வேலை செய்கிறார்களா ? இவர்களெல்லாம் இன்னும் தேவைதானா என்ற கேள்விகள்தான் எழுகின்றன. இவர்களுக்காக இவ்வளவு பணத்தைச் செலவு செய்வதைவிட இந்த லைன் லாஸ் மூலம் ஏற்படுகிற நட்டத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. 30 சதவீதம் லைன் லாஸ் ஏற்படும்போது, திறமையாகச் செயல்பட முடியாத அதிகாரிகளுக்காக கோடிக்கணக்கான மக்களின் வரிப் பணத்தை வீணாக்குவது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

1979-80 ஆம் ஆண்டில் மின் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 24 56 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இழப்புக்குக் காரணம் அங்கே உள்ள நிர்வாகக் கோளாறுகள்தாம். அதோடு அங்கேயுள்ள பல தலைமைப் பொறியாளர்களும்தான் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மின் வாரியத்தில் விஜிலன்ஸ் செல் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அதற்கு டி.ஐ.ஜி. தரத்தில் ஒரு அதிகாரி இருக்கிறார் அவருக்குக் கீழே பல அதிகாரிகள் இருக்கிறார்கள். இத்தனை அதிகாரிகளையும் போட்டு லைன் லாசைப் பொறுத்தவரையில், கண்டுபிடிக்க முடியாத நிலை இருக்கிறது என்றால், எதற்காக இந்த விஜிலன்ஸ் செல் என்ற அமைப்பு இருக்க வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது. எனவே, போலீஸ் நிருவாகத்தில் இருக்கும் அந்த விஜிலென்ஸ் செல்லைத் திறமையாகப் பயன்படுத்தி, 30 சதவீதம் லைன் லாஸ் ஏற்படுவதைத் தவிர்க்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

31—3—1980 நாளன்று உள்ள நிலவரப்படி மின் வாரியத்திற்கு ரூ. 28.66 கோடி வசூலாகாமல் பாக்கியாக உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரண மக்கள் 20 ரூபாய் கட்டணத்தைக் கட்டவில்லை என்றால், உடனே

அவர்களுடைய மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. ஆனால் 29 கோடி ரூபாய் அளவுக்கு இன்றைக்கு பாக்கி இருக்கிறது. இந்தப் பாக்கியை அதிகாரிகள் உரிய நேரத்தில் வசூல் செய்திருந்தால், நிலுவை ஏற்பட்டிருக்காது. மால்கோ நிறுவனத்திலிருந்து மட்டும் சுமார் 10 கோடி ரூபாயும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் அளவுக்கும் மின் பாக்கி வசூல் செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது. அதாவது 1 கோடி ரூபாய் அளவுக்கு மின் பாக்கி வசூல் செய்யப்படாமல் விட்டுவிட்ட பிறகே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, சாதாரண மக்களுக்கு எந்தச் சலுகையும் காட்டாமல் மின் துண்டிக்கப்படும்போது, ஒரு கோடி ரூபாய் அளவுக்கு நிலுவை ஏற்பட அதிகாரிகள் எந்த அளவுக்குச் சலுகை காட்டியிருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புரிகிறது.

மின் கட்டண பில்கள் புதிதாக மின் இணைப்பு கொடுத்து பல மாதங்கள் வரை உரிய நேரத்தில் அவர்களுக்கு அனுப்பப்படுவதில்லை. இதற்குக் காரணம், இதில் சம்பந்தப்பட்ட வாரியத்தின் பல்வேறு அலுவலர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையின்மையே ஆகும். இதனைத் தவிர்க்க வாரிய அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. மேலும் பல மாதங்களாக மின் கட்டண பில் பல பேருக்கு அனுப்பப்படவே இல்லை. இதைத் தவிர்க்கும் முறையில் மின் வாரியம் "ஸ்பாட் பில்லிங்" முறையைக் கொண்டு வருவதாக முன்பு சொல்லிய கருத்து என்னவாயிற்று என்று தெரியவில்லை. அந்த முறை இதுவரை அமுலாக்கப்பட்டதா என்றும் அதன் முடிவு என்ன என்பதும் நமக்குத் தெரியவில்லை.

சமீப காலத்தில் மின் வாரியத்தின் உயர் மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை பன்மடங்கு உயர்த்தப்பட்டிருந்தும் நிர்வாகம் சீராக இல்லை. மின் வாரியத்தின் செயல்முறையில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. எனவே இதற்கென்று ஒரு நிபுணர் குழு அமைத்து மின் வாரியத்தின் நிர்வாகத்தைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் தனியார் கட்டிடங்களை மின் வாரியம் வாடகைக்கு எடுத்து அதில் பல அலுவலகங்களை வைத்து நடத்தி வருகின்றது. இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபாய் வாடகையாகத் தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது. மின் வாரியத்தின் மத்திய அலுவலகத்தில் 10 அடுக்கு கட்டிடம்



ஒன்று கட்டப்பட்டு வருகிறது. ஆனால், அந்தக் கட்டிடம் அதனுடைய கண்ட்ராக்டர் செய்த தகராறு காரணமாக நின்றுபோய் இருப்பதாகத் தெரிகிறது. பல மாதங்களாக இந்த வேலை நின்றுபோய் இருப்பதன் காரணமாக அந்தக் கட்டிடம் இன்னும் பூர்த்தியாகாமலே இருக்கிறது. இதன் காரணமாக அனாவசியமாக வெளியிடங்களில் மின் வாரியம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாடகையாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இந்த வேலைகளைக் கவனிக்கும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் எல்லாம் வேலையில்லாமல் பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நஷ்டங்களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருந்தால், எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாயை மின்வாரியம் மிச்சப்படுத்தியிருக்கலாம். ஆனால், இப்போது வாரியத்தின் அலட்சியப் போக்கால் மக்களின் வரிப் பணம் விரயமாவதைப் பார்க்கிறோம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாள்தோறும் பலமுறை மின்வெட்டு ஏற்படுகிற நிலையை நாம் பார்க்கிறோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது கூட மின்வெட்டு ஏற்படுகிறது. மாலை 6 அல்லது 7 மணிக்கு விளக்கு வைக்கும் நேரத்தில்கூட திடீரென்று மின் வெட்டு ஏற்படுகிறது. இப்படி மின் வெட்டு ஏற்படுவதால் பல தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு அந்நிய நாட்டினர் ஒருவரின் வீட்டில் மின் வெட்டு காரணமாக தகராறு ஏற்பட்டு அவர் மின் நிலையத்திற்குப் போய் சண்டை போட்டு இவரும் அங்கே வேலை பார்ப்பவரும் இருவருமாக கட்டிப் புரண்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆகவே இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படாத வண்ணம் மின் வாரியம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மின் வாரியத்தின் அலுவலகத்திற்குள் சென்றால், எங்கே பார்த்தாலும் தலைமைப் பொறியாளர் என்ற பலகைதான் தொங்குகின்றது. நாம் ஒரு கடிதம் எழுதினால்கூட, அது அவர்களுக்கு உடனே போய்ச் சேருவதில்லை. சாதாரணமாக சீப் எஞ்சினியர், எலெக்ட்ரிசிடி என்று விலாசமிட்டுக் கடிதம் எழுதினால், அது ஒவ்வொரு தலைமைப் பொறியாளராகச் சென்று உரியவரிடம் போய்ச் சேர 3 மாதம் ஆகிறது. எனவே நம்முடைய கடிதத்திற்கு பதில் வருவதற்கே 3 மாதம் ஆகிவிடுகிறது. இந்த மாதிரியான நிலைமைகளை மாற்றி, நாம் எழுதும் அனைத்துக் கடிதங்களும் உரிய தலைமை எஞ்சினியருக்கு உரிய காலத்தில் சென்று சேர்ந்து, அவர்களும் தக்க நடவடிக்கைகளை விரைவில் எடுக்கும் நிலையை உருவாக்க வேண்டும். எந்த அரசு ஆட்சியிலிருந்தாலும், மின்சார வாரியம் சரியாகச் செயல்பட வேண்டும். எந்த

ஆட்சி வந்தாலும்' அதற்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுப்பவர்களே இந்த அதிகாரிகள்தான் என்ற நிலை இருக்கிறது. ஆகவே அரசு அதிகாரிகள் இதில் உரிய கவனம் செலுத்த வேண்டும், அரசும் இதில் அக்கறை காட்ட வேண்டும் என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Deputy Chairman, I have gone through this very comprehensive, very exhaustive, very revealing statistical report and I must congratulate the Hon. the Electricity Minister. I would like to call him more as Energy Minister so that our energy system may be improved and developed under his leadership. What I would like to say would be just a home truth, but as a consumer and as a house-wife what I would say may be of some use to many consumers and housewives.

We are all good people but during lean months we need reminders that energy should be conserved. What struck me was that if advertisements are made in the different industrial units in the particular area and if some catchy words like "Your sacrifice is nation's pride" are put there in the energy bills sent to the consumers, along with the name of the industrial units in the area, the Electricity Department would be able to meet the expense of the bills with the income got from these advertisements and every time, the consumer sees the bill, he will be reminded that it is his duty to conserve energy. The domestic consumers who can make some real sacrifice will be reminded all the time that they must conserve energy so that it may be utilised for industries. Another point I would like to suggest is that at least during lean months, if we remind the consumers through our radio and T.V. about conservation of energy, it will have a very salutary effect.

Another point that struck me was this. When I went through the loan position of the Electricity Board. I felt that we could have a Finance Corporation just like TIDCO helping industries, the Transport Development Corporation helping the development of transport; such a Corporation for Energy Development could help the Electricity Board to achieve more generation. Now people are more induced to subscribe to such Corporations in the form of Fixed Deposits because they are comparatively more profitable.



Another point which came to my mind while I was listening to the speeches made in the House is in relation to Gober Gas and gas that could be produced from human excreta. We get help from the Government of India for village industries and digging of big wells and we should try to get some foreign assistance for formation of gas producing complexes. If these are established in the periphery of cities or in the rural areas, electricity consumed by domestic consumers could be reduced. These gas plants will be able to give necessary energy for domestic consumption. I think that if these are introduced in the houses, pilferage will also be reduced because electricity is somehow or other pilfered. But, if these lights which function on gas-plants could be established, there will be very little pilferage. Then, we will be able to make the whole place sanitary and the cow-dung or human excreta can become a sanctified manure which can be used in our farms.

With these words, I once again wish the Electricity Board all success. From the point of view of consumers, I would also like to say that it is our duty also to see that our industries function well and profitably. Thank you.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே' மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு அனுமதி அளித்ததற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மின்சாரம், நிலக்கரி, உருக்கு ஆகியவைகள் அடிப்படையாக இருக்கக்கூடியவைகளாகும். இப்போது நிலக்கரியை ஏன் எடுக்கவில்லை என்று கேட்டால், மின்சாரம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். மின்சாரம் ஏன் கிடைக்கவில்லை என்று கேட்டால், நிலக்கரி கிடைக்கவில்லை அனல் மின் நிலையத்திற்கு என்று சொல்லுகிறார்கள். நிலக்கரி ஏன் கிடைக்கவில்லை என்றால் டிரான்ஸ்போர்ட் வசதி கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு பிரச்சினையோடு இன்னொரு பிரச்சினை தொடர்பு கொண்டிருப்பதால், நாட்டிலே இன்றைக்கு பிரச்சினைகள் வளர்ந்திருக்கின்றன.

இந்திய நாட்டில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும், ஜப்பான் நாட்டில் தாதுப் பொருள்களே இல்லாமல், அவற்றை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து—நிலக்கரி, இரும்பு, தாதுப் பொருள்கள் ஆகியவற்றையும் இன்னும் மற்ற பொருள்களையும் இறக்குமதி செய்து—உலகத்திற்கே வழங்கக்

கூடிய அளவிற்கு, வல்லரசு நாடான அமெரிக்காவோடு போட்டி போடுகிற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், கேரளா போன்ற மற்ற தென் மாநிலங்களில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய அளவிற்குக் கிடைக்காமல் இருக்கிறது. சமீபத்திலே, மதிப்பீட்டுக் குழுவோடு பெரியாறு அணைப் பகுதியைப் பார்வையிடச் சென்றிருந்தேன். பெரியாறு நீர்த் தேக்கத்திலே 110 அடி தண்ணீர் எப்போதும் தேக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். 110 அடிக்கு மேல் இருக்கக்கூடிய தண்ணீரைத்தான் நாம் எடுக்க வேணடும் என்று ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. 110 அடி தண்ணீர் இருக்கக்கூடிய அடிமட்டத்திலிருந்து சுரங்கப் பாதை அமைக்கப்படுமானால், அதிலிருந்து வரக்கூடிய வேகத்திலே அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இதைச் செய்வதற்கு கேரள மாநிலமும், தமிழ்நாடு மாநிலமும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 110 அடி தண்ணீர் எப்போதும் இருக்கிறதா என்று கேட்டபோது, ஒப்பந்தம் அப்படி இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தியா பூராவும் ஒரு நாடு என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஒரு பகுதியில் மட்டும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கக் கூடிய நிலைமையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, தமிழ் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாகப் பொறுப்பு எற்று திட்டத்தை முடிப்பார்கள் என்று நம்புகிறேன். அவர் மீது நான் கொண்டுள்ள மரியாதை காரணமாக இதை நான் சொல்லவில்லை. இந்த நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கிற ஒரு தனி மனிதர் இருக்கிறார், அவர் சிறப்பாகச் செயல்படுகிறார், அவரை ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இதைத் தெரிவிக்கிறேன். வேறு ஒன்றுமல்ல. மேற்கே நோக்கிப் பாய்ந்து ஓடிக் கடலில் கலந்து வீணாகிற நீரைத் திருப்பி விடுவதன் மூலமாக மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியும். அந்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், மின் கம்பிகளில் ஃப்யூஸ் போய் விட்டால், மின் துறையினர் சென்று ஃப்யூஸ் போட்டுவிட்டு அவர்களுக்கு பில் அனுப்பிவிடுகிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. சில வீடுகளில் கூட இப்படிச் செய்கிறார்கள் என்று அறிகிறேன். இதையும் மின்சார வாரியம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மின்சாரம் கொடுக்கும் நேரம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆலைகளுக்கு, தொழிற்சாலைகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. இதனால் நடவு போன்ற காரியங்கள் நின்று விடுகின்றன. அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்குச் சரியான நேரத்தில் தகவல் கொடுக்க மின்சார வாரியம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே பார்க்கிறேன், சினிமா கொட்டகையிலிருந்து சாதாரண ஜவுளிக்கடை வரையில் ஏர்-கண்டிஷன் சாதனம் பொறுத்தப்பட்டிருக்கிறது. சாதாரண விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைப்பதில் எவ்வளவு தடைகள் நாட்டிலே இருக்கின்றன. ஆனால் நகரத்திலே இருப்பவர்களுக்கு ஏ.சி. அமைத்துக்கொள்ள தடைகள் இல்லை. இது என்ன நியாயம்? தமிழ் நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே 62 சதவீதம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும்போது, ஒரு சிலர் மட்டும் ஏ.சி. வைத்துக்கொண்டு குளுமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை இருக்கும் போது, இப்படிப் பயன்படுத்த வேண்டுமா? விசிறி போதாதா? நாம் எல்லாம், சட்ட மன்றத்தை விசிறியைக் கொண்டே நடத்துகிறோமே. ஆகவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் ஒரு சமுதாயக் கண்ணோட்டத்தோடு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மின் விசிறியா அல்லது கை விசிறியா?

**திரு. செ. முத்துசாமி:** நான் மின் விசிறியைக் கை காட்டிச் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். கையினால் வீசும் விசிறி அல்ல, மின் விசிறிதான்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** யாருக்கு விசிறி?

**திரு. செ. முத்துசாமி:** யாருக்கு யார் விசிறி என்பது எனக்குத் தெரியாது. நான் யாருக்கும் விசிறி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிப்பட்ட வாதங்களை விசிறி எறிந்துவிட்டு விவாதத்திற்கு வரலாம் மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. செ. முத்துசாமி:** ஆகவே இத்தகைய வேறுபாடுகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓட்டல்களும், தங்கும் விடுதிகளும் ஏ.சி. இல்லாமல் கட்டப்படுவதில்லை. அதற்குத் தாராளமாக மின்சாரம் கொடுக்கப்

படுகிறது. அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு சாதாரண நாட்டில்' சோசலிஸச் சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று சொல்லும் நம் நாட்டில் இப்படிப்பட்ட தேவைகளுக்கு அதிகமாக இடம் கொடுக்காமல் அவற்றை நீக்கிவிட்டு கிராம முன்னேற்ற நோக்கோடு, உற்பத்தி நோக்கோடு திட்டங்கள் தீட்ட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சாண வாயுவை உற்பத்தி செய்ய சீனாவில் ஒவ்வொரு கிராமத்திற்கிடையிலேயும் ஒவ்வொரு பகுதியிலே அமைப்புகளை ஏற்படுத்தியிருப்பதாகப் பத்திரிகையிலே படித்திருக்கிறேன். கிராமங்களில் சாணம் நிறைய கிடைக்கிறது. ஆகவே ஒரு மையப் பகுதியில் பெரிய அளவிற்குத் திட்டங்களை ஏற்படுத்தி அதிலிருந்து வரக்கூடிய வாயுவை சமையல் செய்வதற்கும் மற்ற காரியங்களுக்கும் பயன்படுத்தும் வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று ஒரு கேள்வியைக் கேட்டபோது, மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் "சம்பந்தமில்லை" என்று சொன்ன காரணத்தால், அதை அவரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்திலும் இன்னும் பல மாவட்டங்களிலும், என்னுடைய தொகுதியிலும், குறிப்பாகப் பரளியாறு, குந்தா ஆகிய மின் திட்டங்கள் உள்ள இடங்களில் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு வேறு எந்த அரசு ஊழியர்களும் இல்லை. அங்கே வேறு ஊர்களும் இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் பணிபுரியும் மின்சார வாரிய ஊழியர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தினர் உடல் நலம் அற்றுப் போய்விட்டால், அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல மின்சார வாரியத்தின் வேன் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அவர்களுக்காக உழைக்கக் கூடிய ஆசிரியர்களுடைய குடும்பத்தில் விபத்து ஏற்பட்டால், அல்லது உடல் நலம் அற்றுப் போய்விட்டால், மருத்துவ மனைக்கு அவர்களை அழைத்துச் செல்ல வேன் பயன்படுத்தப்படுவதில்லை. அதற்குப் பணம் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதுவும் முதலிலே பணம் கட்டினால்தான் வேனைப் பயன்படுத்தலாம் என்ற பரிதாபகரமான நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதற்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவ வசதி எல்லோருக்கும் பொதுவானது. அதுவும் மலைப் பகுதியில் வாழும் அவர்களுக்கு இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள், இதை நான் ஆசிரியர்களுக்காகக் கேட்பதாகக் கருத வேண்டாம். மலைப் பகுதியில் இருப்பவர்கள் கையில் தூளி கட்டி தூக்கிச்



செல்லும் சங்கடமான நிலை ஆனமலை டாப்சிலிப் பகுதியில் உள்ள ஆசிரியர்களுக்கு இருப்பதால், அவர்கள் கண்ணீர் விடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

(பிற்பகல் 12-40)

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மின் வாரிய அறிக்கையின் மீது நிறைய பேச வேண்டுமென்று எண்ணினேன். நேரம் இல்லாததனாலே சிலவற்றை மட்டும் கோடிட்டுப் பேசி முடிக்க விரும்புகிறேன். நம்முடைய தமிழகம் இந்தியா முழுவதிலும் உள்ள மாநிலங்களில், மூன்றாவது மாநிலமாக, மின்சக்தியைப் பயன்படுத்துகின்ற மாநிலமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நம் மாநிலம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிக்கலான எதிர்காலம் பற்றியும் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மின்சார உற்பத்தி குறைவாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, நாம் அதிகமாகப் பயன்படுத்துகின்ற நிலைக்கு வளர்ந்திருக்கிறோம் என்றும் சொன்னார்கள். இவற்றைச் சொல்லி, இனிமேல் மின்சார உற்பத்தியை அதிகரிப்பதிலே இருக்கும் சங்கடங்களை, செலவுகளைப் பற்றியும் மிகத் தெளிவாக இந்த முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் உண்மையில் மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்களையும், இந்தத் துறையின் திறமையைப் பற்றியும் பாராட்ட வேண்டுமென்றுதான் இங்கே வந்தேன். இப்போதும்கூட அவர்கள் வேலை முறையையும், நிர்வாகத் திறமையைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் மற்ற துறைகளில் இருக்கின்ற குறைகளைப்போல சொல்லவில்லை என்றாலும், இருக்கின்ற நிலைமைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தினுடைய எதிர்காலத்தைப் பாதிக்கின்ற அளவுக்கு இந்த அமைப்பு அமைந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையிலே நீர் மின்சார உற்பத்தியை எந்த அளவுக்குத் தயாரிக்க முடியுமோ அந்த அளவுக்கு முடித்தாகி விட்டது. இப்போது சிலவற்றை வைத்திருக்கிறார்கள். அதுகூட வளர்ச்சிக்கு ஏற்ப வருமா என்று சொல்ல முடியவில்லை. அனல் மின்சாரத் திட்டங்களைப் பொறுத்த வரையில் இருக்கிற சங்கடங்கள் அதன் உற்பத்தி பெருமளவுக்கு தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். இது ''டிபெக்டிவ் இன்ஜினியரிங்' (defective engineering) அல்லது ஸ்கீமிங் (Scheming) மற்ற காரணங்கள் விளைவாக இருக்கலாம். பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து வேக

மாக அணுகியிருக்க வேண்டும். ஆனால் அந்த அளவுக்கு இல்லாமல் ஒரு அலட்சியப் போக்கோடு நடந்ததன் விளைவாக இன்றைக்கு அனல் மின்சார உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்திருக்கின்றன அல்லது தேவைக்கு ஏற்ப உற்பத்தி ஆகவில்லை. நிர்வாகச் சங்கடங்கள் இருக்கின்றன என்று நிலைமைகள் வந்திருக்கின்றன. அதிலே இன்னொரு வேதனை. வெளிநாடுகளுடைய உதவியோடு இதையெல்லாம் நிறைவேற்றி வந்திருக்கிறோம். இதற்கு இடையிலே பி.எச்.இ.எல். நிறுவனம் கூட இதிலே தலையிட்டிருக்கிறது. அப்படியிருந்தும்கூட சீர்திருத்தி அமைக்க முடியவில்லை. இதிலே உள்ள உண்மையான கோளாறுகள் என்ன என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். அடுத்து, எண்ணெய் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பெட்ரோல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். டீசல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் எத்தனை மாதத்திற்கு வரும் என்று சொல்ல முடியாது. அப்படி வந்தாலும், எந்த அளவுக்கு வினியோகம் வரும் என்று சொல்ல முடியாது. விலை நிர்ணயம் செய்வது என்பது இருக்கிறது. அரசு நிலக்கரி மூலமாக இந்த உற்பத்தியை முழுமைப்படுத்துவதற்கு முனைந்தாக வேண்டும். இந்தப் பிரச்சினைகளை மாநில அரசு மத்திய அரசோடு எடுத்துப் பேசியிருக்க வேண்டும். நிலக்கரி அதிகமாக உற்பத்தியாகின்ற இடங்களிலேயிருந்து நேரடியாக வந்து சேர்வதற்கு வாய்ப்புகளை முழுமைப்படுத்தியிருக்க வேண்டும். இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. ரெயில்வே வாகன்கள், கப்பல்கள் கிடைப்பதில்லை. நம்முடைய இந்தப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, காரியங்களைச் செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், குடிசைகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கின்ற திட்டத்தைப்பற்றி அறிவித்தார்கள். உண்மையிலேயே அதை நான் பாராட்ட விரும்புகிறேன். அது வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அதனால் ஏழைகள் பலனடைந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் தாண்டி மின்சார வசதி சிலருக்குத்தான் என்று இல்லாமல் எல்லோருக்கும் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்கு முயற்சி எடுக்க முடியும் என்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே தெரு மின்சார விளக்குகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே இன்னும் சில குறைகள் இருக்கின்றன. அது வேறு. மின்சாரத் துறையே இதை ஏற்று நடத்த வேண்டும் என்ற வேண்டுகோள் வந்தபோது,





இந்தத் துறை அதை தைரியமாக ஏற்றுக்கொண்டு இன்றைக்கு ஓரளவுக்கு வெற்றி கண்டிருக்கிறது என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை இயங்குகின்ற முறையைப் பொறுத்தவரையில், நிர்வாகச் சீர்திருத்தம் மிக மிக அவசியமானதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆற்றலோடு செயலாற்றினாலும், துறையின் தலைமை அதிகாரிகள் நன்கு செயலாற்றினாலும்கூட, இந்த அட்மினிஸ்ட்ரேடிவ் ஸ்ட்ரக்சர் சீர்கேடு உடையதாக இருக்கிறது. செயல்படுகின்ற முறையிலே சங்கடங்கள் இருக்கின்றன.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், மீட்டர் ரீடிங்கைப் பொறுத்தவரையில், மீட்டர் ரீடிங்குக்கும் மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதைக் கணக்கிடுகின்ற முறையும் அதற்காக வரும் பில் கட்டணமும் சரியில்லை. இப்படிப்பட்ட நிலையில் இந்தத் துறை செயல்படும்போது, மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், மேற்கொண்டு மின்சாரம் இல்லை என்று சொல்லும்போது, விவசாயிகள் எவ்வளவு சங்கடமும், துர்ப்பாக்கியமும் பெற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நிலைமைகளைச் சீர்திருத்த முடியாமல் ‘ அட்மினிஸ்ட்ரேடிவ் ஸ்ட்ரக்சர் ’ இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை என் ஏற்பட்டது என்று பார்த்தால், இந்தத் துறை இன்சினியருக்கும் மற்ற ரெவின்யூ பிரிவு அதிகாரிக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. ஜூனியர் இன்சினியர், அசிஸ்டென்ட் இன்சினியர், எஸ்.இ. என்று எல்லாம் இருக்கிறார்கள். இந்தத் துறை வேறு, அந்தத் துறை வேறு என்ற மாதிரி இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒருவருக்கு ஒருவர் யார் கேட்பது என்ற நிலையில் இருக்கிறார்கள். அங்கே எல்லாத் தரப்பிலும் போட்டா போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுதான் முக்கியமான காரணம் என்பதை இந்த அரசுக்கு, அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

பெரிய அளவிலே இந்தத் துறையினுடைய தொழிலாளர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி வளர்ந்திருக்கின்ற அளவுக்கு, பயன் துய்ப்போர்களுக்குப் பலன் கிடைக்கும் வகையில் இந்தத் துறை செயல்பட வேண்டும். சீப் இன்சினியர், சூப்பிரண்டிங் இன்சினியர் எல்லாம் இருக்கிறார்கள். மக்கள் அங்கே போய் கேட்டால், ஒவ்வொரு அதிகாரியும், “ எங்கள் துறைபற்றிக் கேட்டால் சொல்ல முடியும். ரெவின்யூ யூனிட்பற்றிக்

கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்?" என்கிறார்கள். பில் கட்டுவதற்கு ஒரு துறை, கட்டணம் நிர்ணயிப்பது ஒரு துறை என்று இருக்கிறது. யூனிட்டைக் கணக்கெடுப்பது ஒரு துறை. அவற்றுக்கெல்லாம் வசூல் செய்வது ஒரு துறை. ஆனால் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு கிடையாது. ரெவின்யூ துறை தனியாக இருக்கிறது. இப்படி தொடர்பு இல்லாமல் ஒவ்வொரு துறையும் இருக்கின்றது. இதைச் சீர்படுத்த வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் சிறப்பாக இயங்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்தாலும், மற்ற அதிகாரிகளும் சரியாகச் செயல்பட்டால்தான், நிர்வாகம் சீராக இருக்கும். இது ஒரு 'பப்ளிக் யுட்டிலிட்டி சர்வீஸ்' என்ற அளவில் இந்தத் துறையோடு நேரடியாக அரசுக்குத் தொடர்பு இருப்பதால், மக்களிடத்திலே அரசைப்பற்றி எதிரொலிகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை சீர்படுத்தப்படாவிட்டால் சரியாக இயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, மின்சார விநியோகத்தைப் பொறுத்தவரை, மின்சாரம் தடைப்படாமல் சீராகக் கொடுக்க வேண்டும். அவ்வப்போது தடைப்படுகிறது என்று சொல்கிறார்கள். உணவு உண்ணும் போதும் மின்சாரம் தடைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னொரு மற்ற மாநிலங்களுக்குப் போய்விடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திலே மின்சாரம் அதிகமாகத் தடைப்படுகின்றது என்ற காரணத்தால்தான் தொழிற்சாலைகளைத் தொடங்குகின்றவர்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்ற நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இதனை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். நாம் வேகமாக நேரடியாகச் செயல்பட வேண்டும். அதிலே வேகம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகள் அதைக் கட்டவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். அது தவறுதான். அதை நான் ஏற்கிறேன். ஆனால் அதே நேரத்திலே சாதாரண கார்டு எழுதினாலே, இரண்டு மூன்று ஆண்டு காலம் கட்டாமல் இருக்க தூண்டுகோலாக இந்த வாரியம் அமைந்திருக்கிறது. அப்படி இந்த வாரியத்தின், அரசின் நடவடிக்கைகள் இதற்குக் காரணமாக இருந்தன என்ற குற்றச்சாட்டை சுமத்துகிறேன். அதன் மூலமாக விளைவு எதுவாக இருந்தாலும், கட்டணத்தைக் கட்ட வேண்டியதில்லை என்ற உணர்வு உயர்ந்து இருக்கிறது. அதற்குக் காரணம் இந்தத்



துறைதான் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இன்றைக்கு அதற்கு நாம் பரிகாரம் காண வேண்டும். அது பேச்சு வார்த்தையில் முடிந்து விட்டது. இனிமேல் மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே, ஒரு அபாய நிலைக்கு நாம் கொண்டு செல்லாமலிருக்க வேண்டும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் மனம் திறந்து சொல்லியிருக்கிறார்கள். என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். திட்டமிடுவதிலே, மின் உற்பத்தி செய்வதிலே உள்ள சங்கடங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி இவைகளுக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும். மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியாக வேண்டும் என்பது அவசியமென்றால், அதை உயர்த்தித்தான் ஆகவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

(பிற்பகல் 12-50)

அரசினர் எல்லோரையும் அழைத்துப் பேசி, எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். அதற்கு யாரும் குறுக்கே நிற்க முடியாது. அப்படி குறுக்கே நின்றால், அது இந்த மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும். எந்த முறையில் அதைச் செய்வது என்பதை யோசித்துச் செய்ய வேண்டும். வசதி படைத்தவர்களுக்குச் சலுகை இருக்கிறது, மற்றவர்களுக்கு இல்லை என்ற உணர்வுகள் ஏற்படாத வகையில், மொத்தமாக எல்லோருக்கும் பயனளிக்கின்ற வகையில் டாரிப்பை—மின் கட்டணத்தை—மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோமென்ற உணர்வு எல்லோருக்கும் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார வாரியம் வளரவேண்டுமென்றால், மின் வாரியத்தின் முழுப் பயன் எல்லோருக்கும் கிடைத்து, தமிழ் நாட்டின் பொருளாதாரம் வளர வேண்டுமென்றால், அமைச்சரவர்கள் தைரியமாக இதனைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்து, அதற்கு மற்றவர்களைத் துணை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடலூரில் ஒரு எஸ்.ஈ., விழுப்புரத்தில் ஒரு எஸ்.ஈ. இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த வகை அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். எனவே கடலூரில் வேகமாகக் காரியங்கள் நடக்கின்றன. விழுப்புரம் டிவிஷனில் அடிக்கடி அதிகாரிகளை மாற்றுகிறார்கள். அதன் காரணமாக அங்கே லெதார்ஜிக் மெஷினரி இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் விருப்பமில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் சென்னையில் இருக்க வேண்டு

மென்று விரும்புகிறார்கள். சென்னையில் கொடுக்க மாட்டோம், விழுப்புரத்திற்குப் போ, திண்டிவனத்திற்குப் போ என்று தலைமையிடத்தில் சொல்லுகிறார்கள். எனவே அவர்கள் திரும்பவும் சென்னைக்கு வரும் வழியிலும் விருப்பமில்லாமல் அங்கே இருப்பதால், ஏதோ சம்பளம் வாங்குகிறோம், உட்கார்ந்திருக்கிறோம் என்ற நிலையில் இருந்துகொண்டு, செயல் திட்டங்கள் துரிதப்படுத்தப்படாமல், வேகப்படுத்தப்படாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் கிராமப் பகுதி மக்களுக்கு மின் வாரியத் திட்டங்களின் பயன் கிடைக்காமல் இருக்கிறதென்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னுடைய மாவட்டத்திற்கு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, எங்களுடைய பகுதிக்கு கடலூர் அளவிற்குச் சரியாக எல்லா வாய்ப்புகளையும் அளிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் தரப்பட்டிருக்கின்ற மின் வாரிய நிதிநிலை அறிக்கையில், இன்று நமது மாநிலத்தில் நாம் மின்சார உற்பத்தியிலும், மின்சாரத்தைப் பகிர்ந்து அளிப்பதிலும் எந்த நிலையில் இருக்கிறோமென்பதை நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகப் புள்ளி விவரங்களோடு எடுத்து வைத்திருக்கிறார்கள். மின்சாரத் துறையிலே ஒரு இன்ஜினியராக இருந்து, அந்தத் துறையிலே பல ஆண்டுகள் பணியாற்றிய ஒருவரை நாம் அமைச்சராகப் பெற்றிருப்பது உண்மையில் சிறப்புடையதாக அமைகிறது. அவருடைய ஆற்றலாலும், அனுபவத்தாலும் அந்தத் துறையைச் செம்மைப்படுத்தி, அதன் மூலம் தமிழ்நாட்டுக்கு நன்மை செய்ய முடியுமென்பதை நான் பரிபூரணமாக நம்புகிறேன். அந்த நிலையில் எனது கருத்துக்களை எடுத்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவினுடைய உற்பத்தித் திறனில் நாம் பின் தங்கியிருப்பதை அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். புள்ளி விவரங்களையெல்லாம் சொல்லி, விளக்கம் சொல்கிற கால கட்டத்தைக் கடந்துவிட்டோம். மின்சாரப் பசியோடல்லாமல், வயிற்றுப் பசியும் சேர்ந்திருக்கிற நேரமாதலால், மின்சாரப் பசியைப்பற்றிச் சொன்னால், வயிற்றுப் பசி அதை விழுங்கிவிடுமென்ற அச்சமிருப்பதால், அதை விட்டுவிடுகிறேன். மேலும் வருகிற ஆண்டுகளில் உற்பத்தித் திறன் குறைந்துகொண்டு செல்லும் நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே மின்சார உற்பத்தியில் நாம் எந்த அளவிற்கு வெற்றி பெறுகிறோமோ அந்த அளவிற்குத்



தான் தமிழகத்தின் எதிர்கால வளம், தொழில் வளம், வேலை வாய்ப்பு நிலைமை, நம்முடைய நாட்டின் சராசரி வருமானத்தைப் பெருக்கும் நிலை ஆகியவை இருக்குமென்பதை உணர்ந்துள்ள நிலையில் தமிழ் நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கும் ஒவ்வொருவரும் மின்சார உற்பத்தித் திறனை எந்த அளவிற்குப் பெருக்குவதென்பதில் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் சொல்லத் தேவையில்லை. நாங்களெல்லாம் கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும். ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் அவர்களுடைய ஆராய்ச்சியின் முடிவைச் சொல்லலாம். ஆனால் அவற்றைச் செயலாக்கி, உற்பத்தியைப் பெருக்க வேண்டிய பொறுப்பு மின்சாரத் துறையைச் சேர்ந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அனல் மின்சாரத்தைத்தான் நாம் நம்ப வேண்டிய அளவிலே இருக்கிறோம். ஏனென்றால் புனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், நமது மாநிலத்தில் எந்த அளவிற்கு அதைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டு, அந்தத் திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் 'இன்ஸ்டால்ட் கெபாசிட்டி' நாம் எதிர்பார்த்ததைவிட பல இடங்களிலே குறைந்திருக்கிறது. அதற்குப் பருவ மழை காரணம் மட்டுமல்ல, வேறு பல தொழில் நுணுக்கக் காரணங்கள் இருந்தாலும், அவற்றை நிவர்த்திக்க வழி வகைகளை ஆராய்ந்து, நிவர்த்தி செய்யும் நிலையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு மாநிலங்களுக்குரிய புனல் மின்சாரத் திட்டங்களை இப்போது செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அவைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக கேரள மாநிலத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி, அதில் வெற்றி கண்டு அதற்குப் பிறகு அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம். வெற்றி காண்போமென்று அமைச்சரவர்கள் உறுதி செய்து, முதலமைச்சரவர்கள் செல்ல இருப்பதாகச் சொல்லி, இங்கே நாம் விவாதிப்பதற்கு முன்பாக, திருவனந்தபுரத்திற்கு முதலமைச்சரவர்களும், மின்சார அமைச்சரவர்களும் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக சென்று பேசினார்களென்று அறிகிறேன். நாம் அண்டை மாநிலத்தோடு பேசுகின்ற நிலையில் இருக்கிறோமென்று நினைக்காமல், அந்தத் திட்டங்களில் நமக்கு அதிக உரிமையுண்டு என்று வற்புறுத்த வேண்டுமென்று சொல்லுவேன். ஒருவேளை அது பேச்சு வார்த்தைக்குப் பயன் உள்ளதாக இல்லாமல், புத்திசாலித்தனமாக இல்லாமல் இருக்க

லாமென்று நினைக்கலாம். அதாவது இருக்கும் உரிமையை இழந்து விட்டோம். ஆகவே இப்போது தர வேண்டுமென்று உரிமையோடு கேட்டால், இருப்பதையும் இழக்கும் சூழ்நிலை வரலாமென்ற அச்சம் வரலாம். தேவி குளம்-பீர்மேடு பகுதிகள் உண்மையிலே நம்மோடு இருக்க வேண்டிய பகுதிகள். அதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அங்கே இருக்கும் சட்டமன்றப் பிரதிநிதி தமிழர்தான். என்றுமே தமிழர்கள்தான் இருப்பார்கள். ஏதோ ஒரு சூழ்நிலையில் நாம் விட்டுவிட்டோம். நம்முடைய பெருந்தன்மையால் என்று நாம் கருதினாலும், அதற்கு வேறு விளக்கம்—கையாலாகாத்தனம்—என்று சொல்லுவது முறையாகாது. ஆனால் அதை உணர்கிற பெருந்தன்மை அவர்களிடத்தில் இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலே கேரளத்திலே உற்பத்தியாகிற உபரி மின்சாரத்தை தமிழ்நாட்டுக்குக் கொடுத்து, அதற்குப் பிறகு தமிழ்நாட்டின் மூலமாக கர்நாடகத்திற்குக் கொடுக்கும் நிலைமை இருந்தது. இப்போது கர்நாடகத்திற்குத் தனியாக இணைப்புத் தொடர்களை ஏற்படுத்தி, அவர்களே பேரம் பேசி, நம்மைவிடக் கூடுதல் விலைக்கு வாங்கும் நிலைக்கும், இவர்கள் கொடுக்கும் நிலைக்கும் வந்திருக்கிறார்கள். நாம்கூட அதிகமாகக் கொடுக்கும் நிலைக்கு வந்திருக்கிறோம். இந்த நிலையில் நம்முடைய பேச்சுகள் வெற்றி பெறுமா என்ற அச்சம் ஏற்படுகிறது. பேச்சு வார்த்தை நீடித்து, காலம் கடக்க, கடக்க, அது நமக்குப் பாதகமான சூழ்நிலையைத்தான் உருவாக்கும். எனவே அந்தத் திட்டங்களை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். எனவே இனியும் காலதாமதம் ஏற்படாமல், பாண்டியாறு-புன்னம்புழா, ஷண்முகா நதி புனல் திட்டம் ஆகிய திட்டங்களை விரைவில் கொண்டு வர அரசு தக்க நடவடிக்கை எடுத்து, அதன்மூலம் தமிழக மக்கள் நன்மை பெற வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1-00)

அடுத்து, நாம் உற்பத்திக்குச் செல்ல வேண்டும். உற்பத்தி என்று சொன்னால், குறிப்பாக அனல் மின் உற்பத்திக்குத்தான் செல்ல வேண்டும். இன்றையதினம் நிலக்கரியைப் பொறுத்தவரை, அதனுடைய வசதியைப் பொறுத்தவரை, என்ன நிலைமை என்று பார்க்க வேண்டும். அதனுடைய விலை ஏறியிருக்கிறது என்றும் அதிலுள்ள சங்கடங்களைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். கப்பல் மூலம் வாங்கிக்கொண்டு வரும் முயற்சி ஏன் வெற்றி பெறவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதுபற்றி இந்த



அரசு ஆராய வேண்டும். அதை நாம் அதிகப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். அனல் மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே நிறுவப்பட்ட கல்பாக்கம், எண்ணூர், தூத்துக்குடித் திட்டங்கள் எல்லாம் எதிர்பார்த்தபடி, வெற்றி பெறவில்லை. சுவிட்சர்லாந்திலிருந்து வாங்கப்பட்ட பிளாண்ட் சரியாகச் செயல்படவில்லை. அதுபோல் பெல் நிறுவனத்திலுள்ள பிளாண்ட்டும் சரியாகச் செயல்படவில்லை. அதற்கான காரணங்களை இந்த அரசு சொல்லியிருக்கலாம். ஆனால் ஆயிரம்தான் காரணங்கள் சொன்னாலும், ஒரு மன்னிப்புக்கூட கிடையாது என்று நம்முடைய பெரியோர்கள் சொல்லியிருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இனிமேலாவது இதுமாதிரி காரணங்கள் சொல்கிற நிலைமை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 'பெல்' ஸ்தாபனத்திலிருந்து வெளி நாடுகளுக்கு பிளாண்டுகளை வாங்கிச் செல்கிறார்கள். அதிலேயெல்லாம் இவ்வளவு தோல்வி ஏற்படவில்லை. வெளி நாடுகளில் எல்லாம் 'இன்ஸ்டால்ட் கெப்பாசிட்டி', நிறுவனத் திறன் எவ்வளவு என்று கருதுகிறார்களோ அதற்குக் கொஞ்சம் கூட குறையாமல் 5 சதவிகிதம் அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசு ஆராய வேண்டும். நான் இதுபற்றி திருச்சிக்குப் போயிருந்தபோது, 'பெல்' நிறுவனத்திலுள்ள என்ஜினியர்களைக் கேட்டேன். "தமிழ்நாட்டுக்கு நீங்கள் தரக்கூடிய பிளாண்டுகளிலே தோல்வி ஏற்படுகிறது. அதே நேரத்தில் மலேசியா, கிழக்கு ஐரோப்பா, ஆப்பிரிக்க நாடுகளுக்கு நீங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறீர்களே, அந்த பிளாண்டுகளின் மூலம் அவர்கள் மின்சார உற்பத்தி செய்திருக்கக்கூடிய அறிக்கையைப் படிக்கும்போது அவர்களுக்குத் தோல்வி ஏற்படவில்லையென்று தெரிகிறது, இதற்குக் காரணம் என்ன" என்று கேட்டேன். "அவர்களுக்குத் தரக்கூடிய டிசைனை இங்கு இருந்து கொண்டு அங்குள்ள என்ஜினியர்கள் உடனுக்குடன் மேற்பார்வையிடுகிறார்கள். அதில் ஏதாவது தவறு இருந்தால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அதனால் அவர்களுக்குத் தோல்வி ஏற்படுவதில்லை. ஆனால் இங்குள்ளவர்கள் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள்" என்று சொன்னார்கள். ஆகவே இனி மேலாவது நம்முடைய உற்பத்தித் திறனை நம்முடைய அரசு வளர்க்க வேண்டும். அவர்கள் பேரம் பேசுகிறபோது அல்லது பிளாண்டை வாங்குகிறபோது, ஒரு சிறு அளவுகூட எந்தவிதமான தவறும் இல்லாமல் இயங்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி வேண்டும்.

அடுத்து, அணு மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், கூடங்குளத்தில் ஏற்படுத்துவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முயற்சி வெற்றி பெற வேண்டும். இன்றைக்கு குளச்சல் பகுதியையொட்டி அணு உற்பத்தி செய்வதற்குரிய மூலப்பொருளான தோரியம் கிடைக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் பகுதியில் இது ஏராளமாகக் கிடைக்கிறது. ஆனால் நேரடியாக அங்கே அதை எடுத்து புரோசஸ் செய்து உலோகமாகச் செய்யாமல், கேரளாவுக்கு கொல்லத்துக்குப் பக்கத்திலுள்ள சவரைக்குப் போகிறது. குளச்சலில் கிடைக்கின்ற தோரியம் மணலை புரோசஸ் செய்து உலோகமாக மாற்ற, அதற்குத் தேவையான மின்சாரம் குளச்சலில் கிடைக்கவில்லை, ஆகவே அதை உலோகமாக மாற்ற கொல்லத்துக்குப் பக்கத்திலுள்ள சவரைக்கு அது கொண்டு செல்லப்படுகிறது என்று மத்திய அணுக் குழுவிலுள்ளவர்கள் சொல்கிறார்கள். அதற்குரிய ஏற்பாட்டினை மத்திய அணுக் குழுவிலுள்ளவர்கள் செய்கிறார்கள். இந்த நிலையை மாற்றி தமிழகத்திலே இதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். கூடங்குளத்தில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படும்போது, குளச்சலிலும் இத்தகைய அணு உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்துவதுபற்றி ஆராய முயல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தியில் இன்னொரு பகுதியும் இருக்கிறது. அதாவது கிராமங்களில் இப்பொழுது 'பையோ கியாஸ்' மூலம் எரிபொருள் உற்பத்தி செய்ய முடிகிறது. இந்த முயற்சி சீனாவில் மேற்கொள்ளப்பட்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்திலும் வெற்றி கண்டிருக்கிறார்கள். இதை நிறுவுவதற்கு காதி கமிஷனிலிருந்து முன்பு சப்சிடி கொடுத்தார்கள். சாணத்திலிருந்து எரிபொருளை 'பையோ கியாஸ்' மூலம் உற்பத்தி செய்து சமையலுக்கு வேண்டிய எரிபொருளாகவும், வீட்டுக்கு உபயோகப்படுத்துகின்ற விளக்கு போன்றவைகளுக்காகவும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். கோயம்புத்தூரில் உள்ள பல்கலைக் கழகம் காதி கமிஷனுடைய பிளாண்டை விட குறைந்த செலவில் எரிபொருளை உற்பத்தி செய்திருக்கிறது. கோயம்புத்தூர் பல்கலைக் கழகம் தயாரித்துள்ள டிசைன்படி 7 அல்லது 8 மாடுகள் உள்ள வீட்டில் இதை 5 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவலாம். கோயம்புத்தூர் பல்கலைக் கழகம் சொல்கிற டிசைனில் செய்தால் சப்சிடி இல்லையென்று சொல்கிறார்கள். காதி கமிஷன் சொல்லுகின்ற டிசைனில் செய்ய 8 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஆனால் அவர்களுடைய டிசைனை ஏற்றுக்கொள்கிறார்கள். உண்மையிலேயே நாம் கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்தினுடைய டிசைனைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்தினுடைய டிசைனை வாங்கி நான் என்னுடைய வீட்டில் பயன்படுத்தி வெற்றி கண்டிருக்கிறேன். இது



பற்றி மத்திய காதி கமிஷனுக்கும், மத்திய எனர்ஜி அமைச்சருக்கும் கடிதம் கூட எழுதினேன். மின்சாரம், எரிபொருள் எல்லாம் மாநில அரசின் பொறுப்பிலே விடப்பட்டிருக்கிறது. ஆகவே சப்சிடி கொடுப்பது பற்றியெல்லாம் மாநில அரசுதான் முடிவு செய்ய வேண்டுமென்று எனக்கு அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கடிதம் என்னிடம் இல்லை. பிறகு அதை நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மின்சாரத் துறையினுடைய மின் ஏற்பாட்டின்படி பால் வளத் துறையையும் சேர்க்க வேண்டும். இன்றைக்கு மாதவரத்தில் ஆயிரம் மாடுகள் இருக்கின்றன. அங்கே பயோ கியாஸ் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். கோயம்புத்தூர் பல்கலைக் கழகம் பயோ கியாஸ் நிலையம் நிறுவி வெற்றி கண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறது. நாம் செய்யப்போவது மாதிரிக்காக அல்ல. ஏற்கெனவே வெற்றி கண்ட ஒன்று. அப்படிச் செய்தால் மாதவரம் பகுதிக்கு லைட், எரிபொருள் போன்றவைகளை சப்ளை செய்ய முடியும். யானைப் பசிக்கு சோளப் பொரிபோல் இது போதுமா என்று எண்ணலாம். தினை அளவு சாப்பிட்டால் பனையளவு பயன் பெறுவதுபோல், பல துளி பெரு வெள்ளம் என்பதுபோல், இது கொஞ்சம் அளவில் இருந்தாலும் இதை ஆரம்பித்த பிறகு பல பகுதிகளில் பெருக்க வேண்டும். நேற்றையதினம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது, காற்றுள்ள பகுதிகளிலே வின்ட் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வது பற்றிச் சொன்னார். அதோடு மாத்திரமல்லாமல் சூரிய ஒளியிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்வதுபற்றி ஆராய்ச்சி பண்ண வேண்டுமென்றும் சொன்னார்கள். அத்தகைய ஆராய்ச்சிகள் எல்லாம் ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள், ஆனால் அதற்கு உற்பத்திச் செலவு அதிகமாகும் என்று சொல்கிறார்கள். ஆகவே பல வழிகளிலும் மின்சார உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு மத்திய அரசின் சட்டத்தை முதலில் திருத்த வேண்டும். மாநில அரசு மத்தியத் திட்ட நிதியினை இதற்காகப் பெறுவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொண்டால், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஆதரவையும் தரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்திக்குப் பிறகு வருவது டிரான்ஸ்மிஷன் லாஸ், அடுத்து விநியோகம். போன வருடம் 18.4 என்று இருந்த மின்சார லாஸ் இப்போது 18.3 என்று ஆகியிருக்கிறது. ஆனால் இன்னும் இதில் நாம் முழு வெற்றி

பெறவில்லை. ஏதோ ஒரு பாயின்ட் போன தடவையை விட இந்தத் தடவை குறைந்ததுபோல் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலே அது வெற்றி அல்ல. டிரான்ஸ்மிஷன் லாசுக்குரிய காரணங்கள் அப்படியே இன்னும் இருக்கின்றன. டிரான்ஸ்மிட்டர்களிலுள்ள தவறுகள், லைட்களில் இருக்கிற தவறுகள் இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டுகிறார்களே தவிர, அந்தத் தவறுகள் எல்லாம் சுற்று வட்டாரங்களில் அப்படியேதான் இருக்கின்றன. இங்கே கொடுத்திருக்கிற கணக்கிலே ஒரு பாயிண்டைக் குறைத்துக் காட்டியிருந்தாலும், உண்மையில் அது குறையவில்லை. கணக்கிலே தான் கொஞ்சம் முன்னேற்றம் இருக்கிறது. அதற்குரிய தவறுகள் எங்கெங்கு நடக்கின்றன என்று கண்டுபிடித்து மின்சார லாஸைக் குறைக்க அரசு இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, டிஸ்டிரிபியூஷன்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது நாம் 20 சதவிகிதம், 30 சதவிகிதம் மின் வெட்டு என்று சொல்கிறோம். ஆனால் உண்மையில் 50 சதவிகிதத்திற்கும் குறையாமல் மின் வெட்டு இருக்கிறது. கிராமப் பகுதிகளில் எந்த நேரம் மின் வெட்டு வரும், எவ்வளவு நேரம் இருக்கும் என்பது தெரியவில்லை. அங்குள்ள ஊழியர்களைக் கேட்டால், அவர்களும் இப்போது தான் அறிவிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே எப்போது மின் வெட்டு வரப் போகிறதோ அதை முன்கூட்டியே முறையாகப் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

தமிழ் நாடு எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இப்போது வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கெல்லாம் மின்வெட்டு இல்லை என்று அரசு அறிவிக்க வேண்டும். குடிப்பதற்குக் கூட தண்ணீர் அங்கெல்லாம் சரியாகக் கிடைக்கவில்லை. கிணற்றிலே தண்ணீர் இல்லை. ஆற்றிலே தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாததால் இறைக்கவேண்டிய தேவையில்லை. இப்படியே வறட்சி நீடித்தால், சென்னையை நோக்கியோ அல்லது மற்ற செழிப்பான மாவட்டங்களை நோக்கியோ மக்கள் போகும் நிலை ஏற்படும். ஆகவே, அரசாங்கம் வறட்சி மாவட்டங்களில் மின்வெட்டு இல்லை என்று உடனடியாக அறிவிக்க வேண்டும். ஒன்பது லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின்



இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1974-75-க்குப் பிறகு பம்புசெட்டுகளுக்குச் சரியான முறையில் மின் இணைப்பு கொடுக்கவில்லை. சென்ற ஆண்டு இந்தப் பிரச்சினைபற்றி இங்கே பேசப்பட்டபோது, 'அவர்கள் முன்னுரிமைப் பட்டியல் வைத்திருக்கிறார்கள், எந்தவிதமான தவறும் இல்லாமல் இணைப்பு கொடுக்கிறார்கள்' என்று சொன்னார்கள். நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால், இப்போது எனக்குத் தெரிந்ததெல்லாம், அவர்களிடத்தில் ஒரு முன் உரிமைப் பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலில் இருக்கும் 3-வது ஆளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு 4-வது ஆள் முதல் கொடுக்க வேண்டும். ஆனால் அந்தப் பட்டியலிலே 16-வது வரிசையிலே இருப்பவருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், என்ன செய்கிறார்கள் என்றால், அந்த 16-வது நபர் முதலிலே பம்புசெட் வாங்கி வைத்துக்கொள்கிறார். அவர் பம்புசெட் வாங்கியவுடனே, 16-வது ஆள் வரையிலும் 'இன்னும் 10 நாளைக்குள் பம்புசெட்டு வாங்க வேண்டும்' என்று நோட்டீஸ் வருகிறது. சாதாரணமாக 10 நாளைக்குள்ளே பம்புசெட் வாங்க முடியாது. வாங்க முடியாதவுடனே, 15-வது நபர் வரையிலே தள்ளப்பட்டு, 16-வது நபருக்குக் கனெக்ஷன் கிடைக்கிறது. ஆகவே, இந்த 15-வது வரை வரிசையிலே இருப்பவர்களுக்கு முன்னுரிமையும் இல்லை பின்னுரிமையும் இல்லை. இந்த அளவிலே தான் நிலைமைகள் இருப்பதாக கிராமங்களிலே உள்ள மக்கள் சொல்கிறார்கள். அதை நான் நம்பி அரசிடம் சொல்கிறேன், அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கட்டண பாக்கியைப்பற்றிச் சொல்கிறபோது மால்கோ நிறுவனம் 9.43 கோடி ரூபாய் அரசுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதை வசூல் செய்வதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? இவ்வளவு காலமாகியும் அவர்கள் காலம் கடத்திக்கொண்டு போகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன் :** வழக்கு மன்றத்தில் இதுபற்றி வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. ம. சங்காலிங்கம் :** ஆமை வேகத்திலே அந்த வழக்கு நடைபெறாமல், வழக்கு நடைபெறவேண்டிய வேகத்திலே அந்த வழக்கை நடத்தி அந்த பாக்கியை வசூல் செய்ய வேண்டும். முறையாக மின்சார வாரியம் மின்சாரத்தை உற்பத்தி செய்து, நல்ல முறையில் விநியோகம் செய்து, இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான மின்சார வசதி கிடைத்து, தொழில் வளர்ச்சியடைந்து, அதன்மூலம் நாடு வளர்ந்து, வேலையில்லாத் திண்டாட்டம் அகலும்

நிலையை உருவாக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கு நாங்கள் எல்லா விதத்திலும் இந்த அரசுக்குத் துணை செய்வோம் என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்து விளக்கி யிருக்கிறார்கள். அவ்வளவு கருத்துக்களுக்கும் பதில் சொல்வதோ, விளக்க மளிப்பதோ என்றால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, கடும் பசியில் நேரத்தையும் தாண்டி எப்படியோ மின்சார நிதிநிலை அறிக்கை விவாதத்தை முடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களே சொன்னது போல, நேரம் ஆனாலும் ஆகும். நாம் ஒரு வழக்கத்தைக் கடைப்பிடித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தருகின்ற ஆலோசனைகளின் பேரில் மின் வாரியம் எடுக்கின்ற நடவடிக்கை களையும் விளக்கி ஒரு நூலாகத் தொகுத்து அந்த நூலை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது தந்து வருகிறோம். ஆகையால், ஒருசில கருத்துக்களுக்கு மட்டும் நான் இங்கே பதில் சொல்ல விரும்புகிறேன். மற்றவைகள் எல்லாம் நிச்சயமாக மின் வாரியத்தின் கவனத்தில் கொள்ளப் படும் என்ற உறுதியையும் தருகிறேன். பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டித் தான் பேசினார்கள் என்று நான் மகிழ்ச்சியடைவதில், பெருமைப்பட்டுக்கொள்வதில் நிச்சயமாக கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மட்டும் கொஞ்சம் கடினமான முறையில் பேசினார்கள். அவர்களேகூட 'Really harsh' என்று சொன்னார்கள். அவர்கள் கடுமையாகப் பேசினார்களே தவிர, அது கசப்பாக இல்லை. 'It may be harsh but not bitter' ஆனாலும், உண்மை நிலைமைகளை அறிந்திருப்பார்களேயானால், அவர்களே என்னைப் பாராட்டியிருப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. குறிப்பாக நம்முடைய மின்சக்தியைத் திட்ட மிடுகின்ற குழு, அதாவது Annual Power Survey Committee என்பது, மத்திய அரசு உருவாக்கக்கூடிய ஓர் அமைப்பு. நம்முடைய எதிர் காலத் தேவைகளைப்பற்றி அவர்கள் கணக்கிடுகிறார்கள். மின் வாரியத்தின் சார்பிலே அதற்கான ஆதாரங்களைத் தருகிறார்கள். அப்படிக் கணக்கிடும் போது, குறைவான வளர்ச்சி வேகத்தை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது நமக்கு அநீதியாக இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. அதைப்பற்றி இங்கே குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள்



அதை நீங்களே சொல்லி தப்பித்துக்கொண்டால் எப்படி என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன், நாங்கள் சொன்னாலும் தப்பு, சொல்லா விட்டால், 'ஏன் சொல்லவில்லை ?' என்று பின்னாலே கேட்பார்கள். ஆகையால்தான், உண்மை நிலைமைகளைச் சொல்வது கடமை என்று எண்ணி சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னார்கள். "மத்திய அரசு உருவாக்கியிருக்கின்ற இந்தக் குழுவில் நீங்கள் ஏன் இதை வற்புறுத்தவில்லை ?" என்று கேட்டார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு 'ப்ராப்பர் ப்ரசன்டேஷன்' செய்ய வில்லை, ஏன் சரியான முறையில் அவர்களுக்குச் சொல்லவில்லை என்று கேட்டு, அவர்கள் கடைப்பிடித்த கொள்கை சரியா அல்லது மின்வாரியம் கடைப்பிடித்த கொள்கை சரியா என்று எனக்குத் தெரியாது என்றார்கள். Central Power Commission -லே பேசுகின்ற வாய்ப்பு எனக்கு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன், அவர்கள் அந்த வாய்ப்பு வேண்டும் என்று விரும்பினால், அவர்களின் வாதத் திறமைக்கும் அவர்கள் எடுத்துப் பேசிய அந்த அழுத்தத்திற்கும் நாங்கள் அவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தரத் தயார். ஆனால் இந்த விஷயத்தில் தேவைப்படுவது, வாதத் திறமையல்ல, நியாயத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய உணர்வு. வாதத்தை எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும், அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய உணர்வு அவர்களிடத்திலே இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 1961-லே இருந்து இன்றுவரை எந்த ஐந்தாண்டுகளில் குறைவாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ அதை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி வருகிறபோது மின் வெட்டு அதிகமாக இருந்தபோது இருந்த குறைந்த அளவு கணக்கை அவர்கள் எடுக்கிறார்கள். நான் மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் பேசுகிறபோது, இதுபற்றி ஒரு கருத்தைக் குறிப்பிட்டேன் . . .

**திரு. ப. மாணிக்கம் :** எந்த ஆண்டில் குறைவான அளவு உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு என்ன கோட்பாடு? அப்படி ஒரு கோட்பாடு வகுக்கப்பட்டிருக்கிறதா ? எல்லா மாநிலங்களுக்கும் இதே கோட்பாடு தானா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எல்லா மாநிலங்களுக்கும் இதே கோட்பாடு தான். ஆனால், அந்தக் கோட்பாடு சரியல்ல என்பது நம்முடைய வாதம். சாதாரணமாக ஒருவருடைய உணவுத் தேவையைக் கணக்கிடும்போது, அவன் பட்டினிகிடந்த காலத்தை மட்டும் கணக்கில் கொண்டு . . .

**திரு. ப. மாணிக்கம் :** What is the basis ? I want to know that.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்கள் கடைப்பிடிக்கும் முறை அது. நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்று சொன்னார்கள். ஆகவே, வாதத்திறமையல்ல, நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் உணர்வு தேவை. மின்சார அமைச்சர்கள் மாநாட்டிலே "In other words, this has become a planning for shortage as is evident from the following figures." என்று சொல்லிவிட்டு "So, the present method of planning is like working out the minimum needs for a human being based on starvation levels என்று நான் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தக் கொள்கையை இப்போது இருக்கும் இந்த சர்க்கார்தான் கடைப்பிடிக்கிறது என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஜனதா ஆட்சிக் காலத்திலேயே இதுதான் நிலை. நம்மைப் பொறுத்தவரையில், எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்பதல்ல பிரச்சினை. எப்படி நடைமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்கும்போது, அது நமக்கு பாதகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் haggardness என்று சொன்னார்கள். There is no haggardness in presenting our case to the Annual Power Survey Committee but they are going on at the level என்பதை மட்டும் நான் அவர்களுக்குக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக . . .

THIRU K. RAMAMOORTHY : Sir, I think it is a vitally important factor. Why not we brief our Members of Parliament belonging to all the Parties and get it presented to the Central Government ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். சான்றாக, தொழில் உற்பத்தியைப் பொறுத்தவரையில், நாம் ஆண்டுதோறும் 10 சதவீதம் என்று போடுகிறோம். அவர்களைப் பொறுத்தவரையில், 6 சதவீதம் என்று போட்டு அந்தக் கணக்கை முடித்துவிட்டார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கும் அதிகார வரம்புகளைப்பற்றியும், மின் உற்பத்தியைப் பற்றியும் மிக முக்கியமான பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டது. அதைப்பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.



ஆங்கிலத்தில் "Charity begins at home" என்பார்கள். அதாவது தருமம் செய்வதற்கு முன்னால் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பது நமது மரபு. அந்த அடிப்படையில் இந்தியா முழுவதற்குமாக ஒரு கொள்கையைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால் நமது நிலையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசு உருவாக்குகிற மின் திட்டங்களிலிருந்து நாம் மின்சாரத்தைப் பெறுவதற்கோ, ஷேர் கேட்பதற்கோ முன்வரக்கூடாது ; ஏனென்றால் அப்படி நாம் பங்கு கேட்போமானால், மத்திய அரசு தமிழ் நாட்டில் உருவாக்கியுள்ள மின் உற்பத்தித் திட்டங்களிலிருந்து மற்ற மாநிலங்களும் பங்கு கேட்க முனைவார்கள் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். அவருக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின் உற்பத்தியைப் பொறுத்தவரை, தமிழ் நாட்டின் நிலைமை மிகவும் விசித்திரமான ஒன்றாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் அனைத்தையும் நாம் நிறைவேற்றிவிட்டோம். நிலக்கரி மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஒரே ஒரு இடத்தில்தான் இருக்கிறது. அதாவது நெய்வேலி அனல் மின்திட்டம். அதுவும் முடிந்துவிட்டது. இனி தமிழகத்தில் நாம் ஏதேனும் மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்றால், ஒன்று அது அனல் மின் திட்டமாக இருக்க வேண்டும் அல்லது அணு மின் திட்டமாக இருக்க வேண்டும். அனல் மின் திட்டங்களைச் செயல்படுத்த நிலக்கரி வேண்டும். அதற்காக நாம் மற்ற மாநிலங்களை அணுக வேண்டும். இங்கே இருக்கிற திட்டங்களிலிருந்து நாம் மற்றவர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், அவர்கள் தங்களிடம் இருக்கிற நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகிலேயே மின் உற்பத்தித் திட்டங்களைப் போட்டு அவர்களும் நமக்கு நிலக்கரி தர மாட்டோம் என்று சொன்னால், நம் நிலை என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அணு மின் நிலையத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசு நினைத்தால் தான் ஆரம்பிக்க முடியும். தமிழகத்தில் கல்பாக்கம் அணு மின் திட்டம் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் திட்டம். அடுத்தடுத்து திட்டங்களை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆக, நம்மைப் பொறுத்த வரையில், நாம் உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்கள் அனைத்தும் முடிந்து விட்டன. ஓரிரு சிறு திட்டங்கள் இருக்கலாமே தவிர, பெரிய திட்டம் எதுமில்லை. ஆனால் மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், நிலைமை வேறாக இருக்கிறது. அங்கெல்லாம் மின் உற்பத்திக்கான வாய்ப்புகள் நிரம்ப இருக்கின்றன. அதற்கு மத்திய அரசின் மூலம் திட்டம் போட்டு அங்கெல்லாம்

மின் உற்பத்தியைச் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்யும்போது அங்கேயிருந்து எங்களுக்கும் பங்கு கொடுங்கள் என்று கேட்பதில் என்ன தவறு இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை. இதைச் செய்யாமல் தமிழகத்தின் எதிர்காலத்தை எப்படி ஒளிமயமாகச் செய்யப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்தோ, கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்தோ நீங்கள் மற்றவர்களுக்குப் பங்கு கொடுப்பீர்களா என்று கேட்டால், அதற்கும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நெய்வேலி மற்றும் கல்பாக்கம் மின் உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில், அவைகளிலிருந்து உற்பத்தியாகக்கூடிய அவ்வளவு மின் சக்தியையும் நம்முடைய மாநில அரசே வாங்கிக் கொள்ளுமானால்தான், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று அப்போதே மத்திய சர்க்கார் கேட்டது. அதற்கு நாம் ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்திருக்கிறோம். அதாவது அவைகளிலிருந்து உற்பத்தியாகிற அவ்வளவு மின் சக்தியையும் நாமே எடுத்துக் கொள்கிறோம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே நெய்வேலியிலிருந்தும் கல்பாக்கத்திலிருந்தும் உற்பத்தியாகிற மின் சக்தியிலிருந்து அவ்வளவையும் நாமே உபயோகித்துக்கொள்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. எனவே இந்தத் திட்டங்களிலிருந்து மற்றவர்கள் பங்கு கேட்பது சரியல்ல என்பதையும், இந்தத் திட்டங்களை மற்ற மத்திய அரசு திட்டங்களோடு சேர்ப்பது சரியல்ல என்பதையும் நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இன்னொரு கருத்தையும் இங்கே குறிப்பிட்டார்கள். "நீங்கள் உங்களின் பற்றாக் குறையை அளவாக வைத்துக் கேட்கப் போகிறீர்கள். அதைப்போலவே ஆந்திரமும் கருநாடகமும் பற்றாக் குறை மாநிலமாக இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்கள். நமது பற்றாக்குறையைப் பொறுத்த வரையில், அது என்றென்றைக்கும் சரிக்கட்ட முடியாத பற்றாக்குறை. ஆனால் மற்ற மாநிலங்களின் நிலைமை அப்படியல்ல. சான்றாக இங்கே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் என்ற அடிப்படையில் இதைத் தெரிவிக்கின்றேன்.

கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில், 12—1—1981 அன்றைய "பைனான்சியல் எக்ஸ்பரசில்" ஒரு விவரத்தைத் தந்திருக்கிறார்கள். "why has Karnataka, with its strong hydel infrastructure, not been able to exploit more than 21.5 per cent of its power generation potential?"



அதாவது கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில், நீர் மின்உற்பத்தித் திட்டங்களில் 21.5 சதவீதத்தைத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எவ்வளவு "பொட்டன்ஷியல்" இருக்கிறது என்றால், 3,851.2 மெகாவாட் அளவுக்கு இருக்கிறதாம். அதன் மூலம் 1,606 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இந்த அளவுக்கு கருநாடகத்திற்கும் வாய்ப்பு இருக்கிறது.

ஆந்திரத்தின் நிலைமை என்னவென்றால் அதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். Its proven coal resources can easily sustain four to five thermal stations of 2,000 M.W. capacity each. அது மட்டுமல்ல, அனல் மின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும், இன்னும் 10,000 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறதாம். அதுவல்லாமல் Its two major river systems, Krishna and Godavari, can sustain another 3,000 MW. potential" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அதிலும் ஒரு 3,000 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்ய முடியும். ஆந்திர மாநிலத்தின் மின்வாரியத் தலைவர் இன்னும் அழகாகச் சொல்லுகிறார்:

"So far as the power sector is concerned, our attempt would be to make Andhra Pradesh an oasis where all the power-thirsty industrialists can quench their thirst and provide the State of the much needed industries."

அதாவது தொழில்களை ஆரம்பிக்க முனைபவர்கள் அந்த மாநிலத்திற்குச் சென்று தங்களுடைய தாகத்தைத் தணித்துக்கொள்ளலாம். அந்த அளவுக்கு அங்கே வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்.

அந்த மாநிலத்தில் இராமகுண்டத்தில் 2,100 மெகாவாட் அளவுக்கு மத்திய அரசு மின் உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறது. பத்ராஜலத்தில் 2,100 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி செய்ய இருக்கிறார்கள். ஆக இப்படி மத்திய அரசு உற்பத்தி செய்யும் மின்சாரத்திலிருந்து நாம் பங்கு கேட்கக் கூடாது என்று சொல்வது எப்படிச் சரியாகிவிட முடியும். ஆனால் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து மத்திய அரசு மின் உற்பத்தியே செய்யக்கூடாது என்று சொன்னால், அதனாலும் நட்டம் நமக்குத்தான் ஏற்படும். அவர்களுக்கு ஒன்றும் நட்டம் ஏற்படப் போவதில்லை. இன்றைக்கு கருநாடகத்திலும் சரி, ஆந்திரத்திலும் சரி, உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியில் பங்கு கேட்கிற உரிமையாவது நமக்கு இருக்கிறது. அதைக்கூட

வேண்டாம் என்று சொல்லிவிட்டால், தமிழக மக்களுக்கு நாம் அதைவிட வேறு பெரிய கெடுதலைச் செய்ய முடியாது என்பதை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

நம்மால் நீண்ட நாட்களாகப் பேசப்படுகிற ஒகேனக்கல் திட்டத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஒகேனக்கல் திட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் மிகவும் தெளிவாகச் சொல்லி யிருக்கிறோம். அந்த திட்டத்தை மத்திய அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, அது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதியிருக்கிறோம். நமது கருத்தை மத்திய அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு கருநாடக அரசோடு பேசி வருகிறார். ஆனால் கருநாடகத்தில் ஒரு விசித்திரமான நிலை இருந்து வருகிறது.

திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் முதல்வராக இருந்தபோது, இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற அடிப்படையில் அவர் எங்களோடு பேசினார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களோடு ஒகேனக்கல்லிலேயே இந்தத் திட்டத்தைப்பற்றி உட்கார்ந்து பேசுவோம் என்று சொன்னார். நாங்களும் மகிழ்ச்சிகரமாக இருந்தோம். ஆனால் எங்களுடைய துரதிருஷ்டமோ என்னமோ தெரியவில்லை. திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களின் சர்க்கார் கவிழ்ந்து போய்விட்டது. அடுத்து, மாண்புமிகு திரு. குண்டு ராவ் அவர்கள் அந்த மாநிலத்தின் முதல்வராக வந்தார். அவரிடத்திலும் நாங்கள் இந்தக் கருத்தைச் சொன்னோம். நீங்கள் சொல்வது நியாயம் என்றார். பிறகு டெல்லியில் நாங்கள் சந்தித்தபோதும்கூட நாம் அந்த மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றுவோம். அதிலே தவறில்லை என்று சொன்னார்கள். இப்போதே திட்டம் போட்டால், மின் உற்பத்தி துவங்க 6, 7 ஆண்டுகளாகும். அதற்குள் காவேரி நீர்ப் பிரச்சினையும் தீர்ந்து விடும். அணையைக் கட்டிவிட்டு எவ்வளவு தண்ணீர் வருகிறதோ அதைத் தேக்கி வைத்து மின் உற்பத்தியைச் செய்வோம் என்று ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் டெல்லியிலிருந்து பெங்களூருக்குப் போய்ச் சேர்ந்த உடனே, திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் ஒரு அறிக்கை விட்டார். "ஒகேனக்கல் திட்டத்தை தமிழகத்தோடு சேர்ந்து நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை. நாமே அதைத் தனியாக நிறைவேற்றலாம்" என்று அறிக்கை விட்டார். எந்தத் திட்டத்தை அவர் முதலமைச்சராக இருந்தபோது ஒப்புக்கொண்டாரோ அதையே அவர் எதிர்க் கட்சித் தலைவராக ஆனபிறகு எதிர்த்திருக்கிறார். ஒருவேளை விக்ரமாதித்தியன் சிம்மாசனத்தில் போய் உட்கார்ந்ததுமே பழைய நினைவு வந்துவிடும் என்பார்கள். அதைப்போல் . . .



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரை நிறைவு எய்தும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படி விக்கிரமாதித்தியன் சிம்மாசனத்தில் ஏறிய உடனே அப்படிப் பேசினாரோ என்னவோ தெரிய வில்லை! (சிரிப்பு)

அதுமட்டுமல்ல, மத்திய அரசு நீர் மின் திட்டங்களை உருவாக்க ஒரு தனி அமைப்பையே உருவாக்கியிருக்கிறது. அதில் மேற்கொள்ளப்பட இருக்கும் திட்டங்களைப் பார்த்தால் ஒன்று புரியும்.

Salal Hydro-electric Project : Kashmir, Byra Civil Hydro-Electric Project : Himachal Pradesh ; Loktah Hydro-Electric Project : Manipur ; Devighat Hydro-Electric Project : Nepal Koyal Khara Hydro-Electric Project : Bihar, Dulhasti Hydro-Electric Project : Jammu and Kashmir

இப்படி அனைத்துத் திட்டங்களுமே வட மாநிலங்களில்தான் இருக்கின்றன. இந்தியாவுக்கு வெளியே கூட சென்று திட்டம் போடுகிறார்கள். ஆனால் தென் பிராந்தியத்திற்கு என்று ஒரு திட்டம்கூட இல்லை. இந்தத் திட்டங் களெல்லாம் மத்திய அரசின் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அப்படியே ஒன்றை விரும்புகிறார்கள் என்றால், அது இங்கே யுள்ள ஒகேனக்கல் மின் உற்பத்தித் திட்டம்தான். அதைப்பற்றி மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. விக்ரம் மகாஜன் அழகாகச் சொன்னார் :

"He has told newsmen here yesterday that the Governments of Karnataka and Tamil Nadu are being persuaded to allow the Hogenakal Project work to be taken up by the National Hydro-Electric Power Corporation"

(பிற்பகல் 1-30)

ஆக அந்தத் திட்டம் வருமானால், மத்திய சர்க்காருடைய முதலீடும் தென்னகத்திற்குக் கிடைக்கும். ஆனால் என்ன காரணத்தாலோ, கர்நாடக அரசு—என்ன காரணம் என்று சொல்ல வேண்டியதில்லை, தெரிந்த காரணங்கள்தான்—ஒத்து வரவில்லை. ஆகவே மக்களின் நன்மையைக் கருதி, தென்னகத்தினுடைய நன்மையைக் கருதி விரைவுபடுத்த முன்வருவார்கள் என்று நிச்சயமாக நாம் எதிர்பார்க்கிறோம். இதிலே மத்திய அரசும் நமக்கு உறுதுணையாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பணிபுரிகின்ற தொழிலாளர்களைப்பற்றிக் கூறுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு சிலர், இருக்கின்ற வேலைகள் அதிகம், ஆனால் தொழிலாளர்கள் குறைவு என்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, தொழிலாளர்கள் 20 சதவீதம் அதிகம் என்று குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களைக் குறிப்பிடுகிறபோது, காண்ட்ராக்ட் லேபர் பிரச்சினையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அதோடு மட்டுமல்லாமல், தொழிலாளர் பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டும் என்றெல்லாம் கூட குறிப்பிட்டார்கள். இது குறித்து ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார வாரியத்திலே ஒரு இலட்சம் பேர் பணியாற்றினாலும், தொழில் உறவு நல்ல முறையிலே இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தொழில் உறவு கெடாமல் பார்த்துக் கொள்ளுகிற வகையில் மின்சார வாரியம் திறமையாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முறைகளை நவீனப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நவீனப்படுத்துவதை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள். சமுதாயத்தையே நவீனப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே வந்த நாங்கள் நிச்சயமாக நவீனமயமாக்குவதற்கு எதிராக இருக்கமாட்டோம் என்று தெரிவிக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் என்ன விலை கொடுத்து நவீனமயமாக்க வேண்டும் என்பதிலேதான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 'கம்ப்யூட்டரைஸ்' பண்ணிவிட்டு இருக்கின்றவர்களைத் தெருவில் நிறுத்தினால், திரு. தாமோதரன் சொன்ன குற்றச்சாட்டுக்கு ஆளாவோம். ஆண்டுதோறும் எத்தனை இலட்சம் பேர்கள் வேலை இல்லாமல் வீதியில் இருக்கிறார்கள் தெரியுமா என்று அவரே அடுத்துக் கேட்டார். நவீனமயமாக்கும்போது எல்லோருக்கும் வேலைவாய்ப்பு இருக்க வேண்டுமே தவிர, இருக்கின்றவர்களை வேலையிலிருந்து நீக்குகிற முறையில் இருக்கும் நவீனமயமாக்குதலை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. பணியாற்றுகின்றவர்களுக்கு அவர்கள் செய்கின்ற நேரத்தைக் குறைத்து ஓய்வு எடுக்கிற வகையிலே இருக்க வேண்டுமே தவிர, வேலையிலிருந்து நீக்குகிற வகையிலே இருக்குமானால், நிச்சயமாக நவீனமயமாக்குதலை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I want to make one clarification. I have made it very clear that labour should be frozen. I have not asked for retrenchment in the Electricity Board. I am not asking for mechanisation at the cost of retrenchment of labour.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கடந்த நான்கு ஆண்டுகளாக புதிதாக யாரும் வேலைக்கு வைக்கப்படவில்லை. இருக்கின்றவர்களை எந்த அளவுக்குச் சிறப்பாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்திய பிறகுதான், புதியதாக வைக்கப்படுவார்கள் என்ற கொள்கையை அரசு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வருகிறது.

அடுத்து. இங்கு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தைப்பற்றி எல்லோரும் பாராட்டிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி பாராட்டிக் குறிப்பிட்டார். திரு. ஆறுமுகம் பாராட்டிக் குறிப்பிட்டார், இன்னும் மற்றவர்களும், திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் பாராட்டிக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய திட்டம் இது. ஆனால் இது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் கண்ணை மட்டும் எப்படி உறுத்தியது என்பது என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஒருவேளை சரியான தகவல் இடைக்காமல் இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். அவர் பேசும்போது, "இப்படித்தான் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கிறோம் என்று திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மின் உற்பத்திக்குச் செலவழிப்பதற்குப் பதிலாக பணத்தைப் பாழடித்துவிட்டார்கள். நீங்களும் அப்படிச் செய்யலாமா ?" என்று கேட்டார்கள். அதற்கும் இதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. "நான் அப்போதே அதை எதிர்த்தேன். எனக்கு ஆதரவாக ஓர் உறுப்பினர் கூட வரவில்லை" என்று குறிப்பிட்டார். சட்டமன்றத்திலே அந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்து அன்றே அந்தக் கருத்துக்களை எடுத்து சட்டப் பேரவையிலே பேசினேன். "மின் உற்பத்திக்காக செலவழிக்க வேண்டிய பணத்தை அவரைப் பந்தல் போல மின் கம்பிகள் இழுத்துப் போடுவதற்காகப் பயன்படுத்துவது சரியாக இராது" என்று சொன்னேன். ஒருவேளை சாதாரண சட்டமன்ற உறுப்பினராக இருந்து அன்றைக்கு நான் பேசியது அவருடைய கவனத்திற்கு வந்திருக்காது என்று கருதுகிறேன்.

குடிசை என்றால் என்ன ? 200 சதுர அடியில், மண் சுவரில் புல் கூரையில் ஒரே அறையில் இருக்கக் கூடிய மக்கள் மின்சாரத்தைப் பெறக்கூடாதா ? அப்படியே மின்சாரத்தைத் தருகிறோம் என்றாலும், ஏற்கெனவே இருக்கின்ற லைனில் இருந்துதான் தருகிறோம். எல்லா கிராமங்களுக்கும் லைன் போடப்பட்டுவிட்டது. கம்பிகள், கம்பங்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து குடிசைக்கு "வெதர் புரூஃப் கேபிள்" போட்டு ஒரு சின்ன விளக்கைப் போட்டுத் தருகிறோம். தொழிலதிபர்கள் பாஷையில் சொன்னால், "யூடிலைசேஷன்

ஆஃப் தி கெப்பாசிட்டி" என்று கூறலாம். ஏற்கெனவே முதல் போட்டாகி விட்டது. பணத்தைச் செலவழித்து கம்பியை இழுத்திருக்கிறோம். அங்கிருந்து எல்லோருக்கும் விநியோகித்தால் இன்னும் கொஞ்சம் வருமானம் வரும். மின் உற்பத்திக்காக இருந்த பணத்தை அதற்காக மாற்றிவிட்டோம் என்று சொல்லுவது சரியாகாது.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில்,

1977-78-ல் 55.9 கோடி ரூபாய்

1978-79-ல் 79 கோடி ரூபாய்

1979-80-ல் 79 கோடி ரூபாய்

1980-81-ல் 74 கோடி ரூபாய் செலவு செய்தோம்.

ஆகமொத்தம் சுமார் 279 கோடி ரூபாயைச் செலவழித்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகவே செலவழித்திருக்கிறோம், உறுதியாகச் சொல்லுகிறேன், ஒரு பைசா கூட மற்றவற்றுக்கு மாற்றவில்லை. ஆகவே குடிசை வாழ் மக்களுக்காக செலவிட்ட பணத்தை மின் உற்பத்திக்கான பணத்திலிருந்து கொடுத்துவிட்டோம் என்று சொல்லும் கருத்தைக் கொண்டிருப்பார்களேயானால், அது தவறான தகவல்களின் அடிப்படையிலே இருக்குமே தவிர, வேறு ஒன்றும் இருக்காது.

தொழில் உற்பத்திக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தினால்தான் தொழில் வளம் பெருகும், வேலையில்லாத் திண்டாட்டம் தீரும் என்று சொன்னார்கள். இது நல்ல தத்துவம், ஆனால் இதனால் தொழில் உற்பத்தி பாதிக்கப் படுகிறதா? சுமார் 2,63,000 குடிசைகளுக்கு மின் வசதியைக் கொடுத்திருக் கிறோம். அவர்கள் ஒரு மாதத்திற்குப் பயன்படுத்துகிற மின்சாரத்தின் அளவு, ஒரு நாளைக்கு "மால்கோ" நிறுவனம் பயன்படுத்துகிற மின்சாரத்தின் அளவுதான். "மால்கோ"-வுக்கு ஒரு நாளைக்கு நாம் எவ்வளவு மின்சாரத்தைக் கொடுக்கிறோமோ அவ்வளவு அளவு மின்சாரம் ஒரு மாதத்திற்கு சுமார் 2,60,000 குடிசைகளில் வாழ்கிற மக்களுக்குப் போது மானதாக இருக்கிறது. இது மொத்த மின்சாரத்தில் 0.3 சதவீதமாகும். "மால்கோ"விற்குக் கட்டணச் சலுகை உண்டு. மற்ற நிறுவனங்களுக்குக் கட்டணச் சலுகை உண்டு. ஆனால் குடிசைவாழ் மக்கள் சராசரி 6 யூனிட்டு களைத்தான் பயன்படுத்துகிறார்கள். இதற்கு இரண்டரை ரூபாயைவிட குறைவாகத்தான் கட்டணம் வரும். ஏழு யூனிட்டைப் பயன்படுத்தினால்தான்



கட்டணம் இரண்டரை ரூபாய் வரும். ஆகவே சாதாரணமாக மீட்டரைப் போட்டால் செலுத்த வேண்டியதைவிட அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஏழைகள் மற்றவர்களைக் கெடுத்து வாழ்வதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

மேலும் அனல் மின் நிலைய உற்பத்தியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தைப்பற்றி இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டில்லியிலே மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது, இந்தத் திட்டத்தை அவர்கள் மனதார வரவேற்று முழு விவரங்களையும் நம்மிடம் கேட்டார்கள். நாம் அனுப்பியிருக்கிறோம். அது சம்பந்தமாக மத்திய மின்சாரத் துறை அமைச்சர், திரு. கனிகான் சௌத்திரி அவர்கள் தன்னுடைய கடிதத்தில் மிக அழகாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கும்கூட மத்திய சர்க்கார் மூலமாக அதை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பதுபற்றிச் சிந்திக்கிறார்கள் என்று

(பிற்பகல் 1-40)

எண்ணுகின்றபோது, அதை எல்லோரும் பாராட்டினார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எங்களையெல்லாம் அரசியல்வாதிகள் என்று சொல்லிவிட்டு, அவர்களை மட்டும் தனியாக வைத்து, நிச்சயமாகப் பார்க்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன் சில நேரங்களிலே அரசியல்வாதிகளும் தேவை என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனல் மின் நிலையத்தைப்பற்றி நாம் ஒன்றை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அனல் மின் நிலையம் என்று சொல்லும்போது அதற்கு வேண்டிய நிலக்கரியை நாம் பெற்றாக வேண்டும். அந்த நிலக்கரி ரெயில் வாகன்கள் மூலமாக வந்தாக வேண்டும். அதற்கு வேண்டிய பொருள்கள் பி.எச்.எல்.-லிருந்து வந்தாக வேண்டும். இப்படி சில நிறுவனங்களிலிருந்து ஒவ்வொரு பொருளும் வந்தாக வேண்டும். நிலக்கரி 'கோல்' இந்தியாவிலிருந்து வருகிறது; இயந்திரங்கள் பி.எச்.எல்.-ல் இருந்து வருகிறது. ரெயில் நிறுவ னத்தின் மூலமாக நிலக்கரி வரவேண்டும். இதுபோல் மின்சாரம் எலக்ட்ரிசிடி போர்டிலிருந்து வருகிறது. இந்த நிறுவனங்கள் எல்லாம் திறமையாக நடந்தால்தான், நம்முடைய மின் நிலையமும் திறமையாக நடைபெற முடியும். இதுதான் உண்மையாக இருக்கிறது. மத்திய சர்க்கார் நடத்துகின்ற பொது நிறுவனங்கள் நன்றாக நடக்க வேண்டும். நாம் நடத்து

கின்ற நிறுவனங்கள் நன்றாக நடக்க வேண்டும். அப்போதுதான் இந்த நிறுவனமும் நன்றாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பொதுத் துறை எங்கே நன்றாக நடக்கப் போகிறது என்கிறார்கள். இந்தத் துறையில் என்றுமே தனியார் துறை தலையிடவில்லை, அதனால் தப்பித்துக்கொண்டோம் என்று சொன்னார்கள். இதிலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பொருளாதார அமைப்பில் பொதுத் துறை எவ்வளவு தூரம் செய்திருக்கிறது ? ஒரு பொதுத் துறையை எடுத்துக்கொண்டால், அவர்கள் செய்கின்ற செலவில் பெரும் பங்கை அவர்கள் வாங்குகின்ற பொருள்களுக்குச் சரிக்கட்டியாக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அந்தத் தொகையை யார் தருகிறார்கள் ? செலவுகள் அதிகமாக ஆகின்றன. அவற்றை யார் தருகிறார்கள் ? தனியார் துறை கொடுக்கின்ற பொருள்களைக் கொண்டுதான் பொதுத் துறை இயங்குகின்றது. ஒரு உதாரணம் சொல்கிறேன். என் அனுபவத்தைச் சொல்கிறேன். நான் போக்குவரத்துத் துறையிலே அமைச்சராக இருந்தபோது கிடைத்த அனுபவத்தைச் சொல்கிறேன். பொதுத் துறையில் பஸ் கட்டணத்தை உயர்த்தினோம். ஏனென்றால் விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. அப்படி பஸ் கட்டணத்தை உயர்த்தி வாங்கியவுடனே ஸ்பேர் பார்ட்ஸ்களின் விலைகளை உயர்த்திவிட்டார்கள். ஆக அந்த உயர்த்திய பணத்தை அவர்கள்தான் தட்டிக் கொண்டு போகிறார்கள். பழைய கருப்பன் பழைய கருப்பன்தான் என்ற அளவிலேதான் ஆகிவிடுகிறது. பொதுத் துறை தனியார் துறைகளின் விளையாட்டு மைதானம், வேட்டைக்காடு என்ற அளவில்தான் இருக்கின்றது என்பதை தயவுசெய்து சிந்தித்துப்பார்த்தால், நன்றாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Only one thing. The general observation of the Hon. Minister may be correct. As far as the Power sector is concerned, coal-mining has been nationalised, coal transport is done by rail and rail transport is 100 per cent under the Government and the thermai station is 100 per cent Government-controlled. What he says may not be applicable to the Power Sector.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். பொது நிறுவனங்கள் எல்லாம் சரியாக இயங்குவது என்பது ஒன்று. அவைகளில் செலவுகள் கூடுதலாக ஆவதற்கு என்ன காரணம் ? இன்னும் நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் தெரியும். பொது நிறுவனங்கள் வரிகளை விதித்தும், கட்டணத்தை உயர்த்தியும் பெறுகின்ற பணத்தை



யெல்லாம் யாருக்குத் தருகின்றது ? ஒவ்வொரு நிறுவனத்தினுடைய வரவு செலவுக் கணக்கையும் பார்த்தால் தெரியும். இதிலே உண்மையான எந்தப் பெருச்சாளிகள் உள்ளே புகுந்துகொண்டிருக்கின்றன என்பது தெரியும். ஒரு சான்று சொல்ல விரும்புகிறேன். மின்சார இலாகாவிலே கேபிள் இன்சுலேட்டர்கள் பெறுகிறார்கள். நேரம் அதிகமாக இல்லாததால் சுருக்கமாகவே சொல்கிறேன். ரூபாய் 14 என்று இன்சுலேட்டர்கள் விலை இருந்தது. அதுவே ரூ. 32 என்று ஆகிவிட்டது. இது என்ன நியாயம் ? நாங்கள் மின் கட்டணத்தை உயர்த்துவதால் யாருக்கு லாபம் ? யார் வசூல் செய்கிறார்களோ அவர்களுக்கு லாபம் இருக்கிறதா ? இதை எல்லாம் அனலைஸ் பண்ணிப்பாருங்கள். கோல் இந்தியா பற்றி அனலைஸ் பண்ணிப்பாருங்கள். பி.எச்.எல். என்ன செய்கிறார்கள் ? அவர்கள் பொருள்களை எங்கேயிருந்து வாங்குகிறார்கள் ? தனியார் நிறுவனங்களிலிருந்து வாங்குகிறார்கள். அந்தப் பொருள்கள் எல்லாம் சப்ஸ்டான்டர்ட் பொருள்களாகவும் இருக்கின்றன. அவைகளையே தனியார் துறையிலே அதிகமான விலைக்குத் தருகிறார்கள். அதனாலேதான் சொன்னேன். நம்முடைய பொருளாதார அமைப்பிலே, பொதுத் துறை என்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்ற அளவில்தான் இருக்கிறதே தவிர வேறல்ல. உண்மையிலே பொதுத் துறை எந்த அளவிலே இருக்கிறது என்பது இதையெல்லாம் சிந்தித்துப்பார்த்தால்தான் தெரியும் என்பதற்காகத்தான் சொன்னேன். பொதுத் துறை மோசம் என்றால், பொதுத் துறை மோசமாக இருப்பதற்கு யார் காரணம் என்பதைப் பார்த்தால், உண்மை விளங்கும் என்பதற்காக இதை நான் சொல்கிறேன். இதிலே கொள்கைப் பிரச்சினைகளுக்கு இடமில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மின் வாரியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்த வரையிலே, நாம் முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ரேஷனலைசேஷன் என்ற வகையிலே வரும். 'வித் அவுட் டியர்ஸ்' ஆனால் அந்த டியர்ஸ் உங்களுக்குத்தான் வரும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே 'டியர்ஸ்' என்பது ஒரு பிரச்சினை அல்ல. இன்னும்கூட நான் சொல்கிறேன். பொது நிறுவனங்களுக்கெல்லாம் முழு உரிமை தரவேண்டும் என்று பேசுகிறார்கள். கட்டணம் நிர்ணயிப்பதிலே தலையீடு இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இப்படி கட்டணத்தை உயர்த்துவதற்கு பொது நிறுவனங்களுக்கு முழு உரிமை வந்தால், நிலைமை என்னவாகும்? இந்த மின் கட்டணம்பற்றிப் பேசுகிறபோது சொன்னேன். இன்றைக்கு மின்சார வாரியத்தின் செலவுகள் கூடியிருக்

கின்றன. இதுகூட காரணமாக இருக்கலாம். அதாவது விவசாயிகளுக்குச் சலுகைகள் என்ற அடிப்படையிலே இருக்கலாம். அதனாலேயும் இழப்பு உண்டு. அதிலேயும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் 'பிலவட் செக்ஷன்' என்று சொன்னார்கள். 'செல்லப்பிள்ளை' என்று வேண்டுமானாலும் அதைத் தமிழ்ப்படுத்திக்கொள்ளலாம், துணைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1965 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை விவசாயப் பொருள்களின் விலை உயர்ந்ததன் சதவிகிதம் 50 சதவிகிதம் தான். ஆனால் அந்த விவசாயத் தொழில் சம்பந்தப்பட்ட பொருள்களின் விலை 150 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அவர்களுக்கு உதவி தேவையில்லையா ? முக்கியமான உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய, விவசாயத் துறையிலே இருப்பவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் விலை கடந்த 15, 16 ஆண்டுகளாக உயர்ந்திருப்பது 50 சதவிகிதம்தான். ஆனால் இவர்களின் பொருள்களின் விலை 150 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கிறது. இந்த விலை உயர்வை யார் கொடுப்பது ? ஆகவேதான் இந்த இடத்திலே 'பிலவட் செக்ஷன்' ஆகத்தான் அவர்களை நாம் வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கெல்லாம்தான் அரசியல்வாதிகள் தேவைப்படுகிறார்களே தவிர, ஏதோ கட்டணத்தை உயர்த்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்வது நியாயமானது ஆகாது.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் எல்லோருக்கும் 12 பைசாவாகப் போட்டுவிட்டால், பிரச்சினை இல்லாமல் போய்விடும் என்று சொன்னார்கள். கட்டணத்தையே எடுத்துவிட்டாலும் பிரச்சினைகள் தீர்ந்து போகும். நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1975 ஆம் ஆண்டில் எமர்ஜென்சி இருக்கிறபோதே 16 பைசா என்று கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அப்படி உயர்த்தப்பட்டது. அவர்கள் ஒன்றும் தெரியாமலா செய்திருக்கிறார்கள் ? ரொம்பத் திறமைசாலிகள் கேட்கிறார்கள். இதிலே ஏராளமான இழப்பு இருக்கிறது, இதைச் சரிக்கட்ட வேண்டுமென்று ஒரு நிலைமை ஏற்பட்டபோதுதான் இந்தக் கட்டணத்தை அவர்கள் அப்போது உயர்த்தியிருப்பார்கள் என்று நம்புகிறேன். 1975 ஆம் ஆண்டிலேயே 16 காசு என்று உயர்த்தினார்கள் என்றால், இப்போது இருந்திருந்தால், தொடர்ந்திருந்தால், 24 பைசா அளவுக்கு உயர்த்தியிருப்பார்கள். ஆனால் நம்முடைய இந்த அரசு அதை உயர்த்தாமல் இருக்கிறது. அவர்கள் போகிற போக்கிலே



சொல்லிவிட்டுப் போவோம் என்பதற்காகச் சொல்கிறார்கள். இப்போது 12 காசு என்று இருப்பதே தவறு, இன்னும் அவர்கள் சிந்தித்துப்பார்த்தால், நிச்சயமாக இதை உயர்த்தலாம் என்பதை ஒத்துக்கொண்டிருப்பார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படி நினைக்க வேண்டாம். நான் தான் அமைச்சராக இருந்தேன். அப்போதே 16 பைசா வந்தது. ஆற்றல் மிக்க முதலமைச்சர் இருந்தபோது, அவர் அறிந்துகொண்டு இருந்தபோது தான் வந்தது. நாங்கள் எல்லாம் ஆற்றல் இல்லாமல் வந்திருக்கின்றவர்கள். அப்போது ஆற்றலோடு இருந்தவர்களுக்கு 16 பைசா தேவைப்பட்டது. ஆற்றல் இல்லாதவர்களுக்கு இப்போது குறைந்தது 24 பைசாவாவது தேவைப் படுகிறது. இருந்தாலும் புரட்சித் தலைவர் அவர்கள் பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் சிறிய விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் விதித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு அண்மையிலே விதித்த வரிவிதிப்புக் கொள்கையின் மூலமாக மட்டும் எவ்வளவு கூடுதல் செலவு என்று பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், நிலக்கரி, பர்னேஸ் ஆயில் ரயில்வே ஃப்ரெய்ட் இவைகளை ஏற்றியதன் விளைவாக மட்டும் ஒரு ஆண்டுக்கு ரூ. 36 கோடி மின்சார வாரியத்திற்கு அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அவர்கள் நமக்குத் தருகின்ற நிலக்கரி, ரெயில்வே கட்டணம், பர்னேஸ் ஆயில் இவைகளின்மீது விலையுயர்த்தியிருக்கிறார்கள். இதன் மூலம் வருடத்திற்கு 36 கோடி ரூபாய் கூடுதல் செலவு வரும். ஆக மின்சார வாரியத்திலே நஷ்டம் இருக்கிறது. பியூவல் ஆயில் என்று சொல்கின்றபோது, 1978-79-ல் 29 கோடி ரூபாய். அதைத்தான் நாம் செலவு பண்ணியிருக்கிறோம். அதாவது நிலக்கரி வாங்குகின்ற வகையில் 1979-80-ல் ரூ. 40 கோடி, 1980-81-ல் ரூ. 65 கோடி. இப்போது கூடுதல் செலவாக ரூ. 36 கோடி வருகிறது. அதுவும் அண்மையில் போட்டிருக்கின்ற வரி விதிப்பினால் வந்துகொண்டிருக்கிறது. அவர்களைக் கேட்டால், அவர்களும் இதைத்தான் சொல்வார்கள். நாங்கள் என்ன செய்வது ? எங்களுக்குக் கொடுக்கின்ற பொருள்களின் விலை கூடிக்கொண்டே போகிறது என்ற பதிலை அவர்கள் சொல்வார்கள். இருந்தாலும் அவர்களுக்கு இருக்கின்ற சௌகரியம் என்னவென்றால், அவர்கள் மின்சார வாரியத்தின்மீது வரிபோட்டு வாங்கிக் கொள்ளலாம். மின்சார வாரியம் மத்திய அரசை எதிர்த்து ஊர்வலம் போக முடியாது. ஆனால் நாம் கன்சுமர்களிடத்திலே, 40 லட்சம் பேர்களிடத்திலே அதை வசூல் பண்ணுகின்றபோது அவர்கள் ஊர்வலத்திலே வந்துவிடுகிறார்கள்.

இது நமக்கு இருக்கின்ற சங்கடம். அது அவர்களுக்கு இருக்கக்கூடிய சௌகர்யம். ரொம்ப அதிகமாகக் கேட்டால், இருக்கவே இருக்கிறது 356-வது பிரிவு. ஆக இத்தகைய சிக்கல்களை வைத்துக்கொண்டுதான் மாநில அரசு இந்த நிறுவனங்களை நடத்திக்கொண்டு வருகிறதே தவிர வேறு அல்ல என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அங்கத்தினர்கள் தந்துள்ள நல்ல யோசனைகள் அனைத்தையும் அரசு கவனத்தில்கொண்டு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-50)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

Nil

### B. Reports, Notifications and Other Papers.

41. Thirty-Fourth Report of the Committee on Government Assurances.

* 42. The Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 (L.A. Bill No. 4 of 1981), as passed by the Assembly.

* 43. The Tamil Nadu Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 (L.A. Bill No. 1 of 1981), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 26th February 1981.



## இணைப்பு 1

[36 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்து அரசுக்கு மனுக்கள் வந்தன. இக்கோரிக்கைகள் குறித்து பட்டதாரி ஆசிரியர் கழகத்தில் பிரதிநிதிகள் நேரிலும் பேசினர். அவர்களது கோரிக்கைகள் மீது கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது :—

(1) அவர்களின் கோரிக்கைகளில் ஒன்று, 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத, தேர்ந்தெடுக்கப் பட்ட அனைத்து பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணிக்கு வந்த நாளிலிருந்தே வரன்முறைப்படுத்தப்பட்டு ஆண்டு ஊதிய நிலுவைத் தொகையும் வழங்கப்பட வேண்டுமென்பதாகும்.

1—4—1970-க்குப் பின் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களில் தமிழ்நாடு பொதுத் தேர்வாணைக் குழுவினால் 1976 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பணியினை அவர்கள் பணியில் தற்காலிகமாகச் சேர்ந்த நாளிலிருந்தே வரன்முறை செய்யவேண்டு மென்பதுதான் அவர்களது கோரிக்கை. அக்கோரிக்கையின்படி 1976-ல் தேர்வாணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை அவர்கள் தற்காலிகமாக பணியில் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறை படுத்த 22—12—1980 நாளிட்ட கல்வித்துறை ஆணை எண் 2722-ல் ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் அவர்களில் 1980 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவினால் நடத்தப்பட்ட சிறப்புத் தேர்வில் தேர்ந் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களது பணியினையும் அவர்கள் தற்காலிகமாகச் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறைப்படுத்தவும், ஊதிய உயர்வு நிலுவைத் தொகை பெறவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(2) உச்ச நீதி மன்றத் தீர்ப்புப்படி இணைப்பாணையை எல்லா மட்டங்களிலும் உடனடியாக அமுல்படுத்த வேண்டும், ஒருங்கிணைந்த பணி மூப்புப் பட்டியலை வெளியிடவேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. அதன்படி ஒருங்கிணைந்த பணிமூப்புப் பட்டியலை அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசால் மேற்கொள்ளப்பட்ட நகரவைப் பள்ளி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து கணக்கில் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(3) மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது உட்படுத்தப்பட்டுள்ள (Inducted) முதுகலைப்பட்டம் பெறாத அனைத்துப் பாட ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டிற்குள் குறுகிய கால பயிற்சி தொடங்கி, பயிற்சிக்குப்பின் அவர்களை முழுத் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களாக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆராய்ந்து இண்டக்டட் ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்று முழுத் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டுமென்ற அடிப்படையில், அறிவியல் மற்றும் கணிதம் எடுத்து பட்டப்படிப்பு பெற்றவர்கள் அதே பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற அவர்களுக்கு கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகள் நடத்துவதற்கும், மாலை நேர கல்லூரிகளுக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்காதவர்கள் படிப்பதற்காக விடுமுறை கால வகுப்புகள் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் முதுகலைப் பட்டம் பெற ஒரு குறிப்பிட்ட அவகாசம் கொடுக்கப்படும். அதுவரை அவர்கள் பதவியிறக்கம் செய்யப்படமாட்டார்கள். அந்த உட்படுத்தப்பட்ட முதுகலைப் பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு வழங்கும் சிறப்பு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

(4) மூன்றாம் ஊதியக் குழுவின் குறைபாடுகளைக் களைய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் அறிக்கையை உடனடியாக வெளியிடவேண்டும். மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000 வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் அனைத்து அலுவலர்களுக்கும் பொருந்தும் பிரச்னை. ஆகவே அரசு அலுவலர்களைப் பொறுத்தவரை என்ன முடிவு எடுக்கப்படுமோ அது ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.



(5) எல்லா தனியார், நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளையும் அரசு மேற்கொள்ளவேண்டும். அரசு மேற்கொள்ளும்வரை சிறுபான்மையினர் பள்ளிகள் உட்பட எந்த தனியார் பள்ளிகளிலும் ஆசிரியர், அலுவலர்கள் வேலை நீக்கம் செய்யப்படக்கூடாது, என்பது மற்றுமொரு கோரிக்கையாகும். இந்த அவையில் கூறியதுபோல சிறுபான்மையினரின் பள்ளிகளை எடுப்பதற்கு இயலாத நிலையில் ஒரு சாரார் நடத்தும் பள்ளிகளை மட்டும் அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது சரியல்ல. மேலும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973, செயலில் உள்ளதால் எவரையும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கூட வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று சொல்லமுடியாது. தற்காலிகப் பணிநீக்கம் செய்யும் ஆசிரியர்களுக்கு பிழைப்பு ஊதியம் ஒழுங்காக கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினார்கள். இதற்கு வழிவகை செய்யும் முறையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) விதிகள், 1974 திருத்தப்பட இருக்கிறது.

(6) பதவி உயர்வு செய்யப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எப்.ஆர். 22-பி-யின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான பணிவிதிகள் தயாரிக்கப்பட்டு இன்னும் ஒருமாத அவகாசத்தில் வெளியிட உள்ளது. பணிவிதிகள் வெளியிட்ட பின்னர் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுவிடும். எம்.எட். பட்டம்பெற்ற மேல்நிலைப் பள்ளியாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

(7) சிறப்பாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோர் பி.டி. பட்டம் மற்றும் சிறப்பாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்றிருப்பின் அவர்களுக்கு முறையே பட்டதாரி ஆசிரியர் ஊதியமும் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் ஊதியமும் கொடுக்க வேண்டுமென்பது இன்னொரு கோரிக்கை. இந்தக் கோரிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

(8) இண்டக்ட் (Induct) செய்யப்படாமல் தற்போது, பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகள் பணி முடிந்ததும் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ள வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. பட்டதாரி ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வாய்ப்பும், வசதியும் ஏற்கனவே உள்ளதால் தனியேற்பாடுகள் தேவையில்லை. கல்லூரி ஆசிரியர்கள் எம்.பில். தகுதி பெற வாய்ப்பளித்தது எந்த ஒரு கல்லூரி ஆசிரியரும் வேலையிழப்பு நேராமலிருப் பதற்காக செய்த ஏற்பாடாகும். பள்ளியாசிரியர்களுக்கு எம்.பில். (M. Phil.) தகுதியும் தேவையில்லை.



## இணைப்பு II

[138 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தென் ஆற்காடு மாவட்டம் வடலூரில் உள்ள நெய்வேலி செராமிக்ஸ் அண்டு ரிப்ராக்டரிஸ் லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 402 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இத்தொழிற்சாலையில் உள்ள நெய்வேலி செராமிக்ஸ் அண்டு ரிப்ராக்டரிஸ் லிமிடெட் தொழிலாளர் சங்கம் (இணைப்பு சி.ஐ.டி.யு.) தொழிலாளர்கள் சார்பில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் மீது தொழிற் தகராறு எழுப்பியிருந்தது :—

(1) 1979-80 ஆம் ஆண்டுக்கு 50 சதவிகிதம் போனஸ் ;

(2) 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத ஊக்குவிப்பு ஊதியம் ;

(3) கேசுவல் தொழிலாளர் ஊதிய உயர்வு ; மற்றும்

(4) கேசுவல் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்.

நிர்வாகம் 20 சதவிகிதம் போனஸ் மட்டுமே அளிக்க முன்வந்தார்கள். தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கையான 50 சதவிகிதம் போனஸ் குறித்தும் மற்ற மூன்று கோரிக்கைகள் குறித்தும் நிர்வாகம் எவ்வித பேச்சு வார்த்தைக்கும் இணங்காததால் 16—10—1980 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். எனவே 17—10—1980 முதல் நிர்வாகம் நிறுவன கதவடைப்பு செய்ய நேரிட்டது. இது குறித்து கடலூர் தொழிலாளர் அலுவலர் முன்னிலையிலும், தொழிலாளர் துறை ஆணையர்-2 சென்னை அவர்களின் முன்னிலையிலும் நடந்த பேச்சு வார்த்தையில் எவ்வித உடன்பாடும் ஏற்படாததால், மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் ஆணையரின் அலுவலகத்தில், சிறப்பு தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்னர் நடைபெறுகிறது. 20—1—1981 அன்று நடந்த பேச்சு வார்த்தையில் ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை. எனவே கதவடைப்பு நீடிக்கிறது. மீண்டும் பேச்சுவார்த்தை சிறப்பு தொழிலாளர் துணை ஆணையாளர், சென்னை அவர்கள் முன் நடைபெற உள்ளது.

[Issued : 18-6-1981]

28 ஆக 1981

TRUTH ALONE TRIUMPHS

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 28th FEBRUARY 1981

Volume CLXXIV No. 3

©
GOVERNMENT OF TAMIL NADU
1981

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009*

[PRICE 2 Rupees.]

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | 215—237 |
| 2. அறிவிப்புகள்— | |
| (1) பேரவையிலிருந்து செய்தி | 238, 243 |
| (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு | 238 |
| (3) ஆளுநரிடமிருந்து செய்தி | 242 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (1) கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாகத் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களில் சுமார் 250 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் துண்டுபட்ட பணிக் காலங்களைக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமை குறித்து. | 239—240 |
| (2) தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் ஊழியர் வேலை இழந்துள்ளது குறித்தும். | 240—241 |
| 4. அரசின் தீர்மானம்— | |
| (1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து. | 242 |
| (2) அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து | 243 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) | 243—323 |
| 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 323 |

143874

D

V211,32'N85

N85-124.1-3

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1981 பிப்ரவரி 28.

மாசி 17, ரௌத்திரி—2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 95, 96 ஒத்தி வைக்கப் படுகின்றன.

அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள்.

* 97. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் 15—6—1980 நாளன்றுள்ளவாறு எத்தனை பேர்?

(இ) அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர் பதவிக்கான நியமனத் திற்கு, மாவட்ட அளவில் பணிமூப்பு (சீனியாரிட்டி) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா? அல்லது மாநில அளவில் பணிமூப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 104 பேர்கள்.

(இ) அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் பதவிக்கான நியமனத்திற்கு மாநில அளவில் பணிமூப்பு (சீனியாரிட்டி) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாநில அளவிலே பணிமூப்பு அடிப்படையில் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களின் பதவி உயர்வு இருந்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். குறிப்பிட்ட ஒருசில ஆண்டுகளிலே

'பி' பிரிவிலே பணியாற்றிய தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலே பணிமூப்பு வைத்து, அவர்களுக்கு அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுத்து, பின்னர் அதாவது சென்ற ஆண்டு அந்தப் பதவியிலிருந்து அவர்கள் இறக்கப்பட்டுவிட்டார்கள் என்பது உண்மையா? 'ஆம்' என்றால் அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி 1—4—1978 முதல் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத தலைமை ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை ஒரே விகிதத்தில் அரசு நிர்ணயித்துள்ளது. எனவே இந்தப் பாகுபாடு தேவையில்லை என்றாகிறது. அரசு ஆணை எண் 377, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 31—5—1979-ன்படி பதிவு பெற்ற அலுவலர், பதிவுபெறாத அலுவலர் என்ற பாகுபாடு நீக்கப்பட்டது. அரசு அலுவலர்கள் ஊதிய அடிப்படையில், ஏ. பி. சி. டி. என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். காலி ஏற்பட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் முதுகலைப் பட்டப் படிப்பு தகுதி வாய்ந்த நபர்களால் நிரப்பப்பட்டுள்ளன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** 1974 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அந்த ஆண்டில் அரசு 'பி' பிரிவு பள்ளிகளிலே உள்ளவர்கள், மாவட்ட அளவிலேயுள்ள பணிமூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு செய்யப்பட்டார்கள். ஆனால் அப்படி பதவி உயர்வு செய்யப்பட்ட ஒருசில தலைமை ஆசிரியர்கள் திடீரென்று சென்ற ஆண்டு பதவியிலிருந்து இறக்கப்பட என்ன காரணம்? இது 'ஏ' பிரிவுக்கும், 'பி' பிரிவுக்கும் பாகுபாடு உண்டாக்குவது போல இருக்கிறது. அதுவும் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இணைப்பிற்குப் பிறகு இப்படிச் செய்யப்பட்டதாக அறிகிறேன். இது உண்மையா? ஆம் என்றால் அதற்குக் என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிப்பட்ட விவரங்கள் எதுவுமில்லை எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரம் 'ஏ' பிரிவில் 80 பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளும், 'பி' பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 80 பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளும் இருந்தன என்பது தான். அந்த அடிப்படையிலேதான் முன்னாலே இருந்திருக்கிறார்கள். இப்போது அந்தப் பதவிகள் இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களை நியமிக்கும்போது, அரசிதழ் பதிவு பெற்றவரைத் தான் நியமிக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு முதுகலைப் பட்டம் தேவையில்லை என்றும் கருத்து நிலவுகிறது. அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் என்று பிரிக்கப்படாத காரணத்தால், பணி மூப்பு அடிப்படையிலே மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கப்படுமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்கு தகுதிகளைக் குறைப்பதற்கான எண்ணம் இந்த அரசுக்கில்லை. ஆனால், பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் இருப்பது பற்றிய கேள்வி இப்போது பிறந்திருப்பதால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் மாநில அளவிலான சீனியாரிட்டிபடி நியமிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். பதிவு பெறாத தலைமை ஆசிரியர்களிலிருந்து, அவர்கள் சீனியாரிட்டியை வைத்து, பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எனவே மாநில அளவிலே தலைமை ஆசிரியர்கள் சீனியாரிட்டிப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றதா? மாநில அளவிலே பட்டதாரி ஆசிரியர்கள் சீனியாரிட்டிப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சீனியாரிட்டி அடிப்படையிலே பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களை நியமித்தது முன்னால், 1978 க்குப் பிறகு கிடையாது. இங்கே தந்துள்ள விவரப்படி மாநில அளவிலே பணிமூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு தரப் பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு விவரங்களில்லை. தனியாகக் கேள்வி கேட்டால், சொல்லப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** என்னுடைய துணைக் கேள்விக்கு அமைச்சரவர்களிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. 1974-ல் 'பி' பிரிவிலிருந்து, மாவட்ட அளவிலே பணிமூப்பு அடிப்படையிலே அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள், திடீரென்று சென்ற ஆண்டு, எம்.ஏ. பட்டம் அவர்களுக்கில்லை என்ற காரணத்தால், பணியிறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் 'ஏ' பிரிவில் மாநில அளவில் பணிமூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள் பணியிலிருந்து இறக்கப்படவில்லை. எனவே 'ஏ' பிரிவுக்கும், 'பி' பிரிவுக்கும் இன்னும் பாகுபாடு காட்டக்கூடிய நிலைமை இருக்கிறதென்பதைத் தெரிவிக்கிறது. இது நியாயம்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதலிலே கேட்ட கேள்வி இந்த அளவிற்கு விளக்கமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது, 'ஏ' பிரிவில் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்கள் தொடர்ந்து இருக்கிறார்கள், ஆனால் அதே நிலையில் இருந்த 'பி' பிரிவு தலைமை ஆசிரியர்கள் கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள்

என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரவர்கள், தலைமை ஆசிரியர்கள் பொறுப்பிலிருந்து கீழே இறக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் இல்லை என்ற நிலைமையைச் சொல்லும் போது, இந்தப் பாகுபாடு இருக்குமானால் அதைப் பற்றி அரசு விசாரிக்கும்.

ஆசிரியர்களுக்குப் பரிசுகள்.

* 98. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உயர் நிலைப் பள்ளிகளில் 1978, மார்ச்-ஏப்ரலில் நடந்த பள்ளி இறுதித் தேர்வுகளில் 100 சத விகிதம் மாணவர் தேர்ச்சி பெற்றுள்ள அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள், உள்ளாட்சித் துறைப் பள்ளிகள், ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இத்தகைய சாதனைக்குக் காரணமான ஆசிரியர்களுக்குப் பரிசு தரும் திட்டம் பற்றி அரசு பரிசிலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) 1978 மார்ச் ஏப்ரலில் நடந்த பள்ளி இறுதித் தேர்வுகளில் 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்ற உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :—

| | எஸ். எஸ். எல். சி. (பதினோராம் வகுப்பு) | எஸ். எஸ். எல். சி. (பத்தாம் வகுப்பு) |
|---|---|---|
| அரசுப் பள்ளிகள் | 42 | 6 |
| தனியார் பள்ளிகள் | 29 | 12 |
| உள்ளாட்சித்துறை பள்ளிகள் | 1 | |
| நலத்துறைப் பள்ளிகள் | | |

(இ) இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த விவரங்களிலிருந்து, தனியார் பள்ளிகளைவிட, அரசுப் பள்ளிகளில் சாதனைகள் அதிகமாக இருக்கின்றன என்ற உண்மை தெரிய வருகிறது. அதனால் அரசுப் பள்ளிகளில் சாதனைகளில்லை என்ற பரவலான குற்றச் சாட்டுக்கு





இடமில்லாமல், அங்கே சாதனைகள் செய்திருப்பது உண்மை என்பது மாமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், அரசுப் பள்ளியாக இருந்தாலும், தனியார் பள்ளியாக இருந்தாலும், உள்ளாட்சித் துறையின் பள்ளிகளாக இருந்தாலும், நலப் பள்ளிகளாக இருந்தாலும், 100 சதவிகித வெற்றிக்கு அந்தப் பள்ளி ஆசிரியர்கள் முழுப் பொறுப்பேற்று, கடுமையாக உழைத்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பரிசுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தால், அதைப் பார்த்து மற்றவர்களும் ஊக்கம் பெறுவார்கள். அதன் காரணமாக அவர்களும் கடுமையாக உழைத்து அந்தச் சாதனையை எட்ட முயற்சி செய்வார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் கேள்வியைக் கேட்டேன். அப்படிப்பட்ட திட்டம் இப்போது இல்லையென்றாலும், வருங் காலத்தில் அப்படிப்பட்ட திட்டத்தை ஏற்படுத்தி, இப்போது நல்லாசிரியர்கள் விருது என்று கொடுப்பது போல, 100 சதவிகிதம் வெற்றி பெற்ற பள்ளிகளின் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு மட்டும் பரிசு கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பரிசு தரும் திட்டம் இல்லையென்றாலும், பாராட்டுத் திட்டம் இருக்கிறது. அப்படிப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். நான் பல்வேறு இடங்களில் பாராட்டுகிறேன். பாராட்டுக் கடிதங்களும் எழுதுகிறேன். அதை விரிவுபடுத்தலாம்.

(முற்பகல் 10-40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பொதுவாக நூற்றுக்கு நூறு தேர்ச்சி இருந்தால், அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் பாராட்டுக்காகக் கடிதம் எழுதுவது இப்போது மரபாக இருந்து வருகிறது. போன வருடம் ஒரு பள்ளிக்கூடம் நூற்றுக்கு நூறு சதவிகிதம் வெற்றி பெற்று இந்த வருடம் 95 சதவிகிதம் வெற்றி பெற்றால், அதற்காக முதல் வருடம் பாராட்டு கிடைப்பதும், இந்த வருடம் குற்றம் சாட்டுகிற நிலைமையும் இருக்கிறது. இதைத் தவிர்க்கும் வகையில் சாதனைக்குக் காரணமான ஆசிரியர்களுக்கு நல்லாசிரியருக்கான விருது அளிப்பது போல் பரிசளிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பரிசு அளிப்பது என்பது பணம், பொருள் என்று வந்து விடும். கல்வித் துறையிலேயே இப்பொழுது நாம் பல்வேறு நிர்வாகங்களை நடத்திக் கொண்டு வருகிறோம். ஒரு குறிப்பிட்ட துறையில் உள்ளவர்களுக்கு மட்டும் அளிப்பது என்பது எல்லோரையும்

பின்னால் சம்பந்தப்படுத்த வேண்டி வரும். பாராட்டுவது என்றால் தாராளமாகப் பாராட்டலாம். இப்போதே ஒரு சான்றிதழ் போல் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். அதுபற்றிப் பரிசீலிக்க தயாராக இருக்கிறோம்.

**செல்வி அ. லீலாவதி:** இம்மாதிரி நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்ற பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் "ஆன் டியூட்டி" என்று இல்லாமல் 4-30 மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டால் கூட, மாலை 5 மணி, 5-30 மணிவரை பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து எந்தவிதமான ஊக்க ஊதியமும் இல்லாமல் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் அவர்களுக்கு ஏதாவது பரிசளிப்பது மிகவும் நல்லது. முக்கியமாக இத்தகைய பள்ளிகளில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூட பள்ளிக்கூடத்துக்கு வந்து மாணவர்களுக்குப் பாடங்களை நடத்துகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான ஊக்க ஊதியமும் இல்லை. இத்தகைய ஆசிரியர்களுக்கு ஒரு பரிசளிக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட நேரம் கழித்து இதுபோன்ற ஓர் உயர்ந்த அறிவுத் துறையில் மாணவர்களுக்குக் கல்வியைப் போதித்து, அதன் மூலம் இப்படி நூற்றுக்கு நூறு வெற்றி பெற முடியும் என்று ஒத்துக்கொள்வதே கூட தவறான வழி காட்டியாகத்தான் இருக்க முடியும். காலா காலத்தில் அதை ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சொல்லித் தந்து, அந்த வகையில் மாணவர்களுக்குக் கற்பித்து அவர்களிடமிருந்து நூற்றுக்கு நூறு தேர்ச்சியைப் பெற்றுத் தர வேண்டும். 10-வது வகுப்பில் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களை மாத்திரம் இந்த வெற்றிக்கு முழுமையாகப் பொறுப்பாக்க முடியாது. அந்த வகையில் காலா காலத்தில் கற்பித்துக் கொடுத்து நூற்றுக்கு நூறு வெற்றி பெறவில்லையென்றால், அத்தகைய ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தில் 30 மாணவர்களை அனுப்புகிறோம் என்றால், அந்த 30 பேரும் தேர்ச்சி பெறவில்லையென்றால், அதற்குப் பொறுப்பு அந்த ஆசிரியர்கள்தான் என்று நாம் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படி இல்லையென்றால், கீழ் வகுப்பில் அவர்களுடைய படிப்பு சரியில்லையென்று சொல்கிறோம். எந்தெந்த வகுப்பிலே எந்தெந்தப் பள்ளியிலே, எந்தெந்த நாளிலே, எந்தெந்தப் பாடங்களை நடத்த வேண்டுமோ அதை அந்தந்த நேரத்தில் நடத்தி முழுமையான தேர்ச்சியை அவர்கள் பெற்றுக்காட்ட வேண்டும்.



**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஆசிரியர்களுக்குப் பரிசு தரவில்லையென்றாலும், அந்தப் பள்ளி மாணவர்களுக்காவது பரிசு தரப்படுமா? நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெறுவது போல் ஒருவர்கூடத் தேர்ச்சி பெறாத பள்ளிகளும் உண்டு. அத்தகைய ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் என்று நாம் சொல்லி விருது தருவது போல் * * * என்று சொல்லி விருது தரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நல்லாசிரியர் விருதினை ஆசிரியர்கள் வந்து வாங்கிச் செல்கிறார்கள். * * * * விருது என்று சொன்னால், வந்து வாங்க மாட்டார்கள். வாங்க மாட்டேன் என்று சொன்னால், அது அவர்களுடைய உரிமை. ஆனால் பரிசளிப்பது என்பது நாம் செய்ய முடியாத ஒன்று. ஒரு மாணவர் கூட தேர்ச்சி பெறவில்லையென்றால் நாம் அதற்குக் காரணம் கேட்காமல் இல்லை. காரணம் என்ன என்று பார்த்து நடவடிக்கையும் எடுக்கிறோம். ஒரு மாணவர் கூடத் தேர்ச்சி பெறவில்லையென்றால், ஆசிரியர்கள் அங்கே இணக்கமாகப் பணியாற்றவில்லை. ஒற்றுமையில்லை என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிற அனுபவம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற புள்ளிவிவரப்படி, அரசுப் பள்ளிகள் 42 என்றும், தனியார் பள்ளிகள் 29 என்றும் இருக்கிறது. ஆனால் இப்படி நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெற்றுள்ள தனியார் பள்ளிகள் 29 என்று தந்திருந்த போதிலும், அந்தப் பள்ளிகளில் அனைத்து மாணவர்களையும் அவர்கள் சேர்த்துக் கொள்வதில்லை. அவர்கள் வடிகட்டித்தான் மாணவர்களை அங்கே சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் அரசுப் பள்ளிகளில் அப்படி அல்ல. எல்லா மாணவர்களையும் வடிகட்டாமலேயே சேர்த்துக்கொள்கிறார்கள். அதுபோல் தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய சில வாய்ப்புகளும் வசதிகளும் அரசுப் பள்ளிகளுக்குக் கிடையாது. அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களை மாற்றம் செய்கின்ற நிலை இருக்கிறது. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை மாற்றம் செய்கின்ற நிலை இல்லை. இப்படிப்பட்ட பல்வேறு வசதிகள் தனியார் பள்ளிகளில் இருக்கின்றன. இருந்தும் அரசுப் பள்ளிகள் 42-ல் நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். வருங்காலத்தில் தனியார் பள்ளிகள் அனைத்திலும் சட்டப்படி வடிகட்டாமல் எல்லா மாணவர்களையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குத் தரமான கல்வியை அளித்து, தரமான மாணவர்களை உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்தி அரசு உத்தரவு போட முன்வருமா?

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1981 பிப்ரவரி 2

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு தனியார் பள்ளி என்றால் அதில் நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில் பிரச்சினை என்றால் நாம் அதை செய்து விடலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகி பிரச்சினையைப் பொறுத்தவரை, அதில் பெற்றோர்களும் சம்பந்தப்பட்டிரு கிறார்கள். அவர்கள் வசிக்கின்ற பக்கத்திலேயே பள்ளிக்கூடம் இருக்கும் இருந்தாலும் கூட, அவர்கள் பிள்ளைகளை நான்கு மைலுக்கு அப்பால் கொண் சேர்க்கின்ற நிலைமை இன்றைக்கு நாட்டிலே பல இடங்களில் இருக்கிறது அதுபோல் நாம் கிராமங்களில் பள்ளிகளை ஆரம்பிக்கிறோம் என்றால், அங்கே வசிக்கின்றவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பக்கத்திலிருக்கிற நகரத்துப் பள்ளிகளில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தவறு இங்கேதான் இருக்கிறது. நல்ல முறையில் நடைபெறாத பள்ளிகளை, நல்ல முறையில் நடத்துக்காட்டி பெற்றோர்கள் அதைப் பார்த்து அங்கே தங்களுடைய பிள்ளை களை அனுப்புகின்ற வகையில் நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் அப்படித்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அப்படியே நாம் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மாதிரி செய்தாலும், பெற்றோர்களே தாரா ளமாக வந்து இந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகி நிலைமையில்தான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நூறு சதவிகித மாணவர் தேர்ச்சி பெற்றுள்ள அரசுப் பள்ளிகள் 42 என்றும் தனியார் பள்ளிகள் 29 என்றும் அறிவித்தார்கள். அதில் நகர்ப்புறங்களில் இருக்கக் கூடிய அரசாங்கப் பள்ளிகள் எத்தனை, கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய அரசாங்கப் பள்ளிகள் எத்தனை, அதுபோல் நகர்ப்புறங்களில் இருக்கக் கூடிய தனியார் பள்ளிகள் எத்தனை, கிராமப் புறங்களில் இருக்கக் கூடிய தனியார் பள்ளிகள் எத்தனை, என்கிற புள்ளிவிவரம் இங்கே தரப்பட்டால் நகர்ப்புறங்களில் தேர்ச்சி மிகுதியாக இல்லையா, அல்லது கிராமப் புறங்களில் தேர்ச்சி மிகுதியாக இல்லையா என்பதை அறிய வாய்ப்பாக இருக்கும். அதுபோல் நூற்றுக்கு நூறு மாணவர் தேர்ச்சி பெற்ற பள்ளிகளில் ஏதாவது மாஸ் காப்பியிங் இருப்பதாகப் புகார் வந்திருக்கிறதா? அதையும் தெரிந்துதான் மதிப்பெண்கள் வழங்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பள்ளிகளினுடைய பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. நூறு சதவிகித மாணவர் தேர்ச்சி பெற்ற பள்ளி களின் முழுப் பட்டியலையும் இங்கே படிப்பது சரியாக இருக்காது. அதை வேண்டுமானால் டேபிளில் வைக்க ஏற்பாடு செய்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றையதினம் அரசுப் பள்ளிகள் கிராமங்களில் தான் அதிகமாக இருக்கின்றன. எங்காவது சில நகரங்களில்தான் அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. பெரும்பாலும் கிராமங்களில்தான் அரசுப் பள்ளிகள்



1981 பிப்ரவரி 28]

இருக்கின்றன. ஆனால் அதேசமயத்தில் பெரும்பாலான தனியார் பள்ளிகள் நகரங்களில் இருக்கின்றன. இதுதான் பொதுவான நிலைமை. மாஸ் காப்பியிங் முறை எந்தவிதத்திலும் வளர்ந்துவிடக் கூடாது என்று நாம் அக்கறை காட்டி வருகிறோம். சென்ட்ரல் வேல்யூவேஷன் பரீட்சை போன்ற வற்றில் எல்லாம் என்னென்ன பாதுகாப்பு தர வேண்டும் என்பதை எல்லாம் ஒழுங்காகச் சொல்லி அதற்கேற்றாற்போல் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று அதிகாரிகளை நான் கேட்டுக்கொண்ட அந்த மீட்டிங்கிலிருந்து தான் நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். மாஸ் காப்பியிங் என்பது எந்த அடிப்படையிலேயும் அனுமதிக்க முடியாத ஒன்று. நாம் திருட்டைத் தவறு அல்ல என்று அனுமதித்தால் இதையும் அனுமதித்து விடலாம். திருட்டு எப்படி தண்டிக்கப்பட வேண்டிய ஒன்றோ அது போல் இதுவும் ஒரு சமூக விரோதச் செயல். எல்லாத் தரப்பினரும் இந்த ‘ மாஸ் காப்பியிங் ’ முறையை ஒழிப்பதில் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் தர வேண்டும். இந்த விஷயத்தில் எந்த வகையில் வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். அறிவுத் துறையில் ‘ மாஸ் காப்பியிங் ’ முறையினால் நம்மை நாமே ஏமாற்றுவது என்பது அனுமதிக்க முடியாதது. இந்த விஷயத்தில் நாம் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. செ. முத்துசாமி :** சில சந்தர்ப்பங்களில் சில சூழ்நிலைகளில் சில பள்ளிகளில் மாணவர்கள் நூறு சதவிகிதம் தேர்ச்சி பெறாமல் குறைவாகத் தேர்ச்சிப் பெறுவதும், முழுக்கப் பாஸ் பண்ண முடியாத சூழ்நிலையும் ஏற்படுவதுண்டு. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அப்படி இருந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தத் தோல்வியைச் சரி செய்து கொள்கிறார்கள். நிலைமை இப்படி இருக்கும்போது அவர்களை இந்த அவையில் * * * என்று கருதுவது சரிதானா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதற்கு விளக்கம் நான் பதில் சொல்லும்போதே குறிப்பிட்டேன். யாரையும் நான் அப்படிச் சொல்ல வில்லை. ஆனால், ஒரு பள்ளிக்கூடத்தில் நூறு விழுக்காடு தேர்ச்சி பெற வில்லையென்றால், அதற்கு அந்தப் பள்ளிக்கூடத்திலுள்ள ஆசிரியர்கள்தாம் பொறுப்பேற்றாக வேண்டும். சாதாரணமாக தரம் குறைவாக உள்ள ஒரு மாணவன் ஒரு ஆசிரியரிடத்தில் டியூஷன் படித்து தரமுள்ள மாணவனாக மாறக்கூடிய நிலை தாராளமாக இருக்கிறது. தவிர, நாம் இப்போது பாஸ் மார்க் 35 என்றுதான் வைத்திருக்கிறோம். 50 அல்லது 60 என்று வைக்க வில்லை. ஆகவே தோல்விக்கான பொறுப்பை ஆசிரியர்கள்தான் ஏற்றாக வேண்டும். பொதுவாக நூற்றுக்கு நூறு தேறவில்லையென்றால் அந்தப்

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

பள்ளிக்கூடத்துக்கு நாம் போய்ப் பார்க்கும்போது அங்கே ஆசிரியர்களுக் கிடையே ஒற்றுமை இல்லை, அவர்கள் இணக்கமாக இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். ஆகவே தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களிடத்தில் தவறு இருக்கிறது என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** * * * என்று சொல்லக் கூடாது தைகள் இருக்கின்றன. நகைச்சுவைக்காக அப்படிச் சொன்னேன்.

**திரு. செ. முத்துசாமி:** நல்லவர் அல்லாதவர் என்று சொல்வதும் கூடாது. சொல்லித் தருவது சரியில்லையென்று வேண்டுமானால் சொல்லலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தமிழில் நிறைய நிறைய நல்ல வார்த் என்றால், நல்லவரால்லாத ஆசிரியர் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சொல்லித் தருவது சரியில்லை, அல்லது திறமைக் குறைவு என்று சொல்ல முடியாது. காரணம் ஆசிரியர்கள் பி.ஏ., பி.டி. என்கிற கல்வித் தகுதியின் அடிப்படையில் சொல்லித் தருகிறார்கள். ஆகவே திறமைக் குறைவானவர்கள் திறமையில்லாதவர்கள் என்று நாம் எந்த ஆசிரியரையும் சொல்ல முடியாது. பொதுவாக தேர்ச்சியில் குறைவு ஏற்படுகின்ற பள்ளிகளில் எல்லாம் ஆசிரியர்களிடையே ஒற்றுமை இல்லை. இணக்கம் இல்லை என்பது தான் உண்மை. அப்படிப்பட்ட ஒரு அடிப்படை இருந்தாலொழிய நூற்றுக்கு நூறு 'ஃபெயில்' ஆக வாய்ப்பு இல்லை. அப்படி ஏதாவது தவறு இருந்தால், அதை அவர்கள் திருத்தி ஒற்றுமையாக இருந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணம்.

(முற்பகல் 10-50)

**திரு. த. சந்தோஷம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்குப் பாராட்டுக் கடிதங்கள் அனுப்புவதாகச் சொன்னார்கள். அப்படி பாராட்டுக் கடிதங்கள் அனுப்பும்போது பொது மக்களிடையே பரந்த அளவிலான விளம்பரம் செய்ய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. மேலும், அந்த ஆசிரியர்களை ஊக்குவிக்கவும் வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே, பரந்த அளவிலே பொதுமக்களுக்கு இது அறிவிக்கப் படும் அளவிலே கெஜட்டிலே பப்ளிஷ் செய்யவோ ஒவ்வொரு மாவட்டத்தி லேயும் தனியாக ஒரு நிகழ்ச்சி நடத்தி அதில் மாண்புமிகு கல்வி அமைச்சர்,

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள் தலைமை தாங்கி அந்த ஆசிரியர் களுக்குப் பாராட்டு அளிக்கும் அளவுக்கோ நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இவைகள் எல்லாம் பொதுமக்க ளுக்குத் தெரிய வேண்டும். அந்த ஆசிரியர்கள் எல்லாம் பொது மக்களுக்கு முன்னாலேயே பாராட்டப்பட வேண்டும் என்பதிலே அரசுக்கு அக்கறையும் விருப்பமும் இருக்கிறது. இதற்காக தமிழ் நாடு பெற்றோர் ஆசிரியர் மன்ற அமைப்பை நாங்கள் பயன்படுத்துகிறோம். அவர்கள் இத்தகைய விழாக் களை நடத்தலாம். ஆசிரியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் நிதியிலிருந்து பரிசுகள் தரலாம். பல பள்ளிகளில் இப்போது அதைச் செய்கிறார்கள். ஆசிரியர்களுக்குக் கொடுக்கவேண்டிய பரிசுப் பொருள்களையும் வாங்கித் தருகிறார்கள். கோவை மாவட்டம் பல்லடத்திற்கு அருகிலே சேந்தலூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அது ஒரு சாதாரணமான ஊர். அந்த ஊரிலே இருக்கும் பள்ளிக்கூடத்திலே பணிபுரியும் ஆசிரியர்கள் நாங்கள் வேறு ஊருக்குப் போகமாட்டோம் என்று சொல்கிறார்கள். அங்கே 100 ரூபாய்க்கு மேற்பட்ட பரிசுப் பொருட்களை ஆசிரியர்களுக்கு வாங்கித் தந்தார்கள். அங்கே ஆசிரியர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நல்ல முறையில் மாணவர்களுக்குச் சொல்லித் தருகிறார்கள். அந்தப் பள்ளியிலே நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேர்வு பெற்றிருக்கிறார்கள். இந்த வருஷத்திலே 11-வது வகுப்பிலே நூற்றுக்கு நூறு மாணவர்களும் மற்றும் 10-வது வகுப்பிலே நூற்றுக்கு நூறு மாணவர்களும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேர்ச்சி பெறாத பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் சரியான முறையிலே நேரப்படி பள்ளி களுக்கு வருகிறார்களா ? அவர்களின் அட்டன்டன்ஸ் சரியாக இருக்கிறதா ? அப்படி 100 சதவிகிதம் தேறாத பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களை ஒட்டு மொத்தமாக வேறு பள்ளிகளுக்கு மாற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலேயேதான் நாங்கள் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை அணுகிக்கொண்டிருக்கிறோம். குறிப் பாக அரசாங்கத்தாலே செய்யக்கூடிய காரியம் ஏதாவது இருந்தாலோ பொதுமக்களால் செய்யக்கூடிய காரியம் ஏதாவது இருந்தாலோ அவைகளை யெல்லாம் நாங்கள் செய்து அந்த வகையிலாவது ஏதாவது உதவி செய்து அந்தப் பள்ளிகளை மேல்நிலைப்படுத்த விரும்புகிறோம். பொதுவாக, ஆசிரி யர்களை எந்த ஊருக்கு நாம் மாற்றுகிறோமோ அந்த ஊரிலே அவர்கள் குடியிருந்து பணியாற்றினால், இந்தப் பிரச்சினை இருக்காது. அவர்கள்

வேறோர் ஊரிலே குடியிருந்துகொண்டு அந்தப் பள்ளிக்கூடத்திற்கு பஸ்ஸிலோ, டிரெய்னிலோ போய் வருவதால்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகளும் சங்கடங்களும் ஏற்படுகின்றன. நாங்கள் செங்கற்பட்டுக்குப் போனபோதுகூட இப்படிப்பட்ட பிரச்சினைகள் அங்கு இருப்பதாகக் கண்டோம். அங்குள்ள ஆசிரியர்களில் சிலர் சென்னையிலேயிருந்து வருகிறார்கள், காலையில் 11 மணிக்குத்தான் வருகிறார்கள், மாலை 3 மணிக்குப் போகிறார்கள். இந்தக் குறைபாடுகள் இல்லாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் ஓர் ஊரிலே குடியிருந்தால், பள்ளிக்கூடம் முன்னேறும் என்பது மட்டுமல்ல, அந்த ஊர் கூட முன்னேறும். அந்த நல்ல காரியத்தை ஆசிரியர்கள் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாநிலத்திலே 'நல்லாசிரியர் விருது' வழங்கும்போது நூற்றுக்கு நூறு விழுக்காடு தேறிய பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களை அழைத்து அவர்களுக்குச் சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா? உள்ளாட்சிப் பள்ளிகளிலே நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறிய பள்ளிகள் இல்லை என்று சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை ஆதாரமாக வைத்து அந்தப் பள்ளிகளை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பள்ளிகளை அரசு ஏற்றெடுப்பதும் எடுக்காததும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் வெளியிடப்படும் தேர்வை அடிப்படையாகக்கொண்டு இருந்தால் கல்வித் துறையிலே ஒரு மிகப் பெரிய குழப்பத்திற்கு ஆரம்ப விழாவாகத்தான் அது இருக்கும். கோயம்புத்தூரிலே இருக்கிற ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 11-வது வகுப்பிலே நூற்றுக்கு நூறு தேர்ச்சி கிடைத்திருக்கிறது. நாம் நல்லாசிரியர் விருது வழங்கும்போது, குறிப்பிட்ட ஆசிரியர்களைப் பாராட்டுகிறோம். நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேர்ச்சி பெறுகிறார்கள் என்று சொல்லும்போது ஒரு பள்ளியிலே உள்ள எல்லா ஆசிரியர்களையும் நாம் பாராட்டுகிறோம். பெற்றோர்-ஆசிரியர் சங்க விழாவிலே அவர்களை நாம் பாராட்டுகிறோம்.

**திரு. ப. மாணிக்கம் :** நல்லாசிரியர்கள் என்பதற்கு மாற்றாக * * * என்று வராமல் இருக்க வேண்டும். இது ஆசிரியர்களைப் பொறுத்த விஷயம் மட்டுமல்ல. மாணவர்களைப் பொறுத்த விஷயம் கூட, மாணவர்களின் சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்த விஷயமும் கூட. இது ஒரு ஸ்தூலமான, ஒரு சென்சிட்டிவ் பிரச்சினை என்பதால் இந்தப் பிரச்சினையில் இருக்கும் குறைபாடுகளை நீக்க அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** * * * என்ற வார்த்தையில் நமக்கு விருப்பம் இல்லை. அந்த வார்த்தையை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடலாம்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * * என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நான் சொல்வது, ஆசிரியர்கள் நல்முறையில் பணியாற்றுகிறபோது நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். ஆசிரியர்கள் நல்லபடியாக தங்களுடைய கடமைகளைச் செய்யவில்லை என்று சொன்னால், நாம் அவர்களைப் பாராட்டவில்லை என்பதோடுகூட நாம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். அந்த அடிப்படையிலே தான் நான் சொல்கிறேன். இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்விலே தமிழிலே மட்டும் 35 மார்க் வாங்கியிருந்தால், மொத்தத் தேர்வு விதம் இன்னும் 12 சதவீதம் உயர்ந்து இருக்கும் என்று சொன்னார்கள். இதைக் கேள்விப்படுகிறபோது, நம்முடைய நிலைமையிலே எவ்வளவு சேதாரம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். பத்து ஆண்டுக் காலம் தமிழ் படித்து, தமிழ் சூழ்நிலையிலேயே வாழ்ந்து எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லும் இந்த நிலையிலே 10 ஆண்டுக்காலம் தமிழ் படித்த பிறகு, தமிழில் 2 தாள்கள் தேர்வு வைக்கிறோம். இரண்டிலும் சேர்த்து 35 மார்க் வாங்க முடியாமல் 12 சதவீதம் தேர்ச்சி குறைந்திருக்கிறது என்று சொன்னால், ஆசிரியர்களிடத்திலே இந்த நிலைமைகளையெல்லாம் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. ஆசிரியர்கள் அக்கறையெடுத்து இன்னும் சிறப்பாகப் பாடுபட வேண்டும் என்று சொல்வதில் தவறில்லை. சமூகத்தில் சேதாரம் ஏற்படுவதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்வதாகக்கூட இதை எடுத்துக்கொள்ளலாம்.

## வருங்கால வைப்பு நிதியிலிருந்து தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கடன்

* 99. **வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து சில குறிப்பிட்ட காரணங்களை முன்னிட்டுத்தான் கடன் வாங்க முடியும் என்ற விதி உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1981 பிப்ரவரி 28

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம். தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கான வருங்கால வைப்பு நிதி பற்றிய விதி 11-ன் படி கீழ்க்கண்ட காரணங்களுக்காக மட்டும் முன்பணம் அனுமதிக்கப்படுகிறது :—

(1) நோய்வாய்ப்படுதலையொட்டி நேர்ந்த செலவுகளை ஈடு செய்வதற்கும்.

(2) கட்டளைதாரர் தாமே செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்குரியதான திருமணங்கள் கொண்டாட்டங்கள் இழவுகளுக்கான செலவுகளுக்கும்.

(இ) இல்லை.

(உ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தனியார் பள்ளிகளில் பணிபுரிகிற ஆசிரியர்களுடைய வைப்பு நிதி அவர்களுடைய சம்பளத்திலிருந்து எடுத்து ஒதுக்கி வைத்து அவர்களுக்காகக் காக்கப்படுகிற நிதி. அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் கடனாகப் பெற்றுக்கொள்ளலாம். அவரோ மனைவியோ அல்லது பிள்ளைகளோ நோய்வாய்ப்பட்டால் மருத்துவச் செலவுக்காக அதிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளலாம். அல்லது திருமணச் செலவுக்காக எடுத்துக்கொள்ளலாம். வேறு பல காரியங்களுக்கு அவர்கள் இந்தப் பணத்தை எடுத்து உபயோகப்படுத்தக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை. குறிப்பாக பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்கு அவர்களுடைய கல்விச் செலவுக்காக பணம் தேவைப்படும்போது இதிலிருந்து பணம் எடுக்க வழியில்லை. அப்படிப்பட்ட செலவு வரும்போது மனைவிக்குச் சுகம் இல்லை என்று பொய்யாகத் தகவல் கொடுத்து வாங்குகிறார்கள். அப்படி வாங்கும் நிலையைப் பார்க்கும்போது குழந்தைகளுடைய கல்விக்காக என்றும் ஆசிரியர்கள் வீடு கட்டும்போது ஏற்படுகின்ற செலவுகளை ஈடுகட்டுவதற்காக என்றும் பணம் வழங்கலாம் என்று விதியில் சேர்க்க தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு ஊழியர்களுக்கு முன்பணம் அனுமதிக்கப்படும் காரணங்களைக் கூறி தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மேற்படிப்பிற்காகக் கடன் கொடுப்பது பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினைகளை நாம் பரிசீலிக்கலாம்.



1981 பிப்ரவரி 28]

(முற்பகல் 11-00)

**திரு. பா. ரா. தாமஸ்:** ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகக் கடன் வசதியைக் கோரும்போது, சில தனியார் பள்ளிகளின் தாளாளர்கள் அத்தகைய விண்ணப்பங்களில் கையெழுத்துப் போட மறுக்கிறார்கள். அவர்கள் கையெழுத்திடாத காரணத்தால், மாவட்டக் கல்வி அதிகாரிகளும் கடன் தொகை வழங்க மறுக்கிறார்கள். எனவே இவ்வாறு தாளாளர்கள் விண்ணப்பங்களில் கையெழுத்திட மறுத்தாலும், மாவட்டக் கல்வி அதிகாரிகளே கடன் வசதி வழங்கும் வகையில் அரசு அவர்களுக்கு ஆணையிடுமா ? அடுத்து, சமீபத்தில் அரசு ஆசிரியர்களுக்கு ஒரு சலுகை வழங்கியிருக்கிறது. அதாவது தனியார் பள்ளி ஆசிரியர்களும் அரசு நிதியிலிருந்தே பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருந்தும், விருதுநகர் கல்வி மாவட்டத்தில் பல ஆசிரியர்கள் இன்னும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையை அரசு போக்க, உரிய ஆணையைப் பிறப்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுபோன்ற தவறுகளை மட்டுமல்ல, வேறு பல தவறுகளையும் செய்யும் தனியார் பள்ளி தாளாளர்களை தண்டிக்கிற வகையில் இப்போதிருக்கும் சட்டத்தில் போதுமான அதிகாரம் இல்லை என்று கருதப்படுகிற காரணத்தால் அந்தச் சட்டத்தைத் திருத்தும் உத்தேசத்தில் இருக்கிறோம். இதற்கான கருத்துக்களையும் கேட்டிருக்கிறோம். அப்படித் திருத்தும்போது, இதையும் பரிசீலனை செய்யலாம்.

**திரு. செ. முத்துசாமி:** இதற்கு ஆதாரமாக நாமக்கல் கல்வி மாவட்டத்தில் மோகனூர் பிரிதிவி பள்ளியில் 10 ஆசிரியர்கள் தங்கள் வைப்பு நிதியிலிருந்து கடன் தொகை கேட்பதாக, ஆசிரியர்களின் கையெழுத்தையே தாளாளர் போட்டு, அவருடைய கையெழுத்தையும் போட்டு அங்குள்ள போஸ்டாபீசிலிருந்து பல ஆயிரக் கணக்கான ரூபாயைக் கையாடல் செய்திருக்கிறார். இது குறித்து பி.எம்.ஜி. அவர்களிடம் முறையிட்டபோது அவர்மீது நடவடிக்கை எடுக்க புரொவிஷன் இல்லை என்று சொல்லிவிட்டார். கல்வி இலாக்காவில் முறையிட்டபோதும் அவர்களும் அதற்குப் புரொவிஷன் இல்லை என்று சொல்லி விட்டார்கள். தற்போது அந்த மானேஜர் தப்பித்துக் கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து வைப்பு நிதியிலிருந்து பணத்தை எடுக்க இவர்கள் "என்டார்ஸ்" செய்ய வேண்டும் என்ற விதியை நீக்கி உடனடியாக ஒரு அவசர சட்டம் பிறப்பிக்கப்படுமா ?

[1981 பிப்ரவரி 28

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும். இதற்கு அவசரச் சட்டம் ஒன்றும் தேவையில்லை. தற்போது இருக்கிற சட்டப்படியே கையாடல் செய்தால், அவர்மீது வழக்குப் போட்டு சிறைக்கு அனுப்ப முடியும். எனவே உரிய அதிகாரிகளிடம் புகார் தந்தால், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கடன் கேட்கும்போது காரணங்களைக் கேட்கிறார்கள் என்பதால், வீட்டில் காது குத்த வேண்டும் என்று சொல்லு கிறார்கள். இப்படி யார் காதைக் குத்துவது? எத்தனை முறை குத்துவது என்றெல்லாம் கஷ்டம் வருகிறது. தற்போது மூக்கைக் குத்திக் கொள்வது பேஷனாக மாறிவிட்டது. எனவே கடன் கொடுப்பதற்கான காரணங்களைச் சொல்லும் பட்டியலில் மூக்குக் குத்துவதையும் ஒரு காரணமாக அரசு சேர்ப்பதற்கு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்குக் கடன் தேவைப்படுகிறபோது, அதை வேறு இடங்களில் சென்று பெறக்கூடாது. அவர்களுடைய சேமிப்பு நிதியிலிருந்தே பெற வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், இந்தக் கடன் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் முன் வைப்பு நிதி என்பது எதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. அதை மறந்துவிட்டு கடன் கொடுப்பதற்கான காரணங்களின் பட்டியலை நீட்டிக்கொண்டே போனால், முன் வைப்பு நிதியே இருக்காது. பின்னால் அந்தப் பணத்திலிருந்து ஆசிரியர்கள் எடுக்கக்கூடிய நிலை இருக்கவேண்டும். அதற்கு ஆசிரியர்கள் கூடுமான வரை அந்த நிதியிலிருந்து பணத்தை எடுக்காமல் இருப்பதுதான் நல்லது. இன்றைய சமுதாய சூழ்நிலையில் பல காரணங்களைச் சொல்லி கடன் கேட்கலாம். அப்படிச் செய்தால் டி. வி. வாங்குவதைக் கூட ஒரு காரணமாகச் சொல்லலாம். எனவே அந்த வைப்புத் தொகை எதற்காக உருவாக்கப்பட்டதோ அதன் பயன் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றுதான் செயல்பட வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் வைப்பு நிதியிலிருந்து கையாடல் செய்யப்பட்ட விவரத்தைச் சொன்னார்கள். தற்போதைய கிரிமினல் சட்டப்படி வைப்பு நிதியிலிருந்து கையாடல் செய்வது பெரிய குற்றமாகக் கருதப்பட்டு கடுமையான தண்டனை வழங்க விதியிருக்கிறது. அப்படி இருக்கும்போது, மாவட்டக் கல்வி அதிகாரிக்கு இதுபற்றி தெரிவித்தபோது, ஏன் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று புரியவில்லை. எனவே இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?



1981 பிப்ரவரி 28]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நான் அதைத்தான் சொன்னேன். அரசு இது குறித்து பரிசீலிக்கும். அதற்கு இப்போதைய சட்டமே போதும், அதற்குத் தனியாக அவசரச் சட்டம் தேவையில்லை என்பதையும் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தப் பிரச்சினை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் உரிய பிரச்சினையல்ல. அரசு ஊழியர்களானாலும் சரி, உள்ளாட்சித் துறை பள்ளியாசிரியர்களானாலும் சரி, அரசுப் பள்ளியாசிரியர்களானாலும் சரி அவர்கள் அனைவருக்கும் இந்தச் சங்கடம் இருக்கிறது. எனவே ஒட்டுமொத்தமாக அரசு இது குறித்த விதிமுறைகளை மாற்றினால்தான் உரிய பலன் கிடைக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் பள்ளிகள் குறித்த சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்படும் போது, இதனையும் பரிசீலிப்போம் என்று சொன்னார்கள். எனவே ஒட்டுமொத்தமாக, அனைத்து ஊழியர்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் மாற்றத்தைக் கொண்டு வந்தால்தான், அமைச்சர் அவர்களின் உறுதிமொழி நிறைவேறும். எனவே அரசு இந்த வகையில் ஒட்டுமொத்தமான திருத்தத்தைச் செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இங்கே எனக்குக் கொடுத்துள்ள விவரங்களின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு நன்மை கிடைக்கத் தேவையான முறையில் மாறுதல்களைச் செய்வோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** வருங்கால வைப்புத் தொகையை தபால் துறையில்தான் வைத்திருக்கிறோம். அங்கே அதற்கு மிகக் குறைந்த வட்டிதான் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரையில், அவர்களின் வைப்பு நிதிக்கு அதிகமான வட்டி வீதம் கிடைக்கிறது. எனவே ஆசிரியர்களின் வைப்புத் தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வைத்தால், அதனால் பல நல்ல திட்டங்களுக்கு அந்தத் தொகை பயன்படும். கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் வரை இந்த வகையில் கிடைக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதோடு தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் வைப்பு நிதிக்காகப் பணம் கொடுத்தால், நிருவாகம் அதை வாங்கி வைத்துக்கொண்டு பலநாட்கள்கூட தபால் துறையில் செலுத்தாமல் தங்கள் கையிலேயே, தங்கள் பையிலேயே வைத்துக்கொள்கிற நிலை இருக்கிறது. இதை மாற்றும் வகையில் கடுமையான சட்டம் கொண்டுவரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நிர்வாகங்கள் செய்கிற தவறுகளைக் கண்டிக்கிறோம். அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுக்க விரும்புகிறோம். இப்போதே அவர்கள்மீது நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறோம். போஸ்ட் ஆபீசில் போட்டிருப்பதை மாற்றி வங்கிகளில் போடுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவருடைய யோசனையை அரசு பரிசிலனை செய்யும்.

**திரு. செ. முத்துசாமி :** வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் கேட்டால், தேவையில்லாமல் காலம் கடத்தியபிறகு உரியவருக்கு ஏதாவது தந்தால்தான் சாங்ஷன் செய்யக்கூடிய சூழ்நிலை பல இடங்களிலும் வளர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வைப்பு நிதியிலிருந்து உரிய காரணத்தோடு கடன் கேட்டால் அதை ஒரு 15 நாட்களுக்குள் தர வேண்டுமென்றும் அல்லது ஒரு ஆசிரியர் தன் மனைவியை மருத்துவ மனையில் சேர்த்துவிட்டு வந்து மனு போட்டால் ஒரே நாளில் அல்லது ஒரு 6 மணி நேரத்திற்குள் கடன் தொகை கிடைக்கும்படி செய்யவும் அரசு முன்வருமா? இதற்காக அந்த அலுவலர்கள் ஓவர்டைம் வேலை செய்வதாகக் கருதி, அதற்கென்று ஒரு பிசாக ரூபாய் ஐந்தோ பத்தோ கொடுத்துவிடலாம் என்று வைத்தாலாவது, உடனே கடன் கிடைக்க வாய்ப்பு இருக்கும். எனவே இது குறித்து அரசு பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பொதுவான குறைபாட்டைச் சொல்லுகிறார். அதற்குப் பெயர்தான் லஞ்சம். பணத்தைக் கொடுத்து ஒரு காரியத்தை நடத்திக் கொள்ளலாம் என்ற குறைபாடு எங்கும் இருக்கிறது. இப்படிச் சொல்வதை விடுத்து குறிப்பாக தவறு நடக்கிற இடத்தைச் சுட்டிக்காட்டினால், நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். இந்த அரசைப் பொறுத்த வரையில், அப்படி வாங்குவதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அதைத் தவிர்ப்பதற்கு நிர்வாக ரீதியாக ஏதாவது சில நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்பது பற்றியும் பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம். லஞ்சம் தரப்படுகிறபோது, லஞ்சம் தரப்படுகிறவர்களாலேயே அது வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் ஆசிரியர்கள் அலுவலகங்களுக்குப் போகாமலிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறோம். ஒருவர் போய் பணம் கொடுத்து காரியத்தை சாதித்துக் கொள்ளும்போது, கொடுக்காதவர்களும் வந்து கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்ற நிலை உருவாகிறது. இதைப் போக்க எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கிறோம்.



கும்பகோணம் அறிஞர் அண்ணா அரசினர் மேல் நிலைப் பள்ளி.

* 100. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அறிஞர் அண்ணா அரசினர் மேல் நிலைப் பள்ளியின் கூரையை வேய, அப்பள்ளியின் வசதிக் கட்டண நிதியிலிருந்து பணம் கட்டப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும், பொதுப் பணித் துறை அக்கூரையை வேய்ந்து தரவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அப்பள்ளிக் கூரையை வேய்ந்துதர அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) —மேற்படி பள்ளி நிர்வாகத்தினர் 1980-ம் வருடம் மார்ச் மாதத்தில் ரூ. 7,000 (ரூபாய் ஏழு ஆயிரம் மட்டும்) முன்பணமாக பள்ளிக் கட்டிட கூரை வேயும் வேலைக்காக, நிர்வாகப் பொறியாளர், காவேரி கோட்டம், தஞ்சாவூர் அவர்களிடம் கட்டினார்கள். மேற்படி பணம் கட்டியபின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு பள்ளிக் கூரையை வேய்ந்து தரும் பணி இவ்வாண்டு செப்டம்பர் திங்களிலேயே முடிக்கப்பட்டு மேற்படி பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பள்ளியில் இருக்கும் வசதிக் கட்டண நிதியிலிருந்து பணம் கட்டி, அது பொதுப் பணித் துறையால் ஏற்கப்பட்டு, அதற்குப் பிறகு பணி முடிக்கப்பட்டு அக்கட்டிடம் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்படுவதற்குள் பல மாதங்களாகிவிடுகின்றன. இந்த இடைப்பட்ட காலத்தில் மாணவர்கள் வெய்யிலிலும் மழையிலும் அவதிப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சிறிய தொகையில் செய்யப்படும் பணிகளை தலைமையாசிரியரின் பொறுப்பிலேயே நிறைவேற்ற அதிகாரம் அளிக்கப்பட்டால், இத்தகைய பணிகள் உடனடியாக முடிக்கப்படும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கட்டிடம் கட்டுவது போன்ற காரியங்களில் பொறியாளர்களின் அனுமதியும் அவர்களின் மேற்பார்வையும் தேவைப்படுகிறது என்பதுதான் அரசின் கருத்தாகும். அதை மாற்றி தலைமையாசிரியரிடம் ஒப்படைப்பது சரியாக இருக்காது. காரணம் அத்தகைய காரியத்திற்கான அனுபவம் அவர்களுக்கு இல்லை என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு வேறு வேலையும் தருவதாக அது இருக்கும். அதோடு ஒரு சிலர் தவறு செய்தாலும், அது அனைத்துத் தலைமையாசிரியர்களையுமே பாதிக்கும் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

[1981 பிப்ரவரி 28

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இது கட்டிடம் கட்டுகிறவேலையல்ல. கட்டிடத்திற்குக் கூரை வேய்வதுதான்; ஏற்கெனவே உள்ள கூரையைச் சரிபார்ப்பது அல்லது பழுது பார்ப்பது. அதற்குப் பொதுப் பணித் துறையின் எஞ்சினியரிடம் போக வேண்டுமென்றால், 6 மாதம், 9 மாதம் என்று கால தாமதமாகிறது. அதன் காரணமாக மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே இத்தகைய நிலைமைகளை மாற்றும் வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலையை சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் கருத்தை அந்த இலாக்காவிற்கு அனுப்பலாம். ஆனால் கூரை வேய்வதற்காக ஓர் உத்தரவு, கட்டிடம் கட்டுவதற்காக ஓர் உத்திரவு என்று பல விதிகளைப் போட்டு உத்தரவிட்டால், அது முறையாக இருக்காது என்று கருதுகிறோம். ஆகவேதான் வேண்டாம் என்று சொல்லுகிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : பொதுவாக கல்வித் துறையில் இவ்வாறு கட்டிடங்கள் கட்டுவதற்காக சரியான முறையில் அனுமதியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால், கல்வித் துறையிலேயே பொறியாளர் பிரிவை ஏற்படுத்தி, அதன் மூலமாக தமிழகத்திலுள்ள பள்ளிகளுக்கான கட்டிடங்களைக் கட்டும் வாய்ப்பை உருவாக்கலாம். அதுபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட ஒரு கருத்தை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : பள்ளி வசதிக் கட்டிட நிதியிலிருந்து என்னென்ன பள்ளித் தேவைகளுக்கு நிதி எடுத்துச் செலவிடலாம் என்று பட்டியல் போட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பட்டியலில் உள்ள செலவினங்களுக்குச் செலவு செய்வதற்கு மாவட்டக் கல்வி அலுவலரின் அனுமதியைப் பெற வேண்டிய நிலை இருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளில் மாவட்டக் கல்வி அலுவலர் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்து உள்ளவர்கள்தான் தலைமையாசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு எழுதி அனுமதியைப் பெற்றுத்தான் செலவு செய்ய வேண்டும் என்ற நிலை இருப்பதால் காலதாமதமாகிறது. தலைமையாசிரியர்கள் அப்படிப்பட்ட செலவுகளைச் செய்ய அதிகாரத்தை நாம் தந்திருந்தாலும், அதற்கு மாறாக கல்வித் துறை இயக்குநருடைய புரசீடிங்ஸ் இருப்பதால், அதை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?



1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைமையாசிரியர்களுக்கே இந்த அதிகாரத்தைத் தந்தால், அது தவிர்க்க முடியாத தவறுகள் கல்வித் துறையில் நடைபெறுகின்றன என்ற தப்பான எண்ணத்தை உருவாக்கும். அதைத் தடுப்பதற்காகத்தான், இன்னுமொரு இடத்திலேயிருந்து அவர்கள் அனுமதியைப் பெற்று அல்லது தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். தவறு நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் இது இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமல்ல. அதனால் எல்லோரும் தவறு செய்வார்கள் என்பதுமல்ல. சில பேர் கூட தவறு செய்கின்ற வாய்ப்பு பெறக்கூடாது என்பதற்காகத்தான் அப்படி வைத்திருக்கிறோம். ஆனால் காலதாமதத்தைத் தவிர்க்க வேறு ஏதாவது செய்யலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண் 101 ஒத்தி வைக்கப்படுகிறது.

சாதிச் சான்றிதழ்.

* 102 வினா.—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் 29—10—1979 அன்று வினா எண் 34-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாணவர்களுக்கு நிரந்தரமாக சாதிச் சான்றிதழ் வழங்கும் பொருள் பற்றி அரசு முடிவு எடுத்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(இ) சாதிச் சான்றிதழ் படிவங்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் அச்சில் உள்ளன.

திரு. செ. முத்துசாமி : இப்படி விரைவாக அரசு நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே நிரந்தரமான சான்றிதழ்கள் தரும்போது, தாசில்தாரிடம் கையெழுத்துப் பெறும் சூழ்நிலை இல்லாமல், சிகப்புநாடா முறையை மாற்றி பிற்பட்டோர் போன்ற எல்லோருக்கும் அந்தச் சலுகை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 28

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அந்தச் சான்றிதழை மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் வழங்குகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தாழ்த்தப்பட்ட, பழங்குடி, மற்றும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய போஸ்ட்-மெட்ரிக் மாணவர்களுக்கு முதற்கட்டமாக பாஸ்போர்ட் அளவில் கடினமான அட்டையில் நிரந்தர சாதிச் சான்றிதழை வழங்க இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி ஏறத்தாழ இருபத்தைந்தாயிரம் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் மேல் நிலைப் பள்ளிகளில் பயில்கின்ற இவ்வினங்களைச் சேர்ந்த எழாயிரம் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கான ஆணையை 19—4—1980 அன்று அரசு வெளியிட்டுள்ளது.

**திரு. த. சந்தோஷம் :** கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய அரிசனங்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கும், இந்து மத அரிசனங்களுக்கு வழங்குவதைப் போலவே அதே உரிமைகளைத் தருகின்ற சாதிச் சான்றிதழ் வழங்கப்படுமா அல்லது வேறுவிதமாக வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இப்போது வழங்கப்படுவது சாதிச் சான்றிதழ் மட்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துப்படி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கல்லூரிகள், பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பயில்கின்ற மாணவர்களை, பள்ளியில் சேர்க்கின்ற போது, என்ன சாதி என்று கேட்டு பதிவு செய்கிறார்கள். எனவே டி.சி.யில் என்ன சாதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையே சாதிச் சான்றிதழாகப் பயன்படுத்தலாம் என்று உத்தரவு போட்டால் போதுமானது. வேலைக்கு விண்ணப்பம் செய்கிறபோது, தாசில்தாரிடம் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று உத்தரவு இருப்பதால், அதில் ஏற்படுகிற கஷ்டத்தை எடுத்துச் சொல்லி கேட்டுக் கொண்டார்கள்; அதே மாதிரி எம்.எல்.ஏ., எம்.எல்.சி. அவர்களிடமும் சான்றிதழ் வாங்குகிறார்கள். சிறைச்சாலைக்குப் போய் வந்தவர்களுக்குக் கூட நாம் நற்சான்றிதழ்களைக் கொடுத்துவிடுகிறோம். ஆகவே அந்த நிலை இல்லாமல் பள்ளியில் படிக்கிற போது வழங்கிய சான்றிதழையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டால், இந்த இரட்டைப் பணியைத் தவிர்க்கலாம். இதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?



1981 பிப்ரவரி 28]

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது சம்பந்தமாக நான் முன்பு ஒரு முறை மேலவையில் எழுப்பியபோது, அப்போதிருந்த அமைச்சர் இதுபற்றி நிரந்தரமான ஒரு ஏற்பாட்டைச் செய்வதாகச் சொன்னார். சான்றிதழ் போல் அல்லாமல் நிரந்தரமான அடையாள அட்டையாகக் கொடுப்பதுபற்றி முடிவு செய்யப் போகிறோம் என்று சொன்னார். இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லுவது, சாதிச் சான்றிதழா அல்லது அடையாள அட்டையா என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்தால், அது இன்னும் எளிதாக, முறையாக இருக்கும். அது குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** நான் ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் அளித்ததைப் போல, முதற்கட்டமாக பாஸ்போர்ட் அளவில் கடினமான அட்டை—நிரந்தரச் சான்றிதழை—வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி சாதிச் சான்றிதழ்களை வழங்கியிருக்கிறோம்.

**திரு. த. சந்தோஷம் :** கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும் என்றும், சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டது என்றும் சொன்னார்கள். சலுகைகள் இல்லாமல் அடையாள அட்டையை மட்டும் வழங்குவதால் என்ன பயன் இருக்கும்? இருக்கின்ற சலுகைகள் கிடைக்காமல் செய்வதற்கு அது உதவுமே தவிர, சலுகைகளைக் கொடுக்க உதவாது. ஆகவே அரசு அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாணவர்கள் சாதிச் சான்றிதழ் வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றபோது, அவர்களுக்கு நடைமுறையில் இருக்கின்ற சிரமங்களைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அரசு இதை மேற்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய மற்றவர்களுக்கும் இந்தச் சலுகையை இந்த அரசு வழங்குகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அவையில் உறுப்பினர் உறங்கலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1981).

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ந த்து). சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1981).

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று காலையில் கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது :—

இன்று காலை நிகழ்ச்சிகள் வினாக்களும்—விடைகளும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை கலைந்து மீண்டும் பிற்பகல் 3-30 மணிக்கு அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்வதற்காகக் கூடும். அவ்வமயம், "கிராம அலுவலர்கள் பதவி நீக்கச் சட்டமுன்வடிவு" முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

2—3—1981—அரசு சட்டமுன்வடிவுகள்.

3—3—1981 }
4—3—1981 } —கூட்டம் இல்லை.

5—3—1981—தமிழ் நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்து விவாதம்.

6—3—1981—அரசு சட்டமுன்வடிவுகள்.

7—3—1981—தனி உறுப்பினர் அலுவல்கள்.

8—3—1981—ஞாயிறு—விடுமுறை.

9—3—1981 }
10—3—1981 } —அரசு சட்டமுன்வடிவுகள்.

மேலவை, வழக்கம்போல், காலை 10-30 மணிக்குக் கூடும்.



(முற்பகல், 11-20).

## 3. கவன ஈர்ப்பு.

**(1) கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாகத தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களில் சுமார் 250 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் துண்டுபட்ட பணிக்காலங்களைக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்கப் படாமை குறித்து.**

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 333, நாள் 14—2—1977ன் படி துண்டு பட்ட பணிக்காலத்தையும் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்கும்படி அரசு ஆணை பிறப்பித்தும், கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாகத் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களில் சுமார் 250 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் துண்டு பட்ட பணிக்காலங்களைக் கணக்கிட மறுப்பதால், அவர்களுக்கு வரவேண்டிய செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமல் இருப்பதால் எழுந்துள்ள அதிருப்தி குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விவர அறிக்கையிலே இப்போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானமே வேறு. அரசாணை எண் 333, நாள் 14—12—1977-லே நான் சொன்ன குறை தீர்க்கப்பட்டுவிட்டது. ஏனென்றால் 10 ஆண்டுப் பணிக்காலம் என்பது அவர்கள் பணிக்காலத்தையும் துண்டுவிழுந்த அவர்கள் பணியில் இல்லாத காலத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகும், 1978 க்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம், மற்ற மாவட்டங்களில் இல்லை, இரண்டு மாவட்டக் கல்வி அதிகாரிகள் மட்டும் இதை அனுமதிக்காது மறுத்து அவர்களே உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதைத் தான் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தப் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டது என்று சொல்கிறார்கள். உண்மையாகவே 2 வாரத்திற்கு முன்தான் ஒரு ஆணை போட்டு தீர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு அரசு ஆணையை மறுத்து அந்த இரண்டு மாவட்டக் கல்வி அதிகாரிகள் உத்தரவு

@ 324 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் அப்படி நடத்தினார்கள் என்று கேட்குமா ? அதைப்பற்றிப் பரிசிலனை செய்து அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாணையை சரியான முறையிலே செயல்படுத்தாததற்கு அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கப்பட்டு அதற்கேற்ப அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் ஊழியர் வேலை இழந்துள்ளது குறித்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும், ஊழியர்கள் வேலை இழந்துள்ளது குறித்தும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே, இந்தக் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்படுவதற்கான காரணங்களைச் சொல்லி, அதிலே அரசு எடுத்த முடிவில், முக்கியமாக தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் இவ்வெளியீட்டு வேலையைக் கவனிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் இந்தக் கலைக் களஞ்சியத்தை வெளியிடும்போது, இந்தத் தமிழ் கலைக் களஞ்சியத்தின் விலை அதிகமாக இருப்பதாலும், அதைப் படிக்க விரும்புகின்ற எல்லோராலும் அதை வாங்க முடியாத நிலை இருப்பதாலும், அதிகமான விலையில் அந்தப் பதிப்பை

@ 325–326 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வெளியிடுவது மட்டுமல்லாமல், வசதி குறைந்தவர்களும் வாங்கக்கூடிய அளவில் மலிவு பதிப்புகளும் வெளியிடுவதற்கு அந்த நிறுவனம் வழிவகை செய்யுமா ? அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காகப் போடப்பட்டிருக்கின்ற குழுவிலே அங்கத்தினர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையின்படி, தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களிலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ தொகுப்பாளர்கள் அமர்த்தப் படுவர். வேலையிழந்த கலைக் களஞ்சிய ஊழியர்களை, தேவைக்கேற்பவும்; தகுதிக்கேற்பவும் அரசு இத்திட்டத்தை செயல்படுத்தும்போது வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவர். மீண்டும் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், இந்த வெளியீட்டு வேலையை எடுத்துக்கொள்ளும்போது, ஏற்கெனவே தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் வேலை செய்த ஊழியர்களுக்கு, உதவியாளருக்கு முன்னுரிமை கொடுத்து பணியிலே அமர்த்திய பிறகு, மீதி பணியிடங்களுக்கு, காலியிடங்களுக்கு வெளியிலேயிருந்து ஆட்களை எடுத்துக்கொள்ள அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முன்னரே அந்தப் பணியில் இருந்தவர்களுக்குப் பணி அளிப்பதுபற்றி அரசு கவனிக்கும். ஆனால் வயதானவர்கள், தகுதியில்லாது இருப்பவர்களையெல்லாம் எடுத்துக் கொள்ள முடியாது என்பதுதான் இப்போது சொல்லியிருக்கின்ற கருத்து. மற்றப்படி அந்த வேலை செய்வதற்குரிய வயது, தகுதி பெற்றிருப்பவர்களை எடுத்துக் கொள்வதில் சங்கடமில்லை. அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்வதில் அரசுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசின் தீர்மானம்

### (1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவல நடத்துதல் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து; அவை மீண்டும் பிற்பகல் மாலை 3-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 11.25)

அவை மீண்டும் பிற்பகல் 3-30 மணியளவில் கூடியது

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (3) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



### (1) பேரவையிலிருந்து செய்தி—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1981) பிரதியை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

## 4. அரசின் தீர்மானம்.

### (2) அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 21 (3)ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் மூன்றாவது இனமான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) முதலிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் மூன்றாவது இனமான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1981) முதலிலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981.)

* **திரு. க. இராமமூர்த்தி** Od a print of order மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு புதிதாகப் பல்வேறு பணிகளுக் குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக அமைந்திருக்கிறது.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 28

பணியாற்றிக்கொண்டிருந்த கிராம மணியங்கள், கர்ணங்கள் ஏற்கெனவே எல்லாம் திடீரென்று வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பதவிகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அது தொடர்பாக, அவர்களுக்கு வேலை வேண்டுமென்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளுக்காக அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, அது தொடர்பாக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் தீர்ப்பு அளிக்கப்படவில்லை. இடைக்கால தடையுத்தரவு போட்டு, அவர்களுக்குத் தொடர்ந்து ஊதியம் கொடுக்க வேண்டு மென்ற உத்தரவை உச்ச நீதி மன்றம் தமிழக அரசுக்கு இட்டு, தமிழக அரசும் ஏற்கெனவே அந்தப் பதவிகளில் பணியாற்றியவர்களுக்கு, பதவிகளை ரத்து செய்த பிறகும், ஊதியம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் உச்ச நீதி மன்றம் அவர்களுடைய மறுப்பான தொடர்பாக எந்தத் தீர்ப்பையும் வழங்கலாம். அவர்களை மீண்டும் பணியில் எடுத்துக்கொள்ளலா மென்ற தீர்ப்பு வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இதற்கிடையில் சட்டம் கொண்டுவருவது உச்ச நீதி மன்றத்தின் போக்கினை மாற்றுவதாக அமையும். அவர்களுடைய அதிகார வரம்புக்குள் தலையிடுவதாக அமையும். அதையும் தாண்டி நின்று உச்ச நீதி மன்றத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்வது போல இந்தச் சட்ட முன்வடிவை அவையின் விவாதப் பொருளாக்குவது நீதி மன்றத்தை அவமதிப்பதாக அமையும் என்ற காரணத்தால், இந்த நேரத்தில், இந்தச் சூழ்நிலையில் இதை ஏற்க முடியாதென்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுவது அரசியல் சட்டத்தின் விதி முறைகளுக்கு மாறாக அமையுமென்று சொல்லி, இந்தச் சட்ட முன் வடிவை இன்றைக்கு நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென்று தலைவரவர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், இந்தச் சட்ட முன்வடிவை இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென்று சொன்னார்கள். அது அவருடைய கருத்து. அதைச் சொல்லுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அதைச் சொல்லுவதற்கு அவருக்கு உரிமை இல்லையென்று நான் சொல்லவில்லை. இந்த நடவடிக்கை உச்சநீதி மன்றத்தின் நடவடிக்கைக்குத் தடையாக அல்லது அவர்களை வலுக்கட்டாயப்படுத்தும் அளவிற்கு இருக்கு மென்று சொல்லுவது, இந்த அவை வலுக்கட்டாயப்படுத்தும் என்று சொல்லுவது இந்த அவையைக் களங்கப்படுத்துவதாகும். உச்ச நீதி மன்றம் பணியு மென்று சொல்லுவது அவர்கள்மீது களங்கம் ஏற்படுத்துவதாகும். ஆக



1981 பிப்ரவரி 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த அவைமீது, உச்ச நீதி மன்றத்தின் மீதும் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதை எடுத்துக்கொள்ள வேண்டாமென்று சொல்லுவதற்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அதே நேரத்தில் இந்த அவைமீதும், உச்ச நீதி மன்றத்தின்மீதும் களங்கத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையிலானாலும் சரி, பேரவையிலானாலும் சரி, நாம் மக்களுக்கு வேண்டிய முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்றும்போது, அதைப் பற்றி உயர்நீதி மன்றம் என்ன கருத்து வைத்திருக்கிறது என்று முன்கூட்டியே அறிவது அல்லது அறிந்து அதற்கேற்றபடி சட்டமுன்வடிவைக் கொண்டு வருவது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும். ஜனநாயகத்தில் முற்போக்குக் கருத்துக்களை கொண்டுவரும்போது, உயர்நீதி மன்றத்தில் என்ன நடக்கும் என்பதுபற்றிக் கவலைப்படாமல், சட்ட மன்றத்தில் என்ன நடக்குமென்று கவலைப்படாமல், மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் அளவிற்குத்தான் சட்டங்களைக் கொண்டு வருகிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நாம் இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றுகிறபோது, இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாதென்ற அளவிற்கு உச்ச நீதிமன்றத்திலிருந்து நமக்கு எந்தவிதமான வழி காட்டியோ, தாக்கீதோ இல்லை. ஆனால் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், கிராம அதிகாரிகளை நியமிப்பதற்கு முன்கூட்டியே என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அதாவது புதிய கிராம அதிகாரிகளை நியமிப்பதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்யலாமென்ற அளவிற்குத் தெரிவித்திருக்கிறார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருக்கும்போதே, 'நேஷனல் செக்யூரிட்டி ஆர்டினன்ஸ்' சட்டமாக மாற்றப்பட்டது உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியுமென்று நினைக்கிறேன். எனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது, அவையில் சட்ட முன்வடிவு கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதில்லை அல்லது உச்சநீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தால், அவையில் அதை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்று சொல்லுவது சரியாக இராதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3-40)

* **திரு. க. இராமமூர்த்தி:** இந்தச் சட்டமுன்வடிவு முற்போக்கு சட்ட முன்வடிவா இல்லையா என்பது நிறைவேறிய பிறகு நடைமுறையில் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டிய ஒன்று. வெறும் வார்த்தை மட்டும் முற்போக்கை

தீர்ணயித்து விடாது. பல சட்டங்கள் இப்படி முற்போக்குச் சட்டங்கள் என்று நிறைவேற்றப்பட்டு, எப்படி அவை பின்னால் பிற்போக்காக ஆயின என்பதையும் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் இன்றைக்கு கிராம அதிகாரிகள் உள்ளபடியே வேலையில் இல்லாவிட்டாலும்கூட, வேலையில் இருந்திருந்தால் என்ன சம்பளம் பெற்றுக்கொண்டிருப்பார்களோ அதை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய அதிகார வரம்புக்கு உள்ளடங்கியிருப்பது, எப்படி அவர்களுக்கு சட்டுத் தொகை கொடுப்பது என்பது பற்றியது மட்டுமல்ல, அவர்களை முடியுமானால் எந்த அளவுக்குப் பணியில் சேர்த்துக்கொள்வது சாத்தியம் என்கிற பரிசீலனையும் இருக்கிறது. இந்நிலையில் ஏற்கெனவே வேலையில் இருந்தவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தால், இப்போது அரசு புதிதாக வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்திருக்கிற முயற்சியின் நிலை என்ன ஆகும்? உச்ச நீதிமன்றம் அப்படி ஒரு தீர்ப்பைக் கூறுமேயானால், அவசரம் அவசரமாக இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்காமல், இந்த மன்றம் சட்ட முன்வடிவை நிறைவேற்றி விட்டது என்கிற விமர்சனத்திற்கு இந்த அவை ஆளாகிவிடும். அது எங்களுடைய மரியாதை, கண்ணியம், உரிமை இவற்றையெல்லாம் பாதித்துவிடுகின்ற நிலையை உருவாக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் இதை முற்போக்குக் கருத்தாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் முற்போக்கும் கருத்துக்கூட மரியாதையோடு, கண்ணியத்தோடு திணிக்கப்பட வேண்டும். அந்த நிலையை இது பாதித்து விடும் என்பதால், மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்மொழிய இடம் கொடுக்க வேண்டாம்

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் ஒன்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இருக்கின்ற நாம் எல்லோரும் கௌரவத்தோடும் மரியாதையோடும் தான் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். நானும் இங்கே ஓர் உறுப்பினர்தான். ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்கிறேன். புதிய கிராம அதிகாரிகளை பதவியில் நியமிப்பதற்கு முன் ஏற்பாடு செய்வதற்கு அவர்கள் உரிமைகள் வழங்கியிருக்கிறார்கள். உச்சநீதிமன்றத்தில் அதற்குத் தடையேதும் இல்லை. சட்டத்தை இங்கே நிறைவேற்றுவதற்கும் ஆட்சேபனை இல்லை. இந்தச் சட்டமன்றத்திற்கு இதை நிறைவேற்ற முழு



உரிமையும் இருக்கிறது. திரும்பவும் நான் சொல்கிறேன், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கும்போதே, நேஷனல் செக்யூரிட்டி ஆர்டினன்ஸுக்கு பதிலாக சட்டம் இயற்றப்பட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** அதிலே 'ஸ்டே' கிடையாது. இதிலே 'ஸ்டே' இருக்கிறது. அதுதான் இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சட்டத்தைப் பற்றிய மாண்புமிகு உறுப்பினருடைய அபிப்பிராயத்தைக் கூறுகிறார். இதிலே நாம் விவாதிப்பதற்கு அதிக நேரத்தை எடுத்துக்கொண்டால், நேரம் நீண்டுகொண்டே போகும். சட்டத்தைக் கொண்டு வருவதற்கோ, கிராம அதிகாரிகளை புதிதாக நியமனம் செய்வதற்கு முன் ஏற்பாடு செய்வதற்கோ இதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தான் இதை நாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆட்சேபிக்க இதிலே ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'The rule of *sub-judice* cannot stand in the way of Legislaticn' என்று குறிப்பிடப்பட்டிருப்பதால், இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சட்ட முன்வடிவை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

---

@326-334 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1981 பிப்ரவரி 28

* திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, இது ஒரு மிகவும் முக்கியமான சட்ட முன்வடிவு. அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல், முன்னேற்ற கருத்துக்கள் கொண்ட ஒன்று இது. சமுதாயத்தின் அடித்தளத்தையே மாற்றியமைக்கும் வகையில் கருத்துக்கள் அடங்கியிருக்கின்ற சட்ட முன்வடிவு இது. இதுபோன்ற பணிகளுக்கு இதற்கு சமமான வேறு சரியான சட்ட திட்டங்கள் எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் இதுபற்றிய சில முன்னோடிக் கருத்துக்களை இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால், நாங்களும் தெரிந்து கொண்டு இந்த விவாதத்தை முழுமைப் படுத்திட முடியும். ஆகவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைத்து, இதுபற்றிய கருத்துக்களை அவைக்குத் தர வேண்டுமென்று, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே இருக்கிற கிராமங்களில் எல்லாம் பகுதி நேரக் கிராம அதிகாரிகள் இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன்னாலிருந்தே இருக்கிறார்கள். இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன்னாலிருந்து ஆரம்பித்து, விடுதலை அடைந்த பிறகும் கிராம அதிகாரிகளை நீக்கத்தக்க வகையில் தான் அவர்கள் இருக்கிறார்கள். அன்றைக்கு அவர்களைப் பதவியில் நியமிக்கிறபோது, அன்றைக்கு ஆட்சியில் இருந்த ஆங்கில ஏகாதிபத்தியம் வரியை வசூல் செய்வதற்கு யாரை அந்தந்த கிராமத்திலே போட்டால் வரியை வசூல் செய்ய முடியும் என்று நினைத்ததோ அவர்களை, அந்தந்த கிராமத்திலே இருந்த ஆதிக்கக்காரர்களை, அந்தந்த கிராமத்திலே இருந்த தனவந்தர்களையெல்லாம் கிராம அதிகாரிகளாக நியமித்தது. நாடு விடுதலை அடைந்த பிறகு நாட்டிலே ஆதிக்க உணர்வு குறைந்திருந்தாலும் கூட, கிராம அதிகாரிகளாக பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து அவர்களுடைய சந்ததிகள் வருகிறபோது, அவர்களிடம் இருந்த ஆதிக்க உணர்வு சற்று குறைந்திருந்தாலும் கூட, முழுமையும் போய் விட்டது என்று சொல்ல முடியாது. இதை உணர்ந்து தான் 1960 ஆம் ஆண்டிலே உச்ச நீதிமன்றம் ஒரு ஜனநாயக நாட்டிலே அரசியல் சட்டத்திற்கு விரோதமாக பரம்பரை பரம்பரையாக கிராம அதிகாரிகளை நியமிப்பது சரியல்ல என்று தீர்ப்பு அளித்திருக்கிறது. 1960 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அது சம்பந்தமான தீர்ப்பு வந்தது. அதையொட்டித் தான் அன்றைக்கு



1981 பிப்ரவரி 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இருந்த வருவாய் வாரியம் 1961 ஆம் ஆண்டு அவ்வாறு கிராம அதிகாரிகளுக்கான காலியிடம் ஏற்பட்டால், அதில் நிரந்தரமாக நியமிக்கக் கூடாது 'லாங் டேர்ம் டெம்பரரி பேசிஸ்' என்கிற அடிப்படையில் நியமிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தாக்கீது அனுப்பியது. நிலைமை தொடர்ந்து இப்படி வந்துகொண்டிருக்கும்போது, 1973 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசு இந்த கிராம அதிகாரிகளுடைய போக்கு சரியில்லை, கொஞ்சம் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இதுபற்றி விசாரிக்க ஒரு நபர் குழுவைப் போட்டது. ஒரு நபர் குழு விசாரணை செய்து கொடுத்த சிபாரிசு இந்த கிராம அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்பது தான். இதை எண்ணிப்பார்த்தும், இன்றைக்கு இருக்கிற நாட்டினுடைய நிலையையும், நாட்டு மக்களுடைய தேவையையும் எண்ணிப் பார்த்தும், ஆதிக்க உணர்வின் வழிவந்தவர்கள் இருப்பதால் இவர்கள் மூலம் மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்ய வேண்டுமென்று அரசு நினைக்கின்ற எண்ணம் நல்லமுறையில் நடைபெற முடியாது என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்தும் தான், இன்றைக்கு முழு நேர, நிரந்தர கிராம அதிகாரிகளைப் போடுவதற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல. நான் இன்னொன்றையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பகுதி நேர கிராம அதிகாரிகள் என்றால், அவர்களுக்கு வேலை நேரம் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் ஊரில் இருக்கலாம், எப்போது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் போகலாம். அலுவல் சம்பந்தமாக பொதுமக்கள் அவர்களை வந்து பார்க்கிறபோது, இப்போது வேறு வேலை இருக்கிறது, போய் பின்னால் வாருங்கள் என்று சொல்லவும் அவர்களால் முடியும். அவர்கள் ஆதிக்கக்காரர்கள் என்று சொல்லும்போது, பெரும் தனவந்தர்கள் என்று சொல்லும்போது, சாதாரண ஏழையெளிய மக்கள் அவர்களிடம் வந்து காரியங்களைச் செய்து தாருங்கள் என்று அவர்களிடம் நிச்சயமாகக் கேட்க முடியாது. பகுதி நேர கிராம அதிகாரிகளாதலால், அவர்கள் எப்போது கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அப்போது தான் அதைக் கொடுப்பார்கள். சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், பிராப்பர்டி சான்றிதழ் போன்றவை சம்பந்தமாக பொதுமக்கள் இவர்களிடம் வர வேண்டியிருந்தது. அதோடு மாத்திரமல்லாமல், 1970-71 ஆம் ஆண்டுகளிலே மனு நீதித் திட்டம் என்கிற திட்டத்தின்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 28

கீழ் கிராமங்களுக்கு அரசு அதிகாரிகள் சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டது. அப்போது வரப்பட்ட மனுக்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், பெரும்பாலான மனுக்களில் இந்த கிராம அதிகாரிகள் எப்படி எப்படி எல்லாம் தவறாக நடந்து கொள்கிறார்கள் என்று பொதுமக்கள் சொல்லியிருந்தார்கள். அந்த மனுக்கள் இன்றைக்குக்கூட இருக்கின்றன. ஏதாவது ஒரு மாவட்டத்திற்கு அல்லது ஒரு வட்டத்திற்கு அந்த அதிகாரிகள் சென்று மனுக்களைப் பெறுகிறார்கள் என்றால், இங்கே உறுப்பினர்கள் குறிப்பிடுகிற எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி, எந்த வட்டமாக இருந்தாலும் சரி, எல்லா இடங்களிலும் அவர்கள் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இது இன்றைக்கு உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வந்த மனுக்கள் அல்ல. 1970-71 ஆம் ஆண்டில் அப்போதிருந்த ஆளும் கட்சியில் நான் இருந்தபோது வந்த மனுக்களாக இருந்தாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு வந்திருக்கிற மனுக்களாக இருந்தாலும் சரி, இருக்கிற மனுக்களில் எல்லாம் குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லியிருப்பது கிராம அதிகாரிகளைப்பற்றித்தான். இது தொடர்ந்து

(பிற்பகல் 3-50)

இருக்க வேண்டுமா நீடிக்க வேண்டுமா என்று இன்றைக்கு ஆராய்ந்து அவர்களை நீக்கிவிட்டு முழு நேர அதிகாரிகள் என்று சொன்னால், காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அல்லது 8 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று சொல்கிறோம். அப்படி இருந்தால், அரசின் மற்ற அலுவலர்களைப்போல அவர்களையும் நாம் கண்காணிக்க முடியும். ஏழைகள், பணக்காரர்கள், ஆதி திராவிடர்கள், விவசாயிகள் அவர்களிடம் செல்கிறார்கள். யார் சென்றாலும், அவர்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு இந்த கிராம அதிகாரிகளுக்கு இருக்கிறது. இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு வளர்ந்துவரும் சமுதாயத்திலே இவைகளெல்லாம் தேவை என்று கருதி இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறது என்பதை என்னுடைய முன்னுரையாகச் சொல்கிறேன்.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment standing in my name;



1981 பிப்ரவரி 28]

"That the Tamil Nadu Abolition of posts of part-time Village Officers Bill, 1981 (L.A. Bill No. 12 of 1981), as passed by the Assembly, be referred to a Select Committee of the house and that following Members be nominated to serve on the Select Committee."

(Names to be given later.)

THIRU D. SANTOSHAM: Sir, I second it.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் தலைவராகிய தங்களின் மூலம் இந்த அரசுக்கு ஒரு வேண்டுகோள் விட கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய நிகழ்ச்சி நிரலில் நேற்றைக்கு அளிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில்—இந்தச் சட்டமுன்வடிவு இன்று நிறைவேற்றப்படுவதாக இடம் பெறவில்லை. காலையிலே நாங்கள் வந்தபோது திடீரென்று இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே கொண்டு வரப்பட்டது. இப்படி அவசர அவசரமாக ஒரு சட்டத்தைக் கொண்டுவரக்கூடாது என்று நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். இந்த இரு அவைகளின் முக்கிய வேலையே சட்டமியற்றுவதுதான். "நாளைக்கு இந்தச் சட்டமுன்வடிவு வருகிறது" என்று அங்கத்தினர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்தால்தான், இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன, நன்மைகள் என்ன, எப்படி அது அமைக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் ஆழமாகச் சிந்தித்து, அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைக்க முடியும். அப்படி கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டால்தான், அரசு நல்லவற்றை ஏற்று, திருத்தவேண்டியவைகளைத் திருத்தியமைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். அதை விட்டுவிட்டு, யார் என்ன சொன்னாலும் நாக்கு மெஜாரிட்டி இருக்கிறது, பாஸ் ஆகிவிடும்" என்ற ஒரு நிலையை அரசு மேற்கொள்ளக்கூடாது என்ற என்னுடைய கருத்தை நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். "அலுவல் ஆய்வுக் குழுவிலே நீங்கள் ஒப்புக்கொள்ளாமல் இருந்திருந்தால் போதுமே. ஏன் இங்கே தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறீர்கள்?" என்று கேட்கலாம். "பெயக் கண்டும், நஞ்சு என்று கண்டும், அதை உண்ட நாகரிகம் பெற்றவர்கள் தமிழர்கள்". (மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் புரியவில்லை என்று சைகை காட்டினார்கள்). மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 28

அமைச்சர் அவர்களுக்கு விளக்கும் நிலையில் சொன்னால், நண்பராக இருக்கும் ஒருவர் நஞ்சு கொண்டுவந்து தந்தால் கூட, அது நஞ்சு என்று தெரிந்து கொண்ட பிறகும் கூட, 'நஞ்சு கொடுக்கிறாயே' குடிக்கமாட்டேன் என்று சொன்னால், அவர் மனம் புண்படும் என்பதால், அவர் கொண்டுவந்து கொடுத்த நஞ்சை உண்டு இறப்பதைப்போல நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அரசு வேண்டுகோள் விடுக்கிறபோது, நாங்கள் அதை மறுத்துச் செயல்படும் நிலையை அரசு உருவாக்கக்கூடாது. இப்போது நாங்கள் நஞ்சுதான் சாப்பிடுகிறோம். ஒரு சட்ட முன்வடிவு என்று வருகிறபோது, குறைந்த அளவு மூன்று நான்கு நாட்கள் எங்களுக்கு அவகாசம் கொடுத்து 'இந்த நாள் விவாதிக்கப்படும்' என்று தெரிவித்து, அப்படித் தெரிவித்தபின் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் கொண்டுவரும் ஒரு நடைமுறையை சட்டமன்ற நடைமுறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், இது ஒரு தேவையற்ற சட்டம். இந்தச் சட்ட முன்வடிவிற்கு இப்போது எந்தவிதமான தேவையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து அது 3 ஆம் தேதியோடு காலாவதியாகின்ற காரணத்தினால், 28 ஆம் தேதி வேகமாக இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்ற அரசு முனைவது தவறு என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அவசரச் சட்டத்திற்கு எந்த விதமான தேவையும் இப்போது இல்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகின்றபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். பகுதிநேர கிராம அதிகாரிகளைக் கொண்டு பணிபுரிவது நாட்டுக்கு நல்லதல்ல என்று சொன்னார்கள். அது ஏழைகளுக்கு நல்லதல்ல, நிர்வாகத்திற்கு நல்லதல்ல என்று சொன்னார்கள் இதில் எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. பகுதிநேர கிராம ஊழியர்களை வைத்துக்கொண்டு இருக்கச்சொல்வதாக அரசு நினைத்தால், அது தவறு. மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதே, பகுதி நேர கிராம அதிகாரிகள் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை ஆராய்வதற்காக திரு. பக்தவச்சலம் அவர்களையும், அப்போது ரெவின்யூ அமைச்சராக இருந்த சிறப்புப்பெற்ற திரு. மாணிக்கவேல் நாயக்கர், திரு. சி. சுப்பிரமணியம் போன்றவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அந்தக் கிராம அதிகாரிகளுடைய பணிமுறைகளை எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்று ஒரு அறிக்கை பெற்று பல சீர்திருத்தங்களைச் செய்தார்கள். 1976-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கிராம அதிகாரிகளுக்கு இருக்கக்கூடிய கல்வித் தகுதிகளை உயர்த்தி, இப்போது



1981 பிப்ரவரி 28] [திரு. ம. சங்கரலிங்கம்]

இருக்கிற கிராம அதிகாரிகள் ஓய்வு பெற்ற பிறகு, புதிதாக நியமிக்கப்படுபவர்களுக்கு என்று சில தகுதிகளை வரையறுத்து அதற்கென்று ஆணை பிறப்பித்து அமுல்படுத்தினார்கள். 1973-லே திரு. வர்கீஸ், ஐ.சி.எஸ். அவர்களை வைத்து one man commission போட்டு கிராம அதிகாரிகளது பணியை எப்படி சீர்திருத்துவது என்று அறிக்கை பெற்று அதன் அடிப்படையிலே 1975-லே ஒரு ஆணை பிறப்பித்து பல சீர்திருத்தங்களைச் செய்து கிராம அதிகாரிகளாக இருந்து யாரெல்லாம் ஓய்வு பெறுகிறார்களோ அதற்குப் பிறகு அந்த இடங்களிலே புதிதாக நியமிக்கப்படுபவர்களுக்கு என்னென்ன கல்வித் தகுதி வேண்டும் என்று நிர்ணயம் செய்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் இந்த மாற்றத்தை விழைந்தது, முறையாகச் செய்தது. அப்படி இருக்கும்போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு, 9—10—1978-லே அவர்கள் தான் இதற்கு நேர்மாறாக கிராம அதிகாரிகள் ஓய்வுபெறும் வயது 55 என்று இருந்ததை 60 என்று கொண்டு வந்தார்கள். நான் சாட்டுகின்ற குற்றம் இந்த அரசு நிர்வாகத்திலே குழப்பம், செயல்படுத்துவதிலே குழப்பம், சுருங்கச்சொன்னால் ஆரம்பத்திலேயிருந்து இறுதிவரையில் குழப்பம். திரு. காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்து முறையான சீர்திருத்தங்களைச் செய்து கிராம அதிகாரிகள் முறைகளைச் செம்மைப் படுத்தியது போல செய்யலாம். 55 வயதிலே ஓய்வு பெறுகிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் பதிலாக புதிதாக வருபவர்களை முழு ஊழியர்களாக வைத்து, 55 வயது முடிந்தவர்களுக்கு பென்ஷன் கொடுத்து இந்த அரசினுடைய எண்ணத்தை, நல்ல முற்போக்குத் திட்டத்தை, புரட்சிகரமான திட்டத்தை ஒரு நெறியான முறையிலே செய்து பாராட்டைப் பெற்றிருக்கலாம். அதைவிட்டு விட்டு, 1978-லே ஓய்வுபெறும் வயது 55 என்று இருந்ததை 60 என்று ஆக்கிவிட்டு, 60 வயதுவரை அவர்களை வேலை பார்க்கச் சொல்லிவிட்டு, கிராமத்திலே யார் சர்வாதிகார ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று அரசு சொல்கிறதோ அவர்களுக்கு மேலும் 5 ஆண்டு காலம் அந்தத் தவறு செய்ய வாய்ப்புக் கொடுத்துவிட்டு, திடீரென்று 25 ஆயிரம் கிராம அதிகாரிகளை ஒரே நாளிலே நீக்கிவிட்டு, ரெக்கார்ட்கள் எல்லாம் இரவோடு இரவாக போலீஸ், தாசில்தார்கள் இவர்களின் உதவியோடு வாங்கிவிட்டு நாங்கள் பெரிய புரட்சி செய்திருக்கிறோம் என்று சொன்னால், இதை புரட்சி என்று எப்படி ஒத்துக்கொள்வது? கிராம அதிகாரிகள் முழு நேரம் பணியாற்ற வேண்டும், முழுநேர அரசு ஊழியர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அரசு நடத்துகின்ற நிலையிலே அவர்கள் இருக்க வேண்டும், சென்ற நிலையிலே சிறப்பாக காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் அவர்கள்

(பிற்பகல் 4.00)

வீட்டில் உட்கார்ந்து கொண்டே சம்பளத்தை மட்டும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறமையின்மை காரணமாக, இந்த அரசை நடத்துகிறவர்கள் நிதானமாகச் செயல்படத் தவறியதன் காரணமாக இந்த நாட்டு வரிப் பணத்திலிருந்து வேலை பார்க்காத பகுதி நேர கிராம அதிகாரிகள் இன்று பிப்ரவரி 28 ஆம் தேதி வரை சுமார் 4½ மாத காலமாகச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு இவர்களுக்கு ஊதியமாகச் செலவாகும் தொகை சுமார் 40 லட்சம் ரூபாய். ஆக இன்று வரை சுமார் ஒன்றரை கோடி ரூபாய் இந்த நாட்டு வரிப் பணத்திலிருந்து இந்த அரசாங்கத்தால் வீணாக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சுமத்த விரும்புகிறேன்.

பணமாவது போகட்டும். கிராமங்களில் சீர்திருத்தமாவது வந்திருக்கிறதா என்றால், இல்லை. கிராமங்களில் கிராம அதிகாரிகள் இல்லை. அதற்குப் பதிலாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையே அந்த வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். 10, 15 கிராமங்களுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போட்டிருக்கிறார்கள். அவர் தினந்தோறும் ஓரிரு கிராமங்களுக்கு மட்டுமே சென்றுவிட்டு மாதந்தோறும் ரூ. 500 பயணப்படி வாங்கிக் கொண்டிருக்கிறார். கிராமங்களில் ஒரு வேலையும் நடைபெறவில்லை. சாதிச் சான்றிதழானாலும் சரி, வேறு எந்தச் சான்றிதழானாலும் சரி, அவர்கள் வழங்குவதில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒருவர் "நான் விண்ணப்பம் போட்டுவிட்டேன், சான்றிதழ் வாங்குவதற்கு இதுதான் கடைசி நாள், தயவு செய்து தாருங்கள்". என்று அவரிடம் கேட்டால், "வேலைக்கு லாஸ்ட் டேட்டோடு நீயும் 'லாஸ்ட்' ஆகிப் போய்விடு". என்று சொல்லுகிறார். வெளிநாட்டில் வேலைக்குப் பணம்கூட கொடுத்துவிட்டேன், எனக்கு விசா சர்ட்டிபிகேட் வேண்டும் என்றால், பெற முடிவதில்லை. இப்படி இன்றைய தினம் கிராம அமைப்பே சீர்குலைந்து கொண்டிருக்கிறது. கிராமங்களுக்குள்ளே அமைச்சர்கள் நல்ல பாதுகாப்போடு, அமைச்சர்களாகவே செல்வதால்





இந்த நிலைமைகள் அவர்களுக்குப் புரியவில்லை என்று கருதுகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாறுவேடம்போட்டு ஒரு கிராமத்திற்குப் போய் அங்கே உள்ள ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் ஒரு சர்ட்டிபிகேட் வாங்கிவிட்டால், நான் ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய நிலைமை இன்றைக்கு கிராமப்புறங்களில் இருந்துகொண்டிருக்கிறது என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேனே தவிர, ஏதோ ஆளும் கட்சியின் மீது குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. முறையாகக் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தை ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் வேகமாகச் செய்திருந்தால், பாராட்டியிருப்போம். அல்லது விவேகமாகச் செயல்பட்டிருந்தால் நாங்கள் பாராட்டியிருப்போம். ஆனால் இந்த இரண்டையும் அவர்கள் செய்யவில்லை. இந்த இரண்டு சொற்றொடர்களும் அல்லாத ஒன்றைத்தான் செய்திருக்கிறார்கள். இதை நான் சொல்லாமலேயே கட்சியாளர்களே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நாங்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து 1956 ஆம் ஆண்டு தமிழகத்தோடு வந்து சேர்ந்தோம். அப்போதே கன்னியாகுமரி மாவட்டத்தின் பகுதி நேர கிராம அலுவலர்கள் இல்லை. அங்கே பணியாற்றிய கிராம அதிகாரிகள் அனைவரும் முழு நேர ஊழியர்கள். ஆனால் இன்றையதினம் ஆட்சியாளர்கள் அவர்களின் உத்தியோகத்தையும் சேர்த்து ஒழித்துவிட்டிருக்கிறார்கள். இது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. எங்களுக்குத் தரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை நான் படித்துப் பார்த்தேன். அதில் ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவி நீக்கச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/80) பற்றிய காரண நோக்க விளக்கத்தில் ஒரு கருத்து சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது "நிர்வாக அவசியத்தை முன்னிட்டும் முழுநேர கிராம அதிகாரிகள் பதவிகளை நீக்குவதென்று கொள்கை ரீதியான முடிவினை அரசு எடுத்தது'. பகுதி நேர கிராம அலுவலர்களை மட்டும்தான் வேலை நீக்கம் செய்தார்கள் என்று நான்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 28

எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "நிர்வாக அவசியத்தை முன்னிட்டும் முழுநேர கிராம அதிகாரிகள் பதவிகளை நீக்குவதென்று கொள்கை ரீதியான முடிவினை அரசு எடுத்தது". என்று. இது ஒரு குழப்பமான நிலையை உருவாக்கியிருக்கிறது. பகுதி நேர கிராம அலுவலர்களையும் ஒழிக்கிறார்கள். அதே நேரத்தில் முழு நேர கிராம அலுவலர்களையும் ஒழிக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இதை 'பிரின்ட்டர்ஸ் டெவிள்' என்றுகூட சொல்ல முடியும். இருந்தாலும் இந்த அரசு இந்தச் சட்டத்தை இவ்வளவு அவசர அவசரமாக நிறைவேற்ற முனைந்ததால், இத்தகைய தவறுகள் ஏற்பட்டன என்றுதான் நான் கருதுகிறேன். ஒரு வாரத்திற்கு முன்போ அல்லது இரண்டு வாரத்திற்கு முன்போ இந்தச் சட்டத்தை அவசரமில்லாமல் அரசு நிறைவேற்றி இருக்கலாம். கூப்பிட்டால் எதிர்க் கட்சிகளான நாங்கள் என்ன வரமுடியாது என்றா சொல்லப் போகிறோம்?

பகுதி நேர கிராம ஊழியர்களை ஒழித்து அந்த இடத்திற்கு முழு நேர கிராம ஊழியர்களை நியமிப்பது என்ற திட்டத்தை அரசு வைத்திருந்தால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே இருந்த முழு நேர கிராம அதிகாரிகளை வேலை நீக்கம் செய்திருக்க வேண்டியதில்லை. இப்போது எல்லோரையும் வேலை நீக்கம் செய்திருப்பதால், "இவர்கள் இடத்தில் எல்லாம் ஆளும் கட்சிக்காரர்களை நியமிக்கவே" இவர்கள் இதனைச் செய்திருக்கிறார்கள் என்று நாங்கள் சந்தேகப்பட வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. நாலு தாலுக்காக்களைக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 க்கும் மேற்பட்ட கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் முழுநேர கிராம ஊழியர்கள். அவர்களையும் இன்றைக்கு வேலை நீக்கம் செய்திருப்பதால் ஒரு பெரிய குழப்பமான அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு என்ன நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். மாவட்ட ஆட்சியாளர்களை விட்டு 'இந்து' போன்ற பெரிய பத்திரிகைகளில் 3, 4 நாட்களுக்கு தொடர்ந்து விளம்பரம் கொடுத்தார்கள். ஒரு நாள் விளம்பரத்திற்கு 'இந்து' பத்திரிகை சுமார் 2,000 ரூபாயாவது வாங்கியிருக்கும் என்று கருதுகிறேன். இப்படி 3, 4 நாட்களுக்கு கிராம ஊழியர்களின் பதவிக்காக விண்ணப்பம் கோரி விளம்பரம் வெளியிட்டார்கள். அந்த விளம்பரக் கணக்கை மட்டும் அரசு இங்கே அவையில் வைத்



1981 பிப்ரவரி 28] [திரு. ம. சங்கரலிங்கம்]

தால் அந்த வகையில் எந்த அளவுக்குப் பெரிய செலவு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் உணர முடியும். அப்படி அறிக்கைவிட்ட பிறகு திடீரென்று மாற்றத்தை அறிவித்தார்கள். அதாவது இந்தக் காலியிடங்கள் அனைத்தும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்தான் நிரப்பப்படும் என்றார்கள். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பேசியதாக நான் பத்திரிகையில் பார்த்தேன். முதலில் அறிவிக்கப்பட்ட முறையில் தவறுகள் நடந்துவிடும் என்று சொன்னதால் அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு இந்த மாற்றத்தை அறிவித்தேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உணர்வை நாங்கள் மதிக்கிறோம். அப்படிப்பட்ட உணர்வு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் இப்போது வர வேண்டும் என்று விரும்புகிறேன்.

கலெக்டர்கள் மூலம் ஆட்களை வேலைக்கு எடுத்தால் தவறு வந்துவிடும் என்று பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் எடுக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னதை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். அதைப் போலவே இப்போதும் இந்தச் சட்டம் நிறைவேறுவது தவறு என்று சொல்லுகிறோம். இதைக் காலதாமதம் செய்யலாம். அவசரச் சட்டத்தைச் சாகவிடலாம். நிதானமாக யோசித்து இன்னும் இரண்டு மாதம் கழித்து பழைய ஆட்களையே போடுவோம். அதில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்து அனுப்புவோம். கல்வித் தகுதியுள்ளவர்களையே எடுப்போம். எவ்வளவு பேர் தேவையென்றாலும் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ரெவின்யூ டிரெயினிங் கொடுத்து நியமிப்போம். பி. ஏ. படித்தவர்களையே போட வேண்டும் என்றாலும் அவர்களையே நியமிப்போம். மாண்புமிகு முதலமைச்சர் முன்பு ஏற்று நடந்ததைப் போல் இப்படி நாங்கள் சொல்வதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்று நடக்க வேண்டும். அத்தகைய நல்லுணர்வு அவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே அவர் இந்தச் சட்டமுன்வடிவை வற்புறுத்தாமல் பின்வலித்துக் கொள்ள வேண்டும் என்றும் இதில் பிரஸ்டீஜ் ஏதுமில்லை என்றும் சொல்லிக்கொண்டு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய பெருந்தன்மையையும் நியாய புத்தியையும் இதன் மூலம் உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்போது எழுந்துள்ள சிக்கல் ஒன்றையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த 24,000 கிராம அலுவலர்களுடைய இடத்திற்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் பப்ளிக் சர்விஸ் கமிஷனையே கேளிக்

கூத்திற்கு ஆளாக்கி இருக்கிறார்கள். இதற்கு முன்பெல்லாம் பப்ளிக் சர்வீஸ கமிஷன் மீது மக்களுக்கு ஒரு நம்பிக்கையும் மதிப்பும் இருந்தது. அது ஒரு 'அட்டானமஸ் பாடி'. அதனுடைய தேர்வுகள் சரியான முறையில் இருக்கும் என்று எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது. இப்போது என்ன நடந்தது என்று பார்த்தால் அது கேலிக்குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் இந்தத் தேர்வுக்கு 3½ லட்சம் பேர் மனு செய்திருக்கிறார்கள். அவர்களை சென்னைக்கு வரவழைத்து தேர்வு நடத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்களையெல்லாம் மாவட்டத் தலைநகரங்களிலேயே தேர்வு எழுத அனுமதித்திருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு என்றால் விடைத் தாள்களை 'சீல்' வைத்து சர்விஸ் கமிஷன் ஆபீசுக்கு அனுப்பி பிறகு அங்கேயிருந்து "ஃபால்ஸ் நம்பர் கொடுக்கப்பட்டு" யாருக்கு எந்தப் பேப்பர் அனுப்பப்பட்டது என்பதுகூட தெரியாத வகையில் அனுப்பி வைத்தார்கள். இதுதான் இது வரை நடைபெற்று வந்த முறை. இப்போது நாகர்கோயிலில் 4 பள்ளிகளில் இந்தத் தேர்வு நடத்தப்பட்டது. அதற்கு பிஷரீஸ் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கலெக்டர் ஆபீஸ் ஹெட் கிளார்க் ஒருவரும் இன் சார்ஜாக இருந்தார்கள். இதன் காரணமாக அவர்களே அங்கே ஒரு 10 பேரைப் போட்டு அவர்கள் தங்களுக்கு வேண்டிய நம்பரைக் கொடுத்து பேப்பரைத் திருத்தி தேவையான மார்க்குகளைப் போட்டுக் கொள்கிற நிலை உருவாக்கப்பட்டது. அந்த அளவுக்கு பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வு கேலிக்கூத்தாகச் செய்யப்பட்டிருக்கிறது. இதை எப்படி பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஏற்றுக் கொண்டது என்பது எனக்குப் புரியவில்லை. ஒன்றை நான் எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சொல்லுகிறேன். இப்போது அந்த 3½ லட்சம் பேர்களும் யார் பின்னாலேயோ ஓடிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது இந்த வேலையை எங்களுக்கு வாங்கிக் கொடுங்கள் என்று எங்களைப் போன்றவர்களை அணுகுகிறார்கள். நாங்கள் சொன்னாலே உங்களுக்குக் கிடைக்கிற வேலையும் போய்விடும் என்று நாங்கள் சொல்வதால் அவர்கள் எந்தக் கட்சியின் பின்னாலே இன்றைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்ல வேண்டியதில்லை. நான் அந்தக் கட்சியின் தலைவர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. இடையில் உள்ளவர்கள் அவர்களின் பெயரைச் சொல்லி பணம் வாங்கலாம்.

(பிற்பகல் 4-10)

அப்படித்தான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என் பெயரைச சொல்லிக் கூட கேட்பார்கள். ஆகவே இதனால் அவமானப் பெயரை சேர்ப்பார்கள் என்று எச்சரிக்க ஆசைப்படுகிறேன்.



ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லாமல் வருவாய்த் துறை அலுவலர்கள் இல்லாமல் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் உள்ள மூன்று உறுப்பினர்கள் உட்கார்ந்து இன்டர்வியூவை நடத்த வேண்டும். இப்படி அரசியல் தலையீடு இல்லாமல் நடத்த இவர்களால் முடியுமா என்றால் முடியாது. ஆகவே ரொம்ப வேகமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டோம் என்று சொன்னால் படுதோல்வியை அடைந்து விடுவார்கள் என்று எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதிலே நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. முதலில் இன்று பகலே நான் ஊருக்குப் போவதாக இருந்தது. ஆனால் நிகழ்ச்சி நிரலைப் பார்த்த பிறகுதான் இது குறித்து என்னுடைய கருத்தைத் தெரிவித்துவிட்டுப் போகலாம் என்று நினைத்தேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, ஊருக்குப் போவது என்பது உறுப்பினருடைய சொந்த விஷயம். ஆனால் இது நம் நாட்டின் சமுதாயத்தினுடைய பிரச்சினை. ஊருக்குப் போவதைத் தள்ளிப் போட்டால் பாதகம் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதுதான் நியாயம் என்று மக்கள் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அந்த உணர்வோடுதான் பேசுகிறேன். நான் மத்தியானமே ஊருக்குப் போவதாக இருந்தேன். இதை மாற்றி மாலையில் போவதாக இருக்கிறேன். இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்று நல்ல முறையிலே சிந்திப்பார் என்ற நல்லெண்ணத்தோடுதான் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். வேகத்தைத் தடுக்க வேண்டும் என்பதல்ல அவருடைய நோக்கம், நல்லதைச் செய்ய வேண்டும் என்பதுதான். ஆந்திர மாநிலத்திலே முழு நேர கிராம அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். கர்நாடகத்திலேயும் அப்படிச் செய்திருக்கிறார்கள். கேரளாவிலும் முழு நேர ஊழியர்கள் இருக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்துவிட்டு வந்து இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஆறு மாதங்கள் ஆனால் என்னவாகும்? அவர்கள் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 20, 25 ஆண்டுகளுக்கு இருந்திருக்கிறார்கள். மேலும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இருந்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு அவர்கள் இருந்தால், உலகம் இடிந்து விழாது. ஆகவே

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 பிப்ரவரி 28

நிதானமாக ஆர அமர ஆலோசனை செய்து சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லி இப்போதுள்ள இந்தச் சட்டத்தால் நாட்டில் உள்ள குழப்பம் மேலும் மேலும் அதிகமாகும் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. த. சந்தோஷம்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கடுமையான மசோதா மீது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆணித்தரமான நல்ல காரணங்களைச் சுட்டிக்காட்டி இதை இப்போது கொண்டு வரக்கூடாது, ஒத்திப் போட வேண்டும் என்று தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் நான் ஏற்றுக்கொண்டு ஆமோதிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள், இந்த மசோதாவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிற திருத்தத்தையும் ஆமோதித்துப் பேச விரும்புகிறேன்:

முதலாவதாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த முறையே ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு பெரிய அடிப்படையான மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாகச் செயல்பட்டு வந்த முறை இது. நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்களுடைய செயலால் மக்கள் பெரிதும் அவதிப்பட்டார்கள் என்று கூறினார்கள். கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்களோடு பழக்கம் உள்ளவன் நான். அவர்களுடைய செயல்களால் மக்களுக்கு எந்தவிதமான இடைஞ்சலும், இடையூறுகளும் வந்ததாக நான் அறியேன். பல நூற்றாண்டுகளாக இருந்த இந்த முறையில் வானம் இடிந்து விழவில்லை, பூமி அதிர்ந்து விழவில்லை. கிராம மக்கள் திருப்திகரமாகத்தான் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய செயல்களால் யாரும் அவதிப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ சில இடங்களில் தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால் பொதுவாக கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்கள் நல்ல முறையிலே செயல்பட்டார்கள் என்று சொல்கிறேன். இந்த ஒரு ஏற்பாட்டை அடியோடு மாற்றி, மிகப் பெரிய, புரட்சிகரமான மாறுதலைச் செய்ய முன்வரும்போது, ஜனநாயக முறையிலே மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, ஆளவிற்கு அவகாசம் கொடுத்துவிட்டு, இந்த அவை உறுப்பினர்களுக்கும் அவகாசம் கொடுத்து ஆர அமர ஆலோசனை செய்து அதன் பிறகு அமுலுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக ஒரே நாள் இரவில் அவசரச் சட்டம் போட்டு நீண்ட காலமாக பயனளித்து வந்த முறையை மாற்றுவது என்பது முற்றிலும் ஜனநாயகத்திற்கு முரணானதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 28] [திரு. த. சந்தோஷம்]

நிர்வாகச் சீர்திருத்தக் குழு 1973-ல் அளித்த அறிக்கையில் இதை ஒழிக்க வேண்டும், மாற்றியமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்திருக்கிறது. அதைத் தான் செய்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 1973 ஆம் வருடத்திய நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை எல்லோரும் மறந்து விட்டார்கள். இப்போது அதைச் சுட்டிக்காட்டி நாங்கள் அந்த மாற்றத்தைச் செய்யப் போகிறோம் என்று சொல்லி திடீரென்று ஒரே நாள் இரவில் செய்வது என்பது ஜனநாயகத்திற்கு முரணானது என்று பொதுவாகச் சொன்னேன். மக்களுடைய கருத்தை நன்றாக மதிக்கவில்லை என்று சொல்லும் அளவிற்கு இதைத் தவறான முறையிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதுவரை பணியாற்றி வந்த கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்கள் எல்லாம் அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள். கிராம மக்களிடையே வேரூன்றி வளர்ந்தவர்கள். பொதுவாக கிராம மக்களிடம் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்று சொல்லும் அளவிற்கு நெருங்கிப் பழகி பாசம் வைத்துத் தங்களுடைய கடமைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது நியமிக்கப் போகும் கிராம நிர்வாக அதிகாரிகள் அந்த மாதிரி மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு நடப்பார்களா என்றால், முடியாது. தாலுக்கா அளவில், மாவட்ட அளவில், தலைமைச் செயலக அளவில் உள்ளதைப்போல "பியூராக்கிரடிக் அப்ரோச்" சோடு— (bureaucratic approach) அதிகாரக் கண்ணோட்டத்தோடு பிரச்சினைகளை அணுகுவார்கள். இப்போது கிராமங்களில் இருக்கும் பாச உறவை முற்றிலும் மாற்றிவிட்டு அதிகாரக் கண்ணோட்டத்தோடு செயல்படும் அதிகார வர்க்கத்தை கிராமந்தோறும் உருவாக்க இருக்கிறார்கள். இது உண்மையிலேயே பயங்கரமான விளைவை ஏற்படுத்தும். சான்றிதழ்கள் வேண்டுமென்றால், கிராம முன்சீப் வீட்டில் காத்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதுவரை கிராம முன்சீப் அந்த ஊரைச் சார்ந்தவர். அவர் கோபமாக இருந்தாலும் கூட, அவருடைய உறவினர்களை, மனைவியைப் பார்த்து விஷயத்தை எடுத்துச் சொல்லி காரியத்தை முடித்துக் கொள்ளலாம். கிராம நிர்வாக அதிகாரிகள் அந்த மாதிரி வளைந்து கொடுப்பார்களா? அந்த அளவிற்கு கிராம முன்சீப் வளைந்து கொடுத்து மக்களை தங்கள் வசம் வைத்துக்கொண்டிருந்த நடைமுறை மாறிவிடும். ஆகவே இந்த மாற்றத்தைச் செய்ய வேண்டியிருந்தாலும், எப்படிச் செய்திருக்க வேண்டும்? நேற்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "changes without tears" என்று குறிப்பிட்டார்கள். யாருக்கும் கண்ணீர் வடித்தல் இல்லாமல், யாருக்கும் மனக்கசப்பு ஏற்படாமல் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அந்த

[திரு. த. சந்தோஷம்] [1981 பிப்ரவரி 28

முறையை இந்த விஷயத்தில் கடைப்பிடிக்காமல் எந்தவித முன்னறிவிப்புமின்றி, திடீரென்று இருபத்தி நாலாயிரம் ஊழியர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் கண்ணீருக்கு ஆளாக்கி வேலையிலிருந்து அனுப்பி விட்டார்கள். இதை changes with unnecessary tears. too much of என்று வர்ணிக்க வேண்டியிருக்கிறது. இந்த முறையில் இதைச் செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. There must be separation of powers.

ஜனநாயகத்தில் எப்போதும் அதிகாரம் ஒரே இடத்திலே குவிந்து கிடக்கக் கூடாது. ஒரே இடத்தில் அதிகாரம் குவிந்து கிடப்பதை நான் விரும்புவதில்லை. அதிகாரம் பிரித்து வழங்கப்பட வேண்டும். There must be checks and balances. ஒரு அதிகாரி எதேச்சாதிகாரமாகச் செயல்படமுற்பட்டால், அதை மற்றொரு அதிகாரியால் தடை செய்ய முன்னேற்பாடு இருக்க வேண்டும். இப்படிப்பட்ட முறையிலே கிராம முன்சீப், கர்ணம் ஆகியவர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தன. வரி வசூலைச் செய்வது, குற்றங்களைப் பற்றி அறிக்கை அனுப்புவது, சான்றிதழ்களை வழங்குவது ஆகிய பொறுப்புக்களை கிராம முன்சீப் கவனித்து வந்தார். கிராம சம்பந்தப்பட்ட நில உரிமை, பதிவேடுகளை வைத்திருத்தல், Field Measurement Book -ஐ வைத்திருத்தல் போன்ற விவரங்களையும், யார் யார் விவசாயம் செய்கிறார்கள், என்னென்ன பயிர்களைப் பயிரிடுகிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் கர்ணம் வைத்திருந்தார். இப்படி இரண்டு பேர்களிடத்திலும் அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தன. இப்போது இந்த இரண்டு பேருடைய அதிகாரத்தையெல்லாம் மொத்தமாக ஒருவர் கையில் கொடுக்கப் போகிறார்கள். ஆதலால் அவர் நிச்சயமாக சர்வாதிகாரியாகச் செயல்படுவார். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், கிராம முன்சீப் ஒரு சர்வாதிகாரி என்று குறிப்பிட்டார். அதைவிட பன்மடங்கு கொடூரமான சர்வாதிகாரியாக வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்கள் இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

இப்போது எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள். இப்போது இருப்பவர்களுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான் என்ன நினைக்கிறேன்? அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? 3½ லட்சம் பேர்கள் மனு செய்திருக்கிறார்கள். இதில் 24 ஆயிரம் பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.



1981 பிப்ரவரி 28] [திரு. த. சந்தோஷம்]

இந்த 3½ லட்சம் பேர்களில் 24 ஆயிரம் பேர்களை எப்படித் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்? இப்போது எழுத்து முறையில் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள். அது திருப்திகரமாக இல்லை என்று சொல்கிறார்கள். இதில் நிச்சயமாக சிபாரிசு இருந்தால்தான், வேலை கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. அப்படித்தான் அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். 24 ஆயிரம் பேர்களுக்கும் சிபாரிசின் மூலமாகத்தான் வேலை கிடைக்கும் என்ற நிலை இந்தத் திட்டத்தின் விளைவாக ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். 3½ லட்சம் பேர்களில் 24 ஆயிரம் பேர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, தயவுசெய்து இந்த அரசு மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தவறான முறையைக் கையாளுகின்றவர்கள், தப்பான விதமாக இந்த வேலையைப் பெற விரும்புகின்றவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்கு நிச்சயமாக செல்வாக்குப் படைத்தவர்கள் பலியாவார்கள். அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அதற்கெல்லாம் இடம் கொடுத்து ஆளும் கட்சி எந்தக் கெட்ட பெயரையும் சம்பாதித்துக்கொள்ள வேண்டாமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்தப் பணிகளைச் செய்து வருகின்றவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாத் தகுதிகளையும் பெற்று, நீண்ட நாட்கள் இந்தப் பணியை ஆற்றி நல்ல பெயர் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் திறமையானவர்கள், நேர்மையானவர்கள் என்றெல்லாம் பெயர் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கும்போது எல்லோரையும் சேர்த்து ஒட்டுமொத்தமாகக் கணக்கு எடுக்கக்கூடாது. அவர்களில் நல்ல திறமையோடு, நேர்மையோடு செயலாற்றுகின்றவர்களுக்காவது இப்போது நடைபெறுகின்ற தேர்வில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்படி முன்னுரிமை உண்டு என்று சொல்லப்பட்டிருந்தால், அதிலே ஓரளவுக்கு நியாயம் இருக்கும். அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லியிருந்தால், பரவாயில்லை. அப்படி இல்லாமல், அவர்கள் எல்லாம் போகத்தான் வேண்டும் என்று சொல்வது நியாயத்திற்குப் புறம்பானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது அப்படி ஒன்றும் அவசரப்பட்டுச் செய்யவேண்டிய காரியம் அல்ல. இதை நிதானமாகச் செய்திருக்க வேண்டும். ஆகவே இதைப்பற்றி ஒரு செலக்ட் கமிட்டி ரிப்போர்ட் பெற்று, அதைப்பற்றி ஆலோசித்துப் பேசி முடிவு செய்யவேண்டிய அவசியம் உள்ள விஷயம் இது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அவசரமான முறையில் கொண்டுவருவது முற்றிலும் ஜனநாயகத்திற்கு முரணானது

என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறிய, ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நானும் ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவினுடைய நோக்கத்தை வரவேற்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு அங்கத்தினர்களுடைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. இந்த மசோதாவிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி, தனிப்பட்ட நபர்கள் என்ற முறையிலே அபிப்பிராயத்தைச் சொல்வதைவிட, எங்கள் கட்சியின் கருத்துப்படி சொல்லும்போது, அந்த கிராம நிர்வாக அமைப்பு, அந்தப் பாரம்பரியம் இன்னும் தொடர வேண்டுமா என்ற ஒரு பார்வையிலேதான் நாங்கள் அணுகிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, இந்தக் காலத்திற்கு ஏற்ப அந்த அமைப்பில் மாற்றம் ஏதாவது செய்ய வேண்டுமென்ற கண்ணோட்டத்தில்தான் செய்கின்றார்கள். இந்த நோக்கத்தோடுதான், கிராம நிர்வாக அமைப்பில், கணக்கு முறையில் திருத்தமாகச் செய்ய இந்த மாற்றங்களைச் செய்கிறார்கள். இன்றைய கிராம நிர்வாக அமைப்பு கடந்த 200, 250 வருடங்களாக இருந்து வருகிறது. அந்தக் காலத்தில் போலீஸ் ஸ்டேட்டாக இந்த நாடு இருந்த காலத்தில், அந்த அமைப்புகள் தேவைக்கு ஏற்ப அமைக்கப்பட்டன. ஆனால் இன்று ஒரு 'வெல்பேர் ஸ்டேட்' என்ற கருத்துப்படி, அந்த அமைப்புகள் முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றன. அந்த முறையிலேதான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம். சொல்லப்போனால் கிராமப்புறங்களிலே இப்போது இருக்கின்ற கிராம அமைப்பின் மூலமாகத்தான் நிலப் பிரபுக்கள் நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்கிறார்கள், தங்கள் நிலையை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் அவர்கள் வசதியாக இருக்கிறார்கள். இந்த கிராம நிர்வாக அமைப்புக்கள் அப்படித்தான் அமைந்திருக்கின்றன. அந்த கிராம அதிகாரிகள், அங்கே இருக்கக்கூடிய அனைவரையும் நிலப்பிரபுக்களாகத்தான் கணக்குக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த கிராம நிர்வாக அமைப்புகள் ஒரு குறிப்பிட்ட பாரம்பரியத்தோடு வளர்ந்து வந்திருக்கின்றன. ஒரு பாரம்பரியத்தோடு ஒரு சுமை சமுதாயத்தை வளர்த்திருக்கிறது என்பதைத்தான் பார்க்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் அவர்கள் கிராம அதிகாரிகள் மாமன், மச்சான் என்ற முறையில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான்கூட பார்த்திருக்கிறேன். கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை மக்களுடைய வளர்ச்சிக்காக,



அவர்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய சட்டங்கள் வந்த காலத்தில், அந்தக் கிராம நிர்வாக அமைப்பில் அந்த அதிகாரிகள் எப்படிச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்த்தோம். 1952-ல் சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வந்திருக்கிறது. அந்தச் சாகுபடியாளர்கள் யார் என்று கண்டு பிடிக்கச் சொன்னால், அந்த கிராம அதிகாரிகள், கணக்குச் சொல்லும்போது, அப்படிப்பட்ட சாகுபடியாளர்கள் கணக்கில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள்தான் இருந்து வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அவர்கள் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகத்தான் இருந்திருக்கிறார்கள். சாகுபடியாளர்கள் பலனடைய முடியாமல் இருப்பதற்குத்தான் இந்த அமைப்புகள் இருந்திருக்கின்றன. அவர்களின் கணக்கு அடிப்படையிலே சாகுபடியாளர்கள் இல்லை. எல்லோரும் நிலப்பிரபுக்கள்தான் என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். சாகுபடியாளர்களை அவர்கள் வாழ விடாமல் செய்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, இந்த முறையிலே பழுது இருக்கிறதா இல்லையா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் தனி நபர்களுக்குள்ளே போகவில்லை. இந்த அமைப்பு கிராமப்புறங்களில் உள்ள ஏழைகளுக்கு, அவர்களுடைய பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டதாகச் செயலாற்றியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகு, கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழைகளுக்காகச் சட்டங்கள் வந்தபோது, அவைகளை நிறைவேற்றுவதற்கு இவர்கள் உதவி செய்தார்களா? அவர்கள் உதவி செய்வதற்குப் பதிலாக, அவர்கள் அடங்கலையே மாற்றி விடுகிறார்கள். யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் என்று வரும்போது, சர்வே என்று வரும்போது, யார் நிலத்தை யாருடையது என்று சொல்வது, எந்த நிலத்தை எப்படி மாற்றுவது என்ற அளவில்தான் செயல்பட்டார்கள். அதற்குக் காரணம் நிலப்பிரபுக்கள் மட்டுமல்ல, இந்தக் கிராம நிர்வாக அமைப்புதான் என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்களும் ஏழை மக்களோடு சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் நிலப்பிரபுக்களோடு சேர்ந்து, அவர்களிடத்திலேயே பழகிப் பழகி, அவர்களோடு சேர்ந்து நின்று நின்று, அவர்களோடு ஒருவராகப் பழகி, அந்தப் பழக்கத்தையும் பாரம்பரியத்தையும் கொண்டு வந்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நோக்கிலே கிராம நிர்வாக அமைப்புகள் மாற்றப்பட்டு ஏழைகளுக்கு நன்மை செய்ய இருக்கிறார்கள். இதையே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள். அது மாற்றப்பட வேண்டுமென்பதை ஒத்துக்கொண்டார்கள். பகுதி நேரமாக, கிராம அதிகாரியாக இருப்பவர்கள் முழு நேர ஊழியர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 பிப்ரவரி 28

அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. இப்போது அது மாற்றப்பட்டிருக்கின்றது. அந்தக் காலத்தில் போலீஸ் ஸ்டேட்டாக இருந்தபோது, கிராம அதிகாரிகள் வரி வசூல் செய்யத்தான் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இன்று ஒரு 'வெல்பேர் ஸ்டேட்' என்ற அளவில் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவி செய்யக்கூடிய அளவில்தான் இந்தக் கிராமப்புற அமைப்புகள் மாற்றப்பட்டிருக்கின்றன என்ற பார்வையிலே நாம் பார்க்க வேண்டும். அரசாங்க ஊழியர்களைப்போல் அவர்களை முழு நேர வேலை செய்யும் ஊழியர்களாக மாற்றும் ஒரு முறையாக இருக்கிறது. இது வரவேற்கக்கூடிய ஒன்று என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதாவது இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கின்ற உத்தியோகஸ்தர்கள் எப்படி இருக்க வேண்டும்? கிராமப்புறங்களிலே இருக்கின்ற அதிகாரிகள் மேல் மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளின் கீழ் சில விதிமுறைகளுக்குட்பட்டு செயல்பட வேண்டும். அப்படி இருந்தால், மேற்கொள்ளவேண்டிய காரியங்களில் அவர்கள் கவனம் செலுத்த முடியும். கிராம அதிகாரிகளாக இருப்பவர்கள் பகுதிநேர ஊழியர்களாக இருந்தால், அவர்கள் எந்தவிதமான கட்டுப்பாட்டுக்குள்ளும் இருக்க முடியாது. அப்படி ஒரு கட்டுப்பாட்டுக்குள் விட்டு இருந்தால், அந்தக் கோடிக்கணக்கான மக்கள், விவசாயிகள் இப்படி கஷ்டப்பட்டிருக்க மாட்டார்கள். இதை அரசு சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. கிராஸ் ரூட்டிலே இருக்கக்கூடிய அவர்கள் மேல் மட்ட அதிகாரிகளுக்குப் பொறுப்பு சொல்பவர்களாக இருப்பார்கள். அவர்களை 24 மணி நேரமும் பொறுப்புள்ள அதிகாரிகளாக ஆக்கியிருக்கிறார்கள். ஒரு பகுதி நேர ஊழியராக இருந்தாலும், அவரை ஒரு கட்டுப்பாடு இல்லாத உத்தியோகஸ்தராக வைத்திருப்பது சரியாக இருக்காது. ஆகவே அவர்களை முழு நேர ஊழியர்களாகச் செய்தால்தான், அந்த அமைப்பு சரியாக இயங்க முடியும் என்ற அளவுக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்தக் கண்ணோட்டத்தோடுதான் இதைச் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவர்களை 'மினிஸ்ட்டிரியல் சர்வீஸ்-'கீழ் கொண்டுவரப் போகிறார்கள். அவர்கள் சர்க்கார் ஊழியர்களாக மாறப்போகிறார்கள். அந்த முறையிலேதான் அவர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றிக்கொண்டு வர வேண்டும் என்பதற்காகச் செய்கிறார்களே தவிர வேறல்ல. அந்த அளவிலேதான் நான் இதை வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது 55 என்பதை 60 ஆக்கி, அதற்குப் பிறகு.



1981 பிப்ரவரி 28] [திரு. ஆ. நல்லசிவன்]

(பிற்பகல் 4-30)

இப்போது அவர்களுக்கு வேலையில்லை என்று ஆக்கியிருப்பதை ஒரு குறையாகச் சொல்லுகிறார்கள். அரசு அப்படி, இப்படி என்று தட்டுத் தடுமாறி ஒரு சரியான நிலைக்கு வரும்போது ஏன் அதை ஆதரிக்க மாட்டேன் என்று சொல்லுகிறீர்கள்; 55 வயது என்பதை 60 என்று ஆக்கியதே தப்பு. அதற்குப் பிறகு அவர்களை வைத்துக்கொண்டிருப்பது சரியில்லை என்ற முடிவிற்கு அரசு வந்து, 'Stumbling into the Correct thing' என்னும்போது, அதை ஆதரிக்க வேண்டாமா? பார்ட்-டைம் ஊழியர்களை எடுப்பது சரி என்று நாம் வரவேற்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். அதை வரவேற்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குள்ள அமைப்பு 'Susceptible to the influence of the rural rich' என்ற அளவிற்குத்தான் இருக்கிறது. அதுதான் உண்மை. செல்வந்தர்கள் செல்வாக்கை மீறிப் போக முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் நவீன கல்வி கற்று, ஒரு கிராஜுவேட்டோ, பி.யு.சி. படித்தவரோ தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆர்.ஐ.யாக தாசில்தார்கீழ் கிராமங்களுக்குச் செல்லும்போது, நவீன காலத்தில் ஏற்பட்டிருக்கிற ஜனநாயகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் கிராமங்களின் சமுதாயக் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் செயல்பட முடியும். அந்த நிலையில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்த சிக்கல்கள் இல்லாமல், அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரியாக, கிராம அதிகாரிகள் செயல்பட வாய்ப்பு இருக்கிறது. 'True teachers of the tradition'—பாரம்பரியப் பிடிப்பு இருக்கிறதே அதையும் மீறி ஜனநாயக ரீதியான கண்ணோட்டத்தோடு அரசாங்க அதிகாரிகள் பணியாற்றுவார்கள். அரசாங்க அதிகாரிகளிடமுள்ள குறைகளைப் பற்றிப் பேசலாம். ஆனால் பார்ட்-டைம் அதிகாரிகளை மாற்றுவதை ஆட்சேபிப்பதோ, படிப்படியாகக் கொண்டு வரலாமென்று சொல்லுவதோ கூடாது. இன்றைக்கு அவர்கள் 24,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் 55, 60 வயதான பிறகு போக வேண்டுமென்று சொன்னால், எவ்வளவு வருடங்களாகும்? குறைந்தது இன்னும் 30 ஆண்டுகளாகும். எனவே புல்-டைம் ஆபீசர்களாக இவர்களை மாற்ற வேண்டுமென்று சொல்லும்போது, அதைப் படிப்படியாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பல வருஷங்களாகும். இது அவசியம், தேவை என்று கருதும்போது, அதை உடனடியாக, மொத்தமாகக் கொண்டு வருவதுதான் நல்லதென்பதால், அரசின் ஏற்பாட்டை நான் வரவேற்கிறேன்.

இந்தப் பதவி நீக்கம் காரணமாக இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலையில்லாமல் போகிறது என்ற பிரச்சினையைத் தவிர ஜனங்களிடையே 'ரீஆக்ஷன்' வரவேற்பளிப்பதாகத்தான் இருக்கிறது. இதை வரவேற்று

வெடி போட்ட கிராமத்தைக்கூட எனக்குத் தெரியும். அரசியல் கட்சிக்காரர்களல்ல, சாதாரண மக்கள், கிராம நிர்வாகத்தின் பாரபட்சம் காரணமாக அவர்களின் உள்ளுணர்வு, இவர்கள் நீக்கப்பட்டதற்கு எந்தவித எதிர்ப்புமில்லை. சில இடங்களிலே இதை வரவேற்று வெடி போட்டார்கள். அரசியல் கட்சிக்காரர்களும், மற்றவர்களும் இத்தனை ஆயிரம் பேர்களுக்கு வேலை போகிறதென்று எண்ணிப் பேசுகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களிலுள்ள மக்களின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது யதார்த்தமான உண்மை. மனிதாபிமானப் பிரச்சினை ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை இல்லை என்பதுதான். இன்னொன்று வாரிசு முறை. வாரிசு முறை ஜனநாயகத்தில் கூடாதென்று சொல்லும்போது, தொடர்ந்து இதில் வாரிசுகளுக்கு ஏன் கொடுக்க வேண்டுமென்ற பிரச்சினை வருகிறது. வாரிசு முறையிலே கிராம நிர்வாகம் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது அந்த வாரிசு முறை அடிபடுகிறது என்பதாலும் நான் இதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் அரசாங்கம் சொல்லக்கூடிய நவீன நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முழு நேர ஊழியர்கள் தேவை என்பதால், அவர்களை நியமிப்பதற்காகவும் நான் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். புதிய அலுவலர்களை நியமிக்கும்போது, அரசியல் செல்வாக்கு அதில் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அதற்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம்தான். எதிர்க் கட்சிக்காரர்களிடமே சிபாரிசுக்கு வரும்போது, ஆளும் கட்சிக்காரர்களிடம் சிபாரிசுக்கு வருவதில் ஆச்சரியமில்லை. எனவே பாரபட்சம் காட்டாமல் அரசு விழிப்பாக இருக்க வேண்டும்.

வேலை இழந்தவர்களுக்கு ஆரம்பத்தில் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு அரசு ஒத்துக் கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஒரு வருட சர்வீசுக்கு அரை மாதச் சம்பளம் என்று போட்டிருக்கிறார்கள். 'இன்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்'-படி ஆட்குறைப்பு செய்யும்போது, 'ரெட்ரின்ச்மென்ட்' செய்யும்போது எப்படி நஷ்டஈடு தர வேண்டுமென்பதற்கு ஷரத்து இருக்கிறது. ஒரு வருட சர்வீசுக்கு அரை மாதச் சம்பளம் என்று இருக்கிறது. அந்த ஒரு சலுகை மட்டும்தான் இவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, ஒரு பேக்டரியில் வேலை செய்யும் தொழிலாளிக்கு இதைவிட அதிகச் சலுகைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆட்குறைப்பு செய்தால் 1 வருடத்திற்கு அரை மாதச் சம்பளம். அதோடு ஐந்து வருடங்கள் பூர்த்தி பண்ணியிருந்தால், ஒரு வருட சர்வீசுக்கு அரை மாத கிராஜுவட்டி என்று தரப்படுகிறது. 5 வருடங்கள் பூர்த்தி செய்த இன்டஸ்டிரியல் ஒர்க்கருக்கு ஒரு வருட சர்வீசுக்கு அரை மாதச் சம்பளம்





ஆட்குறைப்பு நஷ்டஈடும், ஒரு வருட சர்வீசுக்கு அரை மாதச் சம்பளம் கிராஜுவட்டியும் என்று ஒரு வருட சர்வீசுக்கு 1 மாதச் சம்பளம் தரப்படுகிறது. அவர்கள் வேலையை விட்டுச் செல்லும்போது, பி.எப். பணம் பெறுகிறார்கள். ஒரு பஞ்சாலைத் தொழிலாளிக்கு 20,000-லிருந்து 30,000 ரூபாய்வரை பி.எப். பணம் கிடைக்கும். அதாவது ஆட்குறைப்பு நஷ்டஈடும், கிராஜுவட்டி பணமும் போக, 20,000 அல்லது 30,000 ரூபாயோடு போவார்கள். உள்ளபடியே கிராம அதிகாரிகளாக நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இருப்பதன் காரணமாக, அவர்களுக்குக் கொடுக்கும் நஷ்ட ஈட்டை மேலும் அரை மாதம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இந்த வேலைக்கு இன்ன கல்வித் தகுதி இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறார்களோ, அந்தக் கல்வித் தகுதியுள்ளவர்களுக்கு வயது வரம்பிலே விலக்கு கொடுத்து, மீண்டும் வேலையில் அமர்த்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு கிராமப்புற நிர்வாகம் பற்றிய அனுபவம் இருப்பதால், அவர்களுக்குப் 'பிரியாரிட்டி' கொடுத்து, அவர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டுமென்று சமீப காலத்திலே சொல்லப்பட்டது. அந்த முறையிலே அந்தத் தகுதியைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. அவர்களுக்குப் 'பிரியாரிட்டி' கொடுப்பதன் மூலமும், நஷ்ட ஈட்டை அதிகரிப்பதன் மூலமும் கசப்புணர்வை அகற்ற முடியும். பொது மக்கள் ஆதரவு இல்லை. அரசியல் கட்சிக்காரர்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள். மனிதாபிமான உணர்வோடு நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகப்படுத்திக் கொடுத்தால், கசப்பு உணர்வுகள் நீங்கப் பிரயோசனமாக இருக்கும். இந்த மசோதா கிராமப்புறங்களில் நல்ல நிர்வாகம் வர உதவியாக இருக்குமென்று கூறி, அமைகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள், அலுவலர்கள் பதவிகளை நீக்குவதற்கான சட்ட முன்வடிவின்மீது ஒருசில கருத்துக்களை நான் தெரிவிக்க விழைகிறேன். அரசு எந்த முன்னோடிக் கருத்தை வைத்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே பதிலளித்தார்கள். ஆதிக்கக்காரர்கள், தனவந்தர்கள் இந்தப் பொறுப்பிலே இருந்துகொண்டு, கிராம மக்களைப் பல்வேறு தொல்லைகளுக்குள்ளாக்கினார்கள் என்று சொன்னார்கள். நான் அறிந்தவரையில், கிராம முன்சீப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களில் தனவந்தர்கள் இருக்கலாம். ஆனால் கிராமக் கர்ணீகர்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இந்த கர்ணீகப் பணியைப் பார்த்து,

அதிலிருந்து வரும் வருவாயை வைத்து, வாழ்க்கையை நடத்தும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில், அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து, அவர்களெல்லாம் ஆதிக்கக்காரர்கள் என்று பெயர் சூட்டி, வெளியேற்றும் சூழ்நிலை ஏற்பட்டதற்காக நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவசரச் சட்டம் 13—11—1980 அன்று வந்தது. அப்படி அந்தச் சட்டம் வந்து, அதனால் வெளியேற்றப்பட்ட பலரை 'மிசா' சட்டம்போல வந்து அது கதவைத் தட்டியது, கதவைத் தட்டியதோடு மட்டுமல்ல அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். பணி போய்விட்டது என்கிற அதிர்ச்சியாலே உயிர் நீத்த கர்ணீகர்கள்

(பிற்பகல் 4-40)

உண்டு. அதுமட்டுமல்ல. முதல் இரவிலே புது மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டி எழுப்பிய சம்பவமும் நடைபெற்றது. நான் சொல்வது கற்பனையல்ல. தர்மபுரியில் நடைபெற்றது. அது உண்மை. இது எல்லோரும் படித்தது. நான் அறிந்தவரையில் அது நடைபெற்றது உண்மை. அவசர அவசரமாக கெடுபிடி செய்து கணக்குகளை-பதவியை பறிக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? ஒரே நாளில் 24 ஆயிரம் கிராம அதிகாரிகளுடைய பதவிகளையும் ஒழித்திருக்கிறார்கள். இதை பார்க்கும் போது பகுதி நேர ஆசிரியர்களுடைய நிலை வருங்காலத்தில் என்ன? அதுபோல் பகுதி நேர அரசு ஊழியர்களுடைய நிலை என்ன? அரசு நினைத்தால், எல்லோரையும் ஒழித்துவிட முடியும். முழு நேர கிராம அதிகாரிகளைக்கூட அரசு நினைத்தால் விலக்க முடியும் என்கிற குறிப்பைக் காணுகிற நேரத்தில் முழு நேர ஆசிரியர்களாக, முழு நேர அரசு ஊழியர்களாக இருந்தாலும் . . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** ஆங்கிலத்தில் அச்சடித்திருப்பது சரியாக இருக்கிறது. தமிழில் அச்சடிக்கும்போது, முழு நேர கிராம அதிகாரிகள் என்று தவறாக அச்சடித்து விட்டார்கள். தயவுசெய்து அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசாமல் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எனக்குள்ள அச்சம் எல்லாம் அரசு எந்தத் தரப்பினரை விரும்பவில்லையோ, யார் யார் அரசு தரப்பினருக்கு சரியில்லையென்று அரசு கருதுகிறதோ அவர்கள் மீது எல்லாம் ஏதாவது குற்றம் சாட்டி, அந்தச் சமுதாயத்தையே ஒழிக்க, இதுபோன்ற அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க இது முன்மாதிரியாக இருக்கக்கூடாது என்பதுதான். நான் இதைச்



சுட்டிக்காட்டுவதை யாரும் தவறாகக் கருத முடியாது. இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கர்ணீகர்களைப் பார்த்து நான் கேட்டேன். 'முன்னாலேயே இதுமாதிரி எங்களுடைய பதவி பறி போகப் போகிறது என்கிற அறிவிப்பு வந்திருந்தால், விஷம் அருந்தி, மூட்டைப் பூச்சி மருந்தைக் குடித்து டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்த 10 ஆயிரம் ரூபாய் சலுகையையாவது குடும்பத்தினர் வாங்கியிருக்க வழி செய்திருப்போம்' என்று உள்ளம் நொந்து பரிதாப நிலையை எண்ணிப் பார்க்கிறோம். நாங்கள் ஒன்றும் சேர்த்து வைக்கவில்லை. இறந்து ஒழிய வேண்டிய நிலையில் இருக்கிறோம்' என்று அவர்கள் சொன்னார்கள். 24 ஆயிரம் பகுதி நேர அதிகாரிகளை ஒழித்து விட்டு, 12 ஆயிரம் முழு நேர கிராம அதிகாரிகளை புதிதாக நியமிக்கப் போகிறோம் என்று அரசாங்கம் சொல்கின்ற இந்தச் சூழ்நிலையில் எனக்கு ஒரு பெரியவர் சொன்ன கதை நினைவுக்கு வருகிறது.

* * *

24 ஆயிரம் பேர்களிடமிருந்து பதவியைப் பிடுங்கி 12 ஆயிரம் பேர்களிடம் ஒப்படைப்பதையொத்திருக்கிறது இந்தக் கதை. இது பொருத்தம் இல்லாதது. எந்த ஒரு சட்டம் கொண்டு வந்தாலும் எந்த சமுதாயமும் பாதிக்காத வகையில் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** உறுப்பினர் குறிப்பிட்ட உதாரணம் 'வல்கர்' ஆக இருக்கிறது. ஆகவே அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இந்த உதாரணம் ஒன்றும் 'வல்கராக' இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்படிப்பட்ட உவமைகள் பெரும்பாலும் மேலவையில் இடம் பெறாமலிருப்பது உகந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் மிக நல்ல உவமைகள் சொல்வதில் ஆற்றல் மிக்கவர். இதை எடுத்துவிட அவரே ஒப்புக்கொள்வார் என்று நான் கருதுகிறேன். உறுப்பினர் குறிப்பிட்ட உவமையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** 24 ஆயிரம் பேரை வெளியே துரத்தி விட்டு 12 ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கப் போகிறதற்கு உவமையாக நான் அதைச் சொன்னேன். அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்பதல்ல பிரச்சினை. எல்லாத் துறைகளிலும்தான் பகுதி நேர ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால்

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

எந்த ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதனால் முன்னாலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்பதை அரசு உணர வேண்டும். அதுதான் நியாயம் கூட. முன்பு பணியில் இருந்தவர்களுக்கு எந்த விதத்திலும் பாதகம் இல்லாமல், இந்த அரசு என்ன தகுதி இருக்க வேண்டுமென்று இப்போது கருதுகிறதோ, அந்தத் தகுதியுள்ள எல்லோருக்கும் மறுபடியும் வாய்ப்பு அளிக்க வேண்டும். அத்தகைய முறையில் உத்தரவாதம் அளித்திருக்கலாம். இப்படி சட்டம் போட்ட பிறகு, சட்டத்திற்குப் பின்னால் ஒரு ஆண்டுப் பணிக்கு அரை மாதச் சம்பள நஷ்ட ஈடு என்று சொல்லியிருப்பதால் ஆயிரம் ரூபாய்கூட ஒரு குடும்பத்திற்கு வந்து சேராது. இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை இந்த அரசு முதலில் அதிகப்படுத்த வேண்டும். பொதுவாக ஒரு கருத்தை நான் இங்கே சொல்ல முற்படுகிறேன். ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அரசிடத்தில் வைத்து, அரசும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையிலே 1978 ஆம் ஆண்டிலே அரசால் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட அந்த நல்ல திட்டம் இன்னும் முழுமை அடையவில்லை. அந்தத் திட்டம் இதுவரை அறிவிக்கப்படாவிட்டாலும் கூட, பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கிராம அதிகாரிகளுக்கு அந்த வகையில் ஓய்வு பெற்றிருப்பவர்கள் என்ற அளவில் அவர்களுடைய கையில் 5 ஆயிரம் ரூபாயாவது தரப்பட்டால், அவர்கள் அவ்வளவாக பாதிக்கப்பட மாட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கு பாரம்பரை வேலை என்கிற முறையில் இந்த வேலையைத் தர வேண்டாம். ஆனால் வேறு வேலைகளுக்குரிய தகுதி அவர்களுக்கு இருந்தால் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று அரசு அறிவித்திருக்கின்ற சலுகை அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் ஒரு சந்தர்ப்பம் அளித்தாலும், அவர்கள் அவ்வளவாக பாதிக்கப்படமாட்டார்கள். அதைத் தவிர மாதந்தோறும் அவர்களுக்கு ஓய்வூதியம் தரலாம். ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் அரசாங்கத்தினுடைய அறிவிப்பைக் கேட்ட மாத்திரத்திலேயே அகால மரணமடைந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுடைய குடும்பத்திற்கு ஏற்கெனவே பணியிலிருந்து கொண்டிருக்கும் போதே இறந்தவர்கள் என்கிற வகையில் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டால் அவர்களுடைய குடும்பங்கள் வாழ வழி பிறக்கும். ஆந்திராவில் பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவிகளை எல்லாம் முழு நேர கிராம அதிகாரிகள் பதவிகளாக மாற்றியபோது; ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் ரூபாய்; 5 ஏக்கர் நிலம், 100 ரூபாய் மாதந்தோறும் ஓய்வூதியம் போன்ற சலுகைகளை அளித்திருக்கிறார்கள். இதையெல்லாம் இந்த அரசும் செய்ய வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவு மற்ற துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற





ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் முன்மாதிரியாக வந்து எந்தவிதத்திலும் அவர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. போராடுகின்றவர்க்கத்துக்கு, கோரிக்கைகளை அரசுக்கு அமைதியான முறையில் தெரிவிக்கின்ற சமுதாயத்துக்கு அச்சுறுத்தும் ஒரு சட்டமாக இதை எப்போதும் பயன்படுத்தக்கூடாது. இன்றையதினம் அவர்கள் அனைவரையும் வெளியே அனுப்பியதோடு மாத்திரமல்லாமல் கடந்த 4½ மாதங்களாக அவர்களுக்கு வேலை செய்து கொண்டிருந்தால் என்ன ஊதியம் கொடுக்கப்படுமோ அதையும் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அந்த வகையில் பல கோடி ரூபாய் புதிதாக வேலைக்கு ஆள் எடுக்க விளம்பரத்திற்காக பல கோடி ரூபாய், இன்றைக்கு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைக்காக பல கோடி ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் அனைவருக்கும் 5 ஆயிரம் ரூபாய் வீதம் தந்தால், 12 கோடி ரூபாய்தான் செலவாகும். இதிலே மற்றொன்று, மாறுதல் செய்யக்கூடிய ஒரு வேலையாக இதை இப்போது மாற்றியிருக்கிறார்கள். முன்பு கிராம அதிகாரிகளாக இருந்தவர்கள் எல்லாம் அந்த கிராமத்திலே பிறந்தவர்கள், கிராமத்திலேயே இருப்பவர்கள், வயல், வரப்பு எல்லாம் தெரிந்தவர்கள். புதிதாக வருகின்றவர்களுக்கு சர்வே எண் தெரிய எவ்வளவு நாட்கள் ஆகும். சப்-டிவிஷன் தெரிய எவ்வளவு நாட்களாகும். இவைகளைப்பற்றியெல்லாம் புரிந்துகொள்ள எவ்வளவு நாட்கள் ஆகுமோ? அதன் காரணமாக அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் எண்ணிப் பார்த்திருந்தால், மாறுதல் செய்யக்கூடிய பணியாக இதை அரசு மாற்றியிருக்காது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். முன்பு இருந்த கிராம அதிகாரிகள் யாராவது கிஸ்தியைச் செலுத்தாவிட்டால் தங்களிடமிருந்த பணத்தை கிஸ்தியாக அரசாங்கத்திற்குச் செலுத்தியவர்களும் உண்டு. பாரம்பரை பெயர் காப்பாற்றப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அப்படியெல்லாம் செய்திருக்கிறார்கள். கிராம கர்ணம்களைப் பொறுத்தவரையில் அவர்களை வேலை நீக்கம் அரசு செய்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் இன்றைக்குப் போராடி சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். எந்தப் பிரிவினர் கோரிக்கையை அரசிடம் எழுப்பி சிறைக்குச் செல்லவும் முன்வருகிறார்களோ அந்தப் பிரிவினரைத்தான் அரசு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமுகம் காண முன்வரவேண்டுமே அல்லாமல் வேறொரு பிரிவினரை அழைத்துப் பேசுவது சரியல்ல. இந்த அரசு அப்படிப்பட்டவர்களை அழைத்துப் பேசுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வருத்தத்தோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாவேன். இதற்குமுன் எந்த அரசாக இருந்தாலும், போராடியவர்களை அழைத்துப் பேசி ஒரு சுமுக நிலைக்கு வருவதை அரசு

வழக்கமாகக் கொண்டிருந்தன. அந்த நிலை இன்றைய நம்முடைய அரசிடம் இல்லை. பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னதை நான் இங்கே எடுத்துச் சொல்வதை பெருமையாகக் கருதுகிறேன். "கோரிக்கை யாரிடமிருந்து வருகிறது என்று நான் பார்க்க மாட்டேன், கோரிக்கையினுடைய நியாயத் தன்மை என்ன?" என்பதைத்தான் பார்ப்பேன் என்று சொன்னார். அண்ணா வழியில் வந்த அரசு என்று சொல்கிற இந்த அரசு கோரிக்கைகள் எந்தப் பிரிவினரிடமிருந்து கிடைக்கப்பெற்றாலும், அவர்கள் குறைகள் சுட்டிக் காட்டினாலும், அவர்களையெல்லாம் எதிரிகளாகக் கருதுகின்ற போக்கையும் வேறொரு பிரிவினரை அழைத்துப் பேசுகின்ற போக்கையும் உடனே மாற்றிக்கொள்ள வேண்டும். வேலை பறி போய் வயிற்றுக்கு இல்லையென்று கோரிக்கையை வைத்துப் போராடியவர்கள் இன்றைக்கு சிறைச்சாலைகளிலே வாடுகிறார்கள். ஏதோ மாதந்தோறும் 175 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டு வேலை செய்து கொண்டிருந்தோம், அதையும் பறித்து விட்டார்களே, மாற்று வேலைகூட தரவில்லையே என அவர்கள் கேட்கிறார்கள். உங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும், நஷ்ட ஈடு இந்த இந்த வகையில் தரப்படும் என்று அவர்கள் மனநிறைவு கொள்ளும் வகையில் கோரிக்கைகளை வைத்துப் போராடியவர்களை இந்த அரசு அழைத்து இப்போதே பேசுவது இந்த அரசின் கடமை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

இந்த நிலைமைகளிலே வருங்காலத்திலே நியமிக்கப்படுபவர்கள் மட்டும் எப்படி இருப்பார்கள்? ஏற்கெனவே இருந்தவர்கள் மீது ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுகள் இருந்தன, பெட்டிஷன்கள் வந்தன, ஒரு நபர் ஆணைக்குழு பரிந்துரை செய்தது என்று சொன்னால், இப்படி மாற்று ஏற்பாடு செய்யாமலேயே செய்துவிடுங்கள் என்றா அக்குழு சொன்னது? அவர்கள் தவறு செய்தார்களேயானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கலாமே தவிர ஒட்டு மொத்தமாக அவர்களைக் கேவலப்படுத்தும் விதத்தில் நடவடிக்கை எடுத்திருக்கத் தேவையில்லை. எனவே, இந்த நிலை, இந்த அவசரச் சட்டம் வந்த நிலை, பகுதி நேர கிராம அதிகாரிகளை ஒழித்த நிலை மற்ற துறைகளிலேயும் பரவுமோ என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் தரவேண்டும். இனிமேல் அதிகாரிகள் இப்படி நீக்கப்படும்போது அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தந்துவிட்டு நீக்கும் முறை வேண்டும் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவுபற்றி இன்னும் தெளிவாக மேலும் கருத்துக்களை எடுத்து வைத்து வாதிடும்



பொருட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்தபடி, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அவசரச் சட்டம், அவசர கோலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வில்லேஜ் ஆபிசர் என்ற புதிய பெயரைச் சொல்லி, ஆண்டாண்டு காலமாக அந்தத் தொழிலிலே ஈடுபட்டு, கிராம மக்களோடு ஒன்று சேர்ந்து, கிராம மக்களின் அன்றாட காரியங்களில் எல்லாம் அவர்களுடைய உறவினர்கள் போல வேலை செய்தவர்கள் இந்த கிராம அதிகாரிகள். அப்படிப்பட்டவர்களை திடீரென்று ஒரே நாளிலே ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்து நீக்கியது ஜனநாயகத்துக்கு விரோதமானது. ஜனநாயகத்துக்கு விரோதமான காரியம் இது. எப்படி இருந்தாலும் இந்தச் சட்ட முன்வடிவை அரசு நிறைவேற்றப் போகிறது. அப்படி நிறைவேற்றும்போது, எப்படிச் செய்ய வேண்டுமென்று ஒருசில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் வில்லேஜ் ஆஃபிசர்களாக வருவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிலே 18 சதவீதம் கொடுக்க வேண்டும். 18 சதவீதம் அவர்களுக்குக் கொடுத்தால்தான், நாம் ஏதோ சீர்திருத்தம் செய்கிறோம் என்று சொல்வதற்குப் பொருள் இருக்கும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு 40 வயதுக்கு மேற்படாமல் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை உயர்த்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 45 வயது என்று வரம்பை உயர்த்தி அறிவிக்க வேண்டும். இந்த அவசரச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வராமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி தீர பரிசீலனை செய்து அதன் பிறகு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு பல ஆண்டு காலமாக தீர ஆலோசிக்கப்பட்டு, சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த மாநிலத்தினுடைய அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட எல்லா அரசியல் கட்சிகளும், அல்லது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் அத்தனை பேரும் நிர்வாகச் சீர்திருத்தம் தேவை என்பதை உணர்ந்து, அவ்வப்போது பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்ததோடு அதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வழிகாட்டியிருக்கிறார்கள். பொதுவாக நாம் பெறுகின்ற அனுபவம், நாம் ஏற்கெனவே எப்படிச் செயல்பட்டோமோ அதைவிடச் சிறப்பாகச் செயல்படுவதற்குத் துணை புரியும். ஆனால் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 28

சட்ட முன்வடிவைப் பார்க்கும்போது, கொஞ்சம் கொஞ்சமாக ஏற்கெனவே கிடைத்திருந்த நல்லவைகளை யெல்லாம் எப்படிக் கெடுப்பது என்ற அளவிலே தான் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது என்று கருதும் அளவுக்கு இருக்கிறது. காரணம் ரெவின்யூ துறையினுடைய, வருவாய்த் துறையினுடைய ஆணிவேராக அமைந்திருக்கிற அடித்தளத்தைப் பொறுத்த ஒரு சட்ட முன் வடிவு இது. இதனை வெறும் பணியாளர்கள், ஆட்சியாளர்கள் என்ற நிலையிலே கருதாமல், இந்த நாட்டினுடைய நிர்வாக இயந்திரத்தினுடைய அடித்தளம் எப்படி அமைந்திருக்கிறது என்பதை மனதிலே கொண்டு, அவர்களுடைய பல்வேறு பணிகள் இந்த நாட்டுக்கு அந்தப் பணிகளின் மூலமாக, கிராம அலுவல்கள், பதவிகள் மூலமாக என்னென்ன செய்திருக் கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்ட ஒரு சட்ட முன்வடிவு வந்திருந்தால், இவ்வளவு வேகமாக, இவ்வளவு அவசரமாக, இவ்வளவு முழுமையற்றதாக வந்திருக்க முடியாது. காரணம் ஏதோ கிராம அதிகாரிகளுக்கு வசூல் மட்டும் தான் வேலை என்று தவறி எண்ணி அந்த உணர்வின் அடிப்படையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அரசாங்கம் தருகின்ற கடன்களையெல்லாம் திரும்ப வசூல் செய்வது, நிலவரி, தண்ணீர் வரி போன்றவைகளை வசூல் செய்வது போன்ற பணிகள் மட்டும்தான் இந்தக் கிராம அதிகாரிகளுடைய பணி என்ற நினைப்பு அரசுக்கு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மெத்தத் தெரிந்தவர். சட்டமன்ற, நாடாளுமன்ற அனுபவம் நிறைய பெற்றவர். ரெவின்யூ துறையிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு பலவற்றைத் தெரிந்து கொண்டவர். அவரும் கூட இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்னாலே கிராம அதிகாரிகளுடைய அடிப்படைப் பணிகளைப் பொறுத்தவரையில், முழுமை யாகத் தெரிந்துகொள்ளவில்லையோ என்று நான் அஞ்சுகிறேன், காரணம் இது வெறும் அரசாங்கத்தினுடைய நிலுவைகளை அல்லது வரவேண்டிய வருவாயை வசூல் செய்து தருகின்ற இயந்திரம் மட்டும் அல்ல. வேண்டு மானால் அதுவும் ஒரு முக்கிய பணியாக இருந்திருக்கலாம். ஆனால், அதைத் தாண்டி நின்று அரசாங்கத்திற்கும் கிராமத்திற்கும் இடையே அரசாங்கத்திடம் நேரடியாக வர முடியாத ஏழையெளியவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இருக்கின்ற தொடர்பாக, பாலமாக இந்த அமைப்பு இருந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்வதானால், அந்தந்த கிராமத்திலே வெளி ஆட்கள் வந்து தங்கினால், அந்தக் கிராமத்திற்கு சம்பந்தம் இல்லாதவர்களைப் பற்றிய (ஆங்கிலத்திலே சொன்னால் Foreigners ) பட்டியலை கிராம அதிகாரிகள் வைத்திருக்க வேண்டும். ... பெரிய கொள்ளைக்காரர்கள் மிகவும் சாதாரண வேடம்



1981 பிப்ரவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று சொன்னால், இந்தக் கிராமத்திலே யார் வேற்றாள் வந்திருக்கிறார்கள், என்ன காரியத் திற்காக வந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னால் அதற்கான ரெஜிஸ்டர் மெயின்டெயின் செய்வது அவர்கள் தான். கிராமத்திலே ஒரு சாவு (unnatural death) தூக்குப் போட்டுக் கொண்டு செத்தால், அல்லது வீட்டுக்கு உள்ளேயே குடும்ப விரோதம் காரணமாக அடித்து சாகடித்திருக்கலாம் என்று சொன்னால், அல்லது கிராமத்திலே ஏற்பட்ட மோதல் காரணமாக செத்திருக்கலாம் என்று சொன்னால், அதுபற்றி தகவல் கொடுப்பதற்கு ஒரு இயந்திரம் கிடையாது. கிராமத்திலிருந்து காவல் துறைக்கு தகவல் கொடுக்கும் இயந்திரமாக, யாரும் இல்லாத போது கிராமத்திலே நின்று அரசாங்கப் பணி ஆற்ற வேண்டியது கிராம அதிகாரிகள் இப்படிப்பட்ட சாவுகள் நடைபெறுகின்றபோது, காவல் துறைக்கு ஒன்று நீதிமன்றத்திற்கு ஒன்று என்று தகவல் கடிதங்கள் அனுப்பி காவல் துறையினர் அங்கே வந்து பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் வரையில் அந்தப் பிணத்தைக் காப்பாற்றி வைத்து அதனுடைய நிலவரங்களை, உண்மை நிலைமையைக் கண்டறிய உதவி செய்வது இந்த கிராம அதிகாரிகள் தான். இன்றைக்கு அவர்களை அகற்றிவிட்டோம். ஒரு கிராமத்திலே 4, 5 சாவுகள், சட்டவிரோதமான சாவுகள் ஏற்பட்டு நடவடிக்கை இல்லாமல், சாட்சியம் இல்லாமல், கிராமப்புறங்களிலே எரித்து அவைகளை முடித்துவிடும் நிலை ஏற்பட்டால், சட்டம் ஒழுங்கு என்னாவது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இதைச் செய்வதற்கு யார் அதிகாரி இப்போது? கிராம அதிகாரிகளை எடுத்துவிட்டோம். நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ மாற்றம் செய்வதுதான் புரட்சி என்று சொன்னால், அந்தப் புரட்சிக்கு யார் குறுக்கே நின்றது? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொல்லியதுபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் எடுத்துச் சொல்லியது போல, இந்த அமைப்பை யாரும் மாற்ற வேண்டாம் என்று சொல்லவில்லை. நிரந்தரமாக, அவர்களே, பரம்பரை பரம்பரையாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அந்தக் கருத்து அடிபட்டுவிட்ட ஒன்று. ஆனால் எப்படி சீரமைக்கப் போகிறோம் என்று சொல்கிறபோது, அந்தச் சீரமைப்பு முறையாகச் செய்யப் பட்டதா என்று சொன்னால், அது முறையில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வேன்.

(பிற்பகல் 5-00)

முறையில்லாமல் செய்தது மட்டுமல்ல, இந்த நிர்வாக இயந்திரத்தையே சீர்குலைத்திருக்கிறார்கள். ஏதோ வெள்ளைக்காரன் காலத்திலிருந்துதான்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 28

இந்த அமைப்பு முறை இருந்ததைப்போல் இங்கே சொல்லப்பட்டது என்றாலும், கிராம அதிகாரிகளைப்பற்றி அர்த்தசாஸ்திரத்திலேயே கௌடில்யர் எழுதியிருக்கிறார். ஆக, இத்தனை ஆயிரம் ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற அமைப்பு முறையை, பல்வேறு மாற்றங்கள் வந்தபோதும் தொடர்ந்து இருந்து வந்த முறையை இன்றைக்கு ஒழித்திருக்கிறார்கள். அரசர்கள் வந்து போனார்கள், இந்து ராஜாக்கள் வந்து போனார்கள். முகலாய மன்னர்கள் வந்து போனார்கள். அதற்குப் பிறகு வெள்ளைக்காரர்கள் ஆட்சியும், காங்கிரஸ் ஆட்சியும் அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சியும் வந்து போயிருக்கின்றன. இப்போது இவர்கள் (அ.இ.அ.தி.மு.க.) ஆட்சி வந்திருக்கிறது. இப்படி பல்வேறு சமுதாய மாற்றங்கள் வந்தபோதும்கூட அந்த நிருவாக இயந்திரம் அதற்கேற்றாபோல் அவ்வப்போது தன்னை மாற்றிக்கொண்டு செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவுக்கு அந்த அமைப்பு மாறி இயங்கவில்லை என்றால் அதை மாற்ற வேண்டியது ஒரு அரசின் பொறுப்பு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு நடந்திருப்பது என்ன? சமுதாயத்தையே சீர்குலைக்கும் வகையில் ஒரு மாற்றத்தை இந்த அரசு செய்திருக்கிறது. வார்த்தைகளை வேண்டுமானால் சுலபமாக அள்ளி வீசிவிடலாம். "ஓகோ! அவர்களெல்லாம் யார் தெரியுமா? நிலப் பிரபுக்களுக்கு துணை போனவர்கள் இந்த ஆட்சியின் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்தவர்கள்" என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். அப்படியானால் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன் "சரி இவர்கள்தான் நிலப்பிரபுக்களுக்குத் துணை போகிறார்கள். சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்தார்கள் என்று சொல்வீர்களானால், இந்த கிராம அதிகாரிகளுக்கு மேலே இருந்த முழு நேர அரசு ஊழியர்களான ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவர்களுக்கு மேலே இருந்த டெபுடி தாசில்தார்களும், தாசில்தார்களும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அரசாங்கத்தின் திட்டங்கள் நிறைவேறாமல் இந்த மணியக்காரர்களும் கணக்குப் பிள்ளைகளும்தான் இருந்தார்கள் என்று சொன்னால், இந்த அரசின் நிர்வாக இயந்திரம் என்ன அந்த அளவுக்குப் பழுதுபட்டா போயிருந்தது? நிலச் சீர்திருத்தங்கள், குத்தகை வாரங்கள் முதலியவற்றையெல்லாம் கணக்கு வைக்கவில்லை என்று சொல்வார்களானால், அவர்களுக்கெல்லாம் இந்த மணியக்காரர்களும் கர்ணங்களும் துணை போய்க் கொண்டிருந்தார்கள் என்றால், இவர்களுக்கு மேலே இருந்தவர்களுக்கு அதில் எந்தப் பொறுப்பும் இல்லாமலா இருந்தது? ஆட்சியாளர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து 3, 4 ஆண்டுகளாகிவிட்டன, அதற்கு முன்னாலே 8, 9



1981 பிப்ரவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

ஆண்டுகளுக்கு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அதற்கு முன்னால் 20, 25 ஆண்டுகளுக்கு காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அப்போதெல்லாம் இந்த கிராம மணியம் மற்றும் கர்ணங்கள் இல்லையா? அவர்களுக்கு மேலே யாரும் பொறுப்பிலே இல்லையா? இன்றைக்குப் பகுதி நேர கிராம ஊழியர்கள் தான் இந்தத் தவறுகளைச் செய்தார்கள் என்று ஆட்சியாளர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால், அப்போதும் முழு நேரப் பணியில் இருந்த இந்த அரசு அதிகாரிகள் எல்லாம் அதற்கு உடந்தையாக இருந்தார்களா அல்லது இந்தத் தவறுகளைக் கண்டுபிடிக்க லாயக்கற்றவர்களாக இருந்தார்களா என்று கேட்க விரும்புகிறேன். அப்படி அந்தத் தவறுகளையெல்லாம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் முழு நேர ஊழியர்களை அதிகப்படுத்துவதால், என்ன லாபம் இருக்க முடியும்?

எதையாவது சொன்னால், உடனே பகுதி நேர ஊழியர்களுக்கு ஐந்து பத்து கொடுக்காமல் சான்றிதழ் பெற முடியாது என்ற நிலை இருந்தது என்று சொல்லப்படுகிறது. உள்ளத்தில் கை வைத்துச் சொல்ல வேண்டும், இன்றைக்கு என்ன நிலை இருக்கிறது? தயவுசெய்து ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் மனந்திறந்து சொல்ல வேண்டும். எந்த ஒரு பஞ்சாயத்து யூனியனிலாவது அல்லது தாலுக்கா ஆபீசிலாவது லஞ்சம் கொடுக்காமல் அல்லது சிபாரிசு சொல்லாமல் பெர்மிட் பெற முடிகிறதா? இந்தத் துறைதான் என்றில்லை. எந்தத் துறையானாலும் இதுதானே நிலைமை. இதில்மட்டும்தான் லஞ்சமும் ஊழலும் என்பதில்லை. நிர்வாக இயந்திரம் எந்த அளவுக்குச் சீரழிந் திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்?

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அந்தப் பிரச்சினைக்குள் நான் இப்போது போக விரும்பவில்லை. ஆனால் அரசுத் தரப்பில் என்ன சொல்லப்படுகிறது என்றால், 1960 ஆம் ஆண்டிலேயே நீதிமன்றம் தீர்ப்பளித்தது, அதற்குப் பிறகு "லாங் டெர்ம் டெம்பாரி பேசிஸ்-ல்" கிராம அதிகாரிகளை நியமித்தோம் என்று குறிப்பிட்டார்கள். அப்படி நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகளிடம் ஏதேனும் சான்றிதழுக்காகப் போகும்போது, "இப்போது முடியாது, அப்புறம் வாருங்கள், பின்னாலே பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி இழுத்தடிக்கிறார்கள், இதனால் சாதாரண மக்களுக்கு உதவி கிடைக்காமல் போய்விட்டது என்று சொன்னார்கள். இந்த கிராம அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பெயர்தான் பகுதி நேர கிராம ஊழியர்களே தவிர, இந்த அரசில் அவர்கள் முழு நேர அலுவலர்களாகத்தான் பணியாற்றிவந்தார்கள். இந்த அரசு அப்படித்தான் அவர்களிடம் வேலை வாங்கியது. அந்த அளவுக்கு அவர்களுக்குப் பல்வேறு வகையான பணிகளை அரசு அளித்திருந்தது. உதாரணத்திற்கு ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 28

சேலம் மாவட்டம் வலசையூர் கிராம முன்சீப் வீட்டின் வாசலில் அரசாங்க அறிவிப்புப் பலகை இருக்கிறது. "பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகம். கிராம மணியக்காரர். எஸ். பி. கந்தசாமி—கிராமம் வலசையூர்—சொக்கம் பட்டி. வேலை நேரம் காலை 10 மணி முதல் 1 மணி வரை. 2 மணி முதல் 5 மணி வரை. ஞாயிறு அரசு விடுமுறை நாள்" இப்படி ஒரு அறிவிப்புப் பலகை அவர் வீட்டின் முன் தொங்குகிறது. அந்த அளவுக்கு எல்லா நேரங்களிலும் அவர் கிராமத்தில் இருக்க வேண்டியிருக்கிறது. இதை எதற்குக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த அளவுக்கு அந்த அதிகாரிகள் கிராமங்களில் எந்த அளவுக்குப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள் என்பதைக்கூட மறந்து விட்டு, இன்றையதினம் இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அதே நேரத்தில் அவர்களின் மீது சேற்றை வாரிப் பூசுவதைப் போல் அவர்களெல்லாம் கிராமங்களில் வேலையே செய்யவில்லை என்று சொல்வது எந்த வகையிலும் சரியில்லை என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் ஒன்றிரண்டு நாட்களுக்கு ஊரை விட்டுப் போக வேண்டும் என்றால்கூட, மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் போக முடியாது. இது தான் உண்மை நடைமுறை. இந்த நிலையில் அவர்களைப் பார்த்து அவர்கள் எந்த வேலையும் செய்யவே இல்லை என்று சொன்னால், அரசினுடைய ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் தாசில்தாரும் அவர்களைச் சரியாக இயக்கவில்லை என்றுதான் பொருள்படும். அந்த அளவுக்கு அரசின் நிரந்தர அரசாங்க இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது என்றுதான் பொருள். இதுபோன்ற சூழ்நிலையில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை இன்னும் அதிகமாகப் போட்டால், எப்படி நிலைமை சீர்திருந்தும் என்று எதிர்பார்க்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

கிராம அதிகாரிகளின் பணிகளில் சீர்திருத்தம் தேவை என்பதற்கு பல்வேறு கருத்துக்கள் பல்வேறு நேரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. திரு. S. S. கோா என்பவர் "டிஸ்ட்டிரிக்ட் அட்மினிஸ்டிரேஷன் இன் இண்டியா" என்ற ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதில் துவக்கத்திலே பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்ட கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

"Administration is meant to achieve something and not to exist in some kind of an ivory towet, following certain rules of procedure and Narcissus-like, looking on itself with complete satisfaction. The test after all is the human beings and their welfare."



1981 பிப்ரவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

அதாவது மக்களுடைய நல்வாழ்வுதான் மனதில் இருக்க வேண்டும். நிர்வாக இயந்திரத்தைச் சீரமைக்கும்போது, அது மக்களுக்காகத்தான் இருக்க வேண்டும் என்ற நினைவு இருக்க வேண்டும். ஆனால் நாம் என்ன நினைக்கிறோம்? "இவர்களெல்லாம் பிற்போக்கு வாதிகள். ஆகவே இவர்களை ஒழிக்க வேண்டும்". இந்த எண்ணம் இந்த ஆட்சியாளர்களைப் படுபாதாளத்தில் தான் கொண்டுபோய் சேர்க்கும். இன்றைக்கு மக்களுக்குச் சான்றிதழ் கிடைக்க என்ன மாற்று ஏற்பாட்டை அரசு செய்திருக்கிறது? மணியம், கிராம கர்ணம் ஆகிய பதவிகளுக்கு அரசாங்கத்தால் மனுக்கள் கோரப்பட்டன. அந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களுக்கு சான்றிதழ் கொடுத்தவர்கள் யார்? ஏறத்தாழ மூன்று லட்சம் மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்று நான் அறிகிறேன். அதில் இரண்டு லட்சத்து அறுபதினாயிரத்திற்கு மேல் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாலும், மேலவை உறுப்பினர்களாலும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகளால் அல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவர் இல்லையே!

திரு. க. இராமமூர்த்தி : இதற்கெல்லாம் தலைவரையோ அமைச்சர்களையோ அணுகுவது நன்றாக இருக்காது என்று விட்டுவிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த அளவுக்கு சான்றிதழ் பெறுவதிலேகூட மக்களுக்குப் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடம் போனால் சான்றிதழ்கள் சுலபமாக செலவில்லாமல் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் தான், சட்டமன்ற உறுப்பினர்களிடம் வருகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். என்னுடைய அனுபவம் என்னவென்றால் நான் ஊரை

(பிற்பகல் 5-10)

விட்டு வரும்போது இருநூறு, மூன்னூறு சான்றிதழ்களுக்குக் கையெழுத்துப் போட்டுவிட்டுத்தான் வருகிறேன். இதற்குக் காரணம் மக்களிடம் உள்ள செல்வாக்கு என்பது மட்டுமல்ல, இவர்கள் மற்றவர்களிடம் இதற்காகப் போனால் பத்து ரூபாய், இருபது ரூபாய் செலவழிக்க வேண்டி வருகிறது. அவர்கள் யாருக்குத் தருகிறார்கள்? அரசு அதிகாரிகளுக்குத்தான் தருகிறார்கள். ஆகவே கிராம அதிகாரிகளைப் பொறுத்த வரையில் இப்படிக் கூறுவது முறையல்ல.

கிராம நிர்வாகத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதைப்பற்றி பல நேரங்களில் பல்வேறு குழுக்கள் மூலமாக, அதிகாரிகள் மூலமாக ஆராய்ந்து அறிக்கைகளை தமிழக அரசு பெற்றிருக்கிறது. அந்த அறிக்கைகளைப்பற்றிச் சொல்லுவதற்கு முன்பு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் கே. என்,

சாஸ்திரி, எம்.ஏ., பி.எச்டி., லண்டன், என்பவர் "Principles of District Administration in India"
என்ற ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். கிராம அதிகாரிகள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைப்பற்றி பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார். அதில்.

"In the villages, there are two officials, headman and accountant. Nomenclatures vary widely in the case of these officials also.

Both the officials were of equal rank and status. Only now, the modern Government is reducing the accountant to a subordinate of the headman party for political reasons and partly for preventing rivalry between them."

ஏற்கெனவே மணியக்காரர், கணக்கப்பிள்ளை ஆகிய இருவரையும் ஒரே நிலையில் வைத்திருந்தார்கள். 1957 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட புத்தகத்தில், வேறு பல சமுதாயச் சூழ்நிலை காரணமாக, அரசியல் சூழ்நிலை காரணமாக, இவர்கள் இருவருக்குள் யார் பெரியவர் என்ற போட்டி வந்ததன் காரணமாக, மணியக்காரருக்கு அடுத்தவர் கர்ணம் என்று வந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

"In a fully competitive system this hoierarchical concept is bound to be correct and sensible"

அதாவது அப்படிச் செய்ததுகூட நியாயம்தான். ஒருவருடைய தலைமையின் கீழ் செயல்பட வேண்டும் என்பது நியாயமான, அத்தியாவசியமான மாற்றம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார். மாற்றம் இப்படி கொஞ்சம் கொஞ்சமாக வந்திருக்கிறது. 1981 ஆம் ஆண்டில் வந்த புரட்சிக் கருத்தல்ல இது. 1951 ஆம் ஆண்டில் வந்த கருத்தல்ல. அதற்கு முன்பே மாற்றம் வந்திருக்கிறது என்பதை நினைவுபடுத்துவதற்காகத் தான் நான் இதைச் சொன்னேன்.

"the headman is in a majority cases the head of the Village Police, a Magistrate, a Civil Judge, the representative of Government in the village"

என்று குறிப்பிட்டிருக்கிறார். கிராமத்தில் காவல் துறையினுடைய அதிகாரி யார் என்றால், கிராம மணியக்காரர். அவர் ஒரு நீதிபதியும் கூட. சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் கிராமத்தில் உள்ளவர்கள் கோர்ட்டுக்குப் போனால், அவர்களுடைய குடும்பமே அழிந்துபோய், நிரந்தரமாகப் பிச்சை எடுக்க வேண்டிய நிலை வரும் என்பதால், நடுநாயகமாக நின்று செயல்பட ஒருவர் தேவை. அந்தப் பொறுப்பிலே அரசாங்கத்தினுடைய பின்னணியோடு, அதிகாரத்தோடு செயல்பட்டவர் கிராம அதிகாரி. காவல் துறை அதிகாரியாக,



மாஜிஸ்ட்ரேட்டாக செயல்படுகிறார். அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக, அரசாங்கத்தினுடைய எக்சிகியூட்டிவ் ஏஜெண்டாக இருந்து அரசாங்கத்தினுடைய நிரந்தர அதிகாரியாகச் செயல்படுகிறார். அது மட்டுமல்லாமல்,
"and the liaison officer between authority represented by the Government and obedience represented by the ignorant whole scattered in the whole tract."
என்றும் குறிப்பிட்டிருக்கிறார். கிராமப்புறங்களில் பல நேரங்களில் என்ன செய்வதென்று யோசிக்கக்கூடிய நிலைமைகள் வருவதுண்டு. இப்போது விவசாயிகள் போராட்டம் நடைபெறுகிறது. அதைப்போல போராட்டங்கள் நடைபெறுகிறபோது, சில சட்ட மீறல்களைச் சமாளிக்க நேரடியாக விவரம் தெரிந்தவர்கள் செல்ல வேண்டிய கட்டாயம் வருகிறது. நம் நாட்டில் எந்த அளவிற்குச் சாலை வசதிகள், இருப்புப் பாதைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். போலீசாரை வைத்துக் கொண்டு அவற்றைக் காத்துவிட நம்மால் முடியாது. ஆகவே "தவறு செய்வது மிகப் பெரிய குற்றம், அதைச் செய்யக் கூடாது" என்று வலியுறுத்துவதற்கு அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே அரசாங்கத்தினுடைய அதிகாரபூர்வமான முழு நேர ஊழியர்களாக கிராம அதிகாரிகள் இருந்து இந்தப் பணியைச் செய்து கொண்டு வந்தார்கள். இதை நிரந்தரப் பணியாளர்களால் செய்ய முடியாது. சம்பளத்திற்கு ஆளை வைத்தால் நிச்சயமாக இதைச் செய்ய முடியாது. அவர் அந்த ஊரைச் சார்ந்தவர் அல்ல என்பது முதல் காரணம், அந்த ஊரைச் சாராத அதிகாரிக்கு ஊர் கட்டுப்படுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும், பல கிராமங்களுக்கு ஒரு அதிகாரி என்று நியமிக்கப் போகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, அவர்கள் யாராலும் இதைச் செய்ய முடியாது என்பதைத் தெளிவாக உணர முடியும். அது மட்டுமல்லாமல், அவர்கள் அடிக்கடி மாற்றம் செய்யப்படுவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமத்திற்கு ஒரு ஆள் என்று சொல்கிறார்கள். 24 ஆயிரம் பேரை வீட்டுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 24 ஆயிரம் பேருக்குப் பதிலாக ஏறத்தாழ ஏழாயிரம் பேரை வேலைக்கு எடுக்கப் போகிறார்கள். 24 ஆயிரம் பேர்கள் ஆற்றிய பணியை ஏழாயிரம் பேர்கள் செய்யப் போகிறார்கள். எப்படி பணியைப் பகிர்ந்து கொடுக்கப் போகிறார்கள் என்பதைப் பார்க்கத்தான் போகிறோம்.

"Combined with these, he has supreme control over innumerable servants who are usually expected to do all the duties under the sun in these tracts. No traveller can sit in the village without his assistance."
என்று குறிப்பிட்டிருக்கிறார். வெளியிலே இருந்து பயணிகள், அந்த ஊரைக்

[திரு. க. இராமமூர்த்தி] [1981 பிப்ரவரி 28

சாராதவர்கள் அந்த கிராமத்திற்கு வர வேண்டுமென்றால், அவர்கள் இல்லாமல் முடியாது. ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஒரு தாசில்தார், மின்சாரத் துறை இன்ஜினீயர் அல்லது வேறு எந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரியும் கிராமத்திற்குள்ளே போய் பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்போது, அவர்கள் தங்குவதற்கு வேண்டிய வாடகை வீட்டை மணியக்காரர், கர்ணம் ஆகியவர்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமத்திலேயே இரண்டு, மூன்று நாட்களுக்கு இருந்து பணியாற்றிவிட்டுப் போக வேண்டிய அவசியம் வரும்போது, அவர்களுக்குச் சாப்பாடுபோட அரசாங்கத் தரப்பிலே யாராவது ஏற்பாடு செய்ய வேண்டும். சில ஊர்களில் யாரும் முன்வர மாட்டார்கள். சில ஊர்களில் தேர்தல் காலங்களில் வாக்குச் சாவடிகளுக்கு அதிகாரிகள் செல்வார்கள். சில ஊர்களில் "அவர்தான் படி பெறுகிறாரே, அவருக்கு நாம் ஏன் சோறு போட வேண்டும்?" என்று சும்மா இருப்பார்கள். இந்த மாதிரியான நேரத்தில் மணியக்காரர், கர்ணம் ஆகியவர்கள் தங்களை அரசாங்கத்தின் பிரதிநிதியாக நினைத்துக் கொண்டு, "சாப்பிடாமல் போவது ஊருக்கு மரியாதைக் குறைவு" என்று சொல்லி உணவு வழங்க ஏற்பாடு செய்வார்கள். சாப்பிடாமல் திரும்பப் போய்விட்டால், பிறகு தாசில்தாருக்கு, ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்குமே என்று கருதிச் செய்வார்கள். இப்படிப்பட்ட பணிகளை நிறைவு செய்கின்ற வகையிலே மாற்று ஏற்பாடுகள் இருக்க வேண்டும். அதற்காகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"In other words, taking all in all. the headman of the village is friend, philosopher and guide on one side and impressive master on the other, at the furtherest point of Government"—

அரசாங்கத் தரப்பிலேயிருந்து பார்க்கிற ஒரு நண்பனாக, கிராமத் தலைவனாக, வழிகாட்டியாக இருந்திருக்கிறார். அதே நேரத்தில் அரசாங்கத்தினுடைய ஆணையை நிறைவேற்றுகிற உயர் அதிகாரியாக அவர் பணியாற்றியிருக்கிறார். ஆகவே இந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணம் வந்தபோது, இந்த அரசாங்கம் மட்டுமல்ல, பல்வேறு அரசாங்கங்கள் பூர்வாங்க நடவடிக்கைகளை மிகுந்த திட்டமிட்டு எடுத்தார்கள். ஆனால் இன்று நம்முடைய துர்பாக்கியம், திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுக்காமல் திடீரென்று நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், "1973 ஆம் ஆண்டிலேயே டி. ஏ. வர்க்கீஸ் அவர்களுடைய அறிக்கை வந்துவிட்டது. அப்போதே மாற்றம் செய்திருக்க வேண்டும்" என்று சொன்னார்கள். "நாங்கள் காத்துக்



1981 பிப்ரவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

கொண்டிருந்தோம், நாங்கள் வந்த பிறகு இதைச் செய்கிறோம்" என்று உரிமையோடு சொன்னார்கள். அந்தக் கமிட்டியில் உள்ளவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் கமிட்டியில் திரு. கே. எஸ். சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ., திரு. வி. கிருஷ்ணசாமி, ஐ.ஏ.எஸ். ஆகியவர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய அறிக்கையில், "தற்போது மணியக்காரர்களாகவும், கணக்கப்பிள்ளைகளாகவும் பணிபுரிகிறவர்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேறி உள்ளவர்களை, கடந்த காலத்தில் ஆற்றியுள்ள பணியின் அடிப்படையில் கிராம அதிகாரிகள், எழுத்தர் ஆகிய பதவிகளில் நியமிக்கக் கருதிப்பார்க்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இது மனிதாபிமான பரிந்துரை. இது எவ்வளவு நியாயபூர்வமான சிபார்சு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். "கிராம பியூன் தேர்வில் வெட்டியான், தலையாரி தகுதி சரியாக இல்லாவிட்டால், கல்வித் தகுதி விதியைத் தளர்த்தலாம்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இங்கேதான் தடுமாறுகிறது. தலையாரிகளை ஏன் முழு ஊழியர்களாக நியமிக்க முன்வரவில்லை? இவர்களை அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களாக ஆக்க ஏன் முன்வரவில்லை? இதற்கான பதிலை அவர்களால் சொல்ல முடியாது. அவர்களுடைய சௌகரியம் பார்த்து அதற்கேற்ப செய்கிறார்கள். எங்கே கையை வைத்தால் பாம்பு சீறுமோ அங்கே அதைச் செய்யாமல் மறைத்து விடுகிறார்கள். எனவேதான் "பழக்க வழக்கங்களை அறவே அகற்றும் வகையில் தற்போதுள்ள கிராம அதிகாரிகளிலிருந்து நியமிக்கப்படும் பணியாளர்களை வட்டங்கள், ஏனைய வட்டங்கள் ஆகியவற்றுக்கு நியமிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு, "இந்தச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு மாபெரும் பிரச்சினைகள், சட்டச் சிக்கல்கள் ஏற்படும்" என்பதையும் தெரிவித்து "ஆகவே இவற்றை ஒரு சில ஆண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றுவதன் மூலம் நிறைவேற்ற முடியும் என்று ஆணைக் குழு நம்புகிறது" என்று தெரிவித்திருக்கிறார்கள். ஒரு பிராக்டிகல் சொலூஷன்

(பிற்பகல் 5-20)

Practical solution ஆக படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்திருக்க வேண்டும். முதலில் ஒரு இரண்டு மாவட்டங்கள், இந்த ஆண்டு ஒரு மாவட்டம், அடுத்த ஆண்டு இன்னொரு மாவட்டம், அந்த மாதிரி கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்திருக்கலாம். அல்லது ஒரு மாவட்டத்திலே சில தாலுக்காக்களில் கொண்டு வந்திருக்கலாம். அடுத்த ஆண்டு ஒரு மாவட்டத்

திலே சில தாலுக்காக்களில் கொண்டு வந்திருக்கலாம். இப்படி 3, 4 ஆண்டுக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக முழுமைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அதைச் செய்யவில்லை. இப்படிச் செய்திருந்தால், இதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியும். இதை முழுமைப்படுத்தியிருக்கலாம்.

நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. "அதிக இடர்பாடின்றி இவற்றை சில ஆண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றுவதன் மூலம் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும் என்று ஆணைக் குழு உறுதியாக நம்புகிறது. கிராம அதிகாரிகள், பகுதிநேர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனரென்று கொள்ளப்படுகிறது. அவர்கள் அரசுப் பணிகளுக்குப் பாதகம் ஏதுமில்லாமல் வேறு பணிகளில் ஈடுபடலாம். அவ்வாறு பலரும் ஈடுபடுகின்றனர்". இதெல்லாம் அவர்கள் சொல்லியிருப்பது. அவர்கள் கடைசியாகச் சொல்கிறார்கள். 'தற்காலிகப் பணியாளர்கள் அனைவருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்த பின்னர் அவர்கள் நீக்கப்படலாம்' என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் படிக்கும்போது இதிலுள்ள பிரச்சினையை முழுமையாக உணருவார்கள் என்று நினைக்கிறேன். இதுதான் அந்த அறிக்கையிலேயும் இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இந்த ரிப்போர்ட் வந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கிராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அப்போதுதான் இது வந்திருக்கிறது. 1973-லேதான் வந்திருக்கிறது. அவரும் இதற்குத் துணையாக இருந்திருக்கிறார். இந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் வந்தது 1973-ல், ரிப்போர்ட் அச்சானது கிடைத்தது 1973 ஆம் ஆண்டு கடைசியிலே. அதாவது நவம்பரில் என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது வந்தது. எல்லோரும் இருந்து கொடுத்த அறிக்கைதான் அது. அதற்குப் பிறகு அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். "ஓய்வு கால வரம்பு 50-க்குக் கட்டாயமாகக் குறைக்கப்படலாம். வேலையிலிருந்து தாமே முன்வந்து ஓய்வு பெற விழைபவர்களுக்கு, குறிப்பாக புதிய வேலைவாய்ப்புகளைத் தேடிக் கொள்ளும் வயதும் இளமையும் படைத்தவர்களுக்கு, தொகை கொடுப்பதன் மூலம் அவர்கள் வேலையிலிருந்து அகல ஊக்கமளிக்கலாம். கிராம அதிகாரி ஒருவரின் மகன் அல்லது அவரின் பொறுப்பிலுள்ள அரசுப் பணியில் சேருவதற்கு வேறு வகையில் தகுதி பெற்றிருந்தால், அவரது தந்தை அல்லது பாதுகாவலர் பணியில் இருந்து உரிய காலத்திற்கு முன்பாகத் தாமாகவே ஓய்வு பெற வேண்டும் என்னும் நிபந்தனைக்குட்பட்டு கிராம உதவியாளராக நியமிக்கப்படுவதற்கு தனிப்பட்ட முன்னுரிமை அளிக்கப்படலாம்." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுகூட ரெயில்வேயில் வேலை செய்பவர்



களுக்கு அந்த உரிமை இருக்கிறது. போஸ்ட்டல் டிப்பார்ட்மெண்டில் வேலை செய்பவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. ஏன், பி. அண்டு சி. போன்ற தனியார் நிறுவனங்களிலும் அதுபோன்ற உரிமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கும்போது, நாம் பெரிய புரட்சியைச் செய்வதாகச் சொல்கிறோம். அவர்களுக்கு அப்படி வேலை கொடுங்கள், புரட்சிகரமாகச் செய்யுங்கள் என்று சொல்கிறேன். புதிதாக வேறு ஆளைக் கொண்டுவருவதில்லை. குடும்பத்திலிருந்து ஒருவருக்கு அப்படி வேலை தருகிறார்கள். பெரிய இன்சிடிடியூஷன்கள் கூட அப்படிச் செய்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை இதை மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டும். அப்படியில்லாது இந்தமாதிரி ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது என்பது ஏதோ அவர்கள் மீது உள்ள ஒரு விரோதம் காரணமாகச் செய்வது போன்று இருக்கிறது. அவர்கள் மீது கொண்டிருக்கின்ற ஒரு பகை காரணமாக அரசு இப்படி வந்திருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அப்படி என்ன அவர்கள் மீது பகை? வேறு காரணம் ஏதாவது இருக்கிறதா என்பதும் தெரியவில்லை. எது எப்படி இருந்தபோதிலும், இந்த நடவடிக்கைகளை எடுத்தபோது கொஞ்சம் நிதானமாகவே செய்திருக்க வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவு இன்று வரைக்கும் முழுமை அடையவில்லை. நான் இப்போது சொன்ன கருத்துக்களையும் இணைத்து ஒரு புதிய சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்தால், நல்லதாக இருக்கும். அப்போதுதான் இந்தச் சட்ட முன்வடிவு முழுமையானதாகவும் பயன் அளிக்கக்கூடியதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று கிராமக் கர்ணத்தைப் பொறுத்த வரையில், நான் மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நிர்வாகத் துறையில் இந்த கிராம அதிகாரிகளை முழு நேர ஊழியர்களாக மாற்ற வேண்டும், நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று இருக்கிறது. அந்த அதிகாரிகளின் வேலைகளில் இரண்டு வேலைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே போலீஸ் அதிகாரிகள், மாஜிஸ்ட்ரேட் மற்றவைகள் எல்லாம் போட்டுக் கொள்ளலாம். அங்கே கிராம அதிகாரிகளுக்கு வரி வசூல் பண்ணுகின்ற வேலைதான் முக்கியமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியும் இருக்கட்டும். கிராம மணியக்காரர் வேலை, அது இருக்கட்டும். கிராமக் கர்ணத்தின் வேலையை யார் பார்ப்பது? கர்ணத்திற்குக் கணக்கு எழுதுவது மட்டும் வேலை அல்ல. மற்ற வேலைகளையும் அவர்கள் செய்கிறார்கள். அவைகள் என்ன? விளைவிக்கப்பட்டுள்ள பயிரின் தன்மையையும், அப்பயிர் எவ்வளவு பரப்பளவில் விளைவிக்கப்பட்டுள்ளது என்பதையும் எழுதி வைக்க வேண்டும்,

பயிர் விளைச்சல் குறித்து முன்கூட்டியே அறிவிக்க இயலும் வகையில் பயிர் விளைந்திருக்கும் தன்மையை எழுதி வைத்தல், பதிவு மாற்றம், குடிவாரச் சட்டங்கள் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் ஒவ்வொரு வயலைப் பொறுத்த மட்டிலும், அதன் உடைமை குறித்துச் சரிபார்த்தல், முறையற்ற பாசன நேர்வுகளைக் கண்டுபிடித்தல், புறம்போக்கு, நிலவரி மதிப்பிடப்பட்ட தரிசு நிலங்கள், சமுதாய நிலங்கள் ஆகியவற்றில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளைக் கண்டுபிடித்தல், காணாமல் போன நில அளவைக் கற்களைக் கண்டுபிடித்தல், பாதகமான பருவ கால நிலைமைகளின் கீழ் குறைவான நீர் வழங்கு வாயில்கள் கொண்ட நன்செய் நிலங்கள் எந்த அளவுக்கு வரித் தள்ளுபடி செய்யப்படுவதற்குத் தகுதியுடையவையாக இருக்கின்றன என்பதைச் சரிபார்த்தல்—இப்படியெல்லாம் வேலைகள் இருக்கின்றன. நஞ்சை எது, புஞ்சை எது? தண்ணீர் பாயும்போது எந்த இடத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும், எந்த நிலத்திற்கு பின்னிடம் கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் பார்த்து அவர்கள் செய்வார்கள். எல்லா நிலங்களுக்கும் தண்ணீர் பாய்வதற்கு கால்வாய்கள் இருக்காது. பல இடங்களில் தண்ணீர் கால்வாய்களின் மூலமாகப் பாய்கிறது. அதிலே ஒரு நிலத்திற்கு முன்னதாகப் பாயவேண்டியிருக்கும். இன்னொரு நிலத்திற்கு பின்னர் பாயவேண்டியிருக்கும். சில பகுதிகளில் இரண்டு மூன்று வாய்க்கால்கள்கூட இருக்கும். சில பகுதிகளில் வாய்க்கால் வசதி இருக்காது. இந்த வாய்க்கால்களில் கடைகால்பகுதி எது, எதன் மூலம் எந்த நிலத்திற்குப் பாய வேண்டும். நடு வாய்க்கால் எது என்பது போன்ற விவரங்கள் எல்லாம் இவரிடம் தான் இருக்கும். இதையெல்லாம் அவர் தான் நிர்ணயித்துச் செய்ய வேண்டும். தண்ணீர்ப் பற்றாக் குறை ஏற்படும்போதெல்லாம் விவசாயிகளிடையே சண்டைகள் ஏற்பட்டுவிடும். அப்படி சண்டைகள் வரும்போது சரி செய்யவும், அப்படிப்பட்ட சண்டைகள் வராமலிருப்பதற்கு வழி செய்யவும் வேண்டியிருக்கிறது. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைக்கின்ற வேலையும் அவருக்கு இருக்கிறது. ஒரே அதிகாரி இருந்தால், கிராமக் கர்ணத்தின் வேலைகளை யார் செய்வது? கிராம அதிகாரிகளை அனுப்பிவிட்டோம் என்று சொல்கின்றார்கள். இந்த மாதிரியான பல வேலைகளை யார் செய்வது? இதன் விளைவு என்ன? ஒரு ஆறு மாதம் சமாளித்துவிடலாம். அதற்குப் பிறகு எப்படி? இந்தமாதிரி நிலைமைகளை உருவாக்கிய குற்றம் யாருடையது? அதற்கு நாம் தரவேண்டிய விலை prize பரிசு என்ன? இவ்வளவு பெரிய கடினமான நிலைமைக்கு நம்மை நாமே சிக்க வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் இரண்டு பில்கள் வந்திருக்கின்றன. அவைகளையும் விவாதிக்கவேண்டியிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் மூலச் சரித்திரத்தையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்தச் சரித்திரத்திலேயே இன்னும் கொஞ்சம் சொல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். புறம்போக்கு நிலவரி மதிப்பிடப்பட்ட தரிசு நிலங்கள், சமுதாய நிலங்கள் ஆகியவற்றில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புக்களைக் கண்டுபிடித்தல் போன்ற வேலைகள் எல்லாம்கூட இருக்கின்றன. இந்த வேலைகளை யார் செய்வது? யாராலே செய்ய முடியும்? அது மட்டுமல்ல. நாம் நியமிக்கின்றவர்கள் ரூ. 300 சம்பாதிக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டுச் செய்யலாம் என்று சொல்லலாம். இதைப்பற்றியும் வர்கீஸ் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்று பார்ப்போம். அவர்கள் சொன்னார்கள். "இவர்களாலே முடியாது. அதற்கு இரண்டு பேர்கள் வேண்டும்" என்று சொன்னார்கள். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன சம்பள விகிதம் கொடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கிராம அதிகாரிகளுக்கு ரூ. 200—5—250—10—300, கிராம எழுத்தர்களுக்கு ரூ. 150—4—170—5—225 சம்பள விகிதம் இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சம்பள விகிதங்கள் சம்பந்தப்பட்ட விவரங்களுக்குப் போக விரும்பவில்லை. இந்த ரிப்போர்ட்டிலே இப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்ணம் வேலை இன்றியமையாத ஒன்று என்று அன்றைக்கே முடிவெடுத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத் தான் இதைச் சொல்கிறேன். ஒரு கிராமத்திற்கு மட்டும் இல்லை என்று இல்லை. எல்லா கிராமங்களுக்கும் இல்லை. ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கும் இல்லை என்ற நிலை இருக்கிறது. கணக்கு எழுத கம்ப்யூட்டர் வந்துவிட்டது என்று சொல்லலாம். ஆனால் ஊரிலே இருக்கின்ற நிலத்தை யார் அளந்து சொல்வது? ஒவ்வொரு முறையும் சர்வே செய்ய முடியுமா? சர்வேயரை அழைத்து வந்து பார்க்க முடியுமா? அதற்கு எவ்வளவு பணம் செலவாகும்? அதற்கு வேண்டிய மெஷினரி இருக்கின்றதா? வேண்டிய பணம் இருக்கின்றதா? இல்லையே. ஒரு கிராம கர்ணம் இருந்தால், அது ஒரு இயந்திரம் போல ஆகும். அவர்கள் ஒரு இயந்திரம் போல செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி அது ஒரு பாரம்பரைத் தன்மை உள்ளதாக இருக்க வேண்டாம் என்றால் அதை மாற்றுங்கள் என்று சொல்கிறார்கள். இந்த வேலைகளையெல்லாம் படிக்காதவர்களே சரியாகச் செய்யும்போது, படித்தவர்கள் செய்ய முடியாதா என்கிறார்கள். அதெல்லாம் என் காதில் விழுகிறது.

ரிப்போர்ட்டில் இப்படிப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்று தான் சொல்கிறேன். இவர்களை எவ்வளவு நாளைக்கு வைத்திருக்கப்போகிறார்கள்?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு இரண்டு பில்கள் இருக்கின்றன. இதை யெல்லாம் பார்த்துப் பேச வேண்டும் என்று சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அந்த இரண்டு பில்களிலும் அதிகமாக விவாதம் இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதிகமாக இருக்குமோ இருக்காதோ, அதை யார் சொல்ல முடியும்?

திரு. க. இராமமூர்த்தி : அந்தக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. இந்தக் குழுவிலே திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஒரு தனி நபர் குழுவாகவே இருந்து வெளியிட்டிருக்கிறார். அவர் ஒரு போர்டு மெம்பர் நான். அவரே ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அவருடைய ரிப்போர்ட் 1980-ல் வெளிவந்திருக்கிறது. நாம் சில குழுக்களை அமைக்கிறோம். அப்படி குழுக்களை அமைத்து அவர்கள் சொல்கின்ற பரிந்துரைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டியது அரசுக்கு ஒரு கட்டாயமல்ல. ஆனால் சில அத்தியாவசியமான சிபாரிசுகள் வரும்போது, அவைகளைக்கூட புறக்கணிப்பது என்று ஏற்பட்டுவிட்டால், நாம் அமைக்கின்ற கமிட்டிகளிலே யாருக்கும் நம்பிக்கை ஏற்படாமல் போய்விடும். நம்பிக்கையே இல்லாமல் ஆகிவிடும். கமிட்டி என்று ஒன்று அமைக்கிறோம். அதிலே இத்தனை பேர்கள் கூடி விவாதித்து ரிப்போர்ட் தருகிறார்கள். பல்வேறு சங்கடங்களின் நடுவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தவர்கள், நிர்வாக இயந்திரத்தை நடத்தியவர்கள் தங்கள் அனுபவத்தை வைத்து ஒரு அறிக்கையைத் தருகிறார்கள், அந்த அறிக்கையில் அத்தியாவசியமானதாக, அடிப்படை யானதாகத் தருகின்றவற்றையே தவிர்த்து இன்று சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கு கிராம அதிகாரிகள்பற்றி, அவர்களை முழுநேர ஊழியர்கள் ஆக்குவது பற்றி, அவர்களை அரசுப் பணி யாளர்கள் ஆக்குவது பற்றியெல்லாம் சொல்கிறார்கள். திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்கள் தனி நபர் குழுவாக இருந்து என்ன என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்று பார்க்கவில்லை. அவர் அறிக்கை 1980 ஆம் ஆண்டு ஜனவரியில் தான் வெளிவந்திருக்கிறது. அ.தி.மு.க. அரசு தான் அப்போது இருந்திருக்கிறது. கிராம அதிகாரிகள் முழு நேரமும் அரசுப் பணிகளைச்

(பிற்பகல் 5-30)

செய்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். பக்கம் 10-லே அப்படி





இருக்கிறது. எனவே அவர்கள் முழு நேர அரசுப் பணியாளர்களாக்கப்பட்டு, போதிய சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று கிராம அதிகாரிகள் சங்கங்கள் வாதிடுகின்றன. அதற்குப் பிறகு சொல்லுகிறார்கள். "4,000 கிராம அதிகாரிகளில் 700 பேர்கள் குறைந்தது இரண்டாண்டுக் காலம் அவ்வாறு பணி புரிய வேண்டுமென்றிருந்தால், கிராம அதிகாரிகளின் பதவிகளில் அடிக்கடி மாற்றல்கள் ஏற்படும் என்பதோடு, ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கும், ஒரு கிராமத்திலிருந்து வருவாய் அலுவலகங்கள் சிலவற்றிற்கும் மாற்றுவது படிப்படியாக உருவாகலாம். இச்சீர்திருத்தத்தின் வெற்றி, கிராம நிர்வாகத்தில் அதிகாரிகள் மாற்றம் இன்றி தொடர்ந்து செயல் படுவதைப் பொறுத்துள்ளது. கிராம அதிகாரிகளும், கிராமத்திலுள்ள ஏனைய பணியாளர்களும் குறைந்தது ஐந்து ஆண்டுக் காலத்திற்கு இருக்க வேண்டு மென்று நான் கருதுகிறேன்" என்று திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது வந்திருக்கும் சட்டமுன்வடிவின் வாயிலாக யார் நியமனம் பெறுகிறார்களோ, அதாவது பல கிராமங்களுக்கு ஒருவர் என்று போடும்போது; ஐந்து ஆண்டுகளுக்கு அவர்களை அங்கே நிரந்தரமாக வைத்திருப்போமென்ற உத்தரவாதத்தைத் தர முடியுமா? முடியாதே. அரசு வேண்டாமென்றால் இரண்டாம் நாளே தூக்கி எறியப்போகிறார்கள். மூன்றாம் நாள் இங்கே வந்து அங்கே இருக்க லாயக்கில்லை என்று பேசப் போகிறார்கள். அதற்கு அடுத்த நாள் நீக்கப் போகிறார்கள். வேறு ஊர் களுக்குப் போக வேண்டுமென்ற நிலையில் இருப்பவர்கள் கிராம அடிப்படை நில நீர் பாசன வசதிகளை வைத்துக்கொண்டு எப்படி அந்தக் கிராமத்திற்கு உதவ முடியுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைத் தடுத்து விட்டால், அதன் விளைவாக ஏற்படும் மோதல்களை, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை எண்ணிப் பார்க்காமல், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறது அரசு என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

1949, 1957 ஆம் ஆண்டுகளில் கிராமக் கணக்குகளைத் திருத்தியமைக்கக் கருதிய வருவாய்த் துறை வாரியத்தால் இக்கணக்கு ஏற்பாடு நன்கு சிந்தித்த பின்னர் உருவாக்கப்பட்டதோடல்லாமல், நீண்ட காலமாக நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்தும் வந்திருக்கிறது. 1962-ல் கார்த்திகேயன் குழுவும், கிராமக் கணக்குகளில் அடிப்படை மாற்றங்களைக் கூறப் போதுமான காரணங்களைக் காணவில்லை. சில கணக்குகளைப் பொறுத்த வரையில், சொற்பமான மாற்றம் மட்டுமே தேவையென இக்குழு கருதியது. அமைச்சரவர்களும் இதையெல்லாம் படித்துத்தான் வந்திருப்பார்களென்று கருதுகிறேன் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்னும் எவ்வளவு நேரமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டும். அதிக நேரமாகப் பேசுகிறார்கள். மற்றவர்கள் பேச வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : நான் பேச வேண்டுமென்று தான் எல்லோரும் குறைந்த நேரத்திற்குப் பேசினார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்வர்களின் துரதிருஷ்டம். அவர்கள் பேசும்போது நான் வந்துவிட்டேன்.

திரு. க. இராமமூர்த்தி : நீங்கள் இருந்து கேட்பதுதான் எனக்குப் பெருமை.

பயிர் விளைச்சல் மதிப்பீட்டைப் பொறுத்து, "பயிர் விளைச்சலை கிராமக் கணக்கர்கள் சரியாகப் பதிவு செய்யவில்லை என்பது உழவர்களின் பொதுவான குறைகளில் ஒன்றாகும். பயிர் விளைச்சல் மதிப்பீட்டை வருவாய் ஆய்வாளர்கள், துணை வட்ட ஆட்சியர்கள், வட்ட ஆட்சியர்கள் ஆகியோர் முறையாகவும் சரியாகவும் சரி பார்த்தால் இக்குறையைத் தவிர்க்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குறை இப்போது ஏற்பட்டதல்ல. எனக்குத் தண்ணீர் பாயவில்லை என்றால், சொல்லப் போகிறேன். எனக்கு முறைத் தண்ணீர் இல்லையென்றால், அன்றைக்கு கணக்குப் பிள்ளை சரியாக நடக்கவில்லை என்றுதான் கூறுவேன். பயிர் கருகிப் போகுமோ என்ற நிலை வரும்போது, எப்படியாவது தண்ணீர் பாய வேண்டுமென்ற ஆர்வம் தான் இருக்கும். கணக்குப்பிள்ளை நியாயமாக நடக்கிறாரா என்பதைப் பார்க்க முடியாது. பிள்ளையைப் பறி கொடுத்தாலும் கொடுப்போம், பயிரைப் பறிகொடுக்க மாட்டோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பணியாற்றும் கிராம அதிகாரிகள் இது போன்ற குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியே தீருவார்கள். தொழிலாளர் நல அமைச்சரவர்கள் எவ்வளவு நன்மைகள் செய்தாலும், அவரைக் குற்றம் சொல்லாமல் இருக்க மாட்டார்கள். (சிரிப்பு) அதுபோல கிராமக் கர்ணங்கள், முனுசீப்புகள் கிராமங்களில் நல்ல காரியங்களைச் செய்தாலும், இது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளாவது என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் இவைகளை மட்டும் மனதிலே கொண்டு, உங்களை ஒழித்து விடுகிறேன் என்று போர்க் கோலம் கொள்வது ஆட்சிக்கு நல்லதல்ல.

இன்னொரு காரணம் சொல்லப்படுகிறது. ஏன் இந்த அவசரச் சட்டம் ஒரே நாளில் மிக அவசரமாக வந்தது என்று கேட்டபோது, அவர்களிடமுள்ள ரிகார்டுகளை அவர்கள் பதுக்கி விடுவார்கள். அதை எப்படி வாங்குவது. ஆகவே அவசரம் அவசரமாக முடிவெடுத்தோமென்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், அவர்களிடம் என்ன ரிகார்டு இருக்கிறது? வருவாய் வசூல்,



நில அடங்கல் குறித்த ரிகார்டுகள் தாலுக்கா அலுவலகத்தில் இருக்கின்றன. அதற்கு யார் வேண்டுமானாலும் காபி எடுத்துக்கொள்ளலாம். அதற்குப் பிறகு வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, ஒவ்வொரு ஜமாபந்தியிலும் அதைக் கொடுக்க வேண்டும். அங்கே கணக்கை சீர் பார்த்த பிறகுதான், அதாவது ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் கழித்துத்தான் திரும்பக் கொடுக்கிறார்கள். இரகசியமானவையல்ல, வாங்க முடியாத ரிக்கார்டுகள் அல்ல. வராத ரிக்கார்டுகள் அல்ல. எனினும் அவசரச் சட்டம் கொண்டு வந்து சமூக விரோதிகளை நடத்துவதுபோல ஒரு இன்ஸ்டிடியூஷனை அவமதித்திருக்கிறார்கள். அரசிலுள்ள நிர்வாக அமைப்பையே அவமானப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள்மீது நம்பிக்கையில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இது எவ்வளவு கேவலமான நிலைமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு அரசாங்கத்திற்கு இதைவிட அவமானம் இருக்க முடியாது. ஒரு நிர்வாக இயந்திரத்திற்கு இதைவிட தலைக் குனிவான காரியம் வேறு எதுவும் கிடையாது. இதை அரசு செய்திருக்கிறது. அதுவும் எனக்கு மிகவும் வேண்டிய அமைச்சர் ஒருவர் செய்திருக்கிறார் என்பதுதான் என்னுடைய வருத்தம். இந்த இன்ஸ்டிடியூஷனின் கன்டினியூயிடியைப் பொறுத்துச் சொல்கிறேன். இது எப்படி தொடராக இருக்கிறதென்று சொல்லுகிறேன். District Administration by S. S. Khera Page 253: என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

"This continuity is not surprising. The Constitution of India provides the ultimate frame of reference in all matters of governance, including administration. Every administrative arrangement, and every method used, particularly in the maintenance of law and order and of the security of the community as well as the individual, must be in keeping with the Constitution. The Constitution of India lays down the principles as well as the parameters of our parliamentary democratic system of government."

ஆகவே எவ்வளவு எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டுமென்று தெளிவாக்கியிருக்கிறார்கள். நிர்வாக இயந்திரத்தை மாற்றி அமைப்பதில் நாங்கள் குறுக்கே நிற்பதாகப் பேசினார்கள். எந்த நிர்வாகத்தையும் மாற்றி அமைப்பதில் குறுக்கே நிற்பவர்கள் யாருமில்லை. நிர்வாக இயந்திரம் எதற்காக இருக்கிறது? ஆள்பவர்களுக்கு வேலை செய்யவா இருக்கிறது? மக்களுக்குச் சுலபமாக எளிதாகக் காரியங்கள் நடக்க, அரசாங்கம் செய்யும் நன்மைகள், பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேர நிர்வாக இயந்திரம் துணையாக இருக்க

வேண்டும். அதை மாற்றி அமைப்பதில் அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, அவ்வளவு அக்கறை எங்களுக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஆளும் கட்சிக்காரர்களாக இருப்பதால், அவர்களுக்கு அதில் அக்கறை இருக்கிறது. நாங்கள் நேற்று ஆளும் கட்சியாக இருந்தோம். அக்கறை கொண்டிருந்தோம். இன்று எதிர்க் கட்சியாக இருக்கிறோம், அக்கறை கொண்டிருக்கிறோம். நாளை ஆள்பவர் களாக வருவோமென்ற உணர்வு இருக்கும்போது, அந்தக் காரியத்தில் மிகவும் எச்சரிக்கையாகச் செயல்படுகிறோம்.

"The district administration provides the principal points of contact between the citizen and the processes of government, and is truly the cutting edge of the tool of public administration. In the development of this tool, and in any changes that may be brought about in order to suit it to the changes and to the changing purposes of administration, it must maintain one essentially continuous feature, namely, a rigorous adherence to the principles of sound government and of sound administration."

என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-40)

ஒரு நல்ல நிர்வாகத்திற்கும் நல்ல அரசுக்கும் இருக்க வேண்டிய தன்மைகள் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எப்படிச் செயல்பட வேண்டுமென்கிற உணர்வு அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசு நல்ல அரசாக இருக்கலாம். நல்ல அரசாக இருக்கின்ற அதேநேரத்தில் பயன்படாமல் போகிறார்கள். நல்லாட்சியை மக்களுக்குத் தராமல் இருக்கிறார்கள். நல்லவர் களாக இருந்தால் மட்டும் போதாது. நல்லாட்சியை மக்களுக்குத் தர வேண்டும். நல்லவர்களாக இந்த அரசினர் இருக்கிறார்கள் என்பதை வாதத்திற்கு வேண்டுமானால், நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நல்லாட்சியை நாட்டு மக்களுக்கு அவர்கள் தரவில்லை என்பதை இந்தச் சட்ட முன்வடிவை அடையாளம் காட்டியிருக்கிறது. தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் இந்த அரசினரை இந்தச் சட்ட முன்வடிவு அடையாளம் காட்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வேலைக்கு விண்ணப்பங்கள் போடுவதைப் பொறுத்தவரையில் அதிலே குறைபாடுகள் எல்லாம் வருமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால் அதிலே உள்ள நன்மை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையிலே இருக்கிறார்களே, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னாலும் குறைந்தது 10 பேராவது சுற்றிக்



கொண்டிருக்கிறார்கள். "நான் கிராம அதிகாரி வேலைக்கு மனு கொடுத்திருக் கிறேன், எனக்கு எப்படியாவது வேலை வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் என்றால், அவரிடம் "நான் பரம்பரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன்" என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் உறுப்பினர் என்றால், அவரிடம் "நான் காங்கிரஸ் பாரம்பரியத்தைச் சார்ந்தவன், எனக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களைத் தெரியாது, ஆகவே எப்படியாவது ஒரு இடம் வாங்கித்தர வேண்டும்" என்று கேட்கிறார்கள். ஒருவரே ஆளும் கட்சி உறுப்பினரிடமும், எதிர்க் கட்சி உறுப்பினரிடமும் சிபாரிசுக்கு வருவதும் உண்டு. இப்படிப்பட்ட போக்கு நல்லதல்ல. யாராக இருந்தாலும், சிபாரிசு மூலம் இடம் கிடைக்கும் என்கிற அடிப்படை உணர்வு இன்றையதினம் தமிழகம் முழுக்க உண்டாகியிருக்கிறது. இதிலே இருந்து இந்த அரசு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். கிராம அதிகாரிகள் செலக்‌ஷனைப் பொறுத்தவரை, இது சிபாரிசுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்பதைத் தெளிவாக அவர்களிடம் எடுத்துச்சொல்ல வேண்டும். பரீட்சை எல்லாம் வைத்து விட்டார்கள். இனிமேல் 'இன்டர்வியூ' நடக்கும். யாருக் கெல்லாம் வேலை கொடுக்கப் போகிறார்களோ அவர்களுக்கெல்லாம் 'இன்டர் வியூ கார்டு' வரும், அதற்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்றுதான் இப்போது வருகிறார்கள். எப்போது ரிசல்டைப் போடப்போகிறார்களோ, எவ்வளவு பேருக்கு 'இன்டர்வியூ கார்டு' அனுப்பப்போகிறார்களோ, 'செலக்ட்' செய்கிற அதிகாரிகள் எந்த அளவுக்கு சிபாரிசுக்கு அப்பாற்பட்டவர்களாக இருப்பார் களோ என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிபாரிசு செய்யாமல் இருக்கலாம். அமைச்சர் சொன்னால் இடம் கிடைக்கும், வேலை கிடைக்கும் என்கிற உணர்வு மக்களுக்கு வந்தாலே எல்லாம் போய் விடும். 7 ஆயிரம் பேரை முதலில் அந்த அடிப்படையில் 'செலக்ட்' பண்ணப் போகிறார்கள். அதற்கு முன்னேற்பாடாக இன்றைக்கே கையில் பணத்தைப் பிடித்துக்கொண்டு பலர் அலைந்து கொண்டிருக்கிற காட்சியை யாரும் மறுக்க முடியாது. இதற்கு நாம் கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாது. இல்லா விட்டால் ஊழலைத் தவிர்க்க முடியாமல் போய்விடும். ஏற்கெனவே கிராம அதிகாரிகளாகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்ன கோபம் என்பது எனக்குப் புரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில், தேர்தலின்போது பல மணியக்காரர்கள் மாண்புமிகு அமைச்சருக்காக வேலை செய்தார்கள். ஏற்கெனவே கிராம அதிகாரிகளாகப் பணியாற்றியவர்கள் 'எலிஜிபிலிட்டி' உடையவர்களாக, தகுதியுடையவர்களாக இருந்தால், அவர்களை நேரடியாகத் தேர்வு செய்வதில் அரசுக்கு என்ன தடை

இருக்கிறது? ஏற்கெனவே மணியம் வேலை பார்த்தவர்கள் ஏன் மறுபடியும் சர்வீஸ் கமிஷன் மூலம் வர வேண்டும்? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால், அது வேறு பிரச்சினை. அப்படி இல்லாமலிருந்தால், அவர்களுக்கு ஏன் தடை விதிக்க வேண்டும்? அவர்களுக்கு இந்தப் பணியைக் கொடுப்பதற்கு வழிவகை இல்லாமல் போய்விட்டதா? அவசரச் சட்டமாக இது வந்து விட்டது தான் அதற்குக் காரணம் என்று நன்றாகத் தெரிகிறது. நிதானத்தோடு அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. இதை அவசரச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு முன்னதாக நிர்வாக இயந்திரத்தோடு தொடர்புடைய தாசில்தார், உதவி மாவட்ட ஆட்சியர் போன்றவர்களுடன் தொடர்பு கொண்டு அரசுத் தரப்பில் அவர்களுடைய யோசனைகளைக் கேட்டு ஆய்ந்திருந்தால், இப்படிப்பட்ட சிக்கல்கள், குறைகள் ஒருவேளை குறைந்து போயிருக்கும். இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு தலைவர் அவர்கள் கோபப்படக் கூடாது. ஒரு கருத்தை நான் சொல்ல முன்வருகிறேன். நானே மணியம் வேலை பார்த்தவன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் மணியம் வேலை பார்த்ததற்கு எனக்கு என்ன கோபம்? மணிக் கணக்காகப் பேசுவதால்தான் கோபம். (சிரிப்பு). உறுப்பினர் அவர்கள் மணியம் வேலை பார்த்ததற்கு எனக்குக் கோபம் இல்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** உறுப்பினர் பரம்பரை மணியக்காரரா? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தவறுகளே நடைபெறாதது போலவும் எங்கள் ஆட்சிக் காலத்தில் தான் தவறுகள் செய்வது போலவும் பேசுவதை உறுப்பினர் புரிந்துகொண்டு பேச வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி:** நான் எங்கே தவறுகளைச் சொன்னேன்: பரம்பரை மணியக்காரர் வேலை என்னுடைய பெரியப்பாவோடு முடிந்துவிட்டது. நான் டெஸ்டுக்கு ஆளாகி, மணியக்காரருக்கான டெஸ்டில் பாஸ் பண்ணி மணியக்காரர் வேலை பார்த்தேன். திரு. சிவகுமார், ஐ. ஏ. எஸ். அவர்கள் உதவி மாவட்ட ஆட்சியராக இருந்தபோது, நான் அங்கே மணியக்காரராக இருந்தேன். அவர் என்னிடம் மணியம் டிரெயினிங்கில் இருந்தார். எனக்கு இதிலே நிரம்ப அனுபவம் உண்டு. இந்தப் பணிகளை இப்போது மாற்றியமைக்க உறுதியாக விதி முறைகள் வகுத்திருக்கிறோம். இது நிர்வாகத்தைச் சீர்கேடு அடையச் செய்து விடும். இதிலே இருக்கின்ற கருத்துக்கள், மாற்றங்கள், ஏன், எப்படி எப்போது வந்தன என்பதை விட



இந்தக் கருத்துக்களையெல்லாம் ஏதோ ஒரு சாரார் தடுப்பது போல் சொல்கிறார்கள். எப்போதுமே புரட்சிகரமாகச் செய்யுங்கள் என்று அரசுக் கட்சியினர் மட்டும் சொல்லவில்லை. இங்கிருந்தும் அதைத் தான் சொல்கிறோம். எல்லோரும் அதைத்தான் சொல்கிறார்கள். யாரும் அரசினரைத் தடுக்கவில்லை. ஆனால் கொண்டு வருவதை முறையாகக் கொண்டு வரவில்லை. முறையாக இருக்கக் கூடிய ஒரு சமுதாயத்தை முறை தவறச் செய்யக் கூடிய அம்சங்கள் இதில் இருக்கின்றன. இது 3 ஆம் தேதியோடு காலாவதியாகிறது. நாலு நாட்கள் இதைத் தள்ளிப் போட்டால் ஒன்றும் கெட்டுவிடப்போவதில்லை. அப்படி 4 நாட்கள் தள்ளிப் போட்டால், எல்லோரும் கலந்து பேசி, இதையொத்த புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வரலாம் என்ற அளவில் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இதைச் சொல்லத்தான் இவ்வளவு நேரத்தைக் கடத்தினார்களா? (சிரிப்பு)

**திரு. க. இராமமூர்த்தி:** அனைத்துத் தரப்பினர் கருத்துக்களையும் அறிந்து, சமுதாயத்தினுடைய நிரந்தர நல்வாழ்வுக்கு, வெவ்வேறு அரசுகள் ஆட்சிக்கு வந்தாலும், அவை இந்தச் சட்டமுன்வடிவை மாற்ற முடியாத அளவுக்கு, இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு முடியுமோ அத்தனை ஆண்டுகளுக்குத் தேவையான நிரந்தரமான சட்டமாக அமையும் வகையில், நல்ல அடிப்படையுடைய சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்று எல்லோரும் சொல்லத்தக்க அளவுக்கு, எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற அடிப்படையில், தமிழகத்தினுடைய இந்தியாவினுடைய நிரந்தரமான நல்லமாதிரியான நிர்வாக இயந்திரத்திற்கு அடிகல்லாக, அடித்தளத்தில் வாழ்வோருக்காக பயனளிக்கும் வகையில் இந்தச் சட்டமுன்வடிவு அமைவதற்குத் துணை புரிவதற்காக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் கிராம அதிகாரிகளுக்கான வேலையைப் பொறுத்தவரையில், அரிஜனங்களுக்கு 18 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று இங்கே பேசினார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் வரவேற்கிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் சொல்லியது மிக மிகத் தேவையான ஒன்று. கட்டாயம் அவ்வாறு கொடுத்தாக வேண்டும். அதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். அதோடு மட்டுமல்ல, அவர் சொன்னது அதுவல்ல. அதையும் தாண்டித் தான் சொன்னார். சட்டப்படி 18 சதவிகிதம் பணியிடங்கள் அரிஜனங்களுக்குக் கொடுத்தாக வேண்டும். சில நேரங்களில் அவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லையென்று சொல்லி மற்றவர்களைக் கொண்டு அந்தக் காலியிடங்களை நிரப்புகின்ற நிலை இருக்கிறது. அத்தகைய ஒரு நிலை, இந்த வேலையைப் பொறுத்தவரையில், வரக்கூடாது என்று தான் அவர் சொன்னார். விகிதாசாரப்படி கொடுத்தாக வேண்டுமென்று அவர் கண்டிப்பாகவும் சொன்னார். அவர்களுக்கு இன்னும் அதிகமான வாய்ப்பை பொது போட்டியிலும் ( General Competition ) கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றையதினம் அப்படிப்பட்ட சமுதாய மாற்றத்தை நாம் ஏற்படுத்த கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அந்த வகையில் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு வருவதற்கான சமுதாய வரலாற்றுப் பூர்வமான அவசியம் உண்மையானது. ஆனால் இந்த நடவடிக்கை எடுத்ததுபற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். வெளியிலேயும் கூட இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட முறையைப்பற்றி, இவ்வளவு அவசரம் அவசரமாக நள்ளிரவில் தஸ்தாவேஜ்கள், ரெக்கார்ட்கள் எடுப்பதற்கு இவ்வளவு கடுமையான நடவடிக்கைகள் தேவைதானா என்று கேட்கப்படுகிறது. இந்த முறையைப் பின்பற்றும்போது மக்களிடத்திலே இந்த நடவடிக்கைக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. காரணம் இந்த அமைப்பு முறை நம்முடைய நிர்வாகத்திலே அவசியமான அமைப்பு என்று வாதிடப்படுகிறது. இது மிகவும் அத்தியாவசியமானது. Micro administration என்ற முறையிலே நுணுக்கமான ஒரு நிர்வாகம் இது. இந்த முறை முகலாயா காலத்திலே ஏற்பட்ட முறை. வெள்ளைக்காரர்கள் கூட ஏற்படுத்திய முறையல்ல இது. The entire terms are in Urdu. Kautilya's system is a different thing. கௌடில்யர் சொன்னது வேறு. இது முகலாயர்கள் ஏற்படுத்திய முறை. இது சிறப்பாக இருந்ததனால்தான் இதை வெள்ளைக்காரர்களும் ஏற்றுக்கொண்டார்கள். இவ்வளவு சிறப்பாக



இருந்த முகலாயர்களின் ஆட்சி ஏன் வீழ்ச்சியடைந்தது என்று சொன்னால் heavy taxation தான் அதற்குக் காரணம். அதுதான் ஆட்சியை உருக்குலையச் செய்தது. வரலாற்று பூர்வமாகப் பார்த்தால், இது ஒரு பழைய அமைப்பு. இன்றைய தேவைகளுக்கு இது பொருந்தாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள கட்சியினுடைய தலைவர் அவர்கள் கூறியதுபோல, நம்முடைய கிராம அமைப்பிலே பழைய முறையிலே நிர்வாகம் செய்யும் முறைதான் இருக்கிறது. இன்றைய வளர்ச்சித் திட்டங்களுக்கு developmental activities க்கு அனுபவ பூர்வமாகக் கிடைத்த அறிவை நீக்கக்கூடாது. பழைய முறைக்கு மாற்றுமுறை கொண்டுவரப்படுகிறது என்று சொன்னால், அது change without tears என்று சொல்வார்களே, அந்த முறையில்தான் இருக்க வேண்டும். பிறப்பைப்பற்றிச் சொன்னால், any new birth is painful என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆனால், இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் சரியாக இருக்குமானால், தவறில்லை. ஒவ்வொரு புதிய பிறப்பிலேயும் வேதனை உண்டு. இந்த மாறுதலிலேயும் வேதனை இருக்கிறது. இந்த வேதனைகளை எந்த அளவுக்குக் குறைக்கலாம் என்று அரசு பார்க்க வேண்டும். இந்தமாதிரி மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள முயற்சிகளை நான் வரவேற்கிறேன். ஆனால் இப்போது இந்தப் புதிய அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கிறபோது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும். நஷ்டஈடு கொடுப்பதிலே 10 மாதத்திற்கு 1/2 மாதம் என்று வைத்து 5 மாத அளவு கொடுப்பது போதாது. இப்போது Village Munsiff -ஐ விட கர்ணங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதிலே ஒரு discretionary approach ஒரு வேறுபட்ட அணுகுமுறை வேண்டும். அப்படி அணுகுமுறையைக் கடைப்பிடித்து, இந்த நஷ்டஈட்டை அதிகப்படுத்த வேண்டும். இது ஒன்று. இன்னொன்று, ஒன்றுமே இல்லாதவர்களுக்குத் தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்யலாமா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். சமுதாயப் பிரச்சினைகளிலே சில விஷயங்களை நாம் கரிசனத்தோடு அணுக வேண்டும். நஷ்டஈட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும்.

இரண்டாவது, வேலைப் பொறுப்பு என்று வரும்போது, அவர்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நடைமுறையிலே கிராமங்களை வகுக்கும்போது அவர்கள் ஏமாநேர

அதிகாரிகளாக இருப்பதால், இந்தக் கிராமங்களை நிர்வகிப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. எனவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல 'micro-administration' அதாவது ஒரு நுணுக்கமான நிர்வாகம் என்ற அளவிலே இருப்பதால், கிராமங்களிலே எவ்வளவு வேலை இருக்கிறது. அதிகமாக வேலை எங்கிருக்கிறது என்றெல்லாம் பார்த்து, கிராமங்களைப் பிரித்தளிக்க வேண்டும். மிகக் குறைந்த அளவிலே, 'காம்பாக்ட்' என்ற அளவிலே நிர்வாகத்திற்கு கட்டுக்கோப்பாக இருக்கும் வகையிலே, அவைகள் அமையவேண்டும். மாறுதல் என்று வரும்போது, மாறுதல் ஏதாவது ஒரு அம்சத்திலே ஓங்கியிருக்க வேண்டும். வளர்ச்சி என்று வருவதால் கிராமங்களை அதிகப்படுத்தாமல் நிர்வாக வேலைப்பளுவை ஆதாரமாகக் கொண்டு அவைகள் வரவேண்டும். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறது. பலவிதமான செய்திகள் அடிபடுகின்றன. இன்றைய சூழ்நிலையிலே வேலையின்மை இருப்பதால், பல காரியங்கள் நடைபெறுகின்றன. குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், சில வழிகாட்டுதல்கள் அடிப்படையிலே 3 அம்சங்களை அரசு கவனிக்க வேண்டும். ஒன்று ஏற்கெனவே வேலை பார்த்தவர்களிலே தகுதியுள்ளவர்கள் இருந்தால், அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி சலுகை தர வேண்டும். பழைய ஆட்கள் என்று சொன்னால், அவர்களுடைய ரெக்கார்டைப் பார்த்து, கடந்த காலத்திலே அவர்களுடைய சேவை முறை சரியாக இல்லை என்று சொன்னால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம். அவர்களுடைய பழைய சேவை முறை சரியான முறையில் இருந்தால், அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட சதவீதத்தில் முன்னுரிமை அளித்துக் கொடுக்க வேண்டும். அவர்கள் போதிய அளவு தகுதி பெறாதவர்களாக இருந்தால், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தச் சலுகையை அளிக்க வேண்டும். இதன்மூலம் அதிலே உள்ள 'Sting' அதாவது 'விஷக் கொடுக்கு' என்று சொல்வார்களே, எல்லோரும் போய்விட்டோம், எல்லோரும் போய்விட்டோம் என்று இருக்கும் அந்தத் தன்மையை நாம் எடுத்துவிடலாம். இப்படிச் செய்தால், நிர்வாகம் செம்மையாகச் செயல்பட உதவியாக இருக்கும். இந்த இரண்டு சலுகைகளையும் பழைய ஆட்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால், இதிலே பின்னால் ஏற்படும் சில சிக்கல்களை நாம் தவிர்க்க முடியும். இந்த முறை ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலே இருக்க வேண்டும். இன்றையத் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு இதையெல்லாம் செய்ய வேண்டும். இது ஒரு சமுதாயப் பிரச்சினை. வெறும் சட்டம் மூலம் செய்துவிடும் ஒரு சம்பிரதாய முறையல்ல இது. சமுதாய அணுகுமுறை என்ற அளவிலே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்



என்று கூறி, இந்த நேரத்திலே இந்தச் சட்டம் நிறைவேறுவது மட்டுமல்லாமல் இதை துரிதமாக அமுலுக்குக் கொண்டுவர எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இந்தச் சட்ட முன்வடிவு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கருத்துக்களைக் கூறும்போது, முழுமையாக எதிர்க்கவில்லை என்று சொன்னாலும், இதிலே இருக்கிற நல்ல அம்சங்களை வரவேற்றும், குறைபாடுகளை நீக்கவேண்டும் என்றும் பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் எடுத்துக்கொள்கிறேன். அதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் சமுதாய மாற்றத்தில் இது தேவை என்பது மட்டுமல்ல, இது காலங் கடந்து கொண்டு வரப்பட்டிருக்கிறது, இன்னும் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே கொண்டுவரப்பட்டிருந்தால்கூட இதை வரவேற்றிருப்போம் என்ற அளவிற்கு அவர்கள் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், பதவி இழந்தவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும்போது கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும், போதுமான தகுதி பெற்றிருப்பவர்களை எடுத்துக்கொள்வதிலே கொஞ்சமும் தயக்கம் காட்டக்கூடாது என்று இரண்டு கருத்துக்களைத் தவிர மற்றவைகளையெல்லாம் ஏகமனதாக அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் சொல்ல வேண்டும். இதை ஏன் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைப்பற்றி, இதற்கு முன்னால் நான் முன்மொழிந்து பேச வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் கேட்டபோது, நான் சிலவற்றைச் சொன்னேன். அதற்குப் பிறகு சில புகார்கள் எல்லாம் எடுத்து வைத்து, ஆதாரம் காட்டி அவர்களுடைய வாதத்திற்கு வலிவூட்டும் வகையில் சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அவைகளுக்கெல்லாம் ஒவ்வொன்றாகப் பதில் சொல்வது என்றால் மிகுந்த நேரம் ஆகும் என்கிற காரணத்தால், தேவைப்படுகிற இடங்களில் மட்டும் சிலவற்றிற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசிவிட்டுப் போய்விட்டார்கள். அவர் பேசும்போது, இந்தச் சட்டமுன்வடிவு தேவையான ஒன்று என்றுதான் சொன்னார். அப்படித் தேவை என்றாலும்கூட, அதை

இப்போது ஏன் கொண்டு வருகிறீர்கள், இதில் குறைபாடுகள் இருக்கின்றனவே, அவற்றை நீக்க வேண்டுமே என்று குறிப்பிட்டார். அதோடு 1972 ஆம் ஆண்டில் கிராம ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 55 என்றிருந்ததை நீங்கள் வந்துதானே 58 ஆக்கினீர்கள் என்றும் குற்றச் சாட்டினார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இந்த நல்ல காரியத்தைச் செய்கிறபோது, சில மாற்றங்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று குறிப்பிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பேசும்போது, எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைத் தானும் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார். இப்படி இவர்களெல்லாம் கூறியதை ஆராய்ந்து பார்க்கிறபோது, பொதுவாக இந்தச் சட்டம் வரவேற்கப்பட வேண்டியதென்பதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, கிராம அதிகாரிகளை நீக்கியதைப்போல, இந்த முறையைப் பயன்படுத்தி மற்றவர்களையும் நீக்கிவிடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டார். கிராம அதிகாரிகளை நீக்கியதில் உள்ள சங்கடங்களைப்பற்றிச் சொல்வதைவிட இப்படிப்பட்ட நிலைமை மற்றவர்களுக்கு வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் அவர் பேசினார். அதுமட்டுமல்ல, இங்கே பேசியவர்களில் பலரும் பிர்க்கா இன்ஸ்பெக்டர்களுக்கு வேலையே தெரியவில்லை என்று பொதுவாக ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் இந்த பிர்க்கா இன்ஸ்பெக்டர்கள்தாம் கிராம அதிகாரிகளை நிர்வகிப்பவர்கள். அவர்களுக்கு வேலை கொடுத்து வேலை வாங்குபவர்களே பிர்க்கா இன்ஸ்பெக்டர்கள்தான். அவர்கள் the first line officers of the Revenue Department எனவே கிராம அதிகாரிகள் என்ன வேலை செய்கிறார்கள் என்று தெரியாமல், அவர்களால் வேலை வாங்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கிராம அதிகாரிகளுக்கு என்னென்ன வேலைகள் இருக்கின்றன என்பதைப் புத்தகத்திலிருந்து படித்துக் காட்டினார். நான் அதை முழுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். டாக்டர் பட்டம் பெற்ற ஒருவர் அந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். லண்டனில் படித்துப் பட்டம் பெற்ற திரு. கே. என். வி. சாஸ்திரி, எம். ஏ, பி. ஹெச். டி. (பொலிடிகல் சயன்ஸ்) 1958 ஆம் ஆண்டில் எழுதியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவருடைய புத்தகத்தைப் படித்து கிராம அதிகாரிகளின் வேலைகளைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தபோது, எனக்கு ஒன்று தோன்றியது. இங்கே கிராமத்திலிருந்து யாராவது வந்திருந்தால், அவர்களைக் கேட்டால்கூட அந்தப் புத்தகத்தில்



இருந்ததையெல்லாம் அப்படியே சொல்லிவிட்டிருப்பார்கள். கிராமத்திலிருக்கிற மணியத்திற்கு என்ன வேலை, கர்ணத்திற்கு என்ன வேலை, பாதுகாவலர் வெட்டியானுக்கு என்ன வேலை என்பதையெல்லாம் சொல்லிவிடுவார்கள். கிராமத்திலிருக்கிற வெட்டியானைக் கேட்டால்கூட, கிராம அதிகாரிகளுக்கு என்ன வேலை என்பதை விவரமாகச் சொல்லிவிடுவார். நியமிக்கப்படுகிற கிராம அதிகாரி எந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படுகிறார் என்பதைப் பார்த்து, அவருக்குள்ள அதிகாரத்தைகூட சொல்லிவிடுவார். பரம்பரைச் சட்டப்படி நியமிக்கப்பட்டிருந்தால், அவருக்கு என்ன அதிகாரம், 1902 ஆம் ஆண்டுச் சட்டப்படி நியமிக்கப்பட்டிருந்தால், அவருக்கு என்ன அதிகாரம் என்பதெல்லாம் வெட்டியானுக்கே அத்துப்படி. பரம்பரைச் சட்டப்படி நியமிக்கப்பட்டவர்களுக்கு போலீஸ் அதிகாரம்கூட உண்டு. பின்னால் வந்த சட்டப்படி நியமிக்கப்பட்டவர்களுக்கு போலீஸ் அதிகாரம் இல்லை. உறுப்பினர் அவர்கள் 1958 ஆம் ஆண்டு எழுதப்பட்ட புத்தகத்திலிருந்து இங்கே படித்துக் காட்டினார்கள். ஆனால் 1938 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாற்றப்பட்ட சட்டம் வந்திருக்கிறது. அதில் கிராம அதிகாரிகளுக்கு என்னென்ன அதிகாரம் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை எழுதியவர் எந்த "பேக் கிரவுண்டில்" எழுதினார் என்று நான் பார்த்தேன். அது அந்தப் புத்தகத்தில் தெளிவாக்கப்படவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலிருக்கிற கிராம அதிகாரிகளுக்கும் என்ன வேலை இருக்கிறது என்று கண்டறிந்து, அந்த பேக் கிரவுண்டில் இந்தியாவில் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதுபற்றி புத்தகம் எழுதியிருக்கிறார். டெல்லியில் இந்தப் புத்தகம் 'பிரிண்ட்' செய்யப்பட்டிருக்கிறது. அதில் இருக்கிற விஷயங்கள் இங்கே எல்லோருக்கும் தெரிந்த விஷயங்கள்தான் . . . .

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அவர் சொன்னதையே மறுத்துக் கொண்டிருக்கிறார். நான் சொன்னதையெல்லாம் கிராமத்தில் உள்ளவர்களைக் கேட்டாலே சொல்லிவிடுவார்கள் என்று சொன்னார். புதிய சட்டப்படி கிராம அதிகாரிகளுக்கு அத்தகைய அதிகாரங்கள் இல்லை என்று இப்போது சொல்கிறார். இன்றைக்கும் கிராமத்தில் திருடு போனால் அல்லது யாராவது இயற்கையல்லாத முறையில் செத்தால், அதுபற்றி கிராம அதிகாரிகள்தான் தகவல் கொடுக்க வேண்டும் என்றுதான் முறை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நான் அதை மறுக்கவில்லை. இன்றைக்கு கிராம அதிகாரிகள் எந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படுகிறார்களோ அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் அவர்களுடைய அதிகாரங்கள்

மாறுபடுகின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். மாண்புமிகு உறுப்பினர் புத்தகத்தைப் படித்தது தவறு என்று நான் சொல்லவில்லை. அதில் உள்ள விவரங்கள் எல்லாம் சாதாரண தலையாரிக்குக்கூட தெரியும் என்றுதான் சொன்னேன். "என்க்ரோச்மெண்ட்" என்றால், உடனே தலையாரியே "என்க்ரோச்மெண்ட்" இருக்கக்கூடாது என்று சொல்லி விடுவான். தண்ணீர் பாய்ச்சுவது என்றால், எந்த ஆயக்கட்டுக்கு முதலில் விடவேண்டும் என்பதெல்லாம்கூட அவர்களுக்கு அத்துபடியான விஷயம் என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

ஆனால் இன்றையதினம் கிராம அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்வதற்கு என்ன காரணம் என்பதை நாம் பார்க்கவேண்டும். கிராம அதிகாரிகள் தங்களின் பணியைத் தாங்களாகவே குறைத்துக்கொண்டார்கள் அதுமட்டு மல்ல, அவர்களுக்கு என்று இருந்த பணியை அவர்கள் ஒழுங்காகச் செய்ய வில்லை. நான் முதலில் பேசும்போதே இந்தக் கருத்தினைக் குறிப்பிட்டிருக் கிறேன். அவர்களுக்கு நிறைய பணிகள் இருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் தங்களுடைய பணிகள் அனைத்தையும் சரிவரச் செய்யாத காரணத்தால்தான் கிராமங்கள் சீரழியத் தொடங்கின. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, இதற்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, இதே குறைபாடுகள்தான் இருந்தன. 1972 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மனுநீதி நாள் என்று தொடங்கப்பட்டபோது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களைப் படித்துப் பார்த்திருந்தால் ஒன்று தெளிவாகியிருக்கும். எந்த மனுவைப் படித்துப் பார்த்தாலும், அதிலிருந்த குறைபாடு எங்கள் கிராம அதிகாரிகள் சரியாக நடக்கவில்லை என்பதுதான். லட்சக்கணக்கான மனுக் கள் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தாங்கியிருந்தன என்பதுதான் உண்மை. இதன் காரணமாகத்தான் இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நான் முதலில் பேசும்போதே ஒன்றைக் குறிப்பிட்டேன். கிராமத்தில் இருக்கும் இந்த கிராம அதிகாரிகள் இன்றைய எந்தத் தேவைகளையும் பூர்த்தி செய்யவில்லை என்பதைச் சொன்னேன். எனவேதான் அதற்கான வகையில் இன்றைக்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அந்த வகையில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகும் கிராமங்களில் இருக்கிற வேலைகள் நடைபெறவில்லை என்று இங்கே குறை கூறப்பட்டது. கிராமங் களில் கிராம அதிகாரிகளுக்கு என்னென்ன வேலைகள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். அதை மீண்டும் இங்கே படித்துக் காட்ட வேண்டாம்



என்றுதான் நினைக்கிறேன். படித்தால் நேரம் அதிகமாகும். அந்த வேலை களெல்லாம் சரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிராம அதிகாரி களுக்கு இருக்கும் மிக முக்கியமான, மிக அவசரமான வேலை என்னவென்றால், பயிர் ஆய்வு செய்தல், பிறப்பு, இறப்பு பதிவு செய்தல், நிலவரி சம்பந்தப்பட்ட கணக்குகளைத் தயாரித்தல், பள்ளி-கல்லூரி மாணவர்களுக்குச் சாதி, சொத்து சான்றிதழ்கள் கொடுத்தல், மற்றும் ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், முதியோருக்கு உதவித் தொகை வழங்குதல் ஆகியவையாகும். ஆதரவில்லாதவர்களுக்கு பொங்கலன்று ஒரு வேட்டி அல்லது சேலை கொடுப் பதும் இதில் அடங்கியிருக்கிறது.

(பிற்பகல் 6-10)

இந்தப் பணிகள் எல்லாம் குறிப்பிட்ட காலத்திலே நடந்திருக்கின்றன என்ப தற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா என்றால், யாராலும் சொல்ல முடிய வில்லை. ஆனால் பொங்கலுக்கு முன் வழங்கும் சேலை, வேட்டி வழங்குவதில் தவறுகள் நடந்திருந்தால் அல்லது கிடைக்காமல் இருந்திருந்தால், ஒவ்வொரு இடத்திலிருந்தும்-எங்களுக்கு இந்த ஆண்டு வரவில்லை என்று சொல்லியிருப் பார்கள். ஆனால் அப்படி யாரும் சொல்லவில்லை. எங்கேயாவது சில இடங் களில் இவைகள் நடைபெறாமல் இருந்திருக்கலாம். ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் கிராமங்கள் இருக்கும்போது, எங்கேயாவது தவறு நடந்திருந்தால், அதை எடுத்துச் சொன்னால், அது குறித்து நடவடிக்கை எடுக்க நாங்கள் தயா ராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், இதற்காக வானவெடி போட்டார்கள் என்றுகூட சொன்னார்கள். அவசரச் சட்டம் வந்தபோது இதற்கு இருந்த ஆதரவு இதற்கு முன்னாலே கொண்டுவரப்பட்ட எந்தச் சட்டத்திற்கும் இருந்ததில்லை என்பதை நான் இங்கே உறுதியாகச் சொல் வேன். அப்படியென்றால் இதற்கு முன்னாலே சிறந்த சட்டங்கள் வர வில்லையா என்று கேட்டால், இதைவிட சிறந்த சட்டங்கள் வந்திருக்கலாம். ஆனால் இந்தச் சட்டத்திற்கு மட்டும் ஏன் இவ்வளவு ஆதரவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், கிராம அதிகாரிகள் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், பொறுப்பு உள்ளவர்களாகவும் கிராமத்தில் இருந்தார்கள் என்று சொன்னார். அப்படி இருந்திருந்தால், கிராம அதிகாரிகளை வெளியே போ என்று நாம் சொன்னபோது, வேட்டுப் போட்டதற்குப் பதிலாக இந்தச் சட்டத்தைக் கொளுத்தியிருப்பார்கள். ஆனால் வான வெடியை வெடித்திருக்கிறார்கள். அன்றைக்கு கிராம அதிகாரிகள் யாரும் வெளியே வர முடியவில்லை. இதை

நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் சொன்னார்கள். இதைவிட நல்ல சட்டம் இதற்கு முன்னாலே வந்திருக்கிறது. குத்தகைதாரர்களுக்காக "75 : 25" என்ற சட்டத்தைக் கொண்டுவந்தோம். குத்தகைகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தள்ளுபடி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 30 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 5 கோடி ரூபாய் தான் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல நில உச்சவரம்புச் சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறோம். பத்தாயிரம், பதினைந்தாயிரம் ரூபாய் கொடுப்பதற்குப் பதிலாக மூன்றாயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கெல்லாம் இந்த நாட்டிலே ஆதரவு இருந்தது என்றாலும், இதனால் நன்மை அடைந்தவர்கள் ஒரு சிலர்தான். அதனாலே அந்த வகையான சட்டங்களுக்கு தமிழ் நாடு பூராவும் வரவேற்பு இருந்தது என்று சொல்ல முடியாது. ஆனால் இந்தச் சட்டத்திற்கு தமிழ் நாடு பூராவும் ஆதரவு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். "குட்டி ஜமீன் ஒழிந்தது", "கிராமங்கள் விடுதலை அடைந்தன" என்று சொன்னார்கள். யார் இப்படிச் சொன்னார்கள் என்று திரு. இராமமூர்த்தி அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும், இப்படிச் சொன்னார்கள். "கிராமத்து மக்கள் விடுதலையைப் பெற்றிருக்கிறார்கள், குட்டி ஜமீன் ஒழிந்தது" என்று * * * * அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். கிராமத்தில் உள்ள நிரந்தர இயந்திரத்தைப் பொறுத்தவரையில், தவறு இல்லை. அந்தப் பதவியில் வந்தவர்கள் தவறு செய்திருக்கலாம். அந்த நிரந்தர இயந்திரம் கிராமத்தினுடைய நியாயமான, தேவையான ஒன்று என்பது அனுபவரீதியாகக் காட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: யார் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள் என்பதை எடுத்துச் சொல்லுவதற்காகத்தான் இதைத் தெரிவித்தேன். கிராமத்தினுடைய நிர்வாகம் வேண்டாம் என்று சொல்லவில்லை. கிராமத்தின் நிர்வாகம் ஸ்தம்பித்துவிடவில்லை என்பதற்காகச் சொல்லுகிறேன். கிராமத்தினுடைய நிர்வாகம் எவ்வளவு முக்கியமானது என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுதான், அதற்கு என்ன வழிவகை செய்ய வேண்டும் என்பதை யோசித்து, அடிப்படையில் இருப்பவர்கள் சரியாக இல்லை என்பதற்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராம நிர்வாகத்தில் உள்ளவர்கள் தெளிவாக இருக்க வேண்டும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அவர்களை எடுத்துவிட்டு, புதியவர்களைப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, அதை ஆதரித்தவர்கள் யார் என்பதை எடுத்துச் சொல்லுவதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன். கிராம நிர்வாகத்திற்கு அத்தியாவசியமானவற்றைச் செய்கிறோம். அதற்கு மேலே நான் போகக் கூடாது. அவர்களுடைய கட்சிக்குள்ளே மாறுபட்ட கருத்தை அவர்கள் ஏன் சொல்லுகிறார்கள் என்று நான் கேட்கக்கூடாது. வேண்டுமானால் இதைக்கூட அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீக்க வேண்டியது அவசியமா?

திரு. க. இராமமூர்த்தி: அவசியம் இல்லாத பிரச்சினையாக இருப்பதால் அதை நீக்கிவிடலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: * * * என்று குறிப்பிட்டது நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கிராம அதிகாரிகளிடமிருந்து இரவோடு இரவாக அதிகாரத்தை வாங்கினார்கள் என்று செய்திகள் வந்தன என்று திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னார். வந்த செய்திகள் பூராவையும் நம்ப முடியாது. அதில் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். அதை தீர விசாரிக்க வேண்டும் என்று பேரவையிலே சொன்னேன். அதையே இங்கேயும் சொல்லுகிறேன். "கண்ணால் பார்ப்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்" என்று சொன்னேன். ஆறு, ஏழு நாட்களில், அதாவது நவம்பர் மாதம் 13, 14, 15, 16, 17, 18, 19 ஆக இத்தனை நாட்களில் கிராம அதிகாரிகளிடமிருந்து அதிகாரத்தை எடுத்திருக்கிறோம். ஒரே நாளில் அல்லது இரண்டு நாளில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நஷ்ட ஈட்டைப்பற்றிச் சொன்னார்கள். நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதுதான். சட்டத்தை முதன் முதலில் கொண்டு வருகிறபோது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கொண்டு வரவில்லை. ஆனால் அதற்குப் பிறகு பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் விரும்பி, ஆளுநர் உரையின்போதே சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு ஆராய்ந்து பார்த்தோம். பகுதி நேர கிராம அதிகாரி என்று

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 28

சொல்லுகிறபோது, அவர்கள் வேறு தொழிலைச் செய்ய உரிமை இருக்கிறது. அதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. வேறு தொழிலைச் செய்தார்களா, இல்லையா என்ற கேள்விக்கு நான் போகாவிட்டாலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட 170, 175, 180, 185 ரூபாயில் கிராம அதிகாரிகள் வேறு தொழிலைச் செய்யாமல் நிச்சயமாக குடும்பத்தை நடத்தியிருக்க முடியாது. ஆகவே பகுதி நேர கிராம அதிகாரிகள் வேறு வேலையைச் செய்திருக்க வேண்டும். இப்போதும் செய்து கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யலாம் என்று விதிகளிலேயே இடம் இருக்கிறது. அதே ரூலில் ஓய்வூதியம் பெற தகுதியில்லை என்று இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தெரிவித்த பிறகு, எதாவது வழிவகை செய்ய வேண்டுமே என்று கருதி, தலைமைச் செயலாளர், ரெவின்யூ செயலாளர், நிதிச் செயலாளர் ஆகியவர்கள் எல்லாம் சேர்ந்து யோசித்து கொடுக்க வழி இருக்கிறது என்று சொன்னார்கள். தொழில் தகராறு சட்டத்தின்கீழ் ஐந்து கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளைப் போடுகிறபோது, தாழ்த்தப்பட்டவர்களை அதிகமாகப் போட வேண்டுமென்று சொன்னார்கள். வயதுச் சலுகை அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். மற்றவர்களுக்கு 30 வயது வரம்பு இருக்கிறது. ஆனால் ஆதி திராவிடர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் 40 வயது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

அது மட்டுமல்ல. இன்றைக்கு அவர்கள் 18 சதவிகிதம் கொடுத்தாக வேண்டுமென்று சொன்னார்கள். அரசு இன்றைக்கு அவர்களை நிரந்தரமான அரசு உத்தியோகஸ்தர்களாகவே நியமிக்கப்போகிறது. 18 சதவிகிதம், கேட்காமல் இருந்தாலும் கொடுத்துவிடுவோம். கேட்காமல் இருந்தாலும் அதை நடைமுறையிலேயே நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 18 சதவிகிதம் என்றால், இன்றைக்கு அது ஒரு பெரிய எண்ணிக்கை என்று நினைக்கிறார்கள். இன்றைக்கு 14 ஆயிரத்திற்கும் மேலே கிராம அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் எவ்வளவு பேர்கள்? அங்கே ஒன்று இங்கே இரண்டு என்று இல்லை. கிராமப்புறங்களில் ஒருவர் இருவர் மட்டும் கிராம அதிகாரிகளாக தாழ்த்தப்பட்டவர்கள் இருக்க முடியாது. அவர்கள் கலெக்டராகக்கூட இருந்துவிடலாம். செயலாளராகக்கூட இருந்துவிடலாம். ஆனால் முன்பு தாழ்த்தப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேர்கள்தான் கிராம அதிகாரிகளாக இருந்திருப்பார்கள். ஆனால் இன்றைக்கு இந்தச் சட்ட



1981 பிப்ரவரி 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

முன்வடிவின் மூலமாக தாழ்த்தப்பட்டவர்கள் 2,500 பேர் கிராம அதிகாரிகளாக வர இருக்கின்றார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருப்பவர்கள் 7,500 பேர்கள் வரவிருக்கிறார்கள். மற்றவர்கள் பின்தங்கியவர்கள் என்ற அளவில் 5,000 பேர்கள் வரவிருக்கிறார்கள். இந்த அரசு இப்படியெல்லாம் செய்கிறது. அப்படி இருந்தும், இதிலே பல தவறுகள் வந்திருக்கக்கூடும் என்று இங்கே சொன்னார்கள். அதிலே எப்படி தவறு வரும் என்று தெரியவில்லை. தேர்வாணைக் குழு தன்னிச்சையாக இயங்குகின்றபோது, அது எப்படி முடியும்? மற்றவர்கள் தேர்வாணைக் குழு நடவடிக்கைகளில் தலையிடுகிறார்கள் என்றால், அது எப்படி முடியும்? ஒவ்வொரு நாளும் தேர்வாணைக் குழுவில் ஆட்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 100 பேர்கள், 200 பேர்கள் என்று தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்வாணைக் குழு நிலையான ஒரு துறை. இங்கு கட்சிகள் மாறலாம். மாண்புமிகு அமைச்சர்கள் மாறலாம். குடியாட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி இங்கு வரலாம். எது எப்படி இருந்தாலும், அந்தத் தேர்வாணைக் குழு மட்டும் தன்னிச்சையாக நிலையாக இயங்கிக் கொண்டுதானிருக்கும். ஆகவேதான் தேர்வாணைக் குழுவிலே நாம் எதும் செய்ய முடியாது என்று சொல்கிறேன். அது நம் எல்லோருக்கும் தெரியும். அது தன்னிச்சையாக நடக்கக் கூடியது என்பது எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும். கிராம நிர்வாக அதிகாரிகள் பதவிக்கு எழுத்து மூலமாக பலர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். 'ரிட்டன் டெஸ்ட்' எழுதியிருக்கிறார்கள். தேர்வாணைக் குழுவின் தேர்வு மாநிலம் முழுவதிலுமுள்ள 41 நகரங்களில் 500 மையங்களில் நடந்திருக்கிறது. நேற்றுகூட இங்கே அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்கள் பேசுகின்றபோது, என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் அதைப்பற்றி நான் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. அதிலே தீவிர கவனம் செலுத்திக்கொண்டிருக்கவில்லை. அதிலுள்ள விவரங்களை நான் அதனால் தெரிந்து வைத்திருக்கவில்லை. இப்போதைக்கு அதை கவனிக்க வேண்டிய தேவையும் இல்லை. என் பக்கத்திலே இருந்த அமைச்சர்களும் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாமல்தான் இருந்திருக்கின்றார்கள். அந்த விஷயத்தை தேர்வாணைக் குழுவிற்கு விட்டுவிட்ட பிறகு எங்களுக்கு அங்கே என்ன நடக்கிறது என்பது தெரியாது. ஆனால் இன்று தெரிந்துகொண்டேன். அந்தத் தேர்வுக்குப் பிறகு விடைத் தாள்கள் காவலுடன், பாதுகாப்புடன் மாவட்ட, டிஸ்ட்டிரிக்ட் சென்டர்களுக்கு எடுத்துக்கொண்டு போகப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எடுத்துக்கொண்டு போகப்பட்டன. விடைத் தாள்கள் திருத்த அனுப்பப்பட்டன. அந்த விடைத்தாள்களைத் திருத்துவ

தற்கு ஒரு மைய இடம் ஒதுக்கப்பட்டது. அது மட்டுமல்ல, அந்தத் தேர்வை யார் நடத்துவது என்றால், இன்றைக்கு 'டைரக்டர் ஆப் கவர்ன்மெண்ட் எக்சாமினேஷன்ஸ்' என்று ஒரு இலாகா இருக்கிறது. நேற்றுகூட சொன்னார்கள். ஆர்.டி.ஓ.க்கள் திருத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** எப்படித்தான் திருத்துகிறார்கள் என்று தெரியாது. நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, யாரோ எப்படியோ திருத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அதை எப்படித் திருத்துகிறார்கள் என்பதுபற்றி எனக்கும் தெரியாது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** ஆர்.டி.ஓ.க்கள் என்று சொன்னவுடனே, எனக்கும் ஒன்றும் தோன்றவில்லை. அந்தத் தேர்வுகளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தால்தானே தெரிந்திருக்க முடியும். மற்ற அமைச்சர்களுக்கும் அதைப்பற்றித் தெரியவில்லை. நானே பிறகுதான் தெரிந்துகொண்டேன். இன்றைக்கு அந்த 'டைரக்டர் ஆஃப் எக்சாமினேஷன்'தான் அந்தத் தேர்வுகளை நடத்துகிறார் என்று சொல்ல வேண்டும். யார் யாருக்கு எங்கெங்கு ஆட்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். யார் யார் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அப்படிக் கேட்கின்றபோது ஆட்களை அனுப்புகிறார்கள். 1,600 பெயர்களை அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதில் 830 பேர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட உத்யோகஸ்தர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அங்கு ஒரு ஹெட்மாஸ்டரை வைத்திருக்கிறார்கள். ஆசிரியர்களை வைத்திருக்கிறார்கள். 10 ஆசிரியர்களுக்கு ஒரு ஹெட்மாஸ்டர் என்று போட்டிருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைத் தாள்களைத் திருத்துவதுபோல் திருத்தியிருக்கிறார்கள். அவர்கள் திருத்திய பிறகு வாங்கி வைத்திருக்கிறார்கள். இதைப் பற்றிப் பேசும்போது இதைச் செய்தார்கள், அதைச் செய்தார்கள், எப்படியோ செய்தார்கள் என்றெல்லாம் பேசினார்கள். அப்போது என்னிடம் தகவல் இல்லை. அதனால் நான் சொல்லவில்லை. சர்விஸ் கமிஷன் உறுப்பினர்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமை அதுதான். இந்தத் தேர்வுகள் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அதிலே யாரும் தலையிடவில்லை. அதிலே யாரும் தலையிடவும் முடியாது. அப்படித்தான் நிலைமைகளும் இருக்கின்றன.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. மாணிக்கம் அவர்கள்கூட சொன்னார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அதனால் தவறுகள் ஏற்படலாம் என்றார்கள். கஞ்சி வரதப்பா, கஞ்சி வருதாப்பா, கஞ்சி வருதாப்பா என்பார்கள். அதுபோல, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கி



றார்கள். திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். அவர்கள் பேசியபோது அனுதாபத்தோடு சொன்னார்கள். வேலைக்குத் தேர்வு எழுதியிருப்பவர்கள் அங்கத்தினர்களை வந்து பார்ப்பார்கள் என்றார்கள். என்னை வந்து பார்ப்பார்கள், திரு. மாணிக்கத்தையும் பார்ப்பார்கள் என்றார்கள். அப்படி தங்களை வந்து பார்க்கும்போது, நாங்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பார்கள் என்று சொன்னார்கள். எங்களை வந்து பார்ப்பவர்கள் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வார்கள் என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் அங்கத்தினர்களைப் பார்க்கும்போது, நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சி வந்தபோதே அதில் சேர்ந்திருப்பவர்கள் என்று சொல்வார்கள். ஆக எப்படியெப்படியோ சொல்வார்கள். அந்த அளவுக்கு அவர்கள் எப்படியோ வேலைக்கு வரவேண்டுமென்று நினைக்கிறார்கள். நியாயம் அதுவல்ல. தவறு நடக்கும் என்கிறார்கள். அது எப்படி நடக்க முடியும்? தேர்வுகள் நீண்ட காலமாக நடந்து கொண்டிருக்கின்றன. தவறு நடக்கும் என்றால் எப்படி? தினமும் தேர்வுகள் நடக்கின்றன. குறிப்பிட்ட ஒரு போஸ்ட்டுக்கு மட்டும் எப்படி தவறு நடக்க முடியும்? இதைவிட பெரிய பெரிய போஸ்ட்கள், வேலைகளுக்கு எல்லாம் தேர்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் தவறுகள் எதுவும் நடக்காமல் பார்த்துக்கொள்வார்கள். அந்தப் பணியை நாம் அவர்களின் ஆளுகைக்கு விட்டுவிட்டோம். ஆகவே யாரும் அதிலே எந்தத் தவறையும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றிச் சொல்கின்றபோது, பல விஷயங்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் நீண்ட நேரம் புத்தகங்களையெல்லாம் வைத்துக்கொண்டு அதிலிருந்து படித்துப் படித்து நீண்ட விளக்கங்களையெல்லாம் சொன்னார்கள். குழுக்களில் அதை ஏற்றுக்கொண்டார்கள், இதை ஏற்றுக்கொண்டார்கள், இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அவர்கள் முழு நேர வேலையைப் பெறுகிறார்கள், பகுதிநேர வேலையாக இருந்ததை முழு நேர வேலையாக மாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னார். அதையெல்லாம் யாரும் இல்லையென்று சொல்லவில்லை. அவர்கள் படிக்கும்போது ஒரு வாசகத்தைச் சொன்னார்கள். அது இது என்றெல்லாம் சொல்லிவிட்டு, மணியக்காரர்களுக்கு கிரிமினல் பவர்ஸ் இப்போது இல்லை என்பதுபோல சொன்னார்கள். அவர்களுக்கு பவர்ஸ் இல்லையென்று சொல்கின்றார்களே என்று நான் கூட கேட்டேன். கிரிமினல் பவர்ஸ்பற்றி திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுதி அனுப்புவார்கள் என்று பார்த்தேன்.

திரு. க. இராமமூர்த்தி: 'கிரிமினல் பவர்ஸ்' என்று நான் குறிப்பிட்டது வேறு விஷயம். அதாவது அவர்கள் அங்கே கிரிமினல் குற்றவாளிகள் இருக்கின்றார்களா என்று எழுதி வைத்திருப்பார்கள். அங்கு ஏதாவது குற்றங்கள் நடைபெற்றால், அதைப்பற்றி எழுதி போலீசுக்கு தகவல் சொல்லவேண்டியது அவர்களுடைய பொறுப்பு என்று சொன்னேன். கிரிமினல் தவறுகள்பற்றித் தெரிவிக்கின்ற பொறுப்பு அவர்களுக்குத்தான் இருந்தது என்பதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நானும் அதைப்பற்றிச் சொல்கிறேன், அவர்களுக்கு மாஜிஸ்டீரியல் பவர்ஸ், வில்லேஜ் ஆபீசர் பவர் இருந்தன. இல்லை என்று நான் சொல்லவில்லை. 1938-க்கு முன்னாலே இருந்தது. அதற்குப் பிறகு மாற்றினார்களா என்பதுபற்றி என்னிடம் கேட்கவில்லை. அங்கத்தினர் அவர்கள் எல்லாவற்றையும் படித்தபோது இதையும் தெரிந்திருக்க வேண்டும். இதை அவர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். 1938-லே ஆக்ட் போட்டிருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டம் விடுதலை அடைவதற்கு முன்னாலேயே அப்படி 'ஆக்ட்' போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னென்ன 'பவர்ஸ்' இருக்கின்றன என்று போட்டிருக்கிறார்கள். போலீஸ் அமைப்பு இல்லாதபோது அதைச் சேர்த்திருக்கிறார்கள். அங்கத்தினர் அவர்கள் அதற்குப் பிறகு வந்த சட்டங்களைப் படித்து பரீட்சையில் தேர்ந்து வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் அவரவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதன்பிறகு நான் அவைகளுக்குச் சொன்ன விளக்கத்தையெல்லாம் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"That the Tamil Nadu Abolition of posts of part-time Village Officers Bill, 1981 (L.A. Bill No. 12 of 1981), as passed by the Assembly, be referred to a Select Committee of the House and that the following Members be nominated to serve on the Select Committee:

**(Names of the Members to be given later)."**

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

THIRU K. RAMAMOORTHY: Mr. Chairman, Sir, I move the following amendment standing in my name;

" In clause 3, for the word 'abolished' substiuted the word 'renewed';

In clause 3, for the words 'with effect on and from such date, cease to hold such post' substitute the words 'continue to hold the same post".'

திரு. பி. முனுசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இந்தத் திருத்தத்தை ஏற்பதில் அரசுக்கு அதிக சிரமமிருக்காதென்று கருதுகிறேன். இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொண்டால், மற்ற எல்லாத் திருத்தங்களையும் நான் கைவிடத் தயாராக இருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்வதன் மூலம் வேலை இழந்தவர்களுக்கு நீதி கிடைக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதை நான் ஏற்றுக் கொண்டால், மற்ற திருத்தங்களை வற்புறுத்தாமல் விட்டுவிடுகிறேன் என்று லஞ்சம் கொடுப்பதுபோல மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரைக்கும், இதை ஆய்ந்து, நன்றாகச் சிந்தித்துக்கொண்டு வந்திருக்கிறது. No compromise in ideology.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை —

"In clause 3, for the word 'abolished' substitute the word 'renewed';

In clause 3, for the words 'with effect on and from such date, cease to hold such post' substitute the words 'continue to hold the same post'."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4.

THIRU K. RAMAMOORTHY: Mr. Chairman, Sir, I move the following amendments standing in my name;

"In clause 4, sub-clause (2), renumber the existing sub-clause (2) as (2)(a) and insert the following as sub-clause (2)(*b*):

"(*b*) Preference shall be given to those who have held the posts of the Village Officers and possess the qualifications in sub-clause (2) (*a*)."

In clause 4, sub-clause (4), *for* the words 'Tamil Nadu Ministerial Service' *substitute* the words 'Panchayat Union Establishment Service'.

In clause 4, *delete* sub-clause (6)".

திரு. பி. முனுசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இது மிக மிகத் தேவையான திருத்தமென்று கருதுகிறேன். அனேகமாக எல்லாத் தரப்பிலிருந்தும் இந்தத் திருத்தத்தின் உணர்வுகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே பண



யாற்றியவர்களில் யாருக்கெல்லாம் தகுதி இருக்கிறதோ அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்களைப் பணியில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய திருத்தம் மனிதாபிமான உணர்வோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சட்டச் சிக்கலுக்கு ஆட்பட்டதன்று. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று என்று சொல்லி, இதை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தேர்வு பெறுகின்றவர்கள் அதிகாரிகளாக நியமனம் செய்யப்படும்போது, அவர்களை மாற்றுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. 'மினிஸ்டீரியல் சர்வீஸ்' என்று வரும்போது ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குச் செல்லுகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஓரிடத்திலே சில ஆண்டுகள் அவர்கள் பணி புரிவது நல்லது. அதனால் கிராம நிர்வாகம் செம்மையுறும். ஒருவேளை அப்படி முடியாத நிலை வரும்போது, இப்போது பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் பள்ளி ஆசிரியர்களை ஒரு கிராமத்திலிருந்து பக்கத்திலுள்ள மற்றொரு கிராமத்திற்கு மாற்றம் செய்வதுபோல, இவர்களையும் மாற்றினால் நல்லது. அந்த முறையில்தான் என்னுடைய திருத்தம் இருக்கிறது. எனவே அந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமானால், இவர்கள் ஒரு தாலுக்காவிற்குள் அல்லது அதிகபட்சமாக மாவட்டத்திற்குள் மாற்றப்படும் நிலை ஏற்படும். இவையெல்லாம் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு என்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நியாயமான, தேவையான, எல்லோரும் கேட்டிருக்கிற, மனிதாபிமான அடிப்படையிலான திருத்தம் இது என்பதால், இதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் முதலிலேயே சொல்கிறபோது சொன்னேன். அந்தப் புத்தகத்தை எழுதியவர்கள் எல்லா இடங்களையும் பார்க்காமல், ஒரு இடத்தை மட்டும் பார்த்து எழுதிவிட்டார்கள் என்றும், எல்லா மாநிலங்களையும் பார்க்க வேண்டுமென்றும் சொன்னேன். கிராம நிர்வாகம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் கிராமப் பழக்க வழக்கங்கள் மாறுபட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் அவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மாவட்ட வாரியாகத்தான் தேர்ந்தெடுக்கிறோம். முன்பு நான் அதைச் சொல்லவில்லை. மாவட்ட வாரியாகத்தான் அவர்கள் சர்வீஸ் வருகிறது. அவர்களைக் கிராமங்களில் போடும்போது, கிராமத்தில் குறைந்தது அல்லது அதிகம் 3 ஆண்டு

களிலிருந்து 5 ஆண்டுகள்வரை வைக்கலாமென்று எண்ணி, அதைப்பற்றி ஆய்ந்து கொண்டிருக்கிறோம். அப்படி வைத்தால்தான் கிராமங்களில் பணி புரிய முடியுமென்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்கெனவே பணியில் இருந்தவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதுபற்றி அரசின் பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இவ்வளவு பேர்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சர்வீஸ் கமிஷனிடம் சொல்லியாகி விட்டது. அப்படிச் செய்யும்போது, இவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள் என்று அன்-அபிசியலாகச் சொன்னாலும், அதில் தலையிடுவதாகும். அந்த நிர்வாகத்திற்கு இருக்கும் நல்ல பெயரைக் கொடுக்கக்கூடாதென்றால், அதில் தலையிடாமல் இருப்பதுதான் நல்லது.

**திரு. க. இராமமூர்த்தி :** அமைச்சரவர்கள் அளித்த பதிலில் என்னுடைய ஆலோசனைகளில் பாதியை ஏற்றுக்கொண்டதற்காக பாராட்டும் வகையில் என்னுடைய திருத்தங்களைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5.

THIRU K. RAMAMOORTHY: Mr. Chairman, Sir, I move the following amendments standing in my name,—

"In clause 5, sub-clause (2), *for* the words 'one-half of the monthly' *substitute* the words 'two months.' and *add* the following at the end: "and a total consolidated compensation of Rs. 10,000"

In clause 5, sub-clause (2), Explanation (c), delete item (i) and renumber other items accordingly.

In clause 5, sub-clause (4), for the word 'six' substiute the word 'three'.





In clause 5, sub-clause (*b*), *after* the words 'District Collector may pass an order' and before the words 'on the appeal' *insert* the words 'within six months'."

**திரு. பி. முனுசாமி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இதைப்பற்றி ஏற்கெனவே சொல்லியாகி விட்டது. காம்பன்சேஷனைப் பொறுத்தவரையிலும், மாதச் சம்பளம் எவ்வளவு வாங்குகிறார்களோ அதில் பாதிச் சம்பளம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இரண்டு மாதம் என்று மாற்ற வேண்டும். இப்போது 24,000 பேர்களுக்கு உட்கார வைத்து, சம்பளம் கொடுக்கிறோம். அவர்கள் நிரந்தரமாகப் பதவியை விட்டுப் போகும்போது, இதைக் கொடுப்பதில் தப்பில்லை. இதை மனிதாபிமான உணர்வோடு செய்ய வேண்டும். சிலர் சில ஆண்டுகளாகத்தான் பணியில் இருக்கிறார்கள். மொத்தமாக 10,000 ரூபாய் கொடுக்க வேண்டும் அல்லது 2 மாதச் சம்பளம் கொடுத்தால் நல்லது. எல்லோரும் இதை ஆதரிக்கிறார்கள். நியாயமானது என்று எல்லாப் பகுதிகளிலும் சொல்வதால், இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 6-40)

இன்னொன்று, 3 மாதங்களுக்குள்ளாக அவர்களுக்கு இந்தப் பணத்தைத் தரவேண்டும். 6 மாதங்களுக்குள்ளாக என்று சட்ட முன்வடிவில் இருக்கிறது. காலத்தைக் குறைக்க வேண்டும். அப்பீலுக்குச் செல்கின்றவர்களுக்கு எவ்வளவு விரைவாகக் கிடைக்க முடியுமோ அவ்வளவு விரைவாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இவைகளெல்லாம் அரசாங்கம் நிர்வாக அளவிலே சீக்கிரமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தருகின்ற சலுகையின் அம்சங்கள் என்ற அளவில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய திருத்தத்திற்குப் பதில் சொல்லாததால், நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 5, sub-clause (2), *for* the words 'one-half of the monthly' *substitute* the words 'two months' and *add* the following at the end: "and a total consolidated compensation of Rs. 10,000".

In clause 5, sub-clause (2), Explanation (*c*), delete item (i) and renumber other items accordingly.

In clause 5, sub-clause (4), for the word 'six' substitute the word 'three'.

In clause 5, sub-clause (6), *after* the words 'District Collector may pass an order' and *before* the words 'on the appeal' *insert* the words 'within six months'."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 5, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 6, 7, 8 ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 9.

Thiru K. RAMAMOORTHY : Mr. Chairman, Sir, I move the following amendment standing in my name,—

"In clause 9, sub-clause (1), *delete* the words 'may make such order not inconsistent with the provisions of this Act as may appear to them to be necessary or expedient for the purpose of removing the difficulty' and *insert* the following: "may by bringing in amendments to the Act" *and also delete* the proviso."

திரு. பி. முனுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழி கிறேன்.



திரு க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தில் முக்கியமான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதாவது இதிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்படும்போது, திருத்தம் தேவைப்படும்போது, அதை அரசாங்கம் விதி மூலம் செய்துகொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். இது அடித் தளத்து மக்களும் சம்பந்தப்பட்ட ஒரு சட்ட முன்வடிவாகையால் இந்த அதிகாரம் வேண்டுமாவெனப் பரிசீலிக்கும்போது மக்களுடைய பிரதிநிதிகள் என்கிற முறையில் சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த அவையிலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விவாதிக்க ஒரு வாய்ப்பு தர வேண்டு மென்ற அடிப்படையில் இதற்குத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அவ்வாறு வாய்ப்பு தருவது மாண்புமிகு அமைச்சருக்கும் நல்லது. அரசாங்க நிர்வாக இயந்திரம் கோளாறு இல்லாமல் செம்மையாக நடைபெறவும் அது துணை இருக்கும். இதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 9, sub-clause (1), *delete* the words 'may make such order not inconsistent with the provisions of this Act as may appear to them to be necessary or expedient for the purpose of removing the difficulty' and *insert* the following: "may by bringing in amendments to the Act" *and also delete* the proviso."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 9, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 10 முதல் 12 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 13.

Thiru K. RAMAMOORTHY: Mr. Chairman, Sir, I move the following amendment standing in my name,—

"In clause 13, delete sub-clause (5)".

[1981 பிப்ரவரி 28

திரு. பி. முனுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழி கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நான் கொடுத்துள்ள திருத்தம் முழுமையாக இருக்கிறது. அதுபற்றி நான் மேலும் சொல்ல வேண்டிய தேவையில்லை. நான் கொடுத்துள்ள திருத்தத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 13, delete sub-clause (*b*)".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 13, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 14.

Thiru K. RAMAMOORTHY : Mr. Chairman, Sir, I move the following amendment standing in my name :—

"In clause 14, after the words 'appoint', *add* the following "for not more than two months".

திரு. பி. முனுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழி கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தம் மிக மிக முக்கியமான ஒன்று. இன்றைக்கு ஒரு பெரிய அச்சத்தை உருவாக்கியிருக் கிறார்கள். நிரந்தரமாக முழு நேரப் பணியாளர்களை நியமிக்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அலுவலகம் எங்கே



1981 பிப்ரவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. அலுவலகத்துக்குத் தேவையான இடம் எங்கே இருக்கிறது என்றும் தெரியாது. அவர்கள் தங்களுடைய ரெக் கார்டுகளை பத்திரமாக எங்கே வைக்கப்போகிறார்கள் என்பதும் தெரியாது. இப்படிப்பட்ட நிலைமையில் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதுவரையில் ஒரு 'இன்டெரிம் அரேன்ஜ்மென்ட் இடைக்கால ஏற்பாடு கூட செய்யப்படவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ பெக்டர்களிடம் அவர்களுடைய பணிகளைப் பாருங்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள். எவ்வளவு வேகமாக இதை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, முழு நேர அலுவலர்களை நியமிக்கும்போது, அவர்களுக்குத் தேவையான கட்டட வசதிகள் போன்ற வற்றுக்கு இன்னும் ஏற்பாடு செய்யப்படவில்லை. அவர்கள் நிர்வாகம் செய்ய முடியாத நிலை ஏற்படும். இரண்டு மாதங்களுக்குள்ளாக துரித நடவடிக்கை எடுத்து சட்ட ரீதியாக இவைகளைக் கொண்டு வந்து விடுவோம் என்று சொல்வதைவிட, உள்ளபடியே அதற்கான ஆக்கரீதியான ஏற்பாடுகளை நடை முறையில் செய்ய [illegible]. பணிபுரிய அலுவலகம் இல்லாத முழுநேர ஊழியர்களை நியமிக்கும் உன்னத ஆட்சியை தமிழகம் இப்போதுதான் முதன் முறையாகக் காணுகின்றது. அரசாங்கம் இந்த [illegible]யத்தில் இயலாமைக்கு ஆளாகாமல் இரண்டு மாதங்களுக்குள்ளாக [illegible] கட்டிக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய திருத்த[illegible] முன்மொழிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்காவிட்டாலும்கூட, இந்த அவையாவது ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கிராம அலுவலர்களுக்கு இப்போதாவது அலுவலகம் கட்டித் தர வேண்டுமென்கிற எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். உறுப்பினருடைய கருத்தை வரவேற்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : படிப்படியாக அது வந்தது (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 'வில்லேஜ் ஆபிஸர்ஸ்'பற்றி நான் என்னுடைய விளக்கத்தை முதலிலேயே சொல்லியிருக்கிறேன். கிராம அதிகாரிகளுடைய பதவி பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருக்கிறது. பிரிட்டிஷார் ஆளுகையின்போதும், வருவாய் வாரியத்தின் கீழும், சுதந்திரத் திற்கு முன்னாலேயும், சுதந்திரத்திற்குப் பின்னாலேயும் இவர்கள் தொடர்ந்து வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 40, 45 வேலைகள் தரப் பட்டிருந்தன. இருந்தும் அவர்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 28

கழக அரசு வரும்வரை அலுவலகங்கள் கட்டப்படவில்லை. இன்றைக்கு 400-க்கு மேற்பட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு விட்டன. கட்டப்பட்டும் வருகின்றன. இப்படிப்பட்டவர்களுக்கு அலுவலகம் இருந்தால்தான் பொது மக்கள், அடித்தளத்து மக்கள் சுலபமாக கிராம அலுவலர்களைச் சந்தித்து தங்களுடைய காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதையும் அரசு எண்ணி பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப்பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு மாதங்களுக்குள் அவர்களுக்குத் தேவையான அலுவலகம் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 14, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 15, 16 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) நிறைவேற்றப்பட வேண்டும்",



1981 பிப்ரவரி 28]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 2—3—1981 திங்கட்கிழமை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-45)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

201. Notification issued with G.O. Ms. No. 2907, Home (Cinemas), dated the 3rd November 1980 in regard to amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

202. Notification issued with G.O. Ms. No. 1855, Housing and Urban Development, dated the 25th September 1979 in regard to declaration of Pazhaverkadu as Local Planning Area under section 10(1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

203. Notification issued with G.O. Ms. No. 35, Housing and Urban Development, dated the 8th January 1980 in regard to an amendment to the rules published with the Rural Development and Local Administration Department Notification No. SRO-A.18|77, dated the 22nd December 1976 at pages 25-27 in Part III—Section 1 (a) of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th January 1977 (Tamil). [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

### B. Reports, Notifications and Other Papers.

Nil

## இணைப்பு I.

[25 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசாணை (பல்) எண் 333, கல்வி, நாள் 14—2—1977 பத்தி 4-ல் அனைத்து மேலாண்மைகளிலும் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பல்வகைப்பட்ட இதர வகை ஆசிரியர்களுக்கு, தேர்வுநிலை வழங்கப்படும்போது, அனைத்து மேலாண்மைகளிலும் பணிபுரிந்த அவர்களின் முந்தைய பள்ளிகளின் பணியாற்றிய பணிக்காலத்தினை கணக்கிலெடுத்து, 10 ஆண்டு பணிக்காலம் நிர்ணயிக்கலாம் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிக்காலம் கணக்கிடப்படும் போது, ஆசிரியர்களின் பணி இடை முறிவுக் காலமிருப்பின் ( break of service ) இவைகளை தவிர்த்து, கணக்கிடப்பட வேண்டும் எனவும் அரசாணையில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (பல்வகை) எண் 1050, நிதி (ஊதியக் குழு), நாள் 5—10—1978 பத்தி 61 (டி)-ல் 1—10—1978 ஆம் நாள் முதல் புதிய முறையில் தேர்வு/ சிறப்புத் தேர்வு நிலை அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு முன் தேர்வு நிலை அனுமதிக்க வழங்கப்பட்ட அரசாணைகள் யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை (பல்) எண் 1050, நாள் 5—10—1978-ஐ தொடர்பு படுத்தி, அரசாணை (பல்வகை) எண் 214, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 1—3—1979-ல் தேர்வு நிலைக்கு 10 ஆண்டுப் பணிக்காலம் கணக்கிடும்போது, பணியாளர் முறைப்படுத்தப்பட்ட பணிநாள் முதல் (regular appointment) கணக்கிடப்பட வேண்டும் எனவும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட காரணங்களுக்காக ஒரு பள்ளியிலிருந்து பிறிதொரு பள்ளிக்கு சென்றால், மேற்குறித்த ஆணைகளின்படி, அவர்களின் பணிக்காலம் புதிய பள்ளியில் சேர்ந்த நாள் முதலே கணக்கிலெடுக்கப்படும். இதனால் அவ்வாசிரியர்களின் தேர்வுநிலைக் காலத்தினைக் கணக்கிடும்போது பாதிப்புண்டாகும். ஆதலின் ஆசிரியர்களின் 10 ஆண்டு பணிக்காலத்தினை தேர்வு நிலைக்குக் கணக்கிலெடுக்கும்போது அவர்களின் அனைத்துப் பள்ளிகளின் பணிக்காலத்தினையும் பணியிடை முறிவு காலத்தைத் தவிர்த்து தகுதி வாய்ந்த ( Qualifying Service ) பணிக்காலமாகக் கணக்கிலெடுக்க வேண்டும் என்னும் பள்ளிக் கல்வி இயக்குநரது கருத்துருவின்மீது ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதனடிப்படையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள ஆசிரியர்களது பிரச்னைகள் தீர்க்கப் பட்டுவிடும்.



## இணைப்பு II.

[40 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ் கலைக் களஞ்சியத்தின் முதல் பதிப்பு 10 பாகங்களாக 1969-70-ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு 3,000 படிகள் வெளியிடப்பட்டன. அந்த 3,000 படிகளும் தீர்ந்துபோயின. ஆகையால் 12 ஆண்டு காலத்தில் ரூபாய் 75 இலட்சம் செலவில் தமிழ் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பைத் தயாரித்து 10,000 படிகள் அச்சிட்டு வெளியிட தமிழ் வளர்ச்சிக் கழகம் கருதியது. அரசாணை நிலை எண் 768, கல்வி, நாள் 4—4—1977-ல் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு இவ்வரசு மேற்படி பணி 4 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் முதற்கண் ரூபாய் 2 இலட்சம் மான்யம் வழங்கி ஆணையிட்டது. மேலும் ரூபாய் 3 இலட்சம் தமிழ் கலைக் களஞ்சியத்தை வெளியிட அரசு மான்யமாக அளித்தது. மொத்தம் ரூபாய் 5 இலட்சம் தமிழ் கலைக் களஞ்சியம் இரண்டாவது பதிப்பு வெளியிட மானியமாக அரசினால் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் அரசு இதற்கு அளிக்கவிருக்கும் நிதி உதவியைப்பற்றிய முடிவு தெரியாததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த இயலவில்லையெனக் கூறி கலைக் களஞ்சிய அலுவலகத்தைக் கலைத்து விட்டார்கள். இதன்மீது அலுவலர்கள் அரசுக்கு ஒரு முறையீடு அனுப்பினார்கள். தமிழ்க் கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலம் நடைபெறுவதால், இத்தனியார் நிறுவனத்தின் முடிவிற்கு அரசு பொறுப்பு ஆகாது.

ஆனாலும் தமிழ் வளர்ச்சியில் அரசு ஆர்வம் கொண்டிருப்பதால் இந்தக் கலைக் களஞ்சிய இரண்டாவது பதிப்பை வெளியிடும் திட்டத்தினை எந்த முறையில் செயல்படுத்தலாம் என்று அரசு ஆய்ந்து கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

(1) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் இவ்வெளியீட்டு வேலையைக் கவனிக்கும்.

(2) இலக்கிய உலகின் பல்தரப்பட்ட பிரிவினரை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு உயர்மட்டத் தொகுப்பாளர் குழு அமைத்து அரசு இவ்வேலையை மேற்பார்த்து வழி நடத்தும்.

(3) இவ்வேலையைச் செய்ய ஒரு முதன்மைத் தொகுப்பாளர், இரு இணைத் தொகுப்பாளர்கள் மற்றும் நான்கு உதவித் தொகுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கக் குழுவிற்கு அதிகாரமளித்துத் தேவையான உதவிப் பணியாளர்களை தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களிலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ அமர்த்தப்படுவர்.

(4) திட்டக் கணக்கைச் சரிவர வைக்கவும் அலுவலகத்தைக் கவனிக்கவுமாக ஒரு நிர்வாக மற்றும் கணக்கு அலுவலராக ஒரு மூன்றாம் நிலை கணக்கு அலுவலரை மாற்றுப் பணியில் பணியமர்த்தம் செய்யவும், தக்க மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. வேலையிழந்த கலைக் களஞ்சிய ஊழியர்களை, தேவைக்கேற்பவும், தகுதிக்கேற்பவும், அரசு இத் திட்டத்தை செயல்படுத்தும்போது வேலைக்கு எடுத்துக்கொள்ள முயற்சி செய்யும்.

இரண்டாம் பதிப்பை வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்கனவே தமிழ் வளர்ச்சிக் கழகம் தயார் செய்துள்ள கைப்பிரதிகள், மற்றும் பிளாக்குகள் போன்றவைகளை அரசு எடுத்துக்கொள்ள அரசு நியமித்துள்ள கல்வித் துறை அதிகாரி தமிழ் வளர்ச்சிக் கழகத்துடன் தொடர்பு கொண்டு இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## இணைப்பு III

[247 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 12 OF 1981
(As passed by the Assembly.)

*A Bill to abolish the posts of part-time Village Officers in the State of Tamil Nadu.*

WHEREAS the State Government are of the opinion that the system of part-time Village Officers is out-moded and does not fit in with the modern needs of village administration;

AND WHEREAS the State Government have, after careful consideration, taken a policy decision to abolish all the posts of part-time Village Officers on grounds of administrative necessity and to introduce a system of whole-time officers to be in charge of village administration;



BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Abolition of posts of part-time Village Officers Act, 1981.

(2) It shall be deemed to have come into force on the 14 November 1980.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "appropriate authority" means any officer of the Revenue Department not below the rank of District Revenue Officer having jurisdiction over the revenue village within his district;

(*b*) "competent authority" means—

(i) in the Madras district the Personal Assistant (General) to the Collector of Madras; and

(ii) in other districts, the Revenue Divisional Officer having jurisdiction over the revenue village within his division;

(*c*) "Government" means the State Government;

(*d*) "law" includes any rule, by-law, regulation, notification scheme, form or order;

(*e*) "part-time Village Officer" means Village Headman (including Additional Village Headman), Village Karnam (including Chief Karnam and Additional Village Karnam) or Triune Officer appointed under—

(i) the Madras Proprietary Estates' Village Service Act, 1894 (Madras Act II of 1894) or the Madras Hereditary Village Officers Act, 1895 (Madras Act III of 1895);

(ii) the Board's Standing Orders;

(iii) the Tamil Nadu Village Officers Services Rules, 1970 or any other rules made under the proviso to Article 309 of the Constitution, or

(iv) any other law,

but does not include Grama Kavalar, Grama Paniyalar and Pasana Kavalar;

(*f*) "Village Administrative Officer" means an officer appointed under sub-section (1) of section 4.

3. *Abolition of the posts of part-time Village Officers and persons holding such posts to cease to hold office.*—The posts of part-time Village Officers in the State of Tamil Nadu are hereby abolished with effect on and from the date of the commencement of this Act and every person who holds the post of part-time Village Officers in any part of the State of Tamil Nadu shall, with effect on and from such date, cease to hold such post.

4. *Appointment of Village Administrative Officers.*—(1) Subject to the provisions of sub-section (2) and the rules made under section 6, the competent authority may appoint a person as Village Administrative Officer for one or more revenue villages.

(2) No person shall be eligible for appointment to the post of Village Administrative Officer unless he possesses the minimum general educational qualification referred to in rule 12 (*a*) (i) of Part II of the Tamil Nadu State and Subordinate Services Rules and prescribed in Schedule I to the said Part II.

(3) The Village Administrative Officer shall be a whole-time Government servant.

(4) The posts of Village Administrative Officers shall form a separate category in the Tamil Nadu Ministerial Service.

(5) The Village Administrative Officer, shall perform the duties relating to the collection of land revenue, taxes and other sums due to the Government, maintenance of village records and such other duties (including the implementation at the village level of the schemes of the Government) as may be assigned to him by the appropriate authority from time to time.

(6) The Government or any officer or authority authorised by them in this behalf may sanction, from time to time, the creation of such number of posts of Village Administrative Officers as may be necessary for the purpose of this Act.



5. *Amount to be paid on abolition of posts of part-time Village Officers.*—(1) Every person who ceases to hold the post of part-time Village Officer by reason of section 3, shall be paid an amount for the total service put in by him as part-time Village Officer and such amount shall be determined in accordance with the provisions of sub-section (2).

(2) The amount referred to in sub-section (1) shall be calculated at the rate of one-half of the monthly emoluments for every year of total service put in by the person referred to in sub-section (1).

*Explanation.*—For the purposes of this section,—

(*a*) where the total service,—

(i) includes a period which is a portion of a year; or

(ii) is a period less than a year,

the amount payable for the period referred to in sub-clause (i) or (ii), as the case may be, shall be an amount bearing to the amount payable for one year of total service, the same proportion as the said period bears to a period of one year of total service;

(*b*) "monthly emoluments" shall mean,—

(i) Honorarium;

(ii) Panchayat Development Allowance,

which were payable to the part-time Village Officer for the whole of the calendar month immediately preceding the date of the commencement of this Act, that is the month of October 1980, and

(iii) an amount equal to one-twelfth of the consolidated annual Travelling Allowance for the year ending with the 31st March 1980:

Proided that where the part-time Village Officer was on leave other than casual leave or was absent without authorisation, or was under suspension, during the whole or part of the month of October 1980, the monthly emoluments shall mean,—

(i) Honorarium; and

(ii) Panchayat Development Allowance.

which would have been payable to him for the whole of the said month of October 1980 but for such leave, absence or suspension, and

(iii) an amount equal to one-twelfth of the consolidated annual Travelling Allowance for the year ending with the 31st March 1980;

(c) "total service" shall not include any period during which a part-time Village Officer was—

(i) on leave other than casual leave, or

(ii) absent without authorisation, or

(iii) under suspension.

(3) (a) The competent authority shall, either *suo motu* or on an application made, determine by an order in writing the amount to be paid under sub-section (1) and such order shall, subject to an appeal under sub-section (6), be final;

(b) The application referred to in clause (a) shall be made by the person referred to in sub-section (1), or in the event of the death of such person, by his legal heir or heirs, within such time and in such form and manner as may be prescribed:

Provided that before passing an order under this sub-section, the competent authority shall give a reasonable opportunity of being heard to the person or persons concerned.

(4) The amount payable under sub-section (1) shall be paid within a period of six months,—

(a) in case where there is no appeal, from the date of the order of the competent authority under sub-section (3);

(b) in case where there is appeal, from the date of the order of the District Collector under sub-section (6).

(5) In the event of death of the person concerned before payment of the amount under sub-section (1), the amount remained so unpaid on his death, shall be paid to his legal heir or heirs.



(6) If any person is aggrieved by an order of the competent authority under sub-section (3), he may prefer an appeal to the District Collector within the prescribed period and the District Collector may pass an order on the appeal as he deems fit:

Provided that the District Collector may entertain the appeal after the expiry of the prescribed period if he is satisfied that the appellant was prevented by sufficient cause from preferring the appeal in time:

Provided further the District Collector shall, before passing the order on the appeal preferred to him under this sub-section, give a reasonable opportunity of being heard to the appellant.

(7) The order passed by the District Collector under sub-section (6) shall be final.

6. *Conditions of service of the Village Administrative Officer in a revenue village.*—Subject to the provisions of Article 311 of the Constitution, the Government may make rules regulating the recruitment and conditions of service of the Village Administrative Officers.

7. *Act to override other laws.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any law for the time being in force.

8. *Construction of references to Village Officers.*—In the application of any law, any reference to the Village headman, Additional Village headman, Village karnam, Chief karnam, Additional Village karnam, Triune Officer or Village Officer shall, unless the context otherwise requires, be deemed to be a reference to the Village Administrative Officer appointed in respect of one or more revenue villages under sub-section (1) of section 4 or a person appointed under section 14.

9. *Power to remove difficulties.*—(1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may make such order not inconsistent with the provisions of the Act as may appear to them to be necessary or expedient for the purpose of removing the difficulty:

Provided that no such order shall be made after the expiration of two years from the date of the commencement of this Act

(2) Every order made under this section shall, as soon as after it is made, be laid before each House of the Legislature.

10. *Removal of doubts.*—For the removal of doubts, it is hereby declared that nothing contained in this Act shall apply to—

(i) the posts of karnams which are held by whole-time Government servants in the City of Madras; and

(ii) the posts of Village Officers and Village Assistant which are held by the whole-time Government servants in the Kanyakumari district and Shencottah taluk of the Tirunelveli district.

11. *Certain pending proceedings to abate.*—(1) Subject to the provisions of sub-section (2), notwithstanding anything contained in any law for the time being in force,—

(*a*) all proceedings including appeals and revisions relating to the appointment of part-time Village Officers, and

(*b*) all departmental disciplinary proceedings including appeals and revisions against part-time Village Officers.

pending before any authority or Government on the date of the commencement of this Act shall abate.

(2) Nothing contained in sub-section (1) shall effect any criminal proceedings (including investigation, trial, appeal or revision) against part-time Village Officers in respect any offence falling under the Indian Penal Code (Central Act XLV of 1860) or under any other criminal law and accordingly all such criminal proceedings shall be instituted or continued.

12. *Power to make rules.*—(1) The Government may make rules to carry out all or any of the purposes of this Act.

(2) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(3) Every rule made under this Act shall, as soon as possible after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any



modification in any such rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

13. *Penalty for not handing over of records and other properties of village administration.*—Notwithstanding anything contained in any other law,—

(*a*) any part-time Village Officer who ceases to be such part-time Village Officer under section 3, shall on demand, hand over immediately any records and properties of the village administration, which are in, or have come into, his possession or control, to the officer appointed under section 14;

(*b*) if any such part-time Village Officer fails to comply with the provisions of clause (*a*), he shall, on conviction by a Metropolitan Magistrate or a Judicial Magistrate of the First Class, be punishable with imprisonment for a term which may extend to three years, or with fine which may extend to five thousand rupees, or with both.

14. *Interim arrangement.*—Notwithstanding anything contained in sub-section (1) of section 4, until the Village Administrative Officers are appointed in respect of one or more revenue villages under sub-section (1) of section 4, the competent authority may, as an interim arrangement, appoint—

(i) any officer of the Revenue department not below the rank of a Junior Assistant and not above the rank of a Tahsildar; or

(ii) any officer of any other department of the Government, to discharge the functions of the Village Administrative Officers under this Act for one or more revenue villages.

15. *Bar of jurisdiction of civil courts.*—No civil court shall have jurisdiction in respect of any order passed by the competent authority, appropriate authority or District Collector and no stay or injunction shall be granted by a court in respect of any action

taken or to be taken by the competent authority, appropriate authority or District Collector, in pursuance of any power conferred by or under this Act.

16. *Repeal and saving*.—(1) The Tamil Nadu Abolition of Posts of Part-time Village Officers Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 10 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the said Ordinance shall be deemed to have been done or taken under the corresponding provisions of this Act, as if this Act had come into force on the 14th November 1980.

143874
சென்னை-600 008.

D
V211,32'N81
N81.174.1-3